# கம்பரும் வால்மீகியும்





நாமக்கல் கவிஞர்
கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை

# கம்பரும் வால்மீகியும்

ஆசிரியர் :

## நாமக்கல் கவிஞர்
## வெ. இராமலிங்கம் பிள்ளை

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net

## நூல் விவரம்


நூல் தலைப்பு ➢ *கம்பரும் வால்மீகியும்*

ஆசிரியர் ➢ நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

மொழி ➢ தமிழ்

பதிப்பு ஆண்டு ➢ 2003

பதிப்பு விவரம் ➢ முதல் பதிப்பு

தாளின் தன்மை ➢ 11.6 கி.கி.

நூலின் அளவு ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.)

அச்சு எழுத்து அளவு ➢ 10 புள்ளி

மொத்த பக்கங்கள் ➢ iv + 272 = 276

நூலின் விலை ➢ **ரூ. 65.00**

அட்டைப்பட ஓவியம் ➢ திரு. சாய்

லேசர் வடிவமைப்பு ➢ கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ், சென்னை - 24.

அச்சிட்டோர் ➢ ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94.

நூல் கட்டுமானம் ➢ தையல்

வெளியிட்டோர் ➢ **மணிமேகலைப் பிரசுரம்** சென்னை - 17.


## *நன்றி!*


கொழும்பு கம்பன் கழகம் 17.04.03 முதல் 20.04.03 வரை கொழும்பு-6, வெள்ளவத்தை, ராமகிருஷ்ணா மண்டபத்தில் நடத்தும் கம்பன் விழாவில் இந்த இனிய நூல் வெளியிடப்படுகிறது. இந்நூல் வெளியிட ஆதரவு நல்கும் கொழும்பு கம்பன் கழகத் தலைவர் திரு. தெ. ஈஸ்வரன் ஐயா அவர்களுக்கும் கம்பவாரிதி திரு. ஜெயராஜ் அவர்களுக்கும் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் இந்நூலின் அறிமுக ஆய்வுரையாளர் இலண்டன் டாக்டர் திரு. இந்திரகுமார் அவர்களுக்கும் இதயங் கனிந்த நன்றி!

**ரவி தமிழ்வாணன்**
*பதிப்பாளர்,*
*மணிமேகலைப் பிரசுரம்.*

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | நோக்கம் | 1 |
| 2. | மாற்றியமைத்தது ஏன்? | 9 |
| 3. | இராமர் கடவுளா? மனிதரா? | 13 |
| 4. | சீதையின் சினம் | 29 |
| 5. | காலவேறுபாடு காரணமல்ல | 46 |
| 6. | இராவணன் சீதையைக் கவர்தல் | 51 |
| 7. | இராவணனும் சீதையும் | 55 |
| 8. | பெண்மைக்குப் பெருமை | 95 |
| 9. | பெருந்தகைமைக்குப் பொருந்தாமை | 128 |
| 10. | இராமாவதாரம் | 157 |
| 11. | தசரதன் பெருமை | 188 |
| 12. | சரித்திரம் அல்ல | 245 |




# கம்பரும் வால்மீகியும்

## 1. நோக்கம்

'கம்பரும் வால்மீகியும்' என்னும் இந்த நூல், வால்மீகி முனிவர் வடமொழியில் இயற்றியருளிய இராமாயண காவியத்துக்கும் கம்ப நாட்டாழ்வார் தமிழ்மொழியில் அருளிச்செய்த இராமாயண காவியத்துக்கும் உள்ள வேற்றுமைகளை விளக்கும் ஒரு இலக்கிய ஆராய்ச்சியாகும்.

இதன் நோக்கம், 'கம்பராமாயணம்' என்பது என்னவென்றே அறியாத வடநாட்டு மக்களுக்கு வால்மீகி தந்த இராம கதையைக் கம்பர் எப்படியெல்லாம் மாற்றி எவ்வளவு அழகுபடுத்தியிருக்கிறார் என்பதை அறிவிப்பதேயாகும்.

வால்மீகி தந்த கதையைக் கம்பர் மாற்றியமைத்து இருப்பதைப் பற்றி வடநாட்டாருக்கு விளக்கவேண்டும் என்ற விருப்பம் எப்படி ஏற்பட்டது என்றால், அது பின் வருமாறு:—

இந்திய நாட்டின் மத்திய அரசாங்கத்தின் முயற்சியாக, அந்த அரசாங்கத்தின் ஆதரவுடன் 'சாஹித்திய அகடமி' என்ற பெயரில் இந்தியாவில் வழங்கிவரும் பல மொழிகளிலும் அந்தந்த மொழியில் நல்ல தேர்ச்சியுள்ளவர்கள் சிலர் அடங்கிய ஒரு இலக்கியச் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்தில் ஒவ்வொரு மொழிக்கும் இரண்டு அல்லது மூன்று பேர்கள் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். முன் காலத்தில் இந்தியாவில் பதினெட்டு மொழிகள் வழங்கி வந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. அவற்றுள் இப்போது வழக்கிழந்துவிட்ட நான்கு மொழிகள் நீங்கலாக மீதி பதினான்கு மொழிகளுக்கும் இந்தச் 'சாஹித்திய அகடமி' சங்கத்தில் சம உரிமையுள்ள இடமளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பதினான்கு மொழிக்காரர்களும் புது டெல்லியிலோ அல்லது காலப் போக்குக்குத் தகுந்தபடி வேறு இடங்களிலோ அப்போதைக்கப்போது கூடி அளவளாவி, அந்தந்த மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கான முயற்சிகளை ஆலோசிப்பதுடன், ஒரு மொழியிலுள்ள சிறந்த நூல்களை மற்ற மொழிக்காரர்களும் அறிந்து அனுபவிப்பதற்கான வழிகளையும் வகுக்கவேண்டும் என்பதே இந்தச் சங்கத்தின் நோக்கம். மொத்தத்தில் மொழி வேற்றுமைகளால் விளையக்கூடிய சச்சரவுகள் குறைந்து, இந்திய மக்களுக்குள் ஒற்றுமை வளர்ந்து உறுதிப்படவேண்டும் என்ற மிக நல்ல நோக்கத்துடன்தான் இந்திய அரசாங்கம் இந்தச் சங்கத்தை உண்டாக்கி, அதன் செலவுகளுக்காக வேண்டிய நிதியையும் ஒவ்வொரு வருஷத்துக்கும் ஒதுக்கித் தருகின்றது.

பதினான்கு மொழிக்காரர்களும் கூடுகின்ற இந்தப் பொதுச்சபைக்கு ஆலோசனைகள் சொல்ல அந்தந்த மொழி வழங்கும் பிரதேசத்தில் அந்தந்த மொழியில் தேர்ச்சியுள்ளவர்களாக ஏழு அல்லது எட்டு அறிஞர்களும் ஆங்காங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் இந்தச்



'சாஹித்திய அகடமி'யின் காரியங்களைக் கொண்டு செலுத்த ஒவ்வொரு மொழிக்கும் ஒரு பிரதிநிதி வீதம் பதினான்கு அங்கத்தினர்களுள்ள நிர்வாகக் கமிட்டியும் உண்டு. அதற்கு இந்திய அரசாங்கத்தின் பிரதம மந்திரி தலைவராகவும், உப ஜனாதிபதி உப தலைவராகவும் இருக்கிறார்கள். கல்வி மந்திரியும் சேர்ந்து பதினேழு அங்கத்தினர்கள் அடங்கியது அந்த நிர்வாகக் கமிட்டி.

முதலில் சொல்லப்பட்ட அகில இந்தியப் பன்மொழிச் சபையிலும், இரண்டாவது சொல்லப்பட்ட பிரதேச மொழிக் குழுவிலும், மூன்றாவது சொல்லப்பட்ட நிர்வாகக் கமிட்டியிலும் நான் ஒரு அங்கத்தினனாக இருக்கிறேன். அந்த முறையில் 'சாஹித்திய அகடமி'யைச் சேர்ந்த பிறமொழி அறிஞர்களுடன் ஆங்கிலத்தில் அளவளாவும் வாய்ப்புக்கள் அடிக்கடி அமையும்.

அப்படி அவர்களுடன் ஒரு சமயம் சல்லாபித்துக் கொண்டிருந்தபோது கம்பராமாயணத்தைப் பற்றி விரிவுரை நிகழ்த்த நேரிட்டது. அவர்களெல்லாரும் தமிழில் ஓர் இராமாயணம் இருக்கிறது என்றும், அது வால்மீகத்தைப் பின்பற்றியதென்று மட்டுந்தான் கேள்விப் பட்டிருந்தவர்கள். கம்பராமாயணம் வால்மீகி இராமாயணத்துக்குப் பலவிதங்களில் வேறுபட்டது என்று நான் சொன்னதைக் கேட்டு அவர்கள் வியப்புற்று, அந்த வேற்றுமைகளிற் சிலவற்றை விளக்கும்படி வேண்டினார்கள். சில முக்கியமான வித்தியாசங்களை எடுத்துக்காட்டி, கம்பர் எதற்காக அப்படி மாற்றியிருக்கிறார் என்ற காரணங்களையும் சொன்னேன். அதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்த அறிஞர்கள், வால்மீகி இராமாயணத்துக்கும் கம்பர் இராமாயணத்துக்கும் உள்ள வேற்றுமைகளை ஒரு சிறு நூலாக எழுதி, அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக்

கொடுத்தால் அதைச் 'சாஹித்திய அகடமி' மூலமாகப் பிறமொழிகளிலும் வெளியிடலாமென்றும் அப்படிச் செய்வது தமிழ் அறியாதவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்குமென்றும் வற்புறுத்தினார்கள். அதற்காக எழுதப்பட்டது இந்த ஆராய்ச்சி.

கம்பாராமாயணத்தின் சிறப்பைத் தமிழறியாத பிற மொழிக்காரர்களும் அறிந்து அனுபவிக்க வேண்டுமென்று ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதற்கென்று எழுதப்பட்டது என்பது இதன் தோற்றுவாய்க்கு உடனடியான காரணம் என்றாலும், தமிழர்களேகூடக் கம்பராமாயணத்துக்கு உரிய சிறப்பை உணர்வதற்கு இது மிகவும் உதவியாகும்.

கம்பராமாயணத்தை மட்டும் படித்தறிந்த தமிழ்ப் பண்டிதர்களும்கூட, அவர்கள் வால்மீகி இராமாயணத்தை அறியாதவர்களானதால் கம்பருடைய சிறப்பை முழுதும் அறிய முடியாது.

வால்மீகி இராமாயணத்தை மட்டும் படித்தறிந்த வடமொழிப் பண்டிதர்கள், கம்பராமாயணத்தின் பெருமையை அறியக் காரணமில்லை. ஏனெனில், கம்பராமாயணம் வால்மீகி இராமாயணத்தைப் பார்த்துத் தமிழில் எழுதப்பட்டுள்ளதுதான் என்ற அலட்சியத்தால் அவர்கள் கம்ப ராமாயணத்தை ஆராயப் புகுவதில்லை.

இந்த இருவகைத் தனிமொழிப் பண்டிதர்களும் போக வடமொழியிலும் தமிழ் மொழியிலும் பரிச்சயமுள்ளவர்களாய், வால்மீகி இராமாயணத்தையும் கம்பராமாயணத்தையும் படித்தறிந்தவர்கள் உண்டு. இவர்களிற் பெரும்பகுதியினரும் வடமொழியின்மீது அவர்களுக்குள்ள பாசத்தினாலோ என்னவோ – வால்மீகி முனிவர் தந்த கதையைக் கம்பர் மாற்றியமைத்திருப்பதைப் பாராட்டுவதில்லை. இவர்கள்,



வால்மீகி சொன்னது ஞான திருஷ்டியினால் உணரப்பட்ட உண்மை போலவும், கம்பர் பாடிய இராமாயணம் கவித்திறமையினால் புனையப்பட்ட கற்பனை போலவும் கருதுவதாகத் தெரிகின்றது. இவர்களில் இன்னுஞ்சிலர் வால்மீகி சொன்னதையும் கம்பர் சொன்னதையும் சேர்த்துக் குழப்பி, வால்மீகி சொன்னதையே தான் கம்பர் சொல்லியிருக்கிறாரேயன்றிச் சொந்தமாக ஒன்றும் சொல்லிவிடவில்லை என்று தோன்றும்படி எழுதுகிறார்கள்.

இவர்களுக்கு வடமொழியின் மீதுள்ள பக்தியை நாம் பழிக்கவில்லை. வடமொழியின் சிறப்பையும் நாம் குறைத்துக்கூறப் புகவில்லை. வடமொழி மிகச்சிறந்த இலக்கியங்களை உலகத்துக்குத் தந்துள்ளது. இந்திய நாட்டின் மெய்ஞ்ஞான உணர்ச்சிக்கு மூலமே வடமொழி இலக்கியங்கள்தாம். பண்டைய தமிழர்கள் வடமொழி இலக்கியங்களை மிகவும் விரும்பிக் கற்றவர்கள். ஒரு வகுப்பாரன்றி, மற்றவர்கள் பார்க்கவும் கூடாதென்று மறைத்து வைக்கப்பட்டிருந்த வடமொழி வேதங்களையும் தேடிச்சென்று, வருந்திக் கற்றவர்கள் தமிழர்கள். வடமொழி இலக்கியங்களிலுள்ள நல்லறிவுகள் அனைத்தையும் தமிழ் இலக்கியங்களில் கூசாமல் கூட்டிக்கொண்டவர்கள் பண்டைய தமிழர்கள். தெய்வத்தை நாடுகின்ற சிந்தனைகள் மிகுந்துள்ளதால் வடமொழியைத் 'தேவ பாஷை' என்று போற்றுவது பொருத்தமானதே.

கம்பர், வடமொழியிலுள்ள சிறந்த இலக்கியங்கள் எல்லாவற்றையும் கரை காணக் கற்றுணர்ந்தவர் என்பதை அவர் இயற்றியுள்ள காவியம் கண்ணாடிபோலக் காட்டுகின்றது. இருந்தும், வடமொழிப் பற்றுடைய தமிழர்கள் வால்மீகி முனிவர் சொன்ன கதையைக் கம்பர் மாற்றியமைத்திருப்பதில் மகிழ்ச்சி காட்டுவதில்லை. சிலர்

அந்த மாறுதல்களை மறுத்துப் பேசாவிட்டாலும் மறைத்துப் பேச முயலுகின்றார்கள். அதற்குக் காரணம் அவர்களையும் மீறி, அவர்களுடைய மனத்தைப் பற்றிக்கொண்டிருக்கும் பாஷாபிமானந்தான். கம்பர் பாடிய அருமையான இராமாயணம் அரங்கேறுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்ததும் இந்தப் பாஷாபிமானந்தான். தம்முடைய காவியத்தை அரங்கேற்ற, கம்பர் பட்ட கஷ்டங்களைப் பற்றிக் கர்ண பரம்பரையாகச் சொல்லப்படும் கதைகள் கணக்கற்றவை. தில்லை மூவாயிரவரும் திருவரங்கத்து அருச்சகர்களும் கம்பராமாயண அரங்கேற்றத்துக்கு இழைத்த இடையூறுகள் எண்ணிறந்தன வென்று கேள்விப்பட்டிருக்கிறோம். கர்ண பரம்பரையான கதைகளைப் பற்றிய உண்மைகள் எப்படியிருந்தாலும், வடமொழிப் பற்றுடைய தமிழர்கள் 'பிரம்மதேவனுடைய அனுக்கிரகத்தால் சரஸ்வதி கடாட்சம் பெற்று, வால்மீகி முனிவர் ஞானக்கண்ணால் கண்டறிந்து எழுதியிருக்கும் இராம கதையை இப்படியெல்லாம் மாற்றி எழுத இந்தக் கம்பன் யார்?' என்று கடுமையான எதிர்ப்பு நடத்தினார்கள் என்பதைக் கம்பர் பாடியிருக்கும் பாயிரம் தெளிவாகக் காட்டுகின்றது.

அந்தப் பாயிரத்தில்:

"நொய்தின் நொய்யசொல் நூற்கலுற்றேன் எனை
வைத வைவின் மராமரம் ஏழ்தொளை
எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே"

என்கிறார் கம்பநாட்டாழ்வார். இந்தச் செய்யுளின் வசனநடை:— மராமரம் ஏழ் தொளைஎய்த எய்தவற்கு எய்திய மாக்காதை செய்த செய்தவன் சொல் நின்ற தேயத்தே, எனை வைத வைவின் நொய்தில் நொய்யசொல் நூற்கலுற்றேன் — என்பது. பதத்துக்குப் பதமாக இதற்குப் பொருள்:— மராமரங்கள் ஏழும் தொளை படும்படி அம்பு எய்தவனாகிய (இராமனுக்கு) ஏற்பட்ட பெருங்கதையை (இராமாயணத்தை) இயற்றிய தவசியாகிய (வால்மீகியின்) சொல் பரவியிருக்கின்ற நாட்டில், என்னைத் திட்டிய திட்டுக்களையும் (பொறுத்துக்கொண்டு) அற்பத்திலும் அற்பமான புன்மொழிகளைக் கொண்டு இந்த நூலை இயற்றலானேன் — என்பது.



இந்தச் செய்யுளின் கருத்தை மிகவும் கவனிக்கவேண்டும். 'வால்மீகி முனிவரின் சொல்லுக்குச் செல்வாக்கு நிலவுகின்ற தேசத்திலே, என்னைத் திட்டுகின்ற வசை மொழிகளையும் சகித்துக்கொண்டு இந்த நூலை இயற்றினேன்' என்று மனம் நொந்து சொல்லுகிறார், கம்பர். இவரை யார் வைதார்கள்? எதற்காக வைதார்கள்? என்பவை ஆராயத் தக்கன. 'வைத வைவின்' என்று மட்டும் சொல்லாமல் 'செய்தவன் சொல்நின்ற தேயத்தே' என்றும் சொல்லுவதால் வால்மீகி முனிவர் சொன்ன கதையை மிகவும் மாற்றிச் சொன்னதற்காகத்தான் வைதார்கள் என்பது தெளிவாகிறது.

கம்பர் இத்தோடு நின்றுவிடவில்லை. அடுத்த செய்யுளில்,

"வையம் என்னை இகழவும் மாசு எனக்கு
எய்தவும்மிதியம்புவது யாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையினோர் புகழ்
தெய்வ மாக்கதை மாட்சி தெரிக்கவே"

என்கின்றார். இதன் பொருள்:— உலகம் என்னை இகழும்படிக்கும் என்மீது குற்றஞ்சாட்டும்படிக்கும் நான் இப்படிச் சொல்லுவது ஏனெனில், பொய்யில்லாத

கேள்வியறிவும் கல்வியும் உடையவர்கள் புகழும்படியான இந்த மாபெரும் தெய்வக்கதையின் மகிமையை விளங்க வைப்பதற்கே — என்பது. அதாவது 'வால்மீகி முனிவர் சொன்ன கதையை நான் மிகவும் மாற்றியமைத்ததற்காக உலகத்தார் என்னை இகழ்ந்தாலும் இகழட்டும்; என்மீது அபசார குற்றம் சுமத்தினாலும் சுமத்தட்டும்; நான் எதற்காக இப்படி மாற்றியமைத்தேன் என்றால், உண்மையான கல்வியறிவும் கேள்வியறிவும் உடையவர்கள் புகழக்கூடிய இந்த மாபெரும் தெய்வக் கதையின் பெருமையை அதிகப்படுத்தவேயன்றி வேறல்ல' என்பது கருத்து.

வால்மீனி முனிவர் தந்த கதைக்கும் கம்பநாட்டாழ்வார் தந்துள்ள கதைக்கும் உள்ள வேற்றுமைகளை விளக்குவதற்கே எழுதப்படுகிற இந்த நூல் வெறும் இலக்கிய ஆராய்ச்சி. மொழி ஆராய்ச்சி அல்ல. இன ஆராய்ச்சியும் அல்ல. ஆதலால் வடமொழி — தென்மொழி என்ற மொழி மோகத்தால் விளையக்கூடிய விருப்பு வெறுப்புக்களுக்கும், ஆரியன் — திராவிடன் என்ற இனப்பற்றுக்களால் உதிக்கக்கூடிய அருவருப்புகளுக்கும் இடங்கொடுத்துவிடாமல் சத்தியத்தை மட்டும் துணையாகப் பற்றிக்கொண்டு இதைப் படிக்கவேண்டும். அப்படிச் செய்தால் வால்மீகி முனிவர் இயற்றிய மூலக்கதையைக் கம்பநாட்டாழ்வார் முற்றிலும் மாற்றியமைத்ததால் இராமாயணம் எவ்வளவு பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.



## 2. மாற்றியமைத்தது ஏன்?

கம்பராமாயணத்திற்கு மூலம் வால்மீகி இராமாயணம்தான். என்றாலும் கம்பராமாயணம் வால்மீகி இராமாயணத்துக்கு மிகவும் வேறுபட்டது. ஒற்றுமைகள் வெகு சில. வேற்றுமைகள் மிகப் பல. கம்பருக்கு முன்னால் வடமொழியில் மூன்று இராமாயணங்கள் இருந்தன. அவற்றுள் முதல் நூல் வால்மீகியின் காவியந்தான். அதைப் பின்பற்றித்தான் தம்முடைய இராமாயணத்தைப் பாடியதாகக் கம்பர் சொல்லுகிறார்.

*"தேவ பாடையில் இக்கதை செய்தவர்*
*மூவ ரானவர் தம்முளும் முந்திய*
*நாவி னார்உரை யின்படி நான்தமிழ்ப்*
*பாவி னால்இதைப் பாடிய பண்பரோ"*

என்கிறார். இதன் பொருள்: தேவ பாஷையாகிய வடமொழியில் இந்த ராமகதையைச் செய்துள்ளவர்கள் மூன்று பேர்கள். அவர்களுக்குள் முதலில் சொன்னவராகிய வால்மீகியைப் பின்பற்றி நான் தமிழ்ப் பாட்டுக்களால் இதைப் பாடியிருக்கிறேன் — என்பது. இதன் கருத்து, வடமொழியில் இராமாயணத்தை இயற்றியுள்ள மற்ற இருவர் சொன்னதை வைத்துக்கொண்டு கம்பர் தம்முடைய காவியத்தை இயற்றவில்லை; வால்மீகி சொன்னதை மூலமாக வைத்துக்கொண்டுதான் இயற்றினார் என்ற அளவுக்குத்தான் அமையும். அதுவன்றி, வால்மீகி சொன்னதையேதான் கம்பர் சொல்லியிருக்கிறார் என்று அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. இந்தச் செய்யுள் முதனூலாகிய இராம கதையை

இயற்றிக் கொடுத்த முனிவருக்கு வணக்கம் சொல்லுவது போன்றது.

வால்மீகி இராமாயணத்தை மூலமாகக் கொண்ட கம்பர், தாம் பாடிய இராமாயணத்தில் பல இடங்களில் வால்மீகி சொன்ன கதையை அடியோடு மாற்றிவிட்டது ஏன்? வால்மீகி சொன்னதை மாற்றிச் சொல்லியிருப்பது மட்டும் அல்லாமல் வால்மீகி சொல்லாத பல விஷயங்களையும் புகுத்தியிருப்பது ஏன்? அது மட்டுமா! அநேக இடங்களில் வால்மீகி சொன்ன பல விஷயங்களைக் கட்டோடு விட்டுவிட்டது ஏன்? வால்மீகி முனிவரைப் பழிக்கவேண்டும் என்றா? வடமொழிப் பெருமையை இழிக்கவேண்டும் என்றா? கல்வித் திறமையைக் காட்டவேண்டும் என்றா? கைச்சரக்கைக் கூட்டவேண்டும் என்றா? அல்லவே அல்ல.

பின் எதற்காக வென்றால் வால்மீகி முனிவர் தந்த இராமாயணத்தை வாழவைக்கவே. வால்மீகி முனிவர் எந்த நற்பயனை மக்கள் அடையவேண்டுமென்று இராமாயணத்தை ஆரம்பித்தாரோ அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யவே. வால்மீகி முனிவரின் வாக்கில் இராமன் என்ற பெயருடன் அவதாரம் செய்த மூளியான நாராயணனை முழுமுதற் கடவுளாக்கி, கோடானு கோடி மக்களின் குலதெய்வமாக இராமனை விளங்கவைக்க வேண்டுமென்றே. சீதையை, அந்த நாராயணனுடைய மார்பில் வீற்றிருக்கும் மகாலட்சுமியாக்கி, பெண்ணின் பெருமைகளெல்லாம் உருவெடுத்த உலக மாதாவாக்கவே. இராமாயணத்தில் வருகின்ற ஒவ்வொரு பாத்திரத்தையும் அவரவருக்குச் சேர்ந்த சொல்லிலும் செயலிலும் சுத்தமுள்ளவராக்கி, அந்தந்தக் குணத்துக்கு அவரவரை உதாரணமாக்கி அறங்களை வலியுறுத்தவே.

வால்மீகி மிகச்சிறந்த கவிஞர். உலக மகாகவிகளுள் ஒருவர். மானிட வர்க்கத்துக்கு வேண்டிய தர்மங்களையும்



நீதிகளையும் அவரைவிட அழுத்தமாக வேறு யாரும் சொல்லிவிடவில்லை. ஆனால் அந்தத் தர்மங்களையும் நீதிகளையும் நடந்துகாட்டி, மனித சமுதாயத்துக்கு நல்லொழுக்கங்களைப் புகட்டவென்றே அவர் சிருஷ்டித்துள்ள பாத்திரங்கள் பரிசுத்தமாக விளங்கவில்லை. மற்றப் பாத்திரங்களில் குணக்குறைவு தோன்றிவிட்டாலும், ஆண்தன்மைக்கு உதாரணமான இராமனிடத்திலும் பெண்தன்மைக்கு உதாரணமான சீதையிடத்திலும் குணக்குறைவு கொஞ்சங்கூடத் தோன்றக்கூடாது.

வால்மீகி, கம்பர் ஆகிய இரண்டு கவிகளும் இராமனைத் தெய்வத்தின் அவதாரமாகவே தெரிவிக்கிறார்கள். தெய்வத்தின் அவதாரம் என்றால் என்னவென்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

தெய்வம் என்பது நம்முடைய ஐம்புலன்களுக்கும் எட்டாததாக, அறிவுக்கு மட்டும் தட்டுப்படுவதாகி, இந்த உலகத்தையும் அதிலுள்ள பொருள்களையும் இந்த உலகுக்கு அப்பால் வானத்தில் காணப்படுகிற எண்ணிறந்த நட்சத்திரங்களையும் ஆண்டு வருகிற ஒரு சக்தி என்று அறிகிறோம். அந்தச் சக்தியைத்தான் கடவுள் என்று சொல்லுவது. 'கடவுள்' என்ற சொல்லை விரும்பாதவர்களும்கூட, மனிதனுடைய புலன்களுக்கு அப்பாற்பட்ட அந்தச் சக்தியை 'இயற்கை' என்ற பெயரில் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

இந்த இயற்கை என்னும் சக்தி, உலகத்தில் காணப்படுகிற எல்லாப் பொருள்களிலும் இருக்கிறது. என்றாலும், உயிருடன் இயங்குகின்ற பொருள்களிடத்தில்தான் அந்த இயற்கைச் சக்தி அதிகமாக வெளிப்படுகின்றது. அப்படிப்பட்ட உயிருள்ள எல்லாப் பொருள்களினும் மனிதனிடத்தில்தான் தெய்வம் என்று சொல்லப்படுகிற

இயற்கைச் சக்தி மிகவும் அதிகமாக விளங்குகின்றது. ஏனென்றால் அந்த இயற்கைச் சக்தியைச் செயற்கைச் சக்தியாக மாற்றிக்கொள்ளும் திறமை மனிதப் பிராணி ஒன்றுக்குத்தான் இருக்கிறது. இந்தச் செயற்கைச் சக்தி என்னும் சொந்த அறிவினால் மனிதன் உலகிலுள்ள மற்ற உயிர்களையெல்லாம் அடக்கியாளும் எசமானன் ஆகின்றான். அதற்குமேலும், பஞ்சபூத தத்துவங்களையும் கண்டறிந்து அவற்றைக்கொண்டு பல வல்லமைகளை அடைகிறான். அதனால் எல்லாம் வல்ல இயற்கைச் சக்தி என்னும் தெய்வ சக்திக்கு மனிதனே சிறந்த பிரதிநிதியாகத் தோற்றமளிக்கின்றான். அதனால்தான் நேரிற் காணமுடியாத தெய்வத்தை மனித வடிவத்தில் காண்கின்றோம் என்று ஆன்றோர் சொல்லுவது.

இந்தத் தெய்வத்தன்மை மனிதராகப் பிறக்கும் எல்லாரிடத்திலும் ஓரளவு இருக்கின்றது. இருந்தாலும் தெய்வத்தன்மையின் சிறந்த குணங்களாகிய கருணையும் ஆற்றலும் யாரிடத்தில் அதிகமாகக் காணப்படுகிறதோ அந்த மனிதனைத்தான் தெய்வப்பிறவியாக உலகம் கொண்டாடுகின்றது. இப்படிப்பட்டவர்களுக்குள்ளும் இளம்பிராயத்திலிருந்தே அசாதாரணமான நற்குண நல்லொழுக்கங்கள் அமைந்தவராகி, அரிய பெரிய காரியங்களைச் செய்து முடிக்கும் வைராக்கியமும் உள்ளவர்களாக இருந்தவர்களை அவதார புருஷர்களாக ஆராதிக்கின்றோம். இந்த அவதாரங்கள், உலகத்தில் தலையெடுக்கின்ற அதர்மங்களை ஒடுக்கித் தர்மங்களைப் பாதுகாக்க அப்போதைக்கப்போது தெய்வமே சங்கல்பம் செய்து கொள்வதனால் உண்டாவதாக நம்பப்படுகிறது. இதைத்தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையிலே, **"உலகத்தில் தர்மம் ஒடுக்கப்பட்டு அதர்மங்கள் தலையெடுக்கும் போதெல்லாம் துஷ்டநிக்ரகம் செய்து சிஷ்ட பரிபாலனம்** செய்து தர்மத்தை நிலைநாட்ட நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரம் செய்கிறேன்," என்று சொல்லுகிறார். இந்தக் கீதாஞானம் இராமாவதாரத்துக்கு முந்தின அவதாரமாகிய கிருஷ்ணாவதாரத்திலேயே உபதேசிக்கப்பட்டது. அதனால் வால்மீகி முனிவருக்கும் இந்தக் கீதாஞானம் தெரிந்ததே. ஆனாலும் வால்மீகி முனிவரின் இராமாயணத்தில் இராமவதாரம் நாராயணனுடைய சொந்தச் சங்கற்பமாக இல்லாமல், மற்றத் தேவர்கள் சொன்ன ஆலோசனையினால் மகாவிஷ்ணு இராமனாக அவதரிக்க இசைந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் கம்பர் இதை அடியோடு மாற்றியமைத்துத் தேவர்களுடைய முறையீட்டுக்கு முன்னாலேயே நாராயணன் தசரத குமாரனாக அவதரிக்கச் சங்கல்பம் செய்திருந்ததாகச் சொல்லுகின்றார். இந்த மாறுபாடு இராம கதையின் தெய்வத்தன்மையை அதிகப்படுத்தி வால்மீகி தந்த கதைக்கு மேலும் சிறப்புண்டாக்குகிறது அல்லவா? இந்த வேறுபாட்டைப்பற்றிப் பின்னால் விவரிப்போம்.



# 3. இராமர் கடவுளா? மனிதரா?

இப்போதைக்கு நாம் சொல்லப் புகுந்தது என்னவெனில், வால்மீகி முனிவர், கம்பர் ஆகிய இரண்டு மகாகவிகளும் இராமனைத் தெய்வத்தின் அவதாரமாகத்தான் சொல்லுகிறார்கள். இராமாவதாரம் கிருஷ்ணவ ரத்தைப் போல் கபடநாடகங்கள் நிரம்பியதல்ல. இராமனைத் தெய்வத்தின் அவதாரம் என்று இரண்டு கவிஞர்களும் கவிக்கூற்றாகத்தான் சொல்லுகிறார்களேயன்றி, இராமன்தான்

தெய்வத்தின் அவதாரம் என்று சொல்லிக் கொள்ளுவதில்லை. வால்மீகி, இராமரை மகாவிஷ்ணுவின் பாதியாகத்தான் சொல்லுகின்றார்.

ஆனால் கம்பர், இராமனை முழுமுதற் கடவுளான பரம்பொருளின் அவதாரம் என்று கவிக்கூற்றாகப் பலவிடங்களில் சொல்லுவதோடு வாய்ப்புக் கிடைத்த இடங்களிலெல்லாம் மற்றப் பாத்திரங்களின் வாக்கால் வணங்கச் செய்கிறார். ஆனால் இரண்டு இராமாயணங்களிலும் இராமன் தன்னுடைய சொல்லிலும் செயலிலும் சிறந்த பண்புகளுள்ள ஒரு மனிதனாகவே நடந்து கொள்ளுகின்றான்.

வால்மீகி முனிவர் அருளிச்செய்த இராமாயணத்தில் வால்மீகி முனிவரே நாரத முனிவரைப் பார்த்து:— "ஐயா நாரத முனிவரே, இக்காலத்தில் இவ்வுலகத்தில் எல்லாவிதமான சிறந்த குணங்களும் பொருந்தியிருக்கும் உத்தம புருஷன் ஒருவன் இருக்கிறானா? பராக்கிரமசாலியும், தருமங்களை அறிந்தவனும், நன்றிமறவாதவனும், உண்மையே பேசுகிறவனும், விரதங்களை அனுஷ்டிக்கத் தவறாதவனும், குலாசாரம் விடாமல் நடக்கின்றவனும், எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்கிறவனும், கற்றுணர்ந்தவனும், சாமர்த்தியமுள்ளவனும், எல்லாராலும் விரும்பத்தக்க அழகுள்ளவனுமாகிய உத்தமன் ஒருவனை நீர் கண்டதுண்டா? தைரியமுள்ளவனாகித் தன் கோபத்தைத் தன் வசப்படுத்தியுள்ள புருஷன் யார்? மிகுந்த காந்தியுள்ளவனும், அசூயையில்லாதவனும் யாவன்? போரில் எவன் கோபங்கொண்டால் தேவர்களும் நடுங்குவார்களோ அவன் யாவன்? இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகளுடன் கூடிய ஒருவனைப்பற்றி நான் உங்களிடம் கேட்க மிகவும் விரும்புகின்றேன். மகா முனிவரே இவ்வாறுள்ள ஒரு



மனிதனை நீர்தாம் அறிய வல்லவர்," என்றுகூற, மூன்று உலகங்களையும் அறிந்த நாரத முனிவர் வெகு சந்தோஷமடைந்து பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்:

"முனிவரே கேளும். நீர் எடுத்துக்கூறிய நற்குணங்கள் எல்லாவற்றையும் ஒருவனிடத்தில் காண்பது அரிது. ஆயினும் நான் அறிந்ததைச் சொல்லுகிறேன். இத்தனை நற்குணங்களும் பொருந்திய புருஷர் ஒருவர் இருக்கிறார்; அவர் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்து இராமர் என்னும் பெயருடன் விளங்குகிறார்; கௌஸல்யை என்னும் மாது சிரோன்மணியின் குமாரர்; நீர் குறித்த நற்குணங்கள் எல்லாம் அவரிடத்தில் குடி கொண்டிருக்கின்றன; மிக்க அடக்கமுடையவர்; வெகு பராக்கிரமசாலி; மிகுந்த காந்தியுள்ளவர்; எல்லாரையும் தம் வசத்தில் அடக்கியாளுகிறவர்; புத்திமான்; நீதி தவறாது நடப்பவர்; வாக்கு ஸாமர்த்தியமுள்ளவர்; சம்பத்து நிறைந்தவர்; சத்துருக்களை அழிப்பவர்; உயர்ந்த தோள்கள், திரண்டுருண்ட கைகள், சங்கு போன்ற கழுத்து, தசைப்பற்றுள்ள கன்னங்கள், விசாலமான மார்பு, பெரிய தநுசு, தசைப்பற்றால் மறைந்த தோளெலும்பு இவைகளையுடையவர்; பகைவர்களை அடக்கியாளுகிறவர்; முழங்கால்வரை தொங்குகிற கைகள், அழகான தலை, அழகான நெற்றி, அழகான நடை இவைகள் அமைந்தவர்; சரியான உயரம், சரியாயமைந்த உறுப்புக்கள், எல்லாரும் நேசிக்கும்படியான நிறம் இவைகள் பொருந்தியவர்; வெகு பிரதாபமுள்ளவர்; உயர்ந்த மார்பு, விசாலமான கண்கள் முதலிய சகல சாமுத்திரிகா லக்ஷணங்களும் நிறைந்தவர்; அவருடைய தேகத்தில் சுபலக்ஷணங்கள் யாவும் தவறாது விளங்குகின்றன. தருமத்தை அறிந்தவர்; சத்திய சந்தர்; பிரஜைகளுடைய நன்மையில் எப்பொழுதும் நோக்கமுடையவர்; நல்லோரை வளர்ப்பவர்; தீயோரை அழிப்பவர்; மிக்க கீர்த்தி பெற்றவர்;

நல்லறிவுடையவர்; நல்லொழுக்கமுள்ளவர்; தம்மை அடைந்தவர்களுக்கு வசப்பட்டு நடப்பவர்; அவர்களைப் பாதுகாப்பதிலே கவலைகொண்டவர்; பிரமதேவருக்கு ஒப்பானவர்; சகல பாக்கியமும் நிரம்பியவர்; சகல சனங்களுக்கும் இஷ்டராயிருப்பவர்; இவ்வுலகத்திலுள்ள பிராணி சமூகங்களையும் வருணாச்சிரம தருமங்களையும் தமது குலாசாரத்தையும் தமது சனங்களையும் பாதுகாப்பவர்; வேதங்கள் வேதாங்கங்கள் இவைகளின் தத்துவங்களை அறிந்தவர்; தநுர் வேதத்திலும் தேர்ச்சியடைந்தவர்; ஒவ்வொரு சாஸ்திரத்தின் உண்மையையும் உள்ளபடி கண்டறிந்தவர்; ஞாபக சக்தியுடையவர்; மேலும் மேலும் விஷயங்கள் விளங்கப்பெற்ற ஞான விசேஷமுடையவர்; வெகுயோக்கியர்; பெருந்தன்மையுடையவர்; வெகு சமர்த்தர்; நதிகளெல்லாம் சமுத்திரத்தை நாடிச் செல்வதுபோல நல்லவர்கள் எப்பொழுதும் நாடித் தொடரப் பெற்றவர்; எல்லாராலும் மரியாதை பண்ணத்தக்கவர்; எல்லாரிடத்தும் சமமாக நடப்பவர்; எப்பொழுதும் அன்புள்ள பார்வையுடையவர்; காம்பீரியத்தில் சமுத்திரத்துக்கும், உறுதியில் இமயமலைக்கும், பராக்கிரமத்தில் விஷ்ணுவுக்கும், சந்தோஷமுண்டாக்குவதில் சந்திரனுக்கும் ஒப்பானவர். கோபத்தில் பிரளய காலத்து அக்கினியையும், பொறுமையில் பூமி தேவியையும், கொடையில் குபேரனையும் நிகர்த்தவர்; உண்மையில் அவரைத் தருமதேவதையின் அவதாரமாகவே சொல்லலாம்.'' (வால்மீகி இராமாயணம் முதல் சருக்கம் பண்டித ச.ம.நடேச சாஸ்திரி அவர்களின் மொழிபெயர்ப்பு.)

இப்படியாக, ஒரு சிறந்த மனிதனுக்கு அமையவேண்டிய சகல நற்குணங்களும் ஒருங்கே அமைப்பெற்றவராக வால்மீகி முனிவர் ஆரம்பத்திலேயே இராமரை அறிமுகப்படுத்துகிறார்.



மேலும் அயோத்தியா காண்டத்தின் முதற் சருக்கத்திலும் இரண்டாவது சருக்கத்திலும் இராமனுடைய உத்தம குணங்களை இன்னும் அதிகமாக வெவ்வேறு பதங்களால் வால்மீகி முனிவர் வர்ணிக்கிறார். இந்த இரண்டு சருக்கங்கள் முழுதும் இராமனுடைய உத்தம குணங்களைப் பற்றியனவே. இனிமேலும் வருணிக்க வேண்டிய குணம் ஒன்றுமே இல்லையெனும்படிச் சலிப்பில்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது. நல்ல குணங்கள் என்று சொல்லப்படுகிற எல்லாக் குணங்களும் அப்படி ஒருங்கே அமைந்துள்ள ஒரு மனிதனை, கவிஞர்கள் சொல்லாமலேயே, மக்கள் தெய்வப் பிறவியாகத்தான் தீர்மானிப்பார்கள்.

இப்படி, எல்லா நல்ல குணங்களுக்கும் இருப்பிடமாகி, தர்ம ஒழுக்கத்தை நடத்திக் காட்டவென்றே அவதரித்தவர் என்று வால்மீகி முனிவர் சிறப்பித்துள்ள இராமர், அந்தச் சிறந்த குணங்களுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத வார்த்தைகளைச் சொன்னதாகக் கூறியிருப்பது மிகவும் விசனிக்கத் தகுந்த விஷயம். இதற்கு இரண்டொரு உதாரணங்களை இங்கேயே எடுத்துக்காட்டுவது பொருந்தும்.

இராமனும் சீதையும் இலட்சுமணனும் அயோத்தியைவிட்டு ஆரணியத்துக்குப் போகிறார்கள். நாட்டைக் கடக்கிறவரைக்கும் சுமந்திரருடன் இரதத்திற் பிரயாணம் செய்கிறார்கள். கங்கைக்கரைக்கு வந்து, குகனுடைய உறவு கொண்டு ஓடத்தில் கங்கைநதியைக் கடக்கிறார்கள். சுமந்திரர் இரதத்தில் அயோதிக்குத் திரும்பிப் போய்விடுகிறார்.

கங்கையைத் தாண்டியபின் குகனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, இராமர், சீதை, இலட்சுமணர் ஆகிய மூவர் மட்டும் வேறு துணையின்றி, வனமுள்ளதும்

பயிர்களின் வரிசையுடையதும் எப்பொழுதும் மகிழ்ச்சியுடனிருப்பதுமான 'வத்ஸம்' என்ற நாட்டையடைந்தார்கள். சாயங்காலமானவுடன் பசியையுடைய இராமரும் இலக்ஷ்மணரும் சீதையை ஒரு மரத்தினடியில் இருக்கவைத்து, பன்றி, ரிசியம் — பிருஷதம் — ருரு என்ற மூன்றுவித மான்கள் ஆகிய பரிசுத்தங்களான இந்த நான்கு பெரிய மிருகங்களை விரைவில் கொன்று எடுத்துக்கொண்டு, வசிப்பதற்காகச் சீதையைவிட்ட அம்மரத்தையே நாடியடைந்தனர். (அயோத்தியா காண்டம் ஐம்பத்திரண்டாம் சருக்கத்தின் கடைசி. நடேச சாஸ்திரிகளின் வால்மீகி இராமாயண மொழிபெயர்ப்பு).

அடுத்த சருக்கமாகிய ஐம்பத்து மூன்றில் அவர்கள் மூவரும் அந்த ஆலமரத்தினடியிலேயே அன்றிரவைக் கழித்தார்கள் என்பது மட்டுந்தான் சொல்லப்படுகிறது. அந்தச் சருக்கத்தின் மொழிபெயர்ப்பு கீழே உள்ளபடி:–

எல்லாருள்ளங்களையும் மகிழ்விப்பவர்களிற் சிறந்தவரான இராமர், அம்மரத்தையடைந்து, சாயங்கால சந்தியாவந்தனத்தைச் செய்தபிறகு லக்ஷ்மணரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:–

"இப்பொழுது, காட்டில் நமக்குச் சுமந்திரரின்றியிருக்கும் முதலிரவு வந்தது. இவ்விரவில் நீ வருந்துதல் தக்கதன்று. லஷ்மணா, இன்று முதல் இரவுகளில் நாமிருவரும் சோம்பலின்றிக் கண்விழித்திருக்கவேண்டும்; ஏனெனில், சீதையின் யோகக்ஷேமம் நம்முடைய ஆதீனத்திலிருக்கிறதன்றோ! சுமத்திரையின் புதல்வனே, இவ்விரவைக் கஷ்டப்பட்டே கழிப்போம். நாமே தேடிக்கொண்டுவந்த புற்களையும் இலைகளையும் பூமியிற் பரப்பி அதிற்படுப்போம்," என்று இவ்விதமாகச் சொல்லி,



சிறந்த படுக்கையிற் படுக்கத்தக்க இராமர், வெறுந்தரையில் படுக்கையைச் சித்தஞ் செய்த பிறகு, வீற்றிருந்து, லக்ஷ்மணரைப் பார்த்து அழகிய இவ்வார்த்தைகளைச் சொல்லலானார்:– "லக்ஷ்மணா. மகாராஜர் இப்பொழுது துயரத்துடன் தூங்குவார்; நிச்சயம் மனோரதங்கள் கைகூடப் பெற்ற கைகேயி, சந்தோஷமடைய உரியவர். தேவியான அக் கைகேயியார் ஊரினின்று வந்த பரதனைப் பார்த்து, அவனுக்கு இராச்சியம் நிலைப்படும் பொருட்டு, மகாராஜருடைய உயிரை வாங்காமலிருப்பாரா?

"அநாதரும், முதியவரும், என்னாலும் பிரியப் பெற்றவரும், காமனுக்கு ஆட்பட்டவரும், கைகேயியின் ஆதீனத்தில் இருப்பவருமான தந்தையார், என்ன செய்வார்! நாம் காட்டிற்படும் இத்துக்கத்தையும், அரசருடைய புத்தி மயக்கத்தையும் ஆலோசித்துப் பார்த்து 'அர்த்தம் தருமம் இவைகளைவிடக் காமமே அதிக பலமுள்ளது' என்ற புத்தி எனக்கு உண்டாகிறது. லக்ஷ்மணா, என்னை என் தந்தை கைவிட்டதுபோல், எந்த மூட மனிதன் தன் இஷ்டப்படி நடக்கும் புதல்வனை ஒரு ஸ்திரீயின் பொருட்டுக் கைவிடுவான்? கைகேயியின் புதல்வனான பரதன், தன் மனைவியோடு கூடியவனாய், சந்தோஷத்தையடைந்துள்ள கோசல நாட்டை மகாராஜாவைப்போல், தான் ஒருவனாய்ச் சுகமாக அநுபவிக்கப் போகிறானே! என் தந்தை பிராயஞ் சென்றவராயிருக்க நானும் காட்டில் வசித்திருக்கையில், அப்பரதனே எல்லா இராஜ்யத்துக்கும் பிரதானனாவான். எவன் தர்மார்த்தங்களைக் கைவிட்டுக் காமத்தைப் பற்றுகிறானோ அவன் தசரத மன்னரைப்போல் விரைவில் ஆபத்தையடைகிறான். யாகஞ்செய்ய உரியவனே, தசரதருடைய மரணத்துக்கும், என்னைக் காட்டுக்கு ஓட்டுதற்கும், பரதனுக்கு இராச்சியத்தைக் கொடுப்பதற்குமே கைகேயி வந்தாரென்று எண்ணுகிறேன். செல்வச்

செருக்கினால் மோகமடைந்த கைகேயி, என்பொருட்டுக் கோசலையையும் சுமத்திரையையும் வருத்தாதிருப்பாரா? லஷ்மணா, என் பொருட்டுச் சுமத்திரா தேவியார் துயரப் படவேண்டாம்; நீ இங்கிருந்து அயோத்திக்குக் காலையிலே ஏகுவாய். நான் ஒருத்தனாகவே சீதையுடன் தண்டகாரணியத்துக்குப் போகிறேன்; அநாதையான கௌசலைக்கு நீ தலைவனாவாய். அற்பத் தொழிலையுடைய கைகேயியார் பகைமையால் அநியாயம் செய்வாரன்றோ! ஆகையால் தருமத்தையுணர்ந்தவனான பரதனிடத்தில் என்னுடைய தாயை அடைக்கலமாகக் கொடுப்பாய். சுமத்திரையின் குமாரனே முற்பிறப்பில் என் தாய், அநேக மாதர்களைத் தம்தம் புதல்வரிடமிருந்து பிரித்தாரென்பது நிச்சயம்; அதனால்தான் இவ்வாறு விளைந்தது. வெகுகாலமாகப் போஷிக்கப்பட்டவனும், வருந்தி வளர்க்கப்பட்டவனுமான என்னால் பயன் விளையும் பருவத்தில் கௌசலை என்னைவிட்டுப் பிரிக்கப்பட்டார்; இவ்வாறான நான் பழிக்கத்தக்கவன். சுமத்திரையின் பிள்ளாய், தாய்க்கு மிகத் துக்கத்தைத் தரும் என்னைப் போன்ற பிள்ளையை ஒரு ஸ்திரீயும் பெறவேண்டாம்; லஷ்மணா, தாயால் வளர்க்கப்பட்ட பெண்கிளியென்னினும் அவருக்கு அதிக மகிழ்ச்சியை விளைக்கும்; ஏனெனில், அப்பெண்கிளி பழக்கத்தால் தனது அருகிலிருக்கும் ஆண் கிளியைப் பார்த்து 'சுகமே, சத்துருவின் காலைக் கடி' என்று சொல்லும் வார்த்தையைக் கேட்பாரன்றோ!

பகைவரைக்கொல்லும் வலிமையுடைய லக்ஷ்மணா, அல்ப பாக்கியமுடையவராயும் புத்திரனால் பெறும் பயனைப் பெறாதவராயும் எப்பொழுதும் துக்கிப்பவராயுமிருக்கும் தாய்க்குச் சிறிதும் உபகாரம் செய்யாத புதல்வனான என்னால் என்ன பயன்? என்னைவிட்டுப் பிரிந்தவராயும் என்னுடைய அன்னையுமாக இருக்கும் கோசலை அற்ப



பாக்கியமுடையவர்; ஏனெனில் அவர் சோகசாகரத்தில் முழுகினவராய் மிக்க துன்பத்தால் மெலிந்து படுவரன்றோ! லக்ஷ்மணா, கோபங்கொண்டுவிட்டால் நான் ஒருவனே பாணங்களால் அயோத்தியையும் உலகம் முழுவதையும் ஆக்ரமிப்பேன்; ஆயினும் தருமமல்லாத தொழிலில் பராக்கிரமத்தைச் சாதனமாகக் கொள்ளக் கூடாதன்றோ! மாசற்றவனே, அதருமத்தாலுண்டாகும் லோகாபவாதத்துக்கு அஞ்சின நான், மறுமைக்கு அஞ்சுவதால் இப்பொழுது என்னைப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்துக் கொள்ளவில்லை' எனப் பலவாறு ஜனங்களற்ற காட்டில் எளிமையாகப் புலம்பி, கண்ணீர் நிரம்பிய முகத்தையுடையவராய் இரவில் மௌனத்தோடு இருந்தார்" – (இது வால்மீகி இராமாயணத்தின் ஐம்பத்து மூன்றாவது சருக்கத்தின் மொழி பெயர்ப்பு. அயோத்தியா காண்டம்)

இந்தப் பேச்சு, இராமருக்கு உள்ளனவாகச் சொல்லப்பட்ட எல்லா உத்தம குணங்களையும் அடியோடு அழித்துவிடுகின்றது. நல்ல ஒழுக்கமுள்ள சாதாரண மனிதனும்கூடச் சொல்லத்தகாத மிக மட்டமான பேச்சு இது என்றால் ஒழுக்கத்தையும் தருமத்தையும் காக்கவென்றே அவதரித்ததாகச் சொல்லப்படுகிற இராமன் இப்படிப் பேசத் தகுமா? இது இராமகதையின் அஸ்திவாரத்தையே இடித்துவிடுகின்றது. தசரதன் வெறும் காம ஆசையினால் கைகேயியைத் திருப்தி செய்ய இராமனைக் காட்டுக்குப் போய்விடச் சொன்ன முழு மூடன் என்று இராமனே சொன்னால் பிறகு இராமாயணம் எதற்காக? தசரதர் சத்தியத்துக்காக உயிரைத் துறந்தவர் என்பது எங்கே?

இது இராமபிரானுடைய பெருமைகளை அழித்துவிடுகிறது என்பது மட்டுமல்லாமல் வால்மீகியின் கதைப் போக்குக்கே முரண் உண்டாக்குகிறது. இதற்கு

எந்தவிதமான சமாதானம் சொன்னாலும் பொருந்தாது. அரண்மனையில் இதுவரையிலும் வெகு சுகமாக இருந்துவந்த இராமன் இப்போது வனத்தில் ஒரு மரத்தினடியில் தரையில் படுத்துறங்க நேரிட்டதை எண்ணி, மனித சுபாவத்துக்குரிய பலவீனத்தில் இப்படியெல்லாம் பேசிவிட்டார் என்றால், உலகத்திலுள்ள எல்லா மனிதர்களிலும் சிறந்தவன் இராமன் என்பது எப்படி? தந்தையைச் சத்தியசந்தராக்கி, வனத்துக்குச் சென்று, சீதையை அபகரிக்கவிட்டு அதைக் காரணமாகக் கொண்டு இராவணாதியரைக் கொன்று, தர்மத்தை நிலைநாட்டவென்றே அவதரித்த தெய்வப் பிறவி என்று இராமர் வணங்கப்படுவது எப்படி?

இது இராமருடைய பலவீனத்தால் சொல்லப் பட்டதென்று கொள்ளாமல், தம்முடன் வந்துள்ள இலட்சுமணனுடைய மன உறுதியைப் பரிசோதிப்பதற்கென்று இராமர் லக்ஷ்மணனைப் பார்த்து 'நாளைக்குக் காலையில் நீ அயோத்திக்குப் போய்விடு; நான் மட்டும் சீதையுடன் தண்டகாரணியத்துக்குப் போகிறேன்' என்று சொன்னதாகக் கொண்டால், பிறந்தது முதல் இணைபிரியாமல் இருந்தவன் இலட்சுமணன்; இராமர் வனத்துக்குப் புறப்படும்போது தானும் காட்டுக்கு வந்தே தீருவேன் என்று பிடிவாதம் செய்தவன். இராமர் எவ்வளவோ நியாயங்களைச் சொல்லித் தடுக்க முயன்றும் 'நான் உங்களைப் பிரிந்து தேவலோகத்தில் மரணமில்லாத வாழ்வு பெறுவதானாலும் விரும்பமாட்டேன். உலகங்களுக்கெல்லாம் அரசனாவதானாலும் எனக்கு வேண்டாம்; உங்களுடன் இருப்பதைத்தான் விரும்புகிறேன்' என்று இவ்வளவு தூரம் வந்தவனை இங்கேதானா பரிசோதிக்கவேண்டும்? அப்படிப் பரிசோதிக்க எண்ணியிருந்தால் இராமர் மகாத்துமா ஆவாரா?



அன்றியும் இது வால்மீகி முனிவர் சொல்லும் கதையின் போக்குக்கே முரண் உண்டாக்குகிறது. அது எப்படி என்பதைப் பார்ப்போம்.

கைகேயி கணவரிடத்தில் வரம் கேட்டு இராமரைக் காட்டுக்குப் போகச் சொல்லிவிட்டதையும் அந்தப்படியே இராமரும் காட்டுக்குப்போகத் தீர்மானித்துவிட்டதையும் அறிந்த இலட்சுமணன் கொதிப்படைகிறான். அதையறிந்த இராமர் இலட்சுமணனைப் பார்த்து:–

"உன் கோபத்தையும் துக்கத்தையும் அடக்கி, கேவலம் தைரியத்தைத் துணையாகக் கொண்டு, அவமானத்தைச் சகித்து, இப்பொழுது நமக்குப் பிதுருவாக்கியப் பரிபாலனம் பண்ணும்படியான பாக்கியம் வந்ததே என்று சந்தோஷமடைந்து, இதுவரையில் என் பட்டாபிஷேகத்துக் கென்று சேர்க்கப்பட்ட எல்லாப் பொருள்களையும்விட்டு, இனிமேல் காட்டுக்குப் போக வேண்டியதற்கு என்ன செய்யவேண்டுமோ அவைகளை விரைவிற் செய்.

சுமித்திரையின் புதல்வனே, பட்டாபிஷேகப் பொருள்களைச் சேர்க்க எவ்வளவு விரைந்தாயோ அவ்வளவு விரையவேண்டும். என்னுடைய பட்டாபிஷேகத்தைப் பற்றிப் பரிதபிக்கும் எனது சிறிய தாயார் சிறிதேனும் ஐயப்படாத வண்ணம் நீ இப்பொழுது நடக்கவேண்டும்.

லக்ஷ்மணா, அவள் மனம் இந்த விஷயமாகச் சங்கித்தலாகிற துக்கத்தை நான் ஒரு நிமிஷமும் பார்க்கச் சகிக்கமாட்டேன். தெரிந்தாவது தெரியாமலாவது இதுவரையில் என் தாய்க்காவது தந்தைக்காவது விருப்பில்லாத தொழிலை நான் செய்தேன் என்று எனக்கு நினைவில்லை. உண்மையே பேசுபவராயும், சொன்ன சொல் தவறாது நடப்பவராயும், எங்கும் தடைப்படாத

பராக்கிரமத்தையுடையவராயும், பரலோகத்தின் பொருட்டு அஞ்சுபவராயுமிருக்கும் எனது தந்தை அச்சமற்றவராகட்டும். பட்டாபிஷேக ஏற்பாடுகளை உடனே நிறுத்தாவிட்டால், 'தமது சொல் பொய்யாகிவிடுமோ' என்று நமது தந்தை தபிப்பார். அத்தாபம் என்னையும் தபிக்கச்செய்யும். ஆகையால் இந்த க்ஷணமே பட்டாபிஷேக யத்தனங்கள் எல்லாவற்றையும் நிறுத்தி, நான் ஆரண்யத்துக்குப் போக விரும்புகிறேன். நான் காட்டிற்குப் போய்விட்டேன் என்ற சமாச்சாரம் கேள்விப்பட்டால் கைகேயியம்மாவும் 'நமது எண்ணம் முடிந்துவிட்டது' என்று சந்தோஷமடைந்து மனக்கலக்கமில்லாமல் பரதனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணி வைப்பார். நான், தலைமயிரைச் சடை செய்துகொண்டு, மான்தோல் மரவுரி இவைகளையணிந்து, காட்டுக்குப்போன பிறகுதான், கைகேயியின் மனம் சுகத்தை அடையும். காட்டிற்குப்போகவேண்டும் என்ற புத்தியைக் கற்பித்து, மனத்தையும் உறுதியாகும்படிச் செய்த அவரை நான் வருத்தப்படுத்த விரும்புகின்றிலேன். ஆகையால் நான் காட்டிற்குச் செல்லப்போகிறேன்.

விளம்பரம் வேண்டாம். கையிற்கிடைத்த இராச்சியம் நழுவி, நான் இப்பொழுது காட்டிற்குப் போகிற காரணம் விதியே. காலத்தினால் உண்டான இவ்வபிப்பிராயம் தெய்வத்தால் உண்டாகாமல் இருக்குமாயின், கைகேயியின் புத்தி, உன்னால் கஷ்டமானதாக மதிக்கப்படும் வனவாசத்தைச் செய்விக்க எவ்வாறு உடன்படும்? என் மாதாக்களிடத்தில் எனக்குப் பேதமில்லையென்பது உனக்குத் தெரியாதா? 'இராமன் வேறு, பரதன் வேறு' என்று கைகேயி ஏதாவது வித்தியாசம் பாராட்டியது உண்டா? அப்படியிருந்தவர் இன்றைய தினம் என் பட்டாபிஷேகம் கூடாதென்று தடுத்து இவ்வளவு அன்பில்லாமலும் கொடுமையாகவும் பேசினதற்குக் காரணம் தெய்வச் செயலன்றி வேறுண்டோ?



அப்படியில்லாவிடில், அவர் ஒரு மகாராஜா வயிற்றிற் பிறந்து நன்னடக்கையும் நற்குணமும் எப்பொழுதும் அடைந்திருந்தும், இப்பொழுது தன் புருஷன் முன் நின்று, ஒரு அற்பப் பெண்பிள்ளைபோல் எனது பீடையைச் சொல்வாரா? எண்ணுதற்குரிய மகிமை பொருந்தின விதி எல்லாப் பூதங்களிடத்தும் தடையின்றிச் செல்லும் வலிமையுடையது. இவ்விஷயம் என்னிடத்தும் தாயாகிய கைகேயியினிடத்தும் நன்கு விளங்குகின்றது. இருவர்க்கும் மாறுபாடு உண்டாயிற்றன்றோ!

பயன் விளைவதற்குமுன் அறியமுடியாத விதியோடு மாறுகொள்ள யாருக்குத்தான் திறன் இருக்கின்றது? ஒருவருனுடைய சுகமும் துக்கமும், சாந்தியும் கோபமும், லாபமும் நஷ்டமும், உற்பத்தியும் விநாசமும், காரணங் கருதமுடியாத மற்ற எல்லாவித காரியங்களும் அத்தெய்வச் செயலால்தான் நிகழ்கின்றன. கடுந்தவம் புரியும் ரிஷிகளும், இவ்விதியாற் பீடிக்கப்பட்டவராய், செய்தற்கரிய நியமங்களையும் கைவிட்டுக் காமக் குரோதங்களால் அவமானமடைகின்றனர். நாம் மேற்கொண்ட தொழில் முடியாமற்போவதும் அதற்குப் பதிலாக மற்றொரு தொழில் நிறைவேறுவதும் தெய்வத்தின் செயலன்றி வேறன்று. இவ்விதமாக எண்ணும் தத்துவ புத்தியையடைந்து மனத்தை அடக்கியிருக்கும் எனக்கு, பட்டாபிஷேகம் நின்றதற்காகத் துக்கம் சிறிதுமில்லை. நீ இத்தத்துவ புத்தியால் பரிதாபம் அற்று, என்னை அனுசரித்து, சீக்கிரமாக என் பட்டாபிஷேக ஏற்பாடுகளைத் தடுப்பாய்.

லக்ஷ்மணா, நான் பட்டாபிஷேகத்தின் பொருட்டு வந்திருக்கும் புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டு தவசிகளுடைய தொழிலில் மூள்வதற்கு விரதஸ்நானம் செய்யப்போகிறேன். இல்லாவிடின், அரசருடைய

பொருளாக மதிக்கப்பெற்ற இதுதான் எதற்கு? ஸ்வயமாய் எடுத்த ஜலத்தால் விரதஸ்நானம் செய்யலாம்.

லக்ஷ்மணா நீ 'இராச்சியம் போயிற்றே' என்று துன்பப்படாதே. இராச்சியத்தை அடைதல், காட்டுக்குப்போதல் இவையிரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தால் வனவாசந்தான் சிறந்தது.

லஷ்மணா, பட்டாபிஷேகத்துக்கு விக்கினம் செய்ததில் இளையமாதா ஐயுறத் தக்கவரல்லர்; ஏனெனில் தெய்வத்தாலன்றோ அவர் அங்ஙனம் உரைத்தார். தெய்வம் அவ்வளவு வலியுள்ளது என்று நீ அறிவாய்" என்றார். (இது வால்மீகி இராமாயணம் அயோத்தியா காண்டத்தின் இருபத்திரண்டாம் சருக்கத்தின் மொழிபெயர்ப்பு. பண்டித நடேச சாஸ்திரியவர்களின் மொழிபெயர்ப்பு அப்படியே எழுதப்பட்டது.)

மேலேயுள்ள பேச்சில் இராமனுடைய குணம், வால்மீகி முனிவர் ஆரம்பத்தில் வர்ணித்தபடி, மிகச் சிறப்புடையதாக விளங்குகின்றது. அவன் தெய்வப் பிறவிதான் என்று தெரியச் செய்கிறது. பட்டாபிஷேகம் செய்துகொள்வதைவிடக் காட்டுக்குப்போவதே சிறப்புடையது என்று அவன் சீர்தூக்குவதில் காட்டுக்குப்போவதால் ஏதோ ஒரு சிறந்த காரியத்தைச் செய்து முடிக்கலாம் என்பதை உணர்ந்து பேசுவதுபோல் தெரிகின்றது. கைகேகியிடத்தில் துளிகூட அருவருப்புக்கொள்ளாமல் அவள் தன்னைக் காட்டுக்குப்போகச் சொன்னது தெய்வம் விதித்த கட்டளையேயல்லாமல் கைகேகியின் குற்றமல்லவென்று சொல்லுவது அவதார காரியத்தை மிகவும் அநுசரித்த பேச்சாக அமைகின்றது.

இங்கே இவ்வளவு சிறப்புக்களை இராமனுக்குச் சொன்ன வால்மீகி, முன்னே காட்டியபடி, வனவாச



ஆரம்பத்தில் தந்தை தசரதரைக் காமத்தால் அறிவு கெட்டுத் தன்னைக் கைவிட்ட மூடன் என்றும் கைகேகியைத் தீய எண்ணமுள்ள கொடுமைக்காரியென்றும் இராமன் நிந்திக்கச் செய்தது ஏனோ!

இராமனுடைய பெருங்குணத்துக்குத் தகாத வார்த்தைகளை அவன் சொல்லுவதாக வேறு சில இடங்களிலும் வால்மீகி வைத்திருக்கிறார். அதற்கு இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம்.

இராமர், லக்ஷ்மணர், சீதை ஆகிய மூவரும் தண்டகாரணியத்தில் பிரவேசித்தவுடன் அந்த ஆரணியத்தின் ஆரம்பப்பகுதியில் வசித்துவந்த முனிவர்கள் இவர்களை வரவேற்று உபசரிக்கிறார்கள். அன்றிரவை அம்முனிவர்களுடன் கழித்துவிட்டு மறுநாள் அதிகாலையில் விடைபெற்றுக் கொண்டு, மூவரும் தனியே அவ்வாரணியத்தின் அடர்ந்த பகுதிக்குப் போகிறார்கள். அங்கே இருந்த விராதன் என்னும் வெகு பயங்கரமான கொடிய அரக்கன் இவர்களைக் கண்டு, வெகு கோபத்துடன் பிரளயகாலத்து எமன் வருவதுபோல் அவன் அவர்களை நோக்கி ஓடிவந்தான். உலகத்தையே அசைத்துவிடுவதுபோலப் பயங்கரமாக ஒரு பெருங்கர்ச்சனை செய்து, சீதையை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு கொஞ்சதூரம் ஓடி, 'நீங்களிருவர்களும் சடையையும் மரவுரியையும் அணிந்துகொண்டு, ஒரு ஸ்திரீயைக் கூட வைத்துக்கொண்டு, உங்களுடைய உயிருக்கு அழிவைச் செய்துகொண்டு, ஆபரணத்தையும் வில்லையும் கத்தியையும் தரித்துக்கொண்டு தண்டகாரணியத்தில் புகுந்தீர்கள்! நீங்கள் தபசிகளென்றால் ஒரு பெண்ணை நீங்கள் உடன்கொண்டு சஞ்சரிப்பானேன்? வெகு பாவிகளாக அதர்மம் செய்துகொண்டும் முனிவர்களுக்கு இழிவை

உண்டாக்கிக்கொண்டு வந்திருக்கும் நீங்கள் யார்? நான் விராதன் என்ற ராக்ஷஸன். ஒருவராலும் அணுகக்கூடாத எனது கோட்டையாகிய இந்தக் காட்டில் ஆயுதபாணியாகச் சஞ்சரித்து முனிவர் மாமிசங்களைப் புசித்து சீவிக்கிறேன். அழகாக இருக்கும் இம்மடந்தை இன்று முதல் என் மனைவியாவாள். நான் யுத்தத்தில் உங்களிருவரையும் கொன்று, பாவிகளாகிய உங்கள் இரத்தத்தைக் குடிப்பேன்," என்றான்.

இவ்விதம் அந்தத் துஷ்டனான விராதன் செருக்குடன் சொன்ன பயங்கரமான வார்த்தையைக் கேட்டுச் சீதை மெய் தடுமாறி மனக் குழப்பமடைந்து பெருங்காற்றால் அடிக்கப்பட்ட வாழைபோலப் பயத்தால் நடுநடுங்கினாள்.

இப்படிச் சீதையை விராதன் தூக்கிக்கொள்ளவே இராமர் முகத்தில் களைகுன்றி, லக்ஷ்மணரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்: 'பாராய் லக்ஷ்மணா! ஜனகராஜருடைய மகளும் எனது மனைவியுமாகிய வெகு நன்னடக்கையுள்ள சீதை இப்பொழுது விராதன் மடியில் இருக்கிறாள்! வெகு சுகமாய் வளர்ந்து புகழ்பெற்ற ராஜகுமாரிக்கு வந்த கதியைப் பார்! நம்மை உத்தேசித்துக் கைகேயி கேட்ட வரத்தின் பிரயோஜனம் இன்று அவளுக்குக் கைகூடிவிட்டது. தனது குமாரனுக்கு இராச்சியம் கிடைத்தால்போதும் என்ற மட்டில் சந்தோஷப்படாமல், பின் வரப்போவதை முன்னதாகவே ஆலோசித்து, யாருக்கும் ஒரு கெடுதலும் பண்ணாத என்னை எந்த எண்ணத்தைக்கொண்டு காட்டுக்கனுப்பினாளோ அவ்வெண்ணத்தின் முடிவை என்னுடைய சிறிய தாய் இன்று அடைந்துவிட்டாள். அயலான் இன்று வைதேகியைத் தொட்டது என் தந்தையை நான் பிரிந்ததும் இராச்சியத்தை இழந்ததுமாகிய இரண்டு துக்கங்களுக்கும் மேலான துக்கத்தை என் மனதில் உண்டு



பண்ணுகிறது.' (இது வால்மீகி இராமாயணம் ஆரணிய காண்டத்தின் இரண்டாம் சருக்கத்தின் மொழி பெயர்ப்பு.)

இந்தப் பேச்சும் இராமனுடைய சிறப்புக்களைச் சீரழித்துவிடுகின்றது. விராதன் கையிற் சிக்கிக்கொண்ட சீதையை விடுவிக்கவேண்டிய முயற்சிகளை உடனே செய்யவேண்டிய இராமன் அதை விட்டுவட்டு கைகேகியை நிந்திக்கப் புகுந்தது அவனுடைய ஆண்மைக்கும் ஆற்றலுக்கும் மாசுண்டாக்குகிறது. தந்தையைச் சத்தியவந்தனாக்கவும் தன்னுடைய சுதர்மத்தைக் காக்கவும், தானாகவே சுயேச்சையாக வனவாசம் செய்யவந்த இராமன், இந்தப் பேச்சால் கெட்ட எண்ணங்கொண்ட கைகேகியினால் காட்டுக்குத் துரத்தப்பட்டதாகச் சொல்லுவது அவனுடைய எண்ணத்தின் தூய்மையைத் துடைத்து அழித்துவிடுகின்றது. கைகேகியை நிந்திக்கக்கூடாது என்று லஷ்மணனுக்குச் சொல்லிக்கொண்டே வந்த இராமன் தன் மனத்தில் கைகேயி தனக்குத் தீங்கிழைத்துவிட்டதாகக் கசந்துகொண்டேயிருந்தது போல் காட்டுகின்றது.

## 4. சீதையின் சினம்

இராமாயணத்தின் கதாநாயகனாகிய இராமபிரான் அவருடைய உன்னத குணங்களுக்குச் சிறிதும் ஒவ்வாத வார்த்தைகளைச் சொன்னதாக வால்மீகி இராமாயணத்தில் வருகிற இடங்கள் இப்படியிருக்க, இனி, கதாநாயகியாகிய சீதை, தன்னுடைய பெருமைக்குத் தகாத வார்த்தைகளைச் சொல்லியதாக வருகிற இடத்தைப் பார்ப்போம்:-

வால்மீகி முனிவரும், சீதையைப் பெண்களுக்கிருக்க வேண்டிய உத்தம குணங்கள் அனைத்தும் அமைந்தவளாகவும் மகாலட்சுமிக்குச் சமானமானவளாகவும்தான் சொல்லியிருக்கிறார். அப்படியிருந்தும் அந்தப் பெருமைக்குப் பொருந்தாத சொற்களைச் சீதை சொன்னதாக வால்மீகி எழுதிவிட்டது வருந்தத்தக்கது. அது பின்வருமாறு:

இராவணனுடைய தூண்டுதலால் மாரீசன் பொன்மானாக வருகிறான். சீதை அந்த அபூர்வ மானைக் கண்டு அதைத் தனக்குப் பிடித்துத் தரும்படி இராமனை வேண்டுகிறாள். லக்ஷ்மணன், அது வஞ்சனை புரிய வந்த மாயமான் என்று தடுக்கிறான். சீதை பிடிவாதம் செய்கிறாள். இராமன் இலட்சுமணனைச் சீதைக்குக் காவல் வைத்துவிட்டு அந்த மானைப் பிடிக்கப்போகிறான். அது இராமன் கைக்கு அகப்பட்டுவிடுவதுபோலவே எட்டியெட்டிச் சென்று இராமனை வெகுதூரம் இழுத்துக்கொண்டு போய்விடுகிறது. கடைசியில் இராமன் அது வஞ்சனையாக வந்ததுதான் என்று அறிந்து அதன்மீது பாணம் விடுகின்றான். பாணம் பாய்ந்து கீழே விழுந்த மானாகிய மாரீசன் இராமனுடைய குரல்போலத் தொனிக்கும்படி பெருஞ்சத்தமாக 'ஓ சீதா! ஓ லக்ஷ்மணா' என்று கூவிவிட்டு இறந்துவிடுகிறான். அவன் கதறிய ஓசையைக் கேட்ட சீதை தன் கணவருக்கு அபாயம் நேர்ந்துவிட்டதாகக் கருதி லக்ஷ்மணரைப் பார்த்து:–

"இராகவருக்கு என்ன நேர்ந்தது என்று போய்ப்பாரும். அவர் கதறியதைக் கேட்டு எனது இருதயமும் உயிரும் தம்முடைய நிலையில் இல்லை. காட்டில் கதறும் உமது தமையனாரைக் காப்பாற்றுவது உமது கடமை. உமது உதவியை வேண்டி நிற்கும் உம்முடைய தமையனாரைத் தேடி உடனே செல்லும். இடபம் சிங்கத்தினிடத்தில் சிக்கிக்



கொண்டதுபோல் அவர் அரக்கர்கள் வசம் அகப்பட்டுக்கொண்டார்" என்றாள்.

அவள் அவ்வாறு சொன்னபோதிலும், தமது தமையன் கட்டளையை நினைத்து லக்ஷ்மணர் புறப்பட்டுப் போகவில்லை. அதைக்கண்டு சீதை வெகு கோபங்கொண்டு, "சுமித்திரை புத்திர, இந்த ஸ்திதியிலிருக்கும் உமது தமையனாரைத் தேடி நீர் போகாமையால் நீர் அவருக்குச் சகோதர உருவமாகிய சத்துருபோலும். என் நிமித்தம், நீர் இராகவர் காட்டில் மாண்டு போகட்டும் என்றிருக்கிறீரோ? என் மேல் வைத்த ஆசையால்தான் நீர் இராகவரைத் தேடிச் செல்லவில்லை. இதனால் இராகவரிடம் உமக்கன்பில்லை என்றும் அவருடைய அழிவை நீர் விரும்புகிறீர் என்றும் தெரிய வருகிறது. ஆனபடியால்தான் நீர் விரைந்து சென்று மகா காந்தி பொருந்திய இராகவரைப் பாராமல் இங்கு நிற்கிறீர். யாவரொருவரைத் தொடர்ந்து நீர் இக்காட்டிற்கு வந்தீரோ அவர் நாசமடைந்தபின்பு நான் உயிரோடிருந்து என்ன பிரயோசனம்?" என்று இவ்வாறு துயரப்பட்டுக் கண்ணுங் கண்ணீருமாக அழுதுகொண்டு பெண்மான்போல் நடுங்கி நின்றாள்.

அவளைப் பார்த்து லக்ஷ்மணர், "வைதேகி, பன்னகர், அசுரர், கந்தருவர், தேவர், மானிடர், ராக்ஷசர் ஆகிய இவர்கள் ஒருவராலும் உம்முடைய கணவரை வெல்ல முடியாது. இந்திரனுக்கொப்பான இராமர் முன் நின்று போர்புரிய வல்லவர்கள் ராக்ஷசர்கள், பிசாசர்கள், கின்னரர்கள், மிருகங்கள், பயங்கரமான தானவர்கள் முதலியவருள் ஒருவருமில்லை. அம்மா, இராமன ப்போரில் கொல்ல வல்லவர்கள் ஒருவருமிலர். ஆகையால் நீர் இவ்வாறு சொல்லத்தகாது. அன்றியும் இராகவர் இல்லாதபோது நான் உம்மை இக்காட்டில் தனியாய்

விட்டுப்போவது சரியன்று. அநேக வீரர்கள் ஒன்றாகக்கூடி வந்தபோதிலும், இம்மூவுலகங்களிலுமுள்ளவர்களோடும் தேவர்களோடும் சேர்ந்து இந்திரனே சண்டையிட வந்தபோதிலும் இராமருடைய பலத்தை அடக்க முடியாது. ஆகையால், உமது உள்ளத்தில் துயரம் வேண்டாம்; இவ்விதமான தாபமும் வேண்டாம். அந்தப் பொன்மானைக் கொன்றுவிட்டு உமது கணவர் விரைவில் திரும்பிவருவார். அக்கூச்சல் அவர் குரலன்று; வேறு யாரோ மாயையால் இட்ட சத்தம். அது அவ்வரக்கனுடைய பெரும் மாயை. கந்தருவ நகரத்தைப்போல் வீண்பிரமை. மகாத்துமாவாகிய இராமர் தாம் திரும்பி வருகிற வரையில் பாதுகாக்கும்படி உம்மை என்னிடம் ஒப்பித்தார். ஆகையால் வைதேகி, நான் உம்மைவிட்டுச் செல்லமாட்டேன். அன்றியும் நாங்கள் கரனையும் இந்த ஜனஸ்தானத்திலிருந்த மற்ற இராக்கதர்களையும் கொன்றதனால் அரக்கர்களைப் பகை செய்துகொண்டோம். துன்பம் செய்வதையே விளையாட்டாக உடைய அரக்கர்கள் இப்பெருங்காட்டில் அநேகவிதமாகக் கூவுவார்கள். ஆகையால் இதைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம்," என்றார்.

இவ்விதமாக லக்ஷ்மணர் உண்மையை எடுத்துச் சொல்லச் சீதை வெகு கோபங்கொண்டு, கண்கள் சிவந்து அவரைப் பார்த்துக் கடுஞ்சொல்லால், "கெட்டவரே! கருணையற்றவரே! கொடியவரே! குடிகேடரே! இராமருக்கு இப்போது நேரிட்ட பெருந்தீங்கு உமக்குச் சம்மதம் போலும். ஆகையாற்றான், அவருக்குத் தீங்கு வந்துவிட்டதென்பதைத் தெரிந்தும் நீர் இவ்வாறு பேசுகின்றீர். குரூர மனமும் கெட்ட எண்ணமுமுடைய சத்துருவாகிய உம்மிடத்தில் இவ்விதமான கொடிய செய்கை காணப்படுவது ஆச்சரியமன்று. நீர் தனியே இராமருக்குத் துணையாக வருவதுபோல் எனக்காகவே காட்டுக்கு வந்திருக்கிறீர். அல்லது இவ்வாறு



செய்ய இரகசியமாகப் பரதர் உம்மை ஏவியிருக்கலாம். ஆனால், அவ்வாறு நீராவது பரதராவது கொண்ட கருத்து நிறைவேறப் போகிறதில்லை. குவளை நிறமும் தாமரை இதழ்போன்ற கண்களும் உடைய இராகவரைக் கணவராகப் பெற்ற நான் மற்றொரு புருஷனைக் கருதுவேனா! லட்சுமணரே, உமது கண்களின் முன்பாக நான் பிராணனை விட்டுவிடுகிறேன். இதில் ஐயமில்லை. நான் இராகவரையின்றி ஒரு நிமிஷமாவது இவ்வுலகத்தில் உயிரை வைத்திருக்கமாட்டேன்" என்றாள்.

இவ்வண்ணம் மயிர் சிலிர்க்கும்படியான கொடிய வசனங்களைச் சீதை சொல்ல, ஐம்புலன்களையும் அடக்கிய லட்சுமணர் கைகுவித்து அவளைப் பார்த்து, "அம்மா நீர் எனக்கு ஒரு தெய்வமாகையால், நான் உமக்கு மறுமொழியும் சொல்லக்கூடாதவனாக இருக்கிறேன். ஓ மைதிலி, நீர் இவ்வாறு அநுசிதமாகப் பேசினது ஆச்சரியமன்று. இது இவ்வுலகத்திலுள்ள மாதர்கள் இயல்பு. அவர்கள் பெரும்பாலும் தருமத்தை அறியாதவர்களும், சபலம் உள்ளவர்களும், கொடியவர்களும், சினேகிதத்தைக் கெடுப்பவர்களுமாக இருக்கின்றார்கள்.

வைதேகி, ஜனகமகாராஜாவின் குமாரியாகிய நீர் சொன்ன இச்சொல்லை நான் பொறுக்கமாட்டேன். அவைகள் என் காதுகளில் காய்ச்சின நாராசங்கள்போல் ஏறின. இக்காட்டில் உள்ள தெய்வங்கள் சாக்ஷி. அவர்கள் நீர் சொன்னதைக் கேட்கட்டும். நான் நியாயத்தைச் சொல்ல நீர் அநியாயமாக என்னை இக்கொடிய வார்த்தைகளைப் பேசினீர். என்னுடைய தமையன் வார்த்தையை மீறி நடவாத என்னை நீர் இப்படிச் சந்தேகித்தீர்! ஆனமையால் நீர் வருத்தத்தை அடையப்போகிறீர். இயற்கையாகவே பெண்களின் தன்மை கெட்டது. சீ! நீர் கெட்டீர். இனி

நான் இராகவர் இருக்கின்ற இடம் போகிறேன். நீர் க்ஷேமமாக இரும். விசாலமான கண்களையுடையவரே, உம்மை இவ்வனதேவதைகள் பாதுகாக்கட்டும். பல அபசகுனங்கள் தோன்றுகின்றன! மறுபடி நான் இராமரோடு திரும்பி வரும்பொழுது உம்மைப் பார்ப்பேனாக'' என்றார்.

இவ்வாறு லட்சுமணர் சொல்லச் சானகி அழுது கண்ணீர்விட்டு அவரைப் பார்த்து "லட்சுமணரே இராமர் இல்லையாயின் நான் கோதாவரியில் விழுவேன்; அல்லது கழுத்தில் சுருக்கிட்டுக் கொள்வேன்; அல்லது மலையின் உச்சியிலேறிக் குதித்துப் பிராணனை விடுவேன்; அல்லது கொடிய விஷத்தைக் குடிப்பேன்; அல்லது தீயில் விழுவேன். இராகவரையன்றி மற்றொரு புருஷனை நான் தொடமாட்டேன்," என்றாள். இவ்வாறு லட்சுமணருக்குச் சொல்லிச் சீதை துயரத்தில் மூழ்கி, அழுது கைகளால் தனது வயிற்றில் அடித்துக்கொண்டாள்.

விசாலமான கண்களையுடைய ஜானகி இவ்வாறு துயருறுவதை லட்சுமணர் கண்டு, செயலற்று அவளை வெகுவிதமாகச் சாந்தம் பண்ணலானார். ஆனால், அவள் தனது பர்த்தாவின் தம்பியான அவரைப் பார்த்து ஒன்றும் பேசவில்லை. பின்பு லட்சுமணர் கைகூப்பிச் சீதைக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் புறப்பட்டு, அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தன்னைத் தைரியப் படுத்திக்கொண்டு, இராமர் போயிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றார். (இது வால்மீகி இராமாயணம் ஆரணியகாண்டம் நாற்பத்தைந்தாம் சருக்கத்தின் மொழி பெயர்ப்பு.)

இதில், சீதை இலட்சுமணனைப் பேசிய சொற்கள் அவளுடைய சிறப்புக்களைச் சிதைத்து விடுகின்றன. இராமரைத் தேடி இலட்சுமணர் போகவேண்டுமென்று சீதை சொன்னவுடனே இலட்சுமணர் போகவில்லை. அதுதான் அவர் செய்த குற்றமெல்லாம். சீதையைக் காத்துக் கொண்டிருக்கும்படி இராமர் இட்ட கட்டளையை எண்ணித்தான் இலட்சுமணர் உடனே புறப்படவில்லை. சீதைக்குக் காவலாக இருக்கும்படித் தமையன் தம்பிக்குச் சொல்லிவிட்டுப்போனதை சீதை அறியாதவளல்லள். உடனே போகாமல் நின்றதைத் தவிர இலட்சுமணன் சீதைக்குக் கோபமும் சந்தேகமும் உண்டாக்கக்கூடிய எதையும் சொல்லவுமில்லை; செய்யவுமில்லை. அப்படியிருக்க எடுத்த எடுப்பிலேயே 'நீர் அவருக்குச் சகோதர உருவமாகிய சத்ரு. என் நிமித்தம் நீர் இராகவர் காட்டில் மாண்டுபோகட்டும் என்றிருக்கிறீரோ? என்மேல் வைத்த ஆசையால்தான் நீர் இராமரைத் தேடிச் செல்லவில்லை' என்று சொன்னது மிகவும் அசுத்தமான காரியம்.



அப்படிப்பேசிய சீதையைச் சமாதானப்படுத்த முயன்ற இலட்சுமணர், இராமருக்கு எந்தவித அபாயமும் வரமுடியாது; அவரை வெல்லக்கூடியவர்கள் எந்த உலகத்திலும் எவரும் இல்லையென்று விளக்கிச்சொல்லி, தாம் சீதையைத் தனியேவிட்டுப் போனால் அவளுக்கு அபாயம் வரும் என்பதை எடுத்துக்காட்டுகிறார். அதன் பின்னும் இலட்சுமணர் சொன்ன நியாயங்களைச் சிறிதும் மதிக்காமல், பல தீய சொற்களால் இலட்சுமணரை ஏசுவதோடு நில்லாமல், எங்கோ இருக்கும் பரமயோக்கியரான பரதரையும் இழுத்து வைத்து, 'நீர் தனியே இராமருக்குத் துணையாக வருவதுபோல் எனக்காகவே காட்டுக்கு வந்திருக்கிறீர். அல்லது இவ்வாறு செய்யும்படி இரகசியமாகப் பரதர் உம்மை ஏவியிருக்கலாம். ஆனால், அவ்வாறு நீராவது பரதராவது கொண்ட கருத்து நிறைவேறப் போகிறதில்லை. குவளை நிறமும் தாமரை இதழ்போன்ற கண்களுமுடைய இராகவரைக் கணவராகப் பெற்ற நான் மற்றொரு புருஷனைக் கருதுவேனா?' என்று சொல்லுவது, பூமாதேவியைப் போன்ற

பொறுமை உடையவளென்றும், பெண்ணின் பெருமைகளுக்கெல்லாம் இருப்பிடமென்றும், அயோனிதை என்றும் மகாலட்சுமியின் அவதாரமென்றும் மக்கள் வணங்கும் சீதைக்கு அடுக்குமா?

இராமரும், சீதையும் இலட்சுமணரும் அயோத்தியை விட்டு வனத்துக்கு வரும்போது பரதன் அங்கில்லையே! அப்படியிருக்க இராமனுடன் துணை போவதுபோல் சென்று சீதையைப் பெண்டாளும்படி இரகசியமாகப் பரதன் இலட்சுமணனை எப்படி ஏவியிருக்க முடியும்? ஒருக்கால் பரதன் பாட்டன் வீட்டுக்குப் போவதற்கு முன்னாலேயே அவனும் இலட்சுமணனும் இந்தச் சதியை இரகசியமாகப் பேசிக்கொண்டார்களோ என்றால் பரதன் கேகய நாட்டுக்குப் போகு முன்னால் இராமன் காட்டுக்குப் போக நேரிடும் என்பதை யாரும் கனவிற்கூடக் கருதியிருக்க முடியாதே! மேலும் தாயார், தந்தையிடத்தில் வரங்கேட்டுத் தனக்கென்று தேடித்தந்த இராச்சியத்தை ஏற்றுக்கொள்வது பாவமும் பழியும் நிறைந்த காரியம் என்று, தன் அன்னையை நிந்தித்துவிட்டு, தமையனைப்போலவே சடைமுடி தரித்து மரவுரி புனைந்து இராமனை அயோத்திக்கு அழைத்துப் போகப் பரதன் காட்டுக்கு வந்ததைக் கண்ணாரக் கண்டவள் சீதை. பரதனுடன் மூன்று தாய்மார்களும் வசிஷ்டராதி முனிவர்களும் சுமந்திரர் முதலிய மந்திரிகளும் அயோத்திமா நகரத்து மக்களும் சேனா சமுத்திரமும் வந்திருந்தார்கள். முனிவர்களும் மந்திரிகளும் இராமனைப்பெற்ற கோசலையும் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் பரதன் கண்ணீர்விட்டுக் காலில் விழுந்து கதறியும் இராமர் அயோத்திக்குத் திரும்ப மறுத்துவிட்டதையும், அதன்மேல் பரதன் அயோத்திக்குத் திரும்பி முடிசூட்டிக் கொள்ளாவிட்டால் உண்ணாவிரதமிருந்து காட்டிலேயே உயிரை விடுவேன் என்றதையும், எல்லாம் பக்கத்தில் இருந்து



பார்த்தவள் சீதை. கடைசியில் பரதன் இராமனுடைய பாதுகையை வாங்கிக்கொண்டு இராமன் பதினான்கு வருஷங்கள் கழித்து அயோத்திக்குத் திரும்பி வருகிறவரைக்கும் அந்தப் பாதுகைகள்தாம் அரசாளும் என்றும், தான் அதுவரையிலும் தவம் செய்து கொண்டிருக்கப் போவதாகவும், பதினான்கு வருஷங்கள் முடிந்தவுடன் இராமன் அயோத்திக்கு வரவில்லையானால் தான் அக்கினிப் பிரவேசம் செய்து இறந்துபோவது நிச்சயம் என்றும் சபதம் பூண்டதைக் கேட்டுக் கொண்டிருந்தவள் சீதை. இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பல சருக்கங்களில் வெகு விஸ்தாரமாக வால்மீகி முனிவர் எழுதியிருக்கிறார். அப்படியிருக்க அந்தப் பரதன் மீது இந்தப் பழிச் சொல்லைச் சீதை சொன்னதாக எழுத அவருக்கு எப்படி மனம் வந்ததோ தெரியவில்லை.

பரதனை விட்டு இலட்சுமணனைப் பார்ப்போம். பரதனிடத்திலாவது சீதை நெருங்கிப் பழகாதவளாக இருந்திருக்கலாம். ஆனால் இலட்சுமணனிடத்தில் சீதை மிகவும் நெருங்கிய பழக்கமுள்ளவளாகத்தான் இருக்கமுடியும். மிதிலையில் திருமணமான பின், சீதை அயோத்தியில் பனிரண்டு வருஷங்கள் இருந்திருக்கிறாள். இலட்சுமணன் எப்போதும் (பகலில் மட்டுமாவது) இராமன்கூடவே இருப்பவன். அப்படிப்பட்ட இலட்சுமணனுடைய குணாதிசயங்களைச் சீதை அறியாமல் இருந்திருக்க முடியாது.

சீதை கோஷாப் பெண்ணல்லள். இலட்சுமணன் வந்தால் ஓடி ஒளிந்து கொள்ளுகிறவளல்லள். தமையனுடைய மனைவியைத் தாயெனக் கருதி இலட்சுமணன் சீதையைத் தினம் தினம் வணங்கினவன். இதை வால்மீகி முனிவரே கிட்கிந்தா காண்டத்தில் மிகத்தெளிவாகச் சொல்லுகிறார். அது எப்படியெனில்:— சீதை

இராவணனால் அபகரிக்கப்பட்டு ஆகாய மார்க்கமாகக் கொண்டுபோகப்பட்டபோது சீதையானவள் தன்னைக் கொண்டு போகிற திசை இராம இலட்சுமணர்களுக்குத் தெரிய உதவுமென்று எண்ணித் தான் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றிக் கீழே போடுகிறாள். அந்த நகைகள் சுக்கிரீவன் அனுமான் முதலானவர்கள் வசித்து வந்த இருசியமூக மலைச்சாரல்களில் விழுகின்றன. அவற்றை எடுக்க வானரங்கள் சுக்கிரீவனிடம் சேர்ப்பிக்கின்றன. அவைகளைச் சுக்கீரிவன் வைத்திருந்தான். அனுமான் மூலமாக இராமனுக்கும் சுக்கீரிவனுக்கும் நட்பு உண்டானபோது சுக்கிரீவன் அவற்றை இராமனுக்குக் காட்டுகின்றான். அவை சீதையினுடையவைதாம் என்று கண்டுகொண்ட இராமன் அவற்றைத் தம்பிக்குக் காட்டி அவை சீதையின் ஆபரணங்கள் தாமா என்று பார்க்கச் சொல்லுகிறான். அப்போது இலட்சுமணன் "ஐயனே, நான் தினமும் அவருடைய பாதங்களைச் சேவித்திருக்கிறே னாகையால் அவர் பாதங்களில் அணிந்திருந்த நூபுரங்களை அறிவேனேயன்றி அவர் கையிலும் காதிலும் அணிந்திருந்த கேயூரங்களையும் குண்டலங்களையும் அறியேன்," என்றார். (இது வால்மீகி முனிவரின் வாக்கு. மொழி பெயர்ப்பு)

இப்படிப்பட்ட இலட்சுமணன் தங்களுடன் காட்டுக்கு வந்தது தன்னைப் பெண்டாளக் கருதித்தான் என்று சீதை வாக்கால் சொல்லவிட்டது மாபெரும் இலக்கியக் குற்றம்.

அது மட்டுமா? அப்படிச் சீதை சொன்ன வசைமொழிகளால் வருத்தமடைந்த இலட்சுமணன், சீதை செய்த அந்தப் பெருங்குற்றத்திற்காக அவளை மட்டும் குறைகூறிப் பேசாமல் உலகில் பிறந்த எல்லாப் பெண்களையும் ஏகோபித்து இகழ்ந்து, "நீர் இவ்வாறு அனுசிதமாகப் பேசினது ஆச்சரியமன்று. இது இவ்வுலகத்திலுள்ள மாதர்கள் இயல்பு. அவர்கள் பெரும்பாலும் தருமத்தை அறியாதவர்களும், சபலம் உள்ளவர்களும், கொடியவர்களும் சிநேகிதத்தைக் கெடுப்பவர்களுமாக இருக்கிறார்கள், இயற்கையாகவே பெண்களின் தன்மை கெட்டது. சீ! நீர் கெட்டீர்!" என்று சொல்லுகிறான். இலட்சுமணன் தன் தமையனைக் காட்டுக்குத் துரத்திவிட்டாளே என்று கைகேகியைக் கடிந்து பேசினதன்றி எல்லாப் பெண்களையும் இகழும் இயல்புடையவனல்லன்.



இப்படி இலட்சுமணன் பெண்குலத்தை ஏகோபித்து ஏசி விட்டதையாவது, சீதை சொன்ன மிகக்கொடிய வார்த்தைகளால் உடனே உண்டான கொதிப்பினால் கூறிவிட்டதாகக் கொள்ளலாம். ஆனால் எந்தவித சந்தேகத்துக்கும் இடமில்லாத பரதனையும் சேர்த்துச் சீதை இலட்சுமணனைச் சொன்ன சொற்களுக்கு எவ்வித சமாதானமும் சொல்ல இடமில்லை.

இப்படியாக, முக்கியமான கதாபாத்திரங்களை அவர்களுடைய நிலைமைக்குச் சிறிதும் பொருந்தாத வார்த்தைகளைப் பேசவிட்ட இடங்கள் வால்மீகி இராமாயணத்தில் இருப்பதால் இராம கதையின் மகிமைக்கு மாசுண்டாகிறது. அப்படிப்பட்ட இடங்களை எல்லாம் முற்றிலும் நீக்கிக் கதைப்போக்கை மாற்றி அமைத்து இராமாயணத்தைத் 'தெய்வமாக் கதை'யாக்கிவிட்ட கைங்கரியமே கம்பர் செய்தது.

சீதை பரதன் மீதும் இலட்சுமணன் மீதும் பழி சுமத்திப் பேசிய இந்த இடம் கம்பராமாயணத்தில் எப்படிக் காணப்படுகிறது என்பதை இங்கேயே காட்டிவிடுவது பொருந்தும்:—

மாரீசன் கதறியழைத்த அபயக்குரலைக் கேட்ட சீதை, அது தன் கணவருடைய குரல்தான் என்று நம்பி அவருக்கு அபாயம் நேர்ந்துவிட்டதாகத் துடித்துப் புலம்பலுற்றாள். ஆனால் அந்தக்குரல் இராமருடைய குரல் அல்லவென்ற உண்மையை அறிந்த இலட்சுமணன் சிறிதும் கலக்கமடையாமல் நின்று கொண்டிருந்தான். அதைக்கண்ட சீதை,

"குற்றம் வீந்த குணத்தின் எங்கோமகன்
மற்றை வாளரக்கன் புரி மாயையால்
இற்று வீழ்ந்தனன் என்னவும் என் அயல்
நிற்றியோ இளையோய், ஒரு நீ என்றாள்."

குற்றமற்ற குணாவனாகிய எமது அரசகுமாரன் அந்தக் கொலைகார அரக்கன் செய்த வஞ்சனையால் அடிபட்டு விழுந்துவிட்டாரென்பது தெரிய வந்தும் (உதவி செய்யப்போகாமல்) என்னருகில் நீர் நின்று கொண்டிருக்கிறீரே, இளையவரே! — என்றாள்.

இதைக்கேட்ட இலட்சுமணன்,

"எண்மையாறு உலகினில் இராமற்கு ஏற்றம் ஓர்
திண்மையார் உளரெனல் செப்பற் பாலதோ
பெண்மையால் உரைசெயப் பெறுதிரால் என
உண்மையான அணையவட்கு உணரக் கூறினான்"

'எட்டும் ஆறும் சேர்ந்த பதினான்கு உலகத்திலும் இராமனுக்கு அதிகப்பட்ட பலசாலி ஒருவன் உண்டு என்பது சொல்லத்தகுந்ததா! நீங்கள் உங்களுடைய பெண்ணியல்பினால் (அவர் அடிபட்டு விழுந்து அபாயத்திலிருப்பதாக அஞ்சி) இப்படியெல்லாம் சொல்ல நேரிட்டது' என்று உண்மைத் தன்மையுள்ளவனாகிய இலட்சுமணன் அவள் உணரும்படி சொல்லலானான் — என்பது இதன் பொருள். இதற்கடுத்த சில பாடல்களில் இலக்குவன் இராமருடைய பராக்கிரமத்தை எடுத்துரைத்துச்



சீதையைத் தேற்ற முயலுகிறான். அவற்றுள் சில பாடல்களைப் பார்ப்போம்.

"பார் எனக் கனல் எனப் புனல் எனப் பகாப்
பேர் எனத் திசை என முனியின் பேருமால்
கார் எனக் கரிய அக் கமலக் கண்ணனை
யார் எனக் கருதி இவ்விடரில் ஆழ்கின்றீர்"

(தாயே!) நிலம் என்ன? நெருப்பு என்ன? நீர் என்ன? பகுக்கமுடியாத காற்று என்ன? திக்கெல்லாம் சேர்ந்த ஆகாயம் என்ன? (இந்த ஐந்து பூதங்களும்கூட) இராமனுக்குக் கோபம் வந்தால் அழிந்து போகுமே! மேகம் போன்று கருத்தவரும் கமலம் போன்ற கண்களையுடையவருமான இராமரை யாரென்று எண்ணிக்கொண்டு (அவருக்கு அபாயம் வந்துவிட்டதாக) இப்படித் துன்பத்தில் முழுகித் துயரப்படுகிறீர்கள்? மேலும்,

"மாற்றம் என்பகர்வது மண்ணும் வானமும்
போற்ற வன்திரிபுரம் எரித்த புங்கவன்
ஏற்றிநின்று எய்தவில் இற்றது எம்பிரான்
ஆற்றலின் அமைவதோர் ஆற்றல் உண்மையோ?"

(தாயே!) வேறு என்ன சொல்வது? மண்ணவர்களும் விண்ணவர்களும் போற்றும்படியாக மிக்க வலிமையுள்ள திரிபுரங்களையும் எரித்த மேலோனாகிய சிவபிரான் நாணேற்றி அம்பெய்த வில் (சிவதனுசு) முறிந்து விழுந்தது எம்பிரானாகிய இராமனுடைய வல்லமையினால் அல்லவா? அந்த வல்லமைக்கு ஈடான வல்லமையும் உண்டா? (இது உங்கள் திருமணத்திற்கு முன்னால் உங்கள் மிதிலையில் நீங்கள் அறிய நடந்த உண்மையல்லவா? என்பது குறிப்பு) இன்னும் இராமனுக்கு எவ்வித அபாயமும் நேரவில்லை என்பதற்கு அத்தாட்சி என்னவென்றால்:

"காவலன் ஈண்டு நீர் கருதிற்று எய்துமேல்
மூவகை உலகமும் முடியும்; முந்துள
தேவரும் முனிவரும் முதல செவ்வியோர்
ஏவரும் வீந்துளார்; அறமும் எஞ்சுமால்."

(தாயே!) காவலனாகிய இராமபிரான் நீர் எண்ணுகிறபடி அபாயம் அடைந்திருந்தால் இந்த மூன்று உலகங்களும் இந்நேரம் அழிந்திருக்கும். தொன்றுதொட்டு இருந்துவரும் தேவர்களும் முனிவர்களும் செம்மையானவர்களாகிய தருமவான்களும் ஆகிய எல்லாரும் மடிந்திருப்பார்கள். தரும தேவதையும் அழிந்திருக்கும். ஆகையினால் இராமருக்கு எவ்வித அபாயமும் இல்லை. உண்மை என்னவென்றால்:

"பரக்க என் பகர்வது? பகழி பண்ணவன்
துரக்க அங்கு அது படத் தொலைந்து சோர்கின்ற
அரக்கன் அவ்வுரை எடுத்து அரற்றினான்; அதற்கு
இரக்கமுற்று இரங்கலிர் இருத்திர் ஈண்டு என்றான்"

(தாயே!) விரித்துச் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது? (இணையற்ற) பலவானாகிய இராமர் பாணம்விட்டு, அந்தப் பாணம் பட்டு இறந்துவிழுகின்ற அரக்கன் அப்படி அபயக் குரல் காட்டிக் கதறியிருக்கிறான். அதற்காக இரக்கப்பட்டு நீங்கள் துயருற்று அழவேண்டாம். அமைதியாக இருங்கள்.

இப்படியாக இலட்சுமணன் இராமருடைய பராக்கிரமத்தையும் நிகழ்ந்திருக்கின்ற உண்மையையும் சீதைக்குச் சொன்னான். இங்கே இராமனுடைய பராக்கிரமத்தைப் பற்றிய பேச்சிலும் வால்மீகி சொன்னதற்கும் கம்பர் சொல்லுவதற்கும் உள்ள வேறுபாட்டைக் கவனிக்கவேண்டும்.



இப்படி இலட்சுமணன் சொன்ன பின்னும் சீதை:—

"என்றவன் இயம்பலும் எடுத்த சீற்றத்தள்
கொன்றன இன்னலள் கொதிக்கும் உள்ளத்தள்
நின்ற நின் நிலை இது நெறியிற்று அன்று என
வன்தறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள்."

(அமைதியாக இருங்கள்) என்று அவன் (இலட்சுமணன்) சொன்னதும், சீதை கோபம் மிகுந்தவளாகி, கொல்லப்படுவது போன்ற துன்பத்துடன், கொதிக்கின்ற உள்ளத்தோடு (இலட்சுமணனைப் பார்த்து இன்னும் இராமனை நாடிப் போகாமல்) இங்கே நின்றுகொண்டிருக்கும் உம்முடைய செய்கை ஒழுங்கான காரியமல்ல என்று, கடூரமாகவும் பிடிவாதத்துடனும் மேலும் கூறுவாள்.

"ஒரு பகல் பழகினார் உயிரை ஈவரால்;
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும் நீ
வெருவலை; நின்றனை; வேறு என்? யான் இனி
எரியிடை வீழ்ந்து உயிர் இறப்பல் ஈண்டு எனா"

ஒரு நாள் பழகினவர்களும்கூட (இப்படிப்பட்ட சமயத்தில் உதவி செய்யச் சென்று) உயிரையும் கொடுப்பார்கள். (அப்படியிருக்க உன்னுடன் பிறந்து நெடுநாள் பழகிய) உன் தமையன் அழிவுறும் நிலைமையில் கூவியழைத்த அபயக்குரலைக் கேட்டும்கூட நீ அச்சப்படாமல் இங்கேயே நிற்கிறாய். இனி நான் வேறென்ன செய்ய இருக்கிறது? (என் கணவருக்கு முன்) நான் நெருப்பில் விழுந்து இப்பொழுதே இறந்துபோகிறேன் என்று,

"தாமரை வனத்திடை தாவும் அன்னம்போல்
தூம வெம் காட்டுஎரி தொடர்கின்//எள் தனைச்
சேமவில் குமரனும் விலக்கிச் சீரடிப்
பூமுகநெடு நிலம் புல்லிச் சொல்லுவான்"

தாமரைப் பூக்கள் நிறைந்த வனத்தைக் கண்டு தாவி ஓடுகின்ற ஓர் அன்னப் பறவையைப் போல், (அருகில்) புகையோடும் எரிந்து கொண்டிருந்த வெப்பம் மிகுந்த காட்டு நெருப்பை நோக்கி (அதில் விழுந்து இறந்து போவதாக) ஓடுகின்ற அவளைத் தடுத்து, (அவளுக்குக் காவல் புரிந்து) சேமம் செய்யவே வில்லேந்தி நின்றவனாகிய இலட்சுமணன் அவளுடைய தாமரைபோன்ற பாதங்களுக்கு நேராக நிலத்தில் சாட்டாங்கமாக விழுந்து வணங்கிச் சொல்லுகின்றான்:

"துஞ்சுவது என்னை? நீர் சொன்ன சொல்லை யான்
அஞ்சுவென்; மறுக்கிலென் அவலம் தீர்ந்து இனி
இஞ்சுஇரும் அடியனேன் ஏகு கின்றனென்;
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ."

நீங்கள் இறந்துபோவது என்னத்துக்காக? அப்படி நீங்கள் சொன்ன வார்த்தையால் நான் அஞ்சுகின்றேன். உங்கள் கட்டளையை இனியும் மறுக்கமாட்டேன். துக்கப்படுவதை விட்டு இங்கேயே இருங்கள். அடியேன் (இராமரைத் தேடிப்) போகின்றேன். மிகவும் வல்லமையுள்ளதான விதியை நம்மால் வெல்ல முடியுமா?

இலட்சுமணன் விடைபெற்றுக்கொண்டு, சீதையைத் தனியே விட்டுவிட்டுத் தமையனை நாடிப்போகிறான். போகிற வழியில் இப்படிச் சீதையைக் காவலில்லாமல் விட்டுப்போவது சரியா என்ற சந்தேகம் உதித்துச் சமாதானப் படுத்திக் கொள்ளத் தனக்குத்தானே சொல்லிக்கொள்வது:

"இருப்பனேல் எரியிடை இறப்பு ரால்இவர்;
பொருப்பனை யானிடம் போவனே எனின்,
அருப்பமில் கேடுவந்து அடையும்; ஆருயிர்
விருப்பனேன் என்செயல்? என்று விம்மினான்."

(நான் போகாமல்) இருப்பேனாகில் இவர் (சீதை) நெருப்பில் விழுந்து இறந்துபோவார்; நான் மலைபோன்ற இராமரிடம் போய்விட்டாலும் சீதைக்குப் பாதுகாப்பு இல்லாததால் கெடுதி உண்டாகும் என்பது திண்ணம். அருமையான உயிரின்மேல் உள்ள ஆசையால் உயிரை விடாமலிருக்கும் நான் என்ன செய்வதென்று தெரியவில்லையே – என்று துக்கப்பட்டான்.



அப்படி ஒரு கணம் திகைத்து வருந்திய இலட்சுமணன் உடனே ஒரு தீர்மானத்துக்கு வருகிறான்.

"அறந்தனால் அழிவில தாகின் ஆக்கலாம்
இறந்துபாடு இவர்க்குறும் இதனின் இவ்வழி
துறந்துபோம் இதனையே துணிவென் தொல்வினைப்
பிறந்து போந்து இதுபடும் பேதையேன் எனா."

(நான் தனியே விட்டுப்போகிற இந்தச் சீதைக்கு) கெடுதி ஒன்றும் வாராதபடி தருமதேவதை காப்பதனால் காக்கட்டும். (நான் போகாதிருந்தால் இவர் தீயில் விழுந்து) இறந்துபோவார் என்பதைக்காட்டிலும் நான் இந்த இடத்தைவிட்டுப் போய்விடுவதே நல்லது என்று தீர்மானிக்கிறேன். என்னுடைய பழவினையின் தொடர்பாலல்லவா நான் இந்தத் துயரத்துக்கு ஆளாகவேண்டியதாயிற்று? நான் துரதிருஷ்டமுள்ளவன்.

என்று தீர்மானித்து இலட்சுமணன் இராமரைத் தேடிப் போய்விடுகிறான். இதுதான், மாயமானாக வந்த மாரீசன் அபயக்குரலோடு அலறியதைக் கேட்டபின் சீதைக்கும் இலட்சுமணனுக்கும் இடையில் நடந்ததாகக் கம்பர் தரும் காட்சி. வால்மீகி முனிவர் தந்த காட்சிக்கும் இதற்குமுள்ள வேறுபாடுகளால் இராமாயணம் எவ்வளவு சிறப்படைகிறது என்பதை வாசகர்களே உணர்ந்து அனுபவிக்கல ).

# 5. காலவேறுபாடு காரணமல்ல

கம்பர் பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே வால்மீகி இராமாயணம் தமிழ்நாட்டில் எங்கெங்கும் வெகு பயபக்தியோடு படிக்கப்பட்டு வந்திருந்தது. அதற்குப் பழைய தமிழ் இலக்கியங்களில் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சிலப்பதிகாரத்தில்.

"மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே"

என்ற இராமாவதாரத்தைப் பற்றிய பாடல் இருக்கிறது. இதில் வாமனாவதாரம் செய்து மூன்றடி மண் கேட்டு இரண்டே அடிகளால் மூன்று உலகத்தையும் அளந்துவிட்ட திருமால்தான் இராமனாக அவதரித்து இலங்கையை அழித்தவன் என்பது சொல்லப்படுகிறது. அத்துடன் அப்படிப்பட்ட திருமாலின் பெருமைகளைச் சொல்லுகின்ற இராமாயணத்தைக் 'கேளாத காது என்ன காது?' என்று இகழப்படுகிறது. இதனால் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் காலத்திலேயே இராமாயணத்தைப் படிக்கச் செய்து கேட்பது பெரும்புண்ணியம் என்று கருதப்பட்டதாகத் தெரிகின்றதல்லவா? இந்தப் பாட்டில், சேவகன் சீர் 'கேளாத' செவி என்ன 'செவியே' என்றுதான் இருக்கிறதேயன்றி, 'கல்லாத மனிதன் என்ன மனிதன்' என்றில்லை. மனிதனுக்கு அறிவுண்டாகக் 'கல்வி', 'கேள்வி' என்ற இரண்டும் வழிகள்.



அவற்றில் கல்வி இல்லாவிட்டாலும் வெறும் கேள்வியினால் மட்டுமே அறிவைப் பெறலாம். அதனால்தான் 'கற்றிலனாயினும் கேட்க' என்று சொல்லப்பட்டது.

வால்மீகி இராமாயணம் வடமொழியில் இருப்பது. மிகப் பெரும்பாலும் தமிழர்கள் அந்தக் காலத்திலும் வடமொழியை அறியாதவர்கள். அதனால் இராமாயணத்தை அக்காலத்துத் தமிழ் மக்கள் கேட்டுத்தான் அனுபவிக்க முடியும். அதனால்தான் 'கேளாத செவி என்ன செவியே' என்று 'கேட்டல்' வற்புறுத்தப்பட்டது.

கம்பர் காலத்திலும் இராமாயணத்தை வடமொழி கற்றவர்கள் படித்துத் தமிழில் அர்த்தம் சொல்லுவதைக் கேட்டுத்தான் தமிழ் மக்கள் அனுபவித்தார்கள். கம்பர் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் நிகரற்ற பண்டிதர். இரண்டு மொழிகளிலும் இருந்த எல்லாச் சிறந்த நூல்களையும் கற்றுணர்ந்தவர். வடமொழியிலுள்ள வேதங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள், இதிகாசங்கள், பாகவதம், பக்தவிஜயம், பகவத்கீதை முதலான எல்லாவற்றையும் ஆய்ந்தறிந்தவர் என்பதை அவர் செய்துள்ள காவியம் மிகவும் தெளிவாகக் காட்டுகின்றது.

'கல்வியிற் பெரியார்' என்று கற்றவர் போற்றும் கம்பர், தமிழ்மக்கள் அவ்வளவு பக்தியுடன் பாராட்டி வந்த இராம கதை தமிழிலேயே இருந்தால் நல்லது என்று தீர்மானித்தார். அந்தத் தீர்மானம் அவராகவே செய்து கொண்டதோ, அல்லது சடையப்ப வள்ளல் கேட்டுக் கொண்டதன்மேல் செய்யப்பட்டதோ என்ற உண்மையை அறிவதற்கான ஆதாரங்கள் அகப்படவேயில்லை. உலக மகா இலக்கியங்களில் ஒப்பரிய காவியத்தை இயற்றிய 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்த' சரித்திரம் நமக்குக் கிடைக்கவேயில்லை. கர்ணபரம்பரையாகச் சொல்லப்பட்டு

வந்த துண்டு துண்டான கதைகளைத் தவிர கம்பரைப்பற்றிய சரித்திரம் என்று சொல்லிக்கொள்ள எதுவுமில்லை. 'கம்பர்' என்ற பெயரேகூட இயற்பெயராகத் தெரியவில்லை.

அது எப்படியானாலும் கம்பருடைய தீர்மானத்தை அவர் தந்த காவியம் காட்டுகின்றது. இராமாயணத்தைத் தமிழில் இயற்ற வேண்டுமென்று தீர்மானித்த கம்பர் வால்மீகி இராமாயணத்தை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தார். அப்படி ஆராய்ந்தபோது வால்மீகி இராமாயணத்தில் முன்னுக்குப்பின் முரணான விஷயங்களும், கதாபாத்திரங்களின் குணக்கேடுகளும், படிக்கும்போதே கூச்சமுண்டாக்கத்தக்கதும், பிறருக்கு எடுத்துச் சொல்லத்தகாதனவுமான சிற்றின்பப் பேச்சுக்களும் இருப்பதைக் கண்ட கம்பர் அவைகளால் இராமாயணத்தின் மகிமை மங்கிவிடுகிறதே என்பதை உணர்ந்தார். வால்மீகி இராமாயணத்திலுள்ள மேற்சொன்ன குறைகள், எந்த உயர்ந்த ஒழுக்கங்களை மனித சமுதாயத்துக்குப் புகட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் வால்மீகி முனிவர் இராமாயணத்தை இயற்றினாரோ அந்த நோக்கத்தைக் கெடுத்து விடுகின்றனவென்று, அப்படிப்பட்ட குற்றங்களையெல்லாம் நீக்கிவிட்டுக் கம்பர் தமது காவியத்தை இயற்றியிருக்கிறார். குற்றங்களையெல்லாம் நீக்கினது மட்டுமன்றிக் குணங்களை அதிகப்படுத்திப் பாத்திரங்களைப் பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். அதனால் கம்பர் இயற்றிய காவியம் தொட்டதொட்ட இடமெல்லாம் தெய்வ பக்தியை ஊட்டுவதாய், பரவசப்படுத்தி மனிதப் பண்புகளை மறவாதிருக்க அறவொழுக்கங்களை அறிவுறுத்துகின்றது.

கம்பர் செய்திருக்கிற வேறுபாடுகள் வெறும் கால வேறுபாட்டின் காரணத்தால் செய்யப்பட்டனவல்ல. 'வால்மீகி அவருடைய இராமாயணத்தை இயற்றிய காலம்



வேறு, கம்பர் தமது காவியத்தை இயற்றிய காலம் வேறு. அவர் அவருடைய காலத்தை அனுசரித்து இயற்றினார். இவர் இவருடைய காலத்துக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டார். அதனால் அதையும் இதையும் ஒப்புப்பார்க்கக் கூடாது' என்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்வது கம்பருக்கு அநீதி செய்வதாகும்.

மனிதனுடைய உடை, உணவு, இருப்பிடம், சமுதாயப் பழக்க வழக்கங்கள், சடங்குகள், அரசியல் சட்ட திட்டங்கள், ஆயுதங்கள், வாகனங்கள், ஆபரணங்கள் முதலியவைகள்தாம் காலப்போக்கால் மாறுமேயல்லாமல், அனாதியான தருமங்கள் மாறுவதில்லை. பஞ்ச பூதங்களின் தத்துவம், அவற்றின் ஆதியாகவுள்ள பரம்பொருளின் தத்துவம் முதலிய நித்தியமான சத்தியங்கள் எக்காலத்திலும் மாறுவதில்லை. அந்த நித்தியமான சத்தியங்களை மனிதனுக்கு நினைப்பூட்டிக்கொண்டிருக்கவே அமைந்துள்ளன வேதங்கள், கீதை முதலிய நூல்கள். அந்த நூல்களிலுள்ள சத்தியங்களை அடிப்படையாகக்கொண்டுதான் வால்மீகி முனிவர் இராமாயணத்தை ஆரம்பித்திருக்கிறார். கம்பரும் அதே வேதநூல்களை ஆதாரமாகக் கொண்டுதான் தமது இராமாயணத்தை இயற்றியுள்ளார்.

ஆதலால் கம்பர் செய்துள்ள மாறுதல்கள் காலவேற்றுமையைக் கருதிச் செய்யப்பட்டனவென்று இலேசாகச் சொல்லிவிடக்கூடாது. அப்படிச் சொல்லுவது சத்தியத்துக்கு ஒத்ததன்று.

அதுவன்றி, வால்மீகி முனிவர் பிரம்மதேவனுடைய அனுக்கிரகத்தால் சரசுவதியின் கடாட்சம் பெற்று இராமாயண கதையை, ஞானதிருஷ்டியினால், நடந்ததை நடந்தபடி அறிந்து தம்முடைய காவியத்தைச் செய்தாரென்றும், ஆனால் கம்பர் தம்முடைய கற்பனையான கைச்சரக்குகளைக் கூட்டிக் கதையை

மாற்றிவிட்டார் என்றும் சொல்லுவதுண்டு. இது இராமகதைக்குத் தெய்வத்தன்மை பொருத்துவதற்காகச் சொல்லப்பட்டது என்ற அளவோடு கொள்வதுதான் அறிவுக்குப் பொருந்தும். வால்மீகி முனிவர் சரசுவதி கடாட்சம் பெற்றவர் என்று சொல்லுவதில் தவறு ஒன்றுமில்லை. அவர் இயற்றிய காவியத்தில் இடையிடையே இருக்கின்ற முரண்களையும் அவற்றைக் கம்பர் நீக்கிவிட்டதனால் இராமாயணத்துக்கு உண்டாகும் சிறப்புக்களையும் அனுபவிக்கத்தான் இது எழுதப்படுகிறதேயன்றி வால்மீகி முனிவருக்குள்ள பெருமைகளை அவமதிக்கவன்று. கவிதா மேதையான வால்மீகி கலைமகளின் கடாட்சம் பெற்றவர்தாம். அப்படியே கம்பரும் கலைமகளின் கடாட்சத்தினால்தான் 'எழுந்த ஞாயிறு விழுவதன் முன் கவி பாடினது எழுநூறாம்' என்று சொல்லப்படுகிறது. அதனால் இந்தக் கலைமகள் கடாட்சத்தைப் பற்றி விவாதிக்கப் புகுவது விரும்பத்தக்கதன்று. வால்மீகி, கம்பர் ஆகிய இருவரும் மகா கவிகள். ஒரே கதையை இருவரும் மிகவும் வேறுபட்ட இரண்டுவிதமாகச் சொல்லுகிறார்கள். மூலக் கதையைத் தந்தவர் வால்மீகி முனிவரே. அதை முற்றிலும் மாற்றியமைத்துவிட்டார் கம்பர். அப்படி மாற்றிவிட்டது ஏன்? அதனால் என்ன நன்மை? என்ற இலக்கிய ஆராய்ச்சி மட்டும்தான் நாம் மேற்கொண்டது. அதனால், விருப்பு வெறுப்புக்களை விலக்கிவிட்டுக் கம்பர் புகுத்தியுள்ள வேற்றுமைகளைக் கவனிக்கும்படி வாசகர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

இராமருடைய அவதாரம் முதற்கொண்டு பட்டாபிஷேகம் வரையிலும் உள்ள, எல்லா நிகழ்ச்சிகளிலும் கம்பர் இராமாயணம் வால்மீகி இராமாயணத்தினின்றும் மிகவும் வேறுபட்டிருக்கிறது. கம்பர் செய்துள்ள மாறுதல்களில் சில, வால்மீகி இரமாயணத்திலுள்ள முரண்களை நீக்குவதற்கென்று செய்யப்பட்டவை. வேறுசில,



பாத்திரங்களின் குணக்கேடுகளைப் போக்குவதற்கென்று செய்யப்பட்டவை. இன்னும் சில இராமாயணத்தின் தெய்வீகச் சிறப்பை அதிகப்படுத்தவென்று செய்யப்பட்டுள்ளன. பின்னும் சில, இராமகதையைத் தொடர்ந்து அனுபவிப்பதற்கு இடையூறாக இருக்கும் அனாவசியங்கள் என்று தள்ளிவிட எண்ணியவைகளாகத் தோன்றுகின்றன.

அந்த வேற்றுமைகளிற் சிலவற்றை உள்ளபடி பார்ப்போம்:

# 6. இராவணன் சீதையைக் கவர்தல்

அப்படிப்பட்ட பல வேற்றுமைகளுள் மிகவும் முக்கியமாகக் கருதப்படுவது, இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போன விதம்.

வால்மீகி முனிவர், இராவணன் தனது இடக்கரத்தால் சீதையின் தலைமயிரைப் பிடித்து, வலக்கரத்தால் அவளுடைய துடைகளைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு போனதாகச் சொல்லுகிறார். சீதையை – உலகமெல்லாம் மாதாவென வணங்கும் உத்தமியை – கற்பின் கனலை – காகுத்தன் மனைவியை – அயோனிதையாக அவதரித்து, ஞானிகளுக்குள் ஞானியெனப்படும் ஜனகமகாராஜரால் வளர்க்கப்பட்ட ஜானகியை, அந்தக் கயவன் இராவணன் அப்படித் தூக்கிக்கொண்டு போனதாக இருக்கலாமா என்ற வருத்தம் எல்லாருக்கும் உண்டாகும். வால்மீகி முனிவர் இப்படிச் சொன்னது மிகவும் அருவருப்புண்டாக்குவதாக

இருப்பது மட்டுமன்றி அவரே எழுதியுள்ள உத்தரகாண்டத்தில் இராவணனுக்குப் பல பேர்கள் இட்ட சாபங்கள் இருந்ததை மறந்துவிட்டது போன்ற முரணுமுண்டாகிறது.

உத்தரகாண்டத்தில் இராவணன் திக்குவிசயப் படலத்தில் அவன் பல பெண்களைக் காமத்தால் பலாத்காரம் செய்ததும் அதற்காக அவர்கள் அவனைச் சபித்ததும் சொல்லப்படுகின்றன. அவனைச் சபித்தவர்கள் வேதவதி என்னும் தவப்பெண், தேவ கன்னியரின் தாய்மார்கள், அரம்பை, நளகூபரன், பிரமன் என்பவர்கள். அவர்கள் இராவணனுக்கிட்ட சாபம்: ‘உன்மேல் இச்சைகொள்ளாத பெண்ணை நீ தீண்டுவாயானால் உன் தலைகள் வெடித்து நீ நாசமுறுவாய்’ என்பது.

அந்தச் சாபத்துக்குப் பயந்து, சீதையைத் தீண்ட முடியாதவனாக இராவணன் பர்ணசாலையோடு தூக்கிக்கொண்டு போனதாகக் கம்பர் இந்த நிகழ்ச்சியை மாற்றியிருக்கிறார். கைலாய மலையை ஆணிவேரோடு அசைத்துவிட்ட இராவணன் ஒரு சிறு குடிசையை மண்ணோடு பெயர்த்து எடுத்தான் என்பதில் மிகையொன்றுமில்லை.

‘வால்மீகி முனிவர், இராவணன் சீதையை மயிரைப் பிடித்துத் துடைகளைப் பற்றித் தூக்கினதாகச் சொல்லுவது நன்றாயில்லை; கம்பர் சொல்லுவது நன்றாயிருக்கிறது’ என்று சொல்ல மனம் வராமல், வால்மீகி சொன்னதற்குப் பலவித சமாதானங்கள் சொல்லப்படுகின்றன. அந்தச் சமாதானங்களாவன: ‘இராவணன் பிடித்தது சீதையின் கூந்தலையும் அவளுடைய துடைகளையும் அல்ல. அவன் பிடித்ததெல்லாம் சீதையின் கூந்தலின் நிழலையும் அவளுடைய துடைகளின் நிழலையும்தான்’ என்பதும்; ‘சீதையை இராவணன் தன்னுடைய மடியில் வைத்துக்



கொண்டதாக வால்மீகி சொன்னது உண்மையான சீதையை அல்ல; அவளுடைய நிழலைத்தான் அவன் மடியில் வைத்துக்கொண்டான்’ என்பதும்.

இது மிகவும் நகைப்புக்கிடமான சமாதானம். இராவணன் தூக்கிக்கொண்டுபோனது சீதையை அன்று அவளுடைய நிழலைத்தான் என்றால் அந்த நிழலைப் பிரிந்ததற்கா இராமர் அவ்வளவு துடிதுடித்துத் துயரப்பட்டார்? ஆகாயத்தில் இராவணனுடைய பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு அவன் மடியிலிருந்து விலகிக்கொள்ளப் போராடியதும், ஒரு மரத்தின் மீது உட்கார்ந்திருந்த சடாயுவைக் கண்டு அவரைக் கூவியழைத்துப் பிரலாபித்ததும், உதவிக்கு வந்த சடாயுவை இராவணன் அடித்து வீழ்த்திவிட்டதைக் கண்டு புலம்பியதும், வெறும் நிழல்தானா? அசோகவனத்தில் தினந்தினம் இராவணன் வந்து காலில் விழுந்து காமப் பேச்சுக்களைப் பேசினது சீதையின் நிழலோடுதானா? அந்த நிழலை மீட்கவா இராமபிரான் சுக்கிரீவனைத் துணைபிடித்து, வாலியைக்கொன்று வானர சேனையுடன் சென்று இலங்கைக்கு வாராவதி கட்டி இராவணாதியரைக் கொன்றது? மீட்கப்பட்டது வெறும் நிழல்தானா? பின் கற்பின் தூய்மையைக் காட்ட அக்கினிப் பிரவேசம் செய்ததும் நிழல்தானா? அந்த நிழலோடுதானா இராமன் அயோத்திக்குத் திரும்பி அரியணையில் அமர்ந்து மகுடாபிஷகம் செய்துகொண்டது?

இராவணன் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டு போனது சீதையின் உடலையன்று, அவளுடைய நிழலைத்தான் என்பது இராமாயணம் முழுவதையும் வெறும் நிழலாக்கிவிடுகிறது. கம்பாராமாயணம் தோன்றுவதற்கு முன்னால் சொல்லப்பட்டு வந்த இந்த விபரீதமான

சமாதானத்தை இப்போதும் சிலர் சொல்லத் துணிவது விசித்திரம்தான். இந்தச் சமாதானம் மிகவும் ஏளனத்துக்கு இடமுண்டாக்குவது கண்டு இன்னொரு சமாதானம் சொல்லப்படுகிறது.

அது என்னவென்றால்: 'வால்மீகி முனிவர், சீதையை இராவணன் தொட்டுத் தூக்கி மடிமீது வைத்துக்கொண்டு போனான் என்று சொல்லுவதை ஒரு குற்றமாகச் சொல்லுவது அறிவுடைமையன்று. ஒரு பெண்ணை ஆண் தொட்டுவிட்டதனாலேயே அவளுடைய கற்புக்கு தோஷம் வந்துவிடாது. வால்மீகி, சீதையை இராவணன் தொட்டுத் தூக்கினான் என்று சொன்னது இராவணனுடைய காமவெறியைக் காட்டவே,' என்பது.

இந்தச் சமாதானம் முன் சொன்ன சமாதானத்தைவிட மிகவும் மோசமானது. அந்தச் சமாதானமாவது சீதையின் உடலின் தூய்மையைக் கெடுக்க முடியாததாக இருந்தது. நிழலைத்தான் தொட்டான் என்பதில் உடலின் பரிசுத்தம் பழுதுபடுவதில்லை. அதில் சீதையின் மேனியை இராவணன் தீண்டக்கூடாது என்ற ஆர்வம் அடங்கியிருக்கிறது. ஆனால் இராவணனுடைய காமவெறியைக் காட்டத்தான் அப்படிச்சொன்னார் என்று சொல்லுகிற இந்தச் சமாதானத்தில் சீதையின் தேகம் இராவணனுக்கு வசப்பட்டதாகி விடுகிறது. இமயமலையை வேரோடு பறித்த இராவணனுடைய தேக பலம் எவ்வளவு! அவனுக்குக் காமவெறி வந்தால் அது எவ்வளவு வேகமுள்ளதாக இருக்கும்! காமவெறி வந்துவிட்ட ஒரு பலம் மிகுந்த ஆண் மகன், தான் எந்தப் பெண்ணின் மேல் காமவெறி கொண்டுவிட்டானோ அந்தப் பெண் தன்னுடைய பிடிக்குச் சிக்கிக்கொண்டால் அவன் என்ன செய்வான்? உடனே காமவெறியைத் தீர்த்துக் கொள்ள முயல்வானா, அல்லது அவளைக் கொண்டுபோய் நந்தவனத்தில் வைத்துத் தன் காமவெறியைத் தீர்க்கும்படி கெஞ்சிக்கொண்டிருப்பானா? மானிட சுபாவத்துக்கே இது பொருந்தாதென்றால் அரக்க சுபாவத்துக்கு இந்தச் சமாதானம் எப்படிப் பொருந்தும்? இராவணன் பழி பாவங்களுக்கு அஞ்சாத அரக்கன் என்பதையும், சீதை மானிடப் பிறவி என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்தச் சமாதானம் வால்மீகியின் பிசகை அதிகப்படுத்திக் காட்டுமேயன்றிக் குறைக்காது.

ஆதலால் கம்பநாட்டாழ்வார் செய்த மாறுதலே சீதாபிராட்டியைத் தீண்டாத கற்புடைய தெய்வத் திருமகளாக்கி நம்மை வணங்கச் செய்கிறது.

☘



# 7. இராவணனும் சீதையும்

இராவணாதியரைக் கொல்லுவதற்குக் காரணமாய், இராமாயண கதைக்கு நடுநாயகமாய் அமைந்திருப்பது இந்தச் சீதாகரணம். இந்தப்பகுதியை வால்மீகி, கம்பர் ஆகிய இரண்டு மகா கவிகளும் எப்படிச் சித்திரிக்கிறார்கள் என்பதை அப்படியே படித்துப் பார்ப்பது பயனளிப்பதாகும். இலட்சுமணன் சீதையைத் தனியே விட்டுவிட்டு இராமரை நாடிச் சென்றபின் இராவணன் சன்னியாசி வேடந்தரித்துச் சீதையிருந்த இடத்துக்கு வருகிறான். அவன் எப்படிச் சீதையை நெருங்குகிறான், சீதை அவனை எப்படி வரவேற்கிறாள், இருவருக்கும் உரையாடல் எப்படி ஆரம்பமாகிறது, எப்படி விரிகின்றது, முடிவில் அவன் எப்படிச் சீதையைத் தூக்குகிறான் என்ற காட்சிகளை இரண்டு

கவிகளும் வெவ்வேறு விதத்தில் காட்டுவதைப் பார்ப்போம்: இந்த அத்தியாயம் நீண்டதாக இருந்தாலும் இலக்கிய ரசிகர்களுக்கு இன்பமளிக்குமேயல்லாமல் பாரமாகத் தோன்றாது.

வால்மீகி முனிவர் தரும் காட்சி: (ஆரணிய காண்டம் நாற்பத்தாறாம் சருக்கத்தின் மொழி பெயர்ப்பு) –

"இவ்விதமாகக் கடுஞ்சொல் கூறப்பெற்ற லட்சுமணர் கோபங்கொண்டு இராமரைத்தேடிப் புறப்பட்டுச் சென்றார். சமயம் பார்த்து ஒளித்திருந்த தசக்கிரீவன் உடனே சந்நியாசி வேஷம் கொண்டு சீதைமுன் வந்தான். அழகான காவித்துணி உடுத்து, தலையில் ஒரு சிறு குடுமி வைத்து, கையிற்குடை பிடித்து, பாதங்களில் செருப்பணிந்து, இடத்தோளில் தண்டமும் கமண்டலமும் தாங்கிச் சந்நியாசி உருவம் பூண்டு, சீதையிருந்த இடத்துக்கு இராவணன் வந்து சேர்ந்தான். சகோதரர்களாகிய இராம லட்சுமணர்கள் இருவருமின்றித் தனியேயிருந்த சீதையை இராவணன் கிட்டினது, சந்திர சூரியர்கள் இருவரும் இல்லாமலிருக்கும் சந்தியா காலத்தை நள்ளிருள் நணுகினதுபோலத் தோன்றியது. புகழ் பெற்றவளும் இளம்பருவமுடையவளுமாகிய சீதையை அக்கொடியவன் சந்திரனைவிட்டுப் பிரிந்த உரோகிணி நட்சத்திரத்தை அங்காரகன் பார்த்ததுபோலப் பார்த்தான். கொடிய செயல்களைச் செய்யும் அப் பாவியைக் கண்டு ஜனஸ்தானத்திலிருந்த மரங்கள் அசையவில்லை; காற்றும் அடிக்கவில்லை; அவன் தனது சிவந்த கண்களால் சீதையைப் பார்த்த பார்வையைக் கண்டு பயந்து வெகுவேகமாக ஓடும் கோதாவரி நதியும் தனது வேகம் அடங்கிற்று.

இராமர் இல்லாத சமயம் பார்த்துத் தசக்கிரீவன் சந்நியாசி வேஷம் பூண்டு சீதைமுன் சென்றான். சித்திரா நக்ஷத்திரத்தைச் சனி சென்று சேர்வதுபோல் கணவனைக் காணாமல் பரிதவிக்கும் சீதைமுன் புல்லால் மூடப்பட்ட கிணறுபோலக் கொடியவனாகிய இராவணன் நல்ல தவத்தினர் வடிவங்கொண்டு சென்றான். கொடிய கருத்துள்ள அவ்வரக்கன், அழகிய வெள்ளிய பற்களையும், இதழையும், பூரண சந்திரன் போன்ற முகத்தையும், தாமரை யிதழ்போன்ற கண்களையும் உடையவளாய், மஞ்சள் பட்டுடுத்துத் துக்கத்தால் கண்ணீர் பெருக்கிப் பர்ணசாலையில் உட்கார்ந்திருக்கும் அழகான சீதையை அணுகினான். அவளைக் கண்டவுடன் ராக்ஷசேந்திரன் மன்மத பாணத்தால் மொத்துண்டான். வேதமோதிக்கொண்டு அவ்வரக்கர் மன்னவன் தன்னழகினால் மூவுலகத்தையும் வென்று இலட்சுமிபோல் விளங்கும் சீதையைப் பார்த்துப் புகழத் தொடங்கினான்.

"பொன்போன்ற மேனியை உடையராகி, மஞ்சள் பட்டுடுத்து, தாமரை ஓடைபோல அழகான தாமரை மலர்மாலையை அணிந்திருக்கும் நீங்கள் யாரம்மா? அழகான முகம் படைத்த மாதே, நீங்கள் யார்? கீர்த்தியோ? அழகோ? லக்ஷ்மியோ? அப்சரசோ? ஐசுவரியத்தின் உருவமோ? அல்லது தனது இஷ்டப்படி சஞ்சரிக்கும் ரதிதேவியோ? உங்களுடைய பற்கள் ஒன்றுபோல் எல்லாம் அழகாகவும், கூரிய முனைகளையுடையனவாகியும், வெண்மையாகவும் இருக்கின்றன. உங்கள் கண்கள் விசாலமாகவும் நிஷ்களங்கமாகவும் செவ்வரி படர்ந்தனவாகவும் கருவிழிகளுடையனவாகியும் விளங்குகின்றன. கடிபாகம் விசாலமும் பெருமனுமாயிருக்கின்றது; துடைகள் யானைத் துதிக்கைபோலத் திரண்டு பருத்திருக்கின்றன. தனங்கள் விம்மிப்புடைத்து இறுமாந்து மணிவடங்களணிந்து பனம்பழத்துக்கொப்பாக விளங்குகின்றன.

அம்மணி, உங்கள் புன்னகையும், பற்களின் அழகும், கண்களின் ஒளியும் உங்கள் மேனியும் ஆற்றுநீர் கரையைக் கரைத்துக்கொண்டு ஓடுவதுபோல என் உள்ளத்தை முழுதும் கவர்ந்துவிட்டன. பிடிக்கடங்கின இடையையும் அழகிய கூந்தலையும் உடையவரே, உம்மைப்போல் இவ்வளவு அழகான பெண்ணைத் தேவப் பெண்களுள்ளும், கந்தர்வ, யக்ஷ கின்னரப் பெண்களுள்ளும் நான் பார்த்ததில்லை. இவ்வுலகத்தில் மிக உத்தமமான உங்கள் அழகும், இளமையும் சாயலும், நீங்கள் காட்டில் வசிப்பதும் எல்லாம் என் மனத்தை மயக்குகின்றன. தங்கள் இஷ்டப்படி உருவம் மாறும் கொடிய அரக்கர்கள் வசிக்கும் காடு இது. ஆகையால் நீங்கள் நாட்டிற்குத் திரும்பிப்போகவேண்டும். நகரத்திலும் பட்டணத்திலும் அழகான மாளிகையின் கண்ணும் நல்ல வாசனைகள் நிரம்பிய பூஞ்சோலைகளிலும் நீங்கள் வசிக்கவேண்டும். உயர்ந்த மாலைகள், உயர்ந்த உணவு, உயர்ந்த புடவை, உயர்ந்த புருஷன் இவைகள் எப்பொழுதும் உங்களுக்கு வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

மாதே, நீ யார்? ருத்திரர்கள், வசுக்கள், தேவர்கள் இவர்களுள் யாரைச் சேர்ந்தவர்? நீர் தேவ கன்னிகை என்றே நான் எண்ணுகிறேன். இக்காட்டிற்குக் கந்தர்வர்கள், தேவர்கள், கின்னரர்கள் ஒருவரும் வரமாட்டார்கள். இது அரக்கர்கள் வாழும் இடம். நீர் எவ்வாறு இங்கு வந்தீர்? இவ்விடத்தில் சஞ்சரிக்கும் குரங்கு, சிங்கம், புலி, யானை, கரடி, செந்நாய், கழுதைப் புலி முதலிய விலங்குகளைக் கண்டு நீர் எவ்வாறு பயப்படாமல் இருக்கிறீர்? இந்தக் காட்டில் தனியே இருந்துகொண்டு இவ்விடத்தில் சஞ்சரிக்கும் வெகு பலம்பொருந்திய பயங்கரமான மதயானைக் கூட்டங்களைக் கண்டு எப்படி நீர் பயப்படாமலிருக்கிறீர்? நீர் யார்? யாரைச் சேர்ந்தவர்? எங்கிருந்து வந்திருக்கிறீர்? என்னத்திற்காகக்



கொடிய அரக்கர்கள் சஞ்சரிக்கும் இத்தண்டக வனத்தில் தனிமையாக வசித்துக் கொண்டிருக்கிறீர்?'' என்றான்.

துஷ்டனாகிய இராவணனால் இவ்வாறு வினவப்பட்ட சீதை அவனுடைய அந்தண வேஷத்தைக் கண்டு அவனுக்கு அதிதிகளுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளில் ஒன்றும் குறையாமல் செய்தாள். முதலில் ஆசனம் கொடுத்து, அதன்பின் காலலம்ப ஜலம்வார்த்து, பிறகு வெகு யோக்கியன் போலக்காணும் அவனைப் பார்த்து "அன்னம் சித்தமாக இருக்கிறது'' என்றாள்.

காவித் துணியுடுத்துக் கையில் கமண்டலம் தரித்துப் பிராமண வேஷம் பூண்டு வந்த இராவணனை அவன்கெட்ட எண்ணமுள்ளவனாயும் பூஜிப்பதற்கு அயோக்கியனாயும் இருந்தபோதிலும், "இந்த ஆசனத்தின் மேல் உட்காருங்கள், இதோ ஜலம் பெற்றுக்கொள்ளுங்கள். இக்காட்டில் கிடைக்கும் கிழங்குகளும் பழங்களும் தங்களுடைய புசிப்புக்கென்று இதோ வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை உங்களுக்கு வேண்டியமட்டும் புசியுங்கள்'' என்றாள்.

இவ்வாறு மனிதர்களுக்குள் உத்தமரான இராமருடைய மனைவி இராவணனை வெகுமரியாதையாகப் போசனத்துக்கழைக்க, அவன் தனக்கு முடிவுகாலம் கிட்டிவிட்டபடியால் அவளை எப்படியாவது பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போய்விட வேண்டுமென்று கருதினான். அப்பொழுது சீதை, வேட்டைக்குப் போயிருந்த இராமர் லட்சுமணருடன் திரும்பிவருவதை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துத் தனது கண்களுக்கு எட்டியமட்டும் காட்டை நான்கு பக்கங்களிலும் நோக்கினாள். எவ்வாறாகச் சுற்றிப்பார்த்தபோதிலும்

அக்காடெங்கும் பசுமையாக இருக்கக் கண்டாளேயன்றி இராம இலட்சுமணர்களை அவள் காணவில்லை.''

மேலே உள்ளது வால்மீகி முனிவரின் வாக்கு. அதில், சன்னியாசி வேடம்பூண்ட இராவணன் சீதையைப் பார்த்து 'நீ யார்' என்று கேட்கும்போதே சீதையினுடைய அங்கங்களை அவ்வளவு கொச்சையாக வர்ணித்து அவளை விளிப்பது வினயமற்றதாக இருப்பது மட்டுமல்லாமல் மிகவும் விரசமுள்ளதாக இருக்கிறது. கற்புக் குணங்களில் குறைந்தவளான பெண்ணாக இருந்தாலும் 'என்னுடைய அங்கங்களை இப்படியெல்லாம் வருணிக்க நீ யாரடா?' என்று கேட்டுவிடுவாள். அப்படிக் கேட்காவிட்டாலும் அவனுடைய சன்னியாச வேடத்தைச் சந்தேகிக்காமலிருக்க முடியாது. அவன் எடுத்த எடுப்பிலேயே காம ஆசையைக் காட்டிவிட்டதால் அவனுக்கு மரியாதைகளைச் செய்ய மனமொப்பியிருக்கமாட்டாள்.

இந்த இடத்தைக் கம்பர் எப்படி அழகுபடுத்தியிருக்கிறார் என்பதை இங்கேயே பார்த்துவிடுவோம்:—

இலக்குமணன் சீதையைத் தனியே விட்டுவிட்டு இராமரை நாடிச் சென்றபின்;

''இளையவன் ஏகலும் இறவு பார்க்கின்ற
வளையெயிற்று இராவணன் வஞ்சம் முற்றுவான்
முளைவரித் தண்டொரு மூன்றும் முப்பகைத்
தளையரி தவத்தவர் வடிவம் தாங்கினான்.''

இளையவனாகிய இலக்குமணன் போனவுடன் அவன் இல்லாதிருப்பதைப் பார்த்த வளைந்த பற்களையுடைய இராவணன், தான் எண்ணிய வஞ்சனையைச் செய்து முடிப்பதற்காகக் கொழுந்து இலைகள் விரிந்த (வைஷ்ணவ



சன்னியாசிகளின் கையிற் பிடித்துக்கொள்ளும் சின்னமாகிய) திரிதண்டத்தை ஏந்தினவனாய், காமம், வெகுளி, மயக்கம் என்ற முப்பகைகளையும் அறுத்துவிடக்கூடிய தவசிகளின் வேடத்தைத் தரித்தான்.

''ஊணிலனாம்என உலர்ந்த மேனியன்
சேண்நெறிவந்ததோர் வருத்தச் செய்கையன்
பாணியின் நடத்திடைப் படிக்கின் றான்என
வீணையின் இசைபட வேதம் பாடுவான்.''

உணவே உண்ணாதவன்போல் வாடிவற்றிப்போன தேகமுள்ளவனாகி, நெடுந்தூரம் வழிநடந்து களைத்துப்போன துன்பமுடையவன்போன்ற தோற்றத்துடன் தாளத்துக்குத் தக்கபடி நடனம் பயில்கின்றவனைப்போல வீணையின் நாதம்கூடத் தோற்றுவிடும்படியான இசையுடன் வேதங்களைப் பாடிக்கொண்டு,

''பூப்பொதி அவிழ்ந்தன நடையன் பூதலம்
தீப்பொதிந் தாம்என மிதிக்கும் செய்கையன்
காப்பரும் நடுக்குறும் காலன் கையினன்
முப்புஎனும் பருவமும் முனிய முற்றினான்.''

ஒரு பூமூட்டை அவிழ்ந்துவிட்டதுபோன்ற துவண்ட நடையுடையவனாய், பூமியில் நெருப்புத்துண்டங்கள் பரவிக் கிடந்தால் அதைக்கண்டு பயந்து பயந்து அடியெடுத்து வைப்பதுபோன்ற நடிப்புடையவனாய், நிறுத்த முடியாதபடி எந்நேரமும் நடுங்கிக்கொண்டேயிருக்கிற கால்களும் கைகளும் உடையவனாய், 'கிழட்டுத்தனம்' என்று சொல்லப்படுகிற பருவமே தோற்றுப்போகும்படியான அவ்வளவு கிழத்தனம் முதிர்ந்தவனாய்,

''தாமரைக் கண்ணொடுஏர் தவத்தின் மாலையன்
ஆமையின் இருக்கையன் வளைந்த ஆக்கையன்

நாமநூல் மார்பினன் நணுகினான் அரோ
தூமனத்து அருந்ததி இருந்த சூழல்வாய்.''

தாமரை மணிகளாலாக்கப்பட்ட அழகான மாலையணிந்தவனாய், ஆமையைப்போல் அங்கங்களை உள்ளுக்கிழுத்துக்கொண்டு உட்காருகின்றவனாய், கூன்விழுந்து வளைந்த சரீரமுள்ளவனாய், பூணூல் அணிந்த அந்தண வடிவத்தோடு, பரிசுத்தமான மனமுடையவளும் கற்பரசி அருந்ததிக்குச் சமானமானவளுமாகிய சீதை இருந்த இடத்தை, நெருங்கினான்.

''தோமறு சாலையின் வாயில் துன்னினான்
நாமுதல் குழறிட நடுங்கும் சொல்லினான்
யாவர் இவ்விருக்கையுள் இருந்துளீர்? என்றான்
தேவரும் மருள்கொளத் தெரிந்த மேனியன்.''

தேவர்களும்கூடக் கண்டு அதிசயித்து மயங்கும்படியாக அவ்வளவு திறமையுடன் மாறுவேடம் புனைந்த இராவணன் (சீதை இருந்த) குற்றமற்ற பர்ணசாலையின் வாசலுக்கு அருகில் வந்தான். நாக்கின் நுனி குழறும்படி நடுங்குகின்ற சொற்களால் 'இந்தக் குடிசைக்குள் யார் இருக்கிறீர்?' என்றான்.

''தோகையும் அவ்வழித் தோமில் சிந்தனை
சேகரும் நோன்பினர் என்னும் சிந்தையாள்
பாகியல் கிளவியாள் பவளக் கொம்பர்போன்று
ஏகுமின் ஈண்டுஎன எதிர்வந்து எய்தினாள்''

மயில் போன்ற சீதையும் அப்போது (அந்தச் சன்னியாசியை) மாசற்ற எண்ணங்களோடு, பிறப்பறுக்கும் விரதம் பூண்ட தவசியென்று நினைத்துக்கொண்டு, பாகு போன்ற இனிய வார்த்தைகளால் 'இங்கே வாருங்கள்' என்று எதிர்கொண்டழைத்துக்கொண்டே ஒரு பவளக் கொம்புபோல (அந்தச் சன்னியாசியின்) முன்னால் வந்து சேர்ந்தாள்.



''வெற்பிடை மதமென வியர்க்கும் மேனியன்
அற்பின்நல் திரைபுரள் ஆசை வேலையன்
பொற்பினுக்கு அணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக்கு அரசியைக் கண்ணில் நோக்கினான்.''

மலையின் மீது மதம் பொங்குவதுபோல் தேகம் வியர்க்க, காமம் என்னும் அலைகள் மிகுந்து புரளுகின்ற மோக சமுத்திரமாகிய (இராவண) சன்னியாசி, அழகு என்ற பொருளுக்கே ஆபரணம் போன்றவளும், புகழ் என்ற பொருளுக்கே இருப்பிடமானவளும், கற்பு என்ற தன்மைக்கு அரசியானவளுமாகிய சீதையைக் கண்கொண்டு பார்த்துவிட்டான்.

சீதையின் அழகைப்பற்றி, சூர்ப்பணகை சொன்னதைக் காதாற்கேட்டே அவ்வளவு மோகங்கொண்டு இவ்வளவு வஞ்சனைகளைச் செய்த இராவணன் சீதையினுடைய அற்புத அழகைத் தன்னுடைய கண்களாரக் கண்டுவிட்டபின் எவ்வளவு ஆசைகொள்ளுவான்! கண்டவுடனே உதித்த காம ஆசையால் தனக்குள்ளே பலவித மனக்கோட்டைகளை ஒரு நொடிக்குள் கட்டுகிறான். 'தாமரை மலரை விட்டுவிட்டு இப்படி வடிவெடுத்து வந்திருக்கிற மகாலட்சுமியின் அழகை அனுபவிக்க எனக்குள்ள இருபது கண்கள் போதாவே. ஆயிரம் கண்களாவது இல்லாமற் போனேனே' என்று அவதிப்படுகிறான். 'நான் சிவபிரானிடத்தில் பெற்ற மூன்றரைக்கோடி ஆயுளும் மற்றத் தேவர்களிடத்தில் வாங்கின எண்ணிறந்த வரங்களும் இந்தச் சீதையின் எல்லையற்ற அழகுக்கு ஈடாகுமா?' என்று ஏங்குகிறான்.

'எனக்கு பயந்து என் ஏவலைச் செய்கின்றவர்களாகிய தேவர்களும் அவுணர்களும் மற்றவர்களும் இனிமேல் இவளுடைய ஏவலைக் கேட்கும்படி, மூன்றுலகத்துக்கும் இவளை அரசியாக்கி நான் இவளுக்கு ஏவல் செய்வேன்' என்று எண்ணுகின்றான்.

'இவள் காட்டிலிருந்து கொண்டு, தங்களுக்கு நேரிட்டுள்ள துன்பங்களை எண்ணித் துயரப்பட்டுக் கொண்டிருக்கவேண்டிய நிலையிலும் இவளுடைய அழகு இவ்வளவென்றால் இவள் மகிழ்ச்சியாக இருக்கும்போது எப்படியிருக்கும்! அடடா! இப்படிப்பட்ட அழகியை எனக்குக் காட்டிக்கொடுத்த என் தங்கை சூர்ப்பணகைக்கு என் இராச்சியத்தைப் பரிசாகத் தந்துவிடுகிறேன்' என்று நினைக்கிறான்.

''ஆண்டையான் அனையன உன்னி ஆசைமேல்
மூண்டெழு சிந்தனை முறையிலோன் தனைக்
காண்டலும் கண்ணின் நீர்துடைத்த கற்பினாள்
ஈண்டு எழுந்தருளும் என்று இனைய கூறினாள்''

அவ்விடத்தில் அப்படியெல்லாம் எண்ணிக் காம ஆசை பொங்கியெழுந்து சிந்தனை செய்து கொண்டிருந்த முறை கெட்டவனாகிய (இராவண) சன்னியாசியைக் கண்டவுடன் தன்னுடைய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, கற்பின் வடிவமாகிய சீதை 'இங்கே எழுந்தருளுங்கள்' என்று வரவேற்புக் கூறினாள்.

''ஏத்தினள்; எய்தலும் இருத்திர் ஈண்டுஎன
வேத்திரத்து ஆசனம் விதியின் நல்கினாள்;
மாத்திரிதண்டு அயல்வைத்த வஞ்சனும்
பூத்தொடர் சாலையின் இருந்த போழ்தினே''

(சன்னியாசியைத்) துதித்து வணங்கினாள். (அவன் உள்ளே) வந்தவுடன் 'இதில் அமருங்கள்' என்று, பிரம்பால் பின்னப்பட்ட ஆசனம் கொடுத்தாள்; பெரிய திரிதண்டத்தை அருகில் வைத்துவிட்டு அந்தக் கபட சன்னியாசியும் பூங்கொடிகள் படர்ந்த பர்ணசாலையில் உட்கார்ந்த சமயத்திலே —



''நடுங்கின மலைகளும் மரனும்; நாஅவிந்து
அடங்கின பறவையும்; விலங்கும் அஞ்சின;
படங்குறைந்து ஒதுங்கின பாம்பும்; பாதகக்
கடுந்தொழில் அரக்கனைக் காணும் கண்ணினே''

பாதகக் கொடுமைகளைச் செய்யக்கூடிய அரக்கனாகிய அந்த (இராவண) சன்னியாசி அப்படி அந்தப் பர்ணசாலையில் உட்கார்ந்ததைக் கண்டபோதே அருகிலிருந்த மலைகளும் மரங்களும் நடுங்கின; பறவைகளெல்லாம் நாவொடுங்கிப் பாடுவதை அடக்கிக்கொண்டன; பாம்புகளும் படங்களை ஒடுக்கிக்கொண்டு பதுங்கின.

''இருந்தவன் 'யாவது இவ்விருக்கை? இங்குஉறை
அருந்தவன் யாவன்? நீர் யாரை?' என்றலும்
விருந்தினர் இவ்வழி விரகிலார் எனப்
பெருந்தடங் கண்ணவள் பேசல் மேயினாள்.''

(பர்ணசாலையில்) அமர்ந்த (இராவண) சன்னியாசி, 'இந்தப் பர்ணசாலை ஏது? இங்கே வசிக்கின்ற அருந்தவசி எவர்? நீங்கள் யார்?' என்று கேட்டதும், விருந்தினராகிய சன்னியாசி இந்த விஷயங்களை அறியாதவர் என்று எண்ணிய பெரிய விசாலமாகிய கண்களையுடைய சீதை பேசலானாள்.

சீதை இருந்த இடத்துக்கு வந்த கபட சன்னியாசியாகிய இராவணன், சீதையைக் கண்டவுடனே அவளை யாரென்று அறியக்கேட்ட கேள்வியும், சீதை அவனை வரவேற்றதும் ஆகியவற்றை வால்மீகி முனிவர் காட்டும் காட்சிக்கு மாறுபடக் கம்பர் தரும் காட்சி இது.

இனி, சீதை சன்னியாசிக்குக் கூறும் மறுமொழியும், அதற்குமேல் வளரும் உரையாடலும், சன்னியாசியாக இருந்தவன் இராவணனாக வேஷம் கலைவதும், இராவணன்

சீதையைப் பலாத்காரமாகத் தூக்குவதும் ஆகிய நிகழ்ச்சிகளை இரண்டு கவிஞர்களும் எப்படியெப்படிக் காட்டுகிறார்கள் என்பதைப் பார்ப்போம். முதலில் வால்மீகி முனிவரின் வாக்கைத் தொடர்வோம்; வால்மீகி இராமாயணத்தின் நாற்பத்தாறாம் சருக்கத்தின் மொழிபெயர்ப்பு முன்னே தரப்பட்டது. அதைத் தொடர்ந்து நாற்பத்தேழாஞ் சருக்கத்தின் மொழி பெயர்ப்புப் பின்வருமாறு:—

"சீதை தன்னைக் கவர்வதற்காகச் சந்நியாசி வேஷம் பூண்டு வந்த இராவணன் இவ்வாறு கேட்க, தனக்குள்ளே 'இவரோ நமது அதிதி; மேலும் பிராமணர். கேட்டதைச் சொல்லாவிடில் இவர் நம்மைச் சபிப்பார்' என்று கொஞ்ச நேரம் யோசித்து, அவனைப் பார்த்துச் சொல்லலுற்றாள்:—

'உங்களுக்கு நன்மையுண்டாகுக. நான் மிதிலைக்கு அரசனான மகாத்துமாவாகிய ஜனகமகாராஜாவின் குமாரி; இராமருடைய அன்பான மனைவி. என் பெயர் சீதை. இக்ஷ்வாகு வம்சத்து அரசர்கள் மாளிகையில் பன்னிரண்டு வருஷகாலம் வசித்துப் பலவித போகங்களையும் அனுபவித்து என்னுடைய இச்சைகள் எல்லாம் நிறைவேறப்பெற்றேன். பதின்மூன்றாம் வருஷத்தில் தசரத மன்னர் தமது மந்திரிமார்களுடன் யோசித்து இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கத் தீர்மானித்தார். அவ்வாறு பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் வந்து சித்தமாயிருக்கும்போது எனது மாமிமார்களில் ஒருத்தியாகிய கைகேயி தனது கணவரிடம் ஒருவரம் கேட்டாள். அவள், சத்தியவந்தராகிய ராஜோத்தமருக்குத் தான் செய்த உபகாரத்தை நினைப்பூட்டி அவரைத் தன் வசப்படுத்திக்கொண்டு, என் கணவரைக் காட்டுக்கு அனுப்பவேண்டும் என்றும், பரதனுக்கு பட்டம் கட்ட வேண்டுமென்றும் இரண்டு வரங்களைக் கேட்டு 'இராமன் பட்டத்துக்கு வருவதாக இருந்தால் நான் புசிக்கவும் மாட்டேன்; தீர்த்த பானம் செய்யவும் மாட்டேன்; தூங்கவும் மாட்டேன், என் உயிரை மாய்த்துக்கொள்வேன்' என்று சொன்னாள். இவ்வாறு கைகேயி சொல்ல மகிபதியாகிய என் மாமனார் அவளைப் பலவித செல்வங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டினார்.



அவள் அதற்கு உடன்படவில்லை. அப்போது என் கணவருக்கு வயது இருபத்தைந்து; எனக்கு வயது பதினெட்டு. என் கணவர் இராமர் என்னும் பெயரால் உலகமெங்கும் புகழ்பெற்றவர். அவர் சத்தியமும், நற்குணமும், நல்லொழுக்கமும், பரந்த விழியும் நீண்ட கைகளும் உடையவர். பிராணிகளுக்கெல்லாம் எப்போதும் நன்மையே செய்பவர். அப்படியிருந்தும் வெகு பராக்கிரமம் பொருந்திய என் மாமனாராகிய தசரதர் கைகேயியின் மனம் கோணாமலிருக்க வேண்டி, இராமருக்குப் பட்டாபிஷேகம் பண்ணவில்லை. பட்டாபிஷேக நிமித்தமாகத் தந்தையிடம் சென்ற என் பர்த்தாவாகிய இராமரைப் பார்த்துக் கைகேயி 'இராகவா, உனது தந்தை என்னிடம் செய்திருக்கும் கட்டளையைக் கேள். ஒருவித இடைஞ்சலுமின்றி இந்த இராச்சியம் பரதனுக்காகவும் நீ ஏழிரண்டாண்டு காட்டிலுறையவும் வேண்டுமாம். ஆகையால் நீ அவ்வாறு சென்று உன் தந்தையினுடைய வார்த்தையைக் காப்பாற்றி வைப்பாயாக' என்று இக்கொடுஞ்சொற்களைச் சொன்னாள்.

என் கணவராகிய இராமர் அவ்வாறே ஆகுகவென்று அவளுடைய வார்த்தையை அங்கீகரித்து விரதம் பூண்டு இவ்விடத்துக்கு வந்தார். அவர் எப்போதும் வேண்டுபவர்களுக்கு அவர்கள் வேண்டும் பொருளைக் கொடுப்பவரேயன்றி ஒருவரிடமிருந்து தாம் ஒன்றும் வேண்டுபவரல்லர். அவர் எப்போதும் உண்மையே பேசுபவர்;

பொய்யுரைப் பவரல்லர். ஐயா அந்தணரே, இவைகளே இராமருடைய சிறந்த விரதங்கள்.

இராமருடைய இளைய தாயார் வயிற்றில் பிறந்த தம்பி லட்சுமணர். அவர் இராமருக்கு உதவியாயுள்ளவர். சத்துருக்களை வதைக்கும் வல்லமை பெற்றவர். வெகு பராக்ரமசாலி. அவ்வுத்தமர் மிக்க உறுதியும் சீலமும் உடையவர். அவர் கையில் வில்லேந்தி, என்னுடன் காட்டுக்குப் புறப்பட்ட தமது தமையனாரைத் தொடர்ந்து வந்தார். இவ்வாறு ஐம்புலன்களையும் அடக்கித் தருமத்தை இடைவிடாது நடத்தும் இராமர் சடைபுனைந்து, தவ வேடம் பூண்டு, தமது தம்பியோடும் என்னோடும் இந்தத் தண்டகாரணியத்துக்கு வந்து சேர்ந்தார்.

ஐயா பிராமணோத்தமரே, இவ்வாறு நாங்கள் மூன்று பேரும் கைகேயியினால் இராச்சியம் அபகரிக்கப்பட்டவர்களாகி எங்கள் பலத்தின் மகிமையினால் இந்தப் பயங்கரமான தண்டகாரணியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தாங்கள் இங்குச் சற்று இளைப்பாறுங்கள்.

எனது கணவர் காட்டிலுள்ள கந்தமூல பலங்களையும், மான் பன்றி முதலானவைகளைக் கொன்று போதுமான இறைச்சியையும் எடுத்துக்கொண்டு இதோ திரும்பி வந்துவிடுவார். தாங்கள் தங்கள் பெயர், கோத்திரம், குலம் முதலியவைகளைத் தயவு செய்து எனக்குத் தெரிவிக்க வேண்டும். ஓ அந்தணரே, யாது காரணத்துக்காக நீர் இந்தத் தண்டகாரணியத்தில் தனிமையாகத் திரிகின்றீர்?' என்றாள்.

இவ்வாறு இராமருடைய மனைவியாகிய சீதை சொல்ல, வெகு பலசாலியாகிய அரக்கர் வேந்தன் விரைந்து கூறலுற்றான்:– "சீதாய், நான் இராவணன்; அரக்கர் மன்னவன். தேவர்கள், அசுரர்கள், மானுடர்கள் யாவரும் என்னைக் கண்டு அச்சங்கொள்வர். பொன்போலும் மேனியுடையவளும் பட்டுடுத்துள்ளவளுமாகிய உன்னைக் கண்டது முதல் நான் எனது மனைவிமார்கள் மேல் உள்ள ஆசையை முழுதும் ஒழித்துவிட்டேன். நான் பல இடங்களிலிருந்து அழகான பெண்களைக்கொண்டு வந்து வைத்திருக்கிறேன். அவர்கள் எல்லோருக்கும் நீ தலைவி ஆவாயாக. சமுத்திரத்தின் நடுவில் நாலுபுறமும் கடலால் சூழப்பட்டு மலையின் சிகரத்தில் அமைக்கப்பட்ட இலங்கை எனது ராஜதானி. சீதே, அவ்விடத்தில் நீ என்னுடன் சிங்காரவனத்தில் சந்தோஷமாக உலாவலாம். அப்பொழுது நீ இந்தக்காட்டில் வாழ எண்ணமாட்டாய்; சீதே, நீ என்னுடைய மனைவியாய்விட்டால் நல்ல ஆடையாபரணங்கள் அணிந்த ஐயாயிரம் பணிப்பெண்கள் உனக்குப் பணிவிடை செய்வார்கள்," என்றான்.



இவ்வாறு இராவணன் சொல்ல, உத்தமியான ஜானகி, கோபமடைந்து அவ்வரக்கனை அகன்று நின்று சொல்லலுற்றாள். "பெரிய மலைபோல அசைக்க முடியாதவரும், மஹேந்திரனுக்கு ஒப்பானவரும், பெருங்கடல்போலக் கலக்க முடியாதவருமான இராமருடைய மனைவி நான். சலக லட்சணங்களும் பொருந்தினவரும், ஆலவிருட்சம் போல்பவரும், சத்தியவந்தரும், மகாத்துமாவுமாகிய இராமருடைய மனைவி நான். நீண்ட கரங்களும் அகன்ற மார்பும் மதத்த சிங்கத்தின் நடையுமுடைய புருஷ சிங்கமாகிய இராமருடைய மனைவிநான். பூரண சந்திரனுக்கு ஒப்பான முகமுடையவரும் ராஜகுமாரரும், ஐம்புலன்களை அடக்கினவரும் பெரும்புகழ் பெற்றவருமாகிய இராமருடைய மனைவி நான். நீ என்னை இச்சிப்பது ஒரு பெண் சிங்கத்தை நரி இச்சிப்பது போலும். சூரியனுடைய கிரணம்போல் நீ என்னைத்தொட முடியாது. ஓ ராட்சசா, இராகவருடைய காதலியாகிய என்னை நீ கவரக்

கருதினமையால் இந்த மரங்களெல்லாம் உன் கண்களுக்குப் பொன்னாலானவைகளாகப் புலப்படும்.

மிருக அரியாகிய சிங்கத்தின் வாயிலும் சர்ப்பத்தின் வாயிலும் உள்ள பல்லைப் பிடுங்க நீ நினைக்கிறாய்! மந்தர மலையை நின் கையால் தழுவவும் விஷத்தை உண்டுவிட்டு உயிருடன் இருக்கவும் நீ நினைக்கிறாய்! கூரிய ஊசியால் கண்களைத் துடைக்கவும், கத்தியின் கூரை நாவால் பரிசிக்கவும் நீ நினைக்கிறாய்! கழுத்தில் ஒரு பெரும் கல்லைக் கட்டிக்கொண்டு சமுத்திரத்தைக் கடக்க நீ விரும்புகிறாய்! இராமருடைய உத்தமமான பத்தினியை விரும்பும் நீ சூரிய சந்திரர்களைக் கையால் பற்றவும், கொழுந்துவிட்டெரியும் தீயைத் துணியில் முடிந்துகொள்ளவும், கூரிய இரும்புச் சூலங்களின் மேல் நடக்கவும் கருதுகிறாய்! சிங்கத்துக்கும் நரிக்கும்போலவும், கால்வாய்க்கும் சமுத்திரத்துக்கும் போலவும், அமுதத்துக்கும் கஞ்சிக்கும் போலவும், தங்கத்துக்கும் இரும்புக்கும் போலவும், சந்தனத்துக்கும் சேற்றுக்கும் போலவும், யானைக்கும் பூனைக்கும் போலவும், காக்கைக்கும் கருடனுக்கும் போலவும், மயிலுக்கும் நீர்க்கோழிக்கும் போலவும், சாகசப் பட்சிக்கும் கழுகுக்கும் போலவும் இராமருக்கும் உனக்கும் உள்ள வேற்றுமை பெரிது. இந்திரனுக்கொப்பான பராக்கிரமத்தையுடைய அப்பெரிய வில்லாளியாகிய இராமர் உயிருடன் இருக்கிறவரையில் நீ என்னை அபகரித்தபோதிலும் நெய்யைக் குடித்த கொக்குபோல நீ மாண்டுபோவது நிச்சயம்' என்று கொடிய இராவணனைப் பார்த்து இந்தச் சொற்களைச் சொல்லி உத்தமியான சீதை பெருங்காற்றால் அசைக்கப்படும் வாழைபோல் நடுங்கி நின்றாள். அப்போது யமன் போன்ற பேராற்றலுடைய இராவணன் அவமானத்தால் இன்னும் அதிக பயத்தை உண்டுபண்ணும் பொருட்டுத் தனது குலம், பலம், பெயர், தான் செய்த கொடிய செயல்கள் முதலியவைகளை எடுத்துச் சொல்லத் தொடங்கினான்!'



(அடுத்த நாற்பத்தெட்டாம் சருக்கத்தில் மேலே சொன்னபடி இராவணன் தனது குலம், பலம், பெயர் முதலியவற்றைச் சொல்லுகிறான். நாற்பத்தெட்டாம் சருக்கத்தின் மொழி பெயர்ப்புப் பின் வருமாறு:—)

"சீதை இவ்வாறு சொல்ல இராவணன் அதிக கோபம் கொண்டு, தனது புருவங்களை நெரித்துக் கூறலுற்றான்:— 'ஓ சுந்தரி, நான் குபேரனுடைய தம்பி. என் பெயர் பத்துத் தலைகளைப் படைத்த இராவணன். நீ வாழ்வாயாக. நான் வெகு பிரதாபமுள்ளவன். யமனைக்கண்டு மனிதர் நடுங்கி ஓடுவதுபோல், என்னைக் கண்டால் தேவர்கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், உரகர்கள், பதகர்கள் முதலியவர்கள் எல்லோரும் பயந்து ஓடிவிடுவார்கள். நான் என் அண்ணனாகிய குபேரனை ஒரு காரிய நிமித்தம் கோபம் கொண்டு சண்டையிட்டு வெற்றிகொண்டேன். அதனால் அவன் எனக்கு அஞ்சித் தனது செல்வ நகரமாகிய இலங்கையை விட்டுக் கைலை மலைக்கோடி அங்கே குடியிருக்கிறான். வேண்டுமிடத்துக்குப் போகும் புஷ்பகம் என்னும் அவனுடைய விமானத்தை நான் எனது பராக்ரமத்தால் பறித்துக்கொண்டேன். அதன் மீதேறி நான் இப்பொழுது வேண்டுமிடங்களுக்கு ஆகாச மார்க்கமாகச் செல்வேன். நான் கோபங்கொள்ளும்போது எனது முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும் ஓடி விடுவார்கள். நான் இருக்கும் இடத்தில் காற்றும் பயத்துடன் வீசும். கொடுமையான கிரணங்களையுடைய சூரியனும் எனக்குப் பயந்து குளிர்ந்த சந்திரன்போல் பிரகாசிப்பான். வேறென்ன சொல்லவேண்டும்? நான் வசிக்குமிடத்தில் மரங்களும்

இலைகளும் அசையா; ஆறுகளும் விரைந்து ஓடா; சமுத்திரத்துக்கு அக்கரையில் எனது அழகிய பட்டணமாகிய இலங்கை உளது. அது இந்திரனுடைய அமராவதிபோல் நான்கு புறத்திலும் கொடிய ராட்சசர்களால் காக்கப்பட்டுப் பொன் மயமான மதில்களால் சூழப்பட்டிருக்கிறது. அது தங்கத்தால் கட்டப்பட்ட மாளிகைகளும், இரத்தினமிழைத்த கோபுர வாயிலையும் உடையது. அது யானைகள், குதிரைகள், தேர்கள் நிறைந்தது; எப்பொழுதும் மங்கல வாத்தியங்கள் ஒலிப்பது; விரும்பிய பழங்களைக்கொடுக்கும் பலவகை மரங்கள் நிறைந்து, சிங்கார வனங்கள் செறிந்தது.

ஜனகராஜ புத்ரீ, சீதே, நீ அவ்விடத்தில் என்னுடன் வாழவேண்டும். மாதே, அங்கே நீ ஒரு பொழுதும் மானிடப் பெண்களைப் பற்றி நினைக்கமாட்டாய். தையால், அவ்விடத்தில் நீ மானிடர்களுக்கு எட்டாத போகங்களை அனுபவித்துக் கொண்டு சுகமாயிருக்கும் போது அற்ப ஆயுளுடைய மானிடனாகிய இராமனை நினைக்கவேமாட்டாய்.

தசரதராஜன் தனக்குவேண்டிய குமாரனுக்குப் பட்டம் கட்டி வைத்துவிட்டு வீரமில்லாத தனது மூத்த குமாரனைக் காட்டுக்கு ஓட்டிவிட்டான். தடங்கண்ணாய், தனது இராச்சியத்தை இழந்து துன்புறும் விரதியாகிய இராமனோடு இனி உனக்கு உறவு என்ன? அரக்கர்கள் எல்லாருக்கும் மன்னவன் நான். காம பாணத்தால் துளைபட்டு உன்னைத்தேடி வந்தேன். ஆதலால் என்னை அலக்ஷியம் செய்வது உனக்குத் தகாது. நீ அலக்ஷியம் செய்வாயானால் முன்னர் புரூரவனைக் காலால் உதைத்துத் தள்ளிய ஊர்வசி போலப் பின் பரிதாபப்படுவாய். இராமன் மானிடன்; போரில் என் கைவிரல் ஒன்றிற்கு இணையாகான். மாதே, உனது அதிருஷ்டத்தால் நான் உன்னைத் தேடி



வந்திருக்கிறேன். ஆகையால் நீ என்னிடம் வந்துவிடு,'' என்றான்.

இராவணன் இவ்வணணம் சொன்னதைச் சீதை கேட்டு, வெகு கோபமடைந்து, கண்கள் சிவந்து அவ்வரக்கர் மன்னவனை நோக்கி இவ்வித கடினமான சொற்களைச் சொல்வாளாயினாள்: 'எல்லாராலும் வணங்கப்படும் குபேரனை உன் அண்ணன் என்று சொல்லிக்கொண்டு நீ எவ்விதமாக இந்தப் பாபமான காரியத்தைச் செய்யத் துணிகிறாய்? அடா இராவணா, புலன்களை அடக்காத புத்தியற்ற கொடியவனாகிய உன்னை அரசனாக அடைந்ததால் அரக்கர்கள் எல்லாரும் மாண்டுபோகப் போகிறார்கள். இந்திரன் மனைவியாகிய சசிதேவியைக் கவர்ந்து சென்றவன் ஒருகால் பிழைத்தாலும் பிழைக்கலாம்; இராமருடைய மனைவியாகிய என்னைக் கவர்ந்தவன் ஒருநாளும் உயிருடன் இருக்கமாட்டான். வச்சிராயுதத்தைத் தரித்த இந்திரன் மனைவியாகிய சசிதேவியை அவமதித்தவன் பிழைப்பதுகூடும்; என்னை அவமதித்தவன் அமிர்த பானம் பண்ணினவனாயினும் கூற்றுக்குத் தப்புவதில்லை,'' என்றாள்.

(இதற்கடுத்த நாற்பத்தொன்பதாம் சருக்கத்தில் இராவணன் சீதையை மேலும் பயமுறுத்திப் பேசித் தன்னுடைய பொய் வேடத்தை விட்டுச் சுயரூபத்தைக் காட்டிச் சீதையைப் பலாத்காரமாகத் தூக்கினதை வால்மீகி முனிவர் சொல்லுகின்றார். அதன் மொழிபெயர்ப்புப் பின்வருமாறு:)

''சீதை சொன்னதைக் கேட்டு வெகு பிரதாபவானாகிய தசக்கிரீவன் கையொடு கையைத் தட்டி ஒரு பேருருவு கொண்டு, மறுபடியும் சீதையைப் பார்த்து 'நீ

பித்தம் பிடித்தனை போலும். நீ எனது வீரியத்தையும் பராக்கிரமத்தையும் கேட்டதில்லையா? நான் ஆகாசத்தில் நின்றுகொண்டு எனது கைகளால் இந்தப் பூமியை மேலே எடுப்பேன்; யமனையும் போரில் வதைப்பேன்; எனது பாணங்களால் சூரியனைத் துளைப்பேன்; பூமியையும் பிளப்பேன். நான் விரும்பிய உருவெடுக்க வல்லேன். ஆகையால் நீ என்னைக் கண்ணெடுத்துப் பார்,'' என்றான். இவ்வண்ணம் அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அவனுடைய பிங்கள வர்ணமான கண்கள் கோபத்தால் சிவந்து எரிகின்ற அக்கினிக் கொப்பாயின. உடனே இராவணன் தான் கொண்ட சாதுவான சந்நியாசி வேஷத்தை நீக்கிவிட்டு யமனுக்கொப்பான தனது நிஜ உருவங்கொண்டு, மிகச்சிவந்த கண்களும், பொற்குண்டலங்களும், பத்துத் தலைகளும், பாணங்களும், வில்லுகளும் உடையவனாய் வெகு கோபங்கொண்டு கார்மேகம் போல நின்றான். அவ்வாறு சந்நியாசி வேஷத்தை ஒழித்துப் பெரிய வடிவமைந்த அரக்கர் மன்னவனாகிய இராவணன் இரத்த வர்ணமான ஆடை புனைந்த தனது நிஜ உருவங்கொண்டு ஸ்திரீரத்தினமாகிய மைதிலியை உற்றுப் பார்த்தான்.

கருங்குழலுடையவளாய், ஆடையாபரணமணிந்து சூரிய ரஸ்மிபோல் விளங்கும் சீதையை அவன் பார்த்து, 'சுந்தரீ, மூவுலகங்களிலும் கீர்த்தி பெற்ற புருஷனை அடையக் கருதினால் நீ இப்பொழுதே என்னுடன் வந்து விடு. நான் உனக்குத் தகுதியான கணவன். நீ என்னை ஏற்றுக்கொள். நான் உத்தமன். உன்னிடம் காதல் கொண்டவன். நான் ஒருபொழுதும் உனக்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செய்யேன். ஆகையால் நீ மானிடனிடம் வைத்திருக்கும் அன்பை விட்டுவிடு. என்னிடம் உனது அன்பை வை; நீ ஒன்றும் தெரியாதவள்; தெரிந்தவளைப்போல நடிக்கிறாய்.



தனது இராச்சியத்தை இழந்து எண்ணங்கள் கைகூடாது, ஆயுளும் குறுகிய இராமனை நீ என்ன குணங்களைக் கண்டு காதலிக்கிறாய்? அவன் ஒரு பெண்ணின் கட்டளைப்படி தனது நாட்டைத் துறந்து, அன்பர்களையும் பந்துக்களையும் விட்டுப் பிரிந்து, கொடிய விலங்குகள் சஞ்சரிக்கும் இக்காட்டில் வந்து புத்தியீனத்தால் வசித்துக் கொண்டிருக்கிறான்,' என்றான்.

அக்கொடிய பாவியாகிய அரக்கன் அன்பாகப் பேச வேண்டிய சீதையைப்பார்த்து வன்சொற்களைச் சொல்லிக் காமத்தால் கண்மூடப்பட்டவனாய் அவளை நெருங்கி, உரோகிணியைப் புதன் ஆகாசத்தில் பற்றுவதுபோல் பற்றினான். அவன் சீதையை அவளுடைய கூந்தலை இடக்கையாலும் துடைகளை வலக்கையாலும் பிடித்துத் தூக்கினான். யமனுக்கொப்பான மலை போன்ற பெரிய தோள்களையும் கூரிய பற்களையுமுடைய இராவணனைக் கண்டு பயந்து நடுங்கி, அங்கிருந்த வன தேவதைகளெல்லாம் ஓடின. பெரிய ஒலியுடையதும் பொன்னால் அலங்கரிப்பட்டதும் கழுதைகள் பூட்டப்பட்டதுமான இராவணனுடைய இரதம் அங்கே வந்து தோன்றிற்று. அப்போது இராவணன் பெருங்குரலோடு, கொடிய வார்த்தையால் சீதையைப் பயமுறுத்தித் தூக்கித் தன் மடியில் வைத்துக்கொண்டு இரதத்திலேறினான்.''

இப்படியாக வால்மீகி முனிவர், இராவணன் சீதையை அபகரித்த விதத்தைச் சொல்லியிருப்பதற்கும் இதை முற்றிலும் மாற்றியமைத்துக் கம்பர் சொல்லுவதற்கும் உள்ள வேறுபாடுகளைச் சரியாகச் சீர்தூக்கி அனுபவிக்க இங்கேயே சில விஷயங்களைக் குறிப்பிடுவது பொருந்தும்.

அந்தண சன்னியாசியாக வந்த அதிதி, தன்னை மிகவும் கொச்சையான விதத்தில் வருணித்துக் காமப் பேச்சாகப் பேசினதால் அவன் பூஜிக்கத் தகுந்தவன் அல்ல

னென்ற குறிகளை அறிந்த பின்னும் 'இவரோ நமது அதிதி; மேலும் பிராமணர். கேட்டதைச் சொல்லாவிட்டால் சபிப்பார்' என்று பயந்து, சீதை தன் வரலாற்றைச் சொல்லுகிறாள். தானும் தன் கணவர் இராமரும் இலக்குமணரும் வனத்துக்கு வர நேரிட்ட காரணத்தைச் சொல்லும்போது, தங்களுக்குச் சேரவேண்டிய இராச்சியத்தைக் கைகேயி அபகரித்துக்கொண்டதாக நிந்திக்கிறாள்.

இராச்சியத்தை விட்டு வனத்துக்கு வரும்போது இராமருக்கு வயது இருபத்தைந்து என்றும் தனக்கு வயது பதினெட்டு என்றும் சீதை சன்னியாசியிடம் சொல்லுகிறாள். கலியாணத்துக்குப் பின் அயோத்தியில் பனிரண்டு வருடங்கள் வாழ்ந்ததாகவும் சொல்லுகிறாள். அப்படியானால் திருமணம் ஆனபோது சீதைக்கு ஆறு வயதாகத்தான் இருந்திருக்க முடியும். இராமர் வில்லை வளைத்து ஒடித்துச் சீதையை விவாகம் செய்து கொள்ளுவதற்குச் சில வருஷங்கள் முன்னாலேயே பல அரசிளங்குமாரர்கள் சீதையை மணந்துகொள்ள ஆசைப்பட்டு வில்லை வளைக்க வந்து தோல்வியுற்றுப்போனதாக வால்மீகி முனிவர் சொல்லுகிறார். அதுவானால் ஆறு வயதுக்கும் குறைவான குழந்தையின் மீதா அந்த இளவரசர்கள் மோகங்கொண்டு வில்லை வளைக்க முயன்றார்கள்?

மேலும் முன்னே விசுவாமித்திர முனிவர் தமது வேள்வியைக் காக்க இராமரை அழைத்துக்கொண்டு போக வந்தபோது, தசரதர், இராமருக்கு 'இன்னும் பதினாறு பிராயங்கூட ஆகவில்லையே' என்று சொன்னதாக இருக்கிறது. ஆதலால் இங்கே சீதை, வனத்துக்கு வரும்போது இராமருக்கும் தனக்கும் இருந்த வயதைப்பற்றிச் சொன்னதாக இருப்பது பல முரண்களை உண்டாக்குகிறது. மற்றும் சீதை, தன்னுடைய வரலாற்றைச் சொல்லிவிட்டுச் சன்னியாசியை நோக்கி, 'ஓ அந்தணரே, யாது காரணத்துக்காக நீர் இந்தத் தண்டகாரணியத்தில் தனிமையாகத் திரிகின்றீர்?' என்று கேட்டவுடனேயே அவன், தன்னுடைய சன்னியாச வேடத்துடனேயே 'சீதாய், நான் இராவணன்; அரக்கர் மன்னவன். தேவர்கள், அசுரர்கள், மானுடர்கள் யாவரும் காண அஞ்சுபவன். உன்னைக் கண்டது முதல் நான் எனது மனைவிமார்கள் மேல் ஆசையை முழுதும் ஒழித்துவிட்டேன்'.............. என்றெல்லாம் பேசத் தொடங்கிவிட்டதும் குறிப்பிடத்தக்கது. பின்னும், சீதை தன்னைக் கண்டு மருண்டுவிடாதிருக்கவேண்டும் என்றே தன்னுடைய இராட்சத வடிவத்தை மறைத்து வெகு சாதுவான சன்னியாசிபோல வந்த இராவணன் சீதையினுடைய அன்பைப் பெறமுயலும் போது இனிய வார்த்தைகளைப் பேசாமல் தான் செய்யக்கூடிய கொடுமைகளையே விரித்துரைத்து, அவளைப் பயப்படுத்துவதும் குறிப்பிடத்தகுந்தது. இந்தக் குறிப்புகள் எதற்காகவென்றால், இதே கதைப் பகுதியைக் கம்பநாட்டாழ்வார் எப்படியெல்லாம் மாற்றியமைத்து, இராமாயணத்தைத் தெய்வமாக் கதையாகத் திகழச் செய்திருக்கிறார் என்பதை அறியவே.



இனிக் கம்பர் தரும் கதையைத் தொடர்வோம்: தவமுனிவரின் வேடந்தாங்கி வந்த இராவணனைச் சீதை எதிர்கொண்டழைத்துப் பர்ணசாலைக்குள் ஆசனம் விரித்து அமரச் செய்தாள்.

"இருந்தவன் 'யாவது இவ்விருக்கை? இங்குறை
அருந்தவன் யாவன்? நீர் யாரை?' என்றலும்
விருந்தினர் இவ்வழி விரகிலராம் எனப்
பெருந்தடங் கண்ணவள் பேசல் மேயினாள்"

என்ற பாட்டோடு முன் நிறுத்தப்பட்டது. சன்னியாசி கேட்ட மேலுள்ள கேள்விகளுக்குச் சீதை விடை கூறுகிறாள்:

''தயரதன் தொல்குலத் தலைவன்; தம்பியோடு
உயர்குலத்து அன்னைசொல் உச்சி ஏந்தினான்;
அயர்விலது இவ்வழி உறையும் அன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமையீர்'' என்றாள்.

'பழங்குலத்து அரசராகிய தசரதரின் மூத்த மகன். உயர்குலத்துப் பிறந்தவளாகிய அன்னையின் ஆணையைச் சிரமேற்கொண்டு, தம்முடைய தம்பியோடும் சோர்வில்லாத இந்த இடத்திற்கு வந்து தங்கியிருக்கும் அவருடைய பெயரை, பெருமையுள்ள தவசியாகிய தாங்கள் தெரிந்திருப்பீர்கள்' என்றாள்.

அதைக்கேட்ட அக் கபட சன்னியாசி:

''கேட்டனென் கண்டிலென் கெழுவு கங்கைநீர்
நாட்டிடை ஒருமுறை நண்ணினேன் மலர்
வாள்தடங் கண்ணி, நீர் யாவன் மாமகள்,
காட்டிடை அரும்பகல் கழிக்கின்றீர்'' என்றான்.

(ஆம் தசரதருடைய தலைமகன் தாய்சொல் தாங்கி வனத்துக்கு வந்ததாகக்) கேள்விப்பட்டேன். ஆனால் அவரைக் கண்டதில்லை; நீர் நிறைந்த கங்கைநதி பாயும் கோசலநாட்டுக்கு ஒருமுறை சென்றிருக்கிறேன். மலர் போன்ற பெரிய வாள்விழிகளையுடைய நீங்கள் யாருடைய செல்வக் குமாரி? உங்கள் அருமையான காலத்தை இந்தக் காட்டிலே கழிக்கின்றீர்களே! — என்றான்.

அதற்குச் சீதை,

''அனகமா நெறிபடர் அடிகள் நும்மலால்
நினைவதோர் தெய்வம் வேறுஇலாத நெஞ்சினான்
சனகன் மாமகள்; பெயர் சனகி; காகுத்தன்
மனைவியான்;'' என்றாள் மறுஇல் கற்பினாள்.



தெய்வத் திருநெறியை மேற்கொண்டுள்ள தங்களைப் போன்ற தவசிகளைத் தவிர வேறு தெய்வம் இல்லையென்று நினைக்கும் நெஞ்சுடையவரான சனக மகாராஜாவின் மூத்த மகள் நான்; என் பெயர் சானகி; காகுத்தருடைய மனைவி என்று சொன்னாள், மாசில்லாத கற்புடைய சீதை. மேலும்,

அவ்வழி அனையன உரைத்த ஆயிழை
''வெவ்வழி வருந்தினிர் விளைந்த மூப்பினிர்
இவ்வழி இருவினை கடக்க எண்ணினிர்
எவ்வழி நின்றும்இங்கு எய்தினீர்'' என்றாள்.

அப்படி அவற்றைச் சொன்ன சீதை, 'வருத்தமுண்டாக்கும் காட்டுத் தடத்தில் மிகவும் முதிர்ந்த கிழப்பருவத்தில் நடந்து வந்திருக்கிறீர்கள். இந்தத் தவநெறியினால் நல்வினை தீவினை என்ற இருவினைகளையும் கடந்து வீடுபெற எண்ணியுள்ள தாங்கள் எங்கிருந்து இங்கே வந்தீர்கள்?' என்றாள்.

சீதை கேட்ட இந்தக் கேள்விக்கு நேரான விடை ஒன்றும் சொல்லாமல், இன்னான் என்று உடனே அறியமுடியாதபடி யாரோ ஒருவனைப் பற்றிப் புகழ்ந்து பேசுகின்றான் சன்னியாசி. இது மிக அழகான ஒரு கம்பசித்திரம். வால்மீகத்தில், சீதை சன்னியாசியைப் பார்த்து 'நீங்கள் யார்?' என்று கேட்டவுடனேயே அந்தச் சன்னியாசி 'நான்தான் இராவணன்' என்று தன்னுடைய பிரதாபத்தை வெகு பயங்கரமான முறையில் சொன்னதற்கும் இங்கே சன்னியாசி, இராவணனுடைய பெயரைக்கூடச் செ ல்லாமல் அவனுடைய பிரதாபத்தைச் சொல்லுவதற்கும் உள்ள வேறுபாடு கருதத்தக்கது. அப்படிச் சொல்லுவதிலும்

சீதைக்குச் சந்தேகமோ சங்கடமோ உடனே உண்டாக்கிவிடாதபடி, சிறுகச் சிறுகச் சீதைக்கு இராவணன் மீது மதிப்புண்டாக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அந்தப் பத்துப் பாடல்களையும் பார்ப்பது பாரமாகத் தோற்றாது. சன்னியாசி சொல்லுகின்றான்:

''இந்திரற்கு இந்திரன்; எழுத லாகலாச்
சுந்தரன்; நான்முகன் மரபில் தோன்றினான்;
அந்தரத் தோடும் எவ்வுலகும் ஆள்கின்றான்;
மந்திரத்து அருமறை வைகும் நாவினான்.''

இந்திரனுக்கும் இந்திரன்; (சித்திரக்காரர்களால் படத்தில்) எழுத முடியாத அழகுடையவன்; பிரமதேவனுடைய வமிசத்தில் பிறந்தவன்; அண்டங்களையும் எல்லா உலகங்களையும் ஆள்கின்றவன்; மந்திரங்களடங்கிய அரிய வேதங்களைப் பாடுவதே தொழிலாகவுள்ள நாக்குடையவன்.

''ஈசன் ஆண்டு இருந்த பேரிலங்கும் மால்வரை
ஊசிவேரொடும் பறித்தெடுக்கும் ஊற்றத்தான்;
ஆசைகள் சுமந்த பேரளவில் யானைகள்
பூசல்செய் மருப்பினைப் பொடிசெய் தோளினான்.''

பரமசிவன் வீற்றிருக்கும் பெரிய பிரகாசமுள்ள கைலாய மலையை ஆணிவேரோடு அசைத்தெடுக்கும் ஆற்றலுடையவன்; திசைகளைச் சுமந்துகொண்டிருக்கும் மிகப்பெரிய யானைகளுடன் போர்புரிந்து அவைகளுடைய தந்தங்களைப் பொடியாக்கிவிட்ட தோள்களையுடையவன்.

''நிற்பவர் கடைத்தலை நிறைந்து தேவரே;
சொற்பகும் மற்றவன் பெருமை சொல்லுங்கால்;
கற்பகம் முதலிய நிதியம் கையன;
பொற்பக மானநீர் இலங்கைப் பொன்நகர்.''



(அவனுடைய ஏவலைக் கேட்க) அவனுடைய ஆசார வாசலில் நிறைந்து நின்று கொண்டிருப்பவர்கள் தேவர்களே. அவனுடைய பெருமைகளைச் சொல்ல வார்த்தைகள் போதா. அவனுக்குத் தேவலோகத்திலுள்ள கற்பக விருட்சம், (காமதேனு, சங்கநிதி, பதுமநிதி) முதலிய செல்வங்கள் கசந்துபோன அற்ப விஷயங்கள். அவனுடைய இராஜதானி அழகுக்கே இருப்பிடமாகிச் சமுத்திரத்தால் சூழப்பட்ட இலங்கை என்னும் பொன்னாலாக்கப்பட்ட நகரம்.

''மேனகை திலோத்தமை முதல ஏழையர்
வானகம் துறந்துவந்து, அவன்தன் மாட்சியால்
ஊனமில் அடைப்பை, கால்வருடல், ஒண்செருப்பு
ஆனவைமுதல் தொழில் அவரது ஆகுமே.''

மேனகை, திலோத்தமை, (அரம்பை, ஊர்வசி) முதலிய பெண்கள், அவனுடைய மகிமையினால், தேவலோகத்தை விட்டு வந்து, ஊனமான வேலையென்று எண்ணாமல் அவனுக்கு அடைப்பை சுமப்பது, கால் பிடிப்பது, செருப்பைத் தாங்குவது முதலான வேலைகளை அவர்களே செய்கிறார்கள்.

''சந்திரன் இரவிஎன் பவர்கள்தாம் அவன்
சிந்தனை வழிநிலை திரிவர்; தேசுடை
இந்திரன் முதலிய அமரர் ஈண்டு அவன்
கந்தடு கோயிலின் காவ லாளரே.''

சந்திரனும் சூரியனும் அவனுடைய விருப்பத்தின்படி நிலை மாறுவார்கள்; இந்திரன் முதலிய தேவர்கள் இப்போது அவனுடைய நெருக்கடி மிகுந்த அரண்மனையின் காவலாளர்களே.

''பொன்நகரத்தினும், பொலம்கொள் நாகர்தம்
தொல்நக ரத்தினும், தொடர்ந்த மாநிலத்து

"எந்நக ரத்தினும் இனிய ஈண்டு அவன்
நல்நக ரத்தன நவையி லாதன."

தேவலோகத்திலும், அழகான பழைய நாகலோகத்திலும், அவற்றைத் தொடர்ந்து பூமியிலுள்ள எந்த நகரத்திலும் இருக்கின்ற இனிய பொருள்கள் எல்லாவற்றினும் அவனுடைய நல்ல நகரத்திலுள்ளவை சிறந்தவைகளாகவும் மாசற்றனவாகவும் உள்ளன.

"தாளுடை மலருளான் தந்த அந்தமில்
நாளுடை வாழ்க்கையன்; நாரி பாகத்தன்
வாளுடைத் தடக்கையன்; வாரி வைத்த வெம்
கோளுடைச் சிறையினன்; குணங்கள் மேன்மையான்."

தண்டின்மீதுள்ள தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் வரம்கொடுத்த முடிவில்லாத ஆயுள் உள்ள வாழ்க்கையான்; பார்வதியைப் பாகத்தில் கொண்டவனான பரமசிவன் கொடுத்த வாளாயுதத்தை ஏந்திய பெரிய கையையுடையவன்; வானத்திலுள்ள கிரகங்களை வாரிக் கொண்டு வந்து சிறைச் சாலைகளில் அடைத்து வைத்திருப்பவன். ஆனாலும் மேன்மையான குணங்களுடையவன்.

"வெம்மைதீர் ஒழுக்கினன்; விரிந்த கேள்வியன்;
செம்மையோன்; மன்மதன் திகைக்கும் செவ்வியன்;
எம்மையோர் அனைவரும் இறைவன் என்று எணும்
மும்மையோர் பெருமையும் முற்றும் பெற்றியான்."

கடுமையில்லாத ஒழுக்கமுள்ளவன்; விரிவான கேள்வி அறிவுடையவன்; நேர்மையுள்ளவன்; மன்மதனும் பிரமிக்கும்படியான அழகுடையவன்; எம்போன்றவர்கள் எல்லாரும் இறைவன் என்று எண்ணும்படி மும்மூர்த்திகளின் பெருமையும் அடையக்கூடிய தன்மையுள்ளவன்.



"அனைத்துல கினும் அழகமைந்த நங்கையர்
எனைப் பலர் அவன்தனது அருளின் இச்சையோர்
நினைத்துஅவர் உருகவும் உதவ நேர்கிலான்,
மனக்கினியாள் ஒரு மாதர் நாடுவான்."

எல்லா உலகத்திலும் உள்ள அழகமைந்த பெண்கள் எத்தனையோ பேர்கள் அவனை மணந்துகொண்டு அவனுடைய அன்பைப் பெற ஆசை கொண்டவர்களாய், அவனையே நினைத்து உருகுகின்றார்கள்; ஆனால் அவன் அவர்களை மணக்க விருப்பமில்லாமல் தன்னுடைய மனத்துக்கு இனியவளாகத் தகுந்த ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறான்.

"ஆண்டையான் அரசுவீற் றிருந்த அந்நகர்
வேண்டியான் சில் பகல் உறைய வேண்டினேன்;
நீண்டனென் இருந்து அவற் பிரிந்த நெஞ்சினென்
மீண்டனென் என்றனன், வினையம் உன்னுவான்."

அப்படிப்பட்ட அவன் என்னை வேண்டிக் கொண்டதற்காக, அவன் அரசு புரியும் அந்த நகரத்தில் சிலகாலம் தங்கியிருக்க விரும்பினேன். ஆனால் நெடுநாள் அவனுடன் இருந்துவிட்டு இப்போது அவனைப் பிரிந்த வருத்தத்தோடு இங்கே திரும்பிவந்தேன் – என்று வினையமாகச் சொன்னான்.

இராவணன் என்ற பெயரைச் சொல்லாவிட்டாலும், அந்தச் சன்னியாசி, யாரைப் புகழ்ந்து பேசினான் என்பதை எளிதில் அறிந்துகொண்ட சீதை, அந்தத் துறவியின்மீது மிகவும் இரக்கம்கொண்டு கேட்கின்றாள்:

"வேதமும் வேதியர் அருளும் வெஃகலாச்
சேதனை மன்னுயிர் தின்னும் தீவினைப்
பாதக அரக்கர்தம் பதியின் வைகுதற்கு
ஏதுஎன்? உடலமும் மிகையென்று எண்ணுவீர்."

முனிவரே, உடலைச் சுமப்பதே பாரம் எனக் கருதும் பற்றற்ற துறவியாகிய தாங்கள், வேதத்தையும் வேதியர்களுடைய அருள் நெறியையும் விரும்பாதவர்களாய் உயிர்களை வெட்டி மடித்து உண்ணும் தீவினைகளைச் செய்யும் பாதகர்களாகிய அரக்கர்களுடைய ஊரில் தங்கியிருக்க என்ன காரணம்?

''வனத்திடை மாதவர் மருங்கு வைகலிர்
புனத்திரு நாட்டிடைப் புனிதர் ஊர்புக
நினைத்திலிர் அறநெறி நினைக்கி லாதவர்
இனத்திடை வைகினிர் என் செய்தீர்!'' என்றாள்.

தவசியாகிய தாங்கள் வனத்திலுள்ள பெரிய தவசிகளுடன் தங்காமல், வயல்கள் உள்ள அழகான நாட்டில் பரிசுத்தமான நல்லவர்கள் வசிக்கும் ஊர்களிலாவது புகுந்து தங்கியிருக்க நினைக்காமல், அறநெறியை மனத்தாலும் நினைக்காத இனத்தவராகிய அரக்கருடன் தங்கியிருந்தீர்களே! எவ்வளவு தவறான காரியத்தைச் செய்துவிட்டீர்கள்! — என்றாள்.

அதைக்கேட்ட கபட சன்னியாசி சொல்லுகிறான்:

''மங்கை அஃதுரைத்தல் கேட்ட வரம்பிலான், மறுவில் தீர்ந்தார்
வெங்கண் வாளரக்கர் என்ன வெருவலம்; மெய்மை நோக்கின்,
திங்கள் வாள் முகத்தினாய், அத்தேவரின் தீயரல்லர்;
எங்கள் போலியர்க்கு நல்லார் நிருதரே போலும்'' என்றான்.

(சீதை) மங்கை அப்படிச் சொன்னதைக் கேட்ட அந்த ஒழுங்கற்றவன், 'குற்றமற்ற துறவிகளாகிய நாங்கள் அரக்கர்களைக் கொடியவர்கள் என்று அஞ்சுவதில்லை. உண்மையில் பார்க்கப்போனால், சந்திரனைப்போல் பிரகாசிக்கும் முகத்தையுடையவளே, அரக்கர்கள் அந்தத் தேவர்களைக் காட்டிலும் தீயவர்கள் அல்லர்; எங்களைப் போன்றவர்களுக்கு நல்லவர்கள் அரக்கர்களேதாம்,' என்றான்.



இப்படி அந்தக் கிழட்டுப் பிராமண சன்னியாசி சொன்னதைக்கேட்ட சீதைக்கு அந்தச் சன்னியாசியின் மீது சந்தேகம் உதித்துவிட்டது.

''சேயிழை இன்ன சொல்லும்; ''தீயவர்ச் சேர்தல் செய்தார்
தூயவர் அல்லர்; சொல்வர் தொல்நெறித் தொடர்ந்தோர்' என்றாள்;
மாயவல் அரக்கர் வல்லர் வேண்டுரு வரிக்க என்பது
ஆயவள் அறிதல் தேற்றாள்; ஆகலின் அயல் ஒன்று எண்ணாள்.''

சீதை இதை மட்டும் சொன்னாள்: தீயவர்களுடன் சேர்ந்திருப்பவர்கள் தூயவர்களாக இருக்கமாட்டார்கள் என்பது உலக அனுபவமுள்ள மேலோர்கள் வாக்கு — என்றாள். (அதைச்சொல்லி விட்டு) அரக்கர்கள் வேண்டும்போது வேண்டிய உருவம் கொள்ள வல்லவர்கள் என்பதை அவள் அறியாதவளானதால் (அந்தத் துறவி மாறுவேடத்தில் வந்துள்ள அரக்கன் என்பதை எண்ணாமல் அவன் தீயவர்களாகிய அரக்கருடைய சகவாசம் உள்ளவனாக இருப்பதால் அவன் தூயவனாக இருக்கமுடியாது என்ற சந்தேகம் உண்டாகி) அதற்கு மேல் அவனுடன் ஒன்றும் பேசாமல் சும்மாவிருந்தாள்.

அதைக்கண்ட சன்னியாசி சீதை தன்னைச் சந்தேகிக்கிறாள் என்பதை உணர்ந்தான்.

''அயிர்த்தனள் ஆகும் என்றுஓர் ஐயறவுஅகத்துக் கொண்டான்;
பெயர்த்து அது துடைக்க எண்ணிப் பிறிதுற்ப் பேசலுற்றான்;
மயக்கறும் உலகம் மூன்றின் வாழ்பவர்க்கு அனையவல்லோர்
இயற்கையில் திரியின் அல்லால் இயற்றலாம் நெறிஎன் என்றான்.''

சீதை தன்னைச் சந்தேகித்துவிட்டாள் என்ற ஐயறவு சன்னியாசியின் மனத்தில் உண்டாயிற்று. உடனே அந்தச்

சந்தேகத்தை நீக்கிவிடவேண்டுமென்று எண்ணிப் பேச்சை மாற்றி வேறுவிதமாகப் பேசலுற்றான்: 'உண்மையில் இந்த மூன்று உலகத்திலும் வாழ்கின்றவர்களுக்கு அரக்கரைப் போன்ற வல்லவர்கள் தீங்கு செய்யாதபடி அவர்கள் சுபாவத்தை மாற்றிக்கொண்டால் நல்லதுதான். ஆனால் என்ன செய்வது? அவர்களுடைய சுபாவம் அப்படியிருக்கிறது. சுபாவம் மாறினால் அல்லாமல் நாம் செய்யக்கூடியது என்ன இருக்கிறது?' என்றான்.

*"திறம்தெரி வஞ்சன் அச்சொல் செப்பலும் செப்பம் மிக்காள்*
*அறம்தரு வள்ளல் ஈண்டு இங்கு அருந்தவம் முயலும் நாளுள்*
*மறம்தலை திரிந்த வாழ்க்கை அரக்கர்தம் வருத்தத் தோடும்*
*இறந்தனர் முடிவர் பின்னர் இடரிலை உலகம் என்றாள்."*

திறமை மிகுந்த வஞ்சகனாகிய சன்னியாசி அந்த வார்த்தைகளைச் சொன்னவுடன், நீதியறிந்தவளாகிய சீதை, தர்மத்தை நிலைநாட்ட வந்துள்ள வள்ளல் (என் கணவர்) இப்போது இங்கே அவருடைய வனவாச விரதம் முடிவதற்குள்ளாகவே, பாவகாரியங்களிலேயே தலையெடுப்புள்ளவராக அலைந்து வாழும் அரக்கர்கள் பூண்டோடு இறந்து ஒழிந்துபோவார்கள். அதன் பிறகு உலகத்துக்குத் துன்பமே இருக்காது என்றாள். அதைக்கேட்ட சன்னியாசி,

*மானவள் உரைத்த லோடும் "மானுடர் அரக்கர் தம்மை*
*மீன்என மிளிரும் கண்ணாய், வேரற வெல்வ ரென்னின்,*
*யானையின் இனத்தை யெல்லாம் இளமுயல் கொல்லும் பின்னும்*
*கூன்உகிர் மடங்கல் ஏற்றைக் குருளைமான் கொல்லும்" என்றான்.*

பெருமையுள்ள சீதை அப்படிச் சொன்னவுடன் அந்தச் சன்னியாசி, 'மீன்போலப் புரண்டு ஒளிவீசும் கண்களையுடையவளே, மானிடர்கள் அரக்கரைப் பூண்டோடு அழிப்பார்கள் என்பது, யானையின் வருக்கம் முழுவதையும் ஒரு முயல் குட்டி அழித்துவிடும் என்பது போலவும், கூரிய வளைந்த நகங்களையுடைய ஆண் சிங்கத்தை ஒரு மான்குட்டி கொன்றுவிடும் என்பது போலவும் இருக்கிறது' என்றான்.



அதற்குச் சீதை,

*"மின்திரண் டனைய பங்கி விராதனும் வெகுளி பொங்கக்*
*கன்றிய மனத்து வென்றிக் கரன்முதல் கணக்கி லோரும்*
*பொன்றிய பூசல் ஒன்றும் கேட்டிலிர் போலும்" என்றாள்;*
*அன்றவர்க்கு அடுத்ததுஉன்னி மழைக்கணீர் அருவி சோர்வாள்."*

(முனிவரே!) மின்னல் கொடிகள் ஒருங்கு சேர்ந்தது போன்ற மயிர் செறிந்த விராதனும் கோபம் பொங்கி மனம் குமுறிக்கொண்டு வந்த வெற்றிவீரனாகிய கரன், தூஷணன் முதலிய கணக்கில்லாத அரக்கர்களும் (என் கணவருடனும் இளையவருடனும்) போர் புரிந்து மடிந்துபோன செய்திகள் ஒன்றும் உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது' என்று சொல்லிவிட்டு அந்தக் கரன் முதலானவர்களுக்கு நேர்ந்த கதியை நினைத்துக் கண்ணீர்விட்டு அழுதாள்.

*"வாளரி வள்ளல் தன்னால் இலங்கைமா நிருத ரெல்லாம்*
*கேளொடு மறியு மாறும் வானவர் கிளரு மாறும்*
*நாளையே காண்டிர் அன்றே நவைஇலிர் உணர்கி வீரோ*
*மீளரும் தருமம் தன்னை வெல்லுமோ பாவம்?" என்றாள்.*

ஆண் சிங்கம் போன்ற வள்ளல் (என் நாயகன்) தன்னால் இலங்கையிலுள்ள பெரும் அரக்கர்களெல்லாம் அவர்களுடைய சுற்றத்தோடும் இறக்கப்போவதையும் அதனால் தேவர்கள் (துன்பம் தீர்ந்து) ஆரவாரம் செய்து ஆனந்தப்படுவதையும் நாளைக்கே பார்க்கப்போகிறீர்; குற்றமற்ற துறவியாகிய உங்களுக்குத் தெரியாததா? அழிக்க முடியாத தருமத்தைப் பாவம் வெல்லுமா? என்றாள்.

இலங்கையிலுள்ள அரக்கர்கள் எல்லாரும் நாளைக்கே அழியப்போகிறார்கள் என்று சொன்னதைக் கேட்டபின் சன்னியாசிக்குப் பொறுக்க முடியவில்லை. அதனால்,

*தேனிடை அமுத ளாய அன்னமென் சிலசொல் மாலை*
*தானுடைச் செவிக ளூடு தவழுறத் தளிர்த்து வீங்கும்*
*ஊனுடை உடம்பி னானும் உறுகெழு மானம் ஊன்ற*
*மானுடர் வலியர் என்ற மாற்றத்தால் சீற்றம் கொண்டான்.*

தேன் கலந்த அமுதம் போன்றவள் சீதை யென்றாலும் அவள் சொன்ன சில சொற்றொடர்கள் தன்னுடைய காதுகளில் நுழைந்ததும், சுறுக்கென்று குத்திய உணர்ச்சியால் தழைத்துப் பெருகிய தசை கொண்ட உடம்பினன் ஆகிய அந்தக் கபட சன்னியாசி, மானம் வந்து அழுத்தத் தன்னைவிட மானிடர் வல்லமையுள்ளவர்கள் என்று சொன்ன சொற்களால் கோபம் கொண்டான்.

*சீறினன் உரைசெய்வான் "அச்சிலைவலி புல்லியோர்கட்கு*
*ஈறு ஒரு மனிதன் செய்தான் என்றெடுத்து இயம்பினாயேல்*
*தேறுதி நாளையே இவ்விருபது திண்டோள் வாடை*
*வீறிய பொழுது பூளை வீயென வீவர் அன்றே."*

கோபித்துக்கொண்ட அவன் சொல்லலுற்றான்:–

வில்லாண்மையில் மிகவும் குறைந்தவர்களாகிய அந்தக் கரன் தூஷணன் முதலிய அற்ப பலமுள்ளவர்களை ஒரு மனிதன் கொன்றுவிட்டான் என்று சொல்லுவாயானால், தெரிந்துகொள். நாளைக்கே அந்த இராவணனுடைய இருபது வலிய தோள்களும் வீறுகொண்டு அசைகின்றபோது அதனால் வீசப்படும் காற்றின் வேகத்தினாலேயே அந்த மனிதர்கள் பூளைப்பூ உதிர்வதுபோல் விழுந்து மடிவார்கள்.

அந்த இராவணனை நீ என்னவென்று எண்ணிவிட்டாய்?



*"மேருவைப் பறிக்க வேண்டின், விண்ணினை இடிக்க வேண்டின்,*
*நீரினைக் கலக்க வேண்டின், நெருப்பினை அவிக்க வேண்டின்,*
*பாரினை எடுக்க வேண்டின், பலவினை சிலசொல், ஏழாய்!*
*யாரெனக் கருதிச் சொன்னாய், இராவணற்கு அரிதுஎன் என்றான்."*

மேருமலையை வேரோடு பறித்தெடுக்க வேண்டுமானாலும், ஆகாயத்தை இடித்துவிட வேண்டுமானாலும், சமுத்திரத்தைக் கலக்க வேண்டுமென்றாலும், வடவாக்கினியை அவித்துவிட வேண்டுமானாலும், உலகத்தைத் தூக்க வேண்டுமானாலும், இப்படிப்பட்ட பல வேலைகளில் சிலவற்றைச் சொன்னேன். இவைகளெல்லாம் இராவணனால் செய்யமுடியும். பெண்ணே, இராவணனை நீ யாரென்று எண்ணிவிட்டாய். அவனுக்கு முடியாத காரியம் என்ன இருக்கிறது?

அதற்குச் சீதை சொல்லுகிறாள்:

*"அரண்தரும் திரள்தோள் சால உளதெனின் ஆற்றல் உண்டோ!*
*கரண்டநீர் இலங்கை வேந்தைச் சிறைவைத்த கழற்கால் வீரன்*
*திரண்டதோள் வனத்தை யெல்லாம் சிறியதோர் பருவம் தன்னில்*
*இரண்டுதோள் ஒருவன் அன்றோ மழுவினால் எறிந்தான்"* என்றாள்.

பாதுகாப்பளிக்கக்கூடிய திரண்ட கைகள் அதிகமாக இருந்ததனாலேயே ஆற்றல் உண்டாகிவிடுமா? நீர்ப்பறவைகள் மிகுந்த கடலால் சூழப்பட்ட இலங்கை வேந்தனாகிய இராவணனைச் சிறையில் அடைத்து வைத்த வீரக்கழல் பூண்ட கால்களையுடைய கார்த்தவீரியனுடைய திரண்ட ஆயிரம் கைகளடங்கிய கட்டைச் சிறு பிராயத்தில் இரண்டே கைகளுள்ளவனான ஒரு பரசுராமனல்லவா மழுவினால் வெட்டி வென்றான்? என்றாள்.

இதைக் கேட்டவுடன் கபட சன்னியாசிக்கு அடக்க முடியாத கோபம் வந்து,

''என்றிவள் உரைத்தலோடும் எரிந்தன நயனம்; திக்கில்
சென்றன திரள்தோள்; வானம் தீண்டின மகுடம்; திண்கை
ஒன்றொடொன்று இடித்த; மேகத்து உருவம்என எயிற்றின் ஒளி
மென்றன; வெகுளி பொங்க விட்டது மாய வேடம்''

என்று இந்த சீதை சொன்னவுடனே அந்தக் கபட சன்னியாசியின் கண்கள் நெருப்புப்போல் எரிந்தன; திரண்ட இருபது கைகளும் திசைகளில் விரிந்தன; பத்து மகுடங்கள் ஆகாயத்தில் முட்டின; வலிமையுள்ள உள்ளங்கைகள் ஒன்றோடு ஒன்று தட்டின; மேகம் இடியிடிப்பதுபோல் பத்து வாய்களிலும் உள்ள பல் வரிசைகள் மென்றன; கோபம் பொங்க, பொய் வேடமாகிய கிழட்டுச் சன்னியாசி வடிவம் போய்விட்டது. (இராவணன் தன்னுடைய உண்மை உருவத்தோடு காணப்பட்டான்).

அப்படிச் சன்னியாசி உருவம் மாறி, வேறு வடிவம் வளர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து இன்னதென்று விளங்காதவளாய்ச் சீதை திகைத்துக் கொண்டிருக்கும்போது, உட்கார்ந்து கொண்டிருந்த சன்னியாசி தன் புதுவடிவத்தோடு திடீரென்று எழுந்தான்:

இருவினை துறந்த மேலோர் அல்லன்கொல் இவன்என் றெண்ணி
அரிவையும் ஐயம் எய்தா ஆர் இவன்தான் என்று ஒன்றும்
தெரிவரும் நிலைய ளாகத் தீவிடத்து அரவம் தானே
உருகெழு சீற்றம் பொங்கிப் பணம் விரித்து உயர்ந்தது ஒத்தான்.

இவன் இரு வினைகளையும் துறந்த மேலோரான தவசியல்லன் போலிருக்கிறதே என்று எண்ணி, சீதையும் சந்தேகித்து ஒன்றும் விளங்காமல் திகைத்துக் கொண்டிருக்கும்போது, கொடிய விஷமுள்ள நாகப்பாம்பு மிகுந்த வேகத்தோடு தனது படத்தை விரித்துச் சீறிக்கொண்டு கிளம்புவதைப்போல் எழுந்து நின்றான் இராவணன்.



ஆற்றவெம் துயரத்து அன்னாள் ஆண்டு உற்ற அலக்கண் நோக்கின்
ஏற்றம் என் நினைக்க லாகும்? எதிர் எடுத்து இயம்பலாகும்?
மாற்றம்ஒன் றில்லை; செய்யும் வினையில்லை; வரிக்க லாகாக்
கூற்றம் வந்துஉற்ற காலத்து உயிரெனக் குலைவு கொண்டாள்.

மிகவும் கொடிய துயரம் அடைந்த சீதை அப்போது அனுபவித்த துன்பத்தை அளவிட்டால், அதைவிட அதிக துன்பம் உள்ளதாக எதை நினைக்கமுடியும்? அதற்கு நிகரான துன்பம் உள்ளதாக எதை உவமானம் சொல்லமுடியும்? அவளால் ஒரு பேச்சும் பேச முடியவில்லை; விவரிக்க முடியாதபடி, எமன் வந்துவிட்ட காலத்தில் உயிரானது எப்படிக் குலைந்துபோகுமோ அப்படிக் குலைந்துபோனாள்.

அப்படிக் குலைந்துவிட்டவளைப் பார்த்து இராவணன்:

''விண்ணவர் ஏவல்செய்ய வென்றஎன் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழும் மானுடர் வலியர் என்றாய்
பெண்ணெனப் பிழைத்தாய் அன்றேல் உன்னை யான் பிசைந்து தின்ன
எண்ணுவென் எண்ணின் பின்னை என்னுயிர் இழப்பேன்'' என்றான்.

தேவர்களெல்லாம் ஏவல் கேட்கும்படி வெற்றிகொண்டுள்ள என்னுடைய வீரத்தை அறியாமல் மண்ணுக்குள் புழுவைப்போல் வாழ்க்கை நடத்துகின்ற மானிடர் என்னினும் வல்லமையுள்ளவர்கள் என்று சொன்னாய். நீ பெண்ணானதால் தப்பித்தாய். இல்லாவிட்டால் உன்னை நான் பிசைந்து தின்றுவிட எண்ணியிருப்பேன். எண்ணியிருந்தால் நீ இறந்த பின்பு உன்னைப்பற்றிய ஏக்கத்தால் நானும் என் உயிரை இழக்கவேண்டியிருக்கும் — என்றான்.

இதைச் சொன்ன பின்பு உடனே அவளைச் சமாதானப்படுத்த,

"குலைவுறல் அன்னம் முன்னம் யாரையும் கும்பிடா என்
தலைமிசை மகுடம் என்னத் தனித்தனி இனிது தாங்கி
அலகில்பூண் அரம்பை மாதர் அடிமுறை ஏவல் செய்ய
உலகம் ஈரேழும் ஆளும் செல்வத்துள் உறைதி" என்றான்.

அன்னமே, பயப்படாதே; இதற்கு முன்னால் யாரையும் கும்பிட வணங்காத என்னுடைய தலைகளில் மகுடம்போல் என் பத்துத் தலைகளிலும் தனித்தனியே உன்னைத் தாங்கி, கணக்கற்ற ஆபரணங்களை யணிந்த அரம்பை முதலிய தேவப்பெண்கள் உன் பாதங்களை வணங்கி உன் ஏவல்களைச் செய்ய, ஈரேழு பதினான்கு உலகங்களையும் ஆளக்கூடிய சம்பத்தை அடைவாய் என்றான்.

அதைக்கேட்ட சீதை,

செவிகளைத் தளிர்க்கை யாலே சிக்குறச் சேமஞ் செய்தாள்;
"கவினும் வெம் சிலைக்கை வென்றிக் காகுத்தன் கற்பி னேனை
புவியிடை ஒழுக்க நோக்காப் பொங்கெரிப் புனிதர் ஈயும்
அவியை நாய் வேட்ட தென்ன என்சொனாய் அரக்க?" என்னா.

மாந்தளிர் போன்ற தன் கைகளால் காதுகளைக் கெட்டியாக மூடிக்கொண்டாள்; 'அழகான பலம் மிகுந்த வில்லைக் கையிலுள்ள வெற்றி வீரராகும் காகுத்தன் மனைவியான என்னை, உலகத்தில் மக்களிடை ஒழுக்கம் உயரவேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு புனிதரான அந்தணர்கள் யாகம் செய்து பொங்குகின்ற நெருப்புள்ள வேள்விக்குழியில் இடத்தகுந்த அவிப்பாகத்தை ஒரு நாய் இச்சிப்பது போலக் கொடியவனே! என்ன வார்த்தை சொன்னாய்? – என்று, மேலும்,

"புல்நுனி நீரின் நொய்தாப் போதலே புரிந்து நின்ற
இன்உயிர் இழத்தல் அஞ்சி இற்பிறப்பு அழிதல் உண்டோ?



மின் உயிர்த்து உருமின் சீறும் வெங்கணை விரவா முன்னம்
உன் உயிர்க்கு உறுதி நோக்கின் ஒளித்தியால் ஓடி" என்றாள்.

புல்லின் நுனியில் தங்கிய பனித்துளி நீரைப்போல வெகு சீக்கிரத்தில் ஓடிப்போகின்ற இனிய உயிரை இழந்து விடுவதற்குப் பயந்து, நற்குடியிற் பிறந்தவர்கள் கற்பை இழந்துவிடுவதும் உண்டோ! நீ உயிர் தப்பிப் பிழைக்கவேண்டுமானால் மின்னலைக் கக்கிக்கொண்டு இடி முழக்கத்துடன் பாயக்கூடிய என் கணவருடைய பாணங்கள் உன்னைத் தொடர்வதற்கு முன்னால் ஓடி ஒளிந்துகொள் என்றாள்.

அதற்கு இராவணன்,

"என்று அவள் உரைக்க நின்ற இரக்கமில் அரக்கன் எய்த
உன்துணைக் கணவன் அம்பு அவ்வுயர்திசை சுமந்த ஓங்கல்
வன்திறல் மருப்பின்ஆற்றல் மடித்தஎன் மார்பின் வந்தால்
குன்றிடைத் தொடுத்துவிட்ட பூங்கணை கொல்ல தென்றான்."

என்று அவள் சொல்ல, அங்குநின்ற இரக்கமில்லாத அரக்கன், 'உன் கணவன் என்மீது விடும் பாணங்கள், அந்தத் திக்குகளைச் சுமந்துகொண்டிருக்கும் யானைகளின் வலிமைமிக்க தந்தங்களைப் பொடிப் பொடியாக்கிவிட்ட என்னுடைய மார்பிற்பட்டால், அது மலையின்மீது விழுகின்ற பூக்களைப் போலத்தானிருக்கும். (என்னை ஒன்றும் செய்துவிட முடியாது) என்று சொல்லிவிட்டு மறுபடியும் இனிய வார்த்தைகள் சொல்லிச் சீதையை வணங்குகிறான்.

"அணங்கினுக்கு அணங்கனாய்நின் ஆசைநோய் அகத்துப் பொங்க
உணங்கிய உடம்பி னேனுக்கு உயிரினை உதவி உம்பர்
கணம் குழை மகளிர்க் கெல்லாம் பெரும்பதம் கைக்கொ[illegible]" என்னா
வணங்கினன் உலகம் தாங்கும் மலையினும் வலிய [illegible]ளான்.

'அழகுக்கே அழகு தரும் பெண்ணே, உன்மீது உதித்த காமநோய் மனத்தில் பொங்குவதால் மெலிந்துபோன

உடம்பினன் ஆகிய எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து, தெய்வலோகத்துப் பெண்களுக்கெல்லாம் மேலான பதவியை ஏற்றுக்கொள்' என்று, உலகத்தைத் தாங்குகின்ற மந்தரமலையைக் காட்டிலும் வலிமையுள்ள தோள்களையுடைய இராவணன் சீதையை வணங்கினான்.

அப்படி,

"தரைவாய் அவன் வந்து அடிதாழுதலும்
கறைவாள் பட ஆவிகலங் கினள்போல்
இறைவா இளையோய் எனஏங் கினளால்
பொறைதான் உயிர்போ வதுபோல் புகல்வாள்."

இராவணன் பூமியில் விழுந்து அவளுடைய பாதங்களை வணங்கினவுடன், இரத்தக்கறை படிந்த வாளால் வெட்டப்பட்டு உயிர் துடிக்கும் உடலைப்போல் 'நாதா! இளையவரே!' என்று கூவி ஏங்கி, உடலிலிருந்து உயிர்போவதுபோல் புலம்பினாள்.

இனிமேலும் தாமதித்தால் சீதை கூவியழைத்த இராமரும் இளையவனும் வந்துவிடக்கூடும் என்று எண்ணினவன்போல, இராவணன் சீதையைப் பர்ணசாலையோடு பெயர்த்துத் தூக்கினான்.

ஆண்டு ஆயிடை தீயவன் ஆயிழையைத்
தீண்டால் எனும் மேலுரை சிந்தை செயாத்
தூண்தான் எனலாம் உயர்தோள் வலியால்
கீண்டான் நிலம்யோ சனை கீழொடு மேல்.

அப்போது அந்தத் தீயவன், (இச்சை கொள்ளாத பெண்களைத்) தீண்டக்கூடாது என்று தனக்கு முன்னே இடப்பட்ட சாபத்தை எண்ணித் தூண்கள் தாம் என்னத்தக்க தன்னுடைய தோள்களின் பலத்தால், ஒரு யோசனை



தூரத்துக்குப் பூமியை (பர்ணசாலையோடு) அடியோடு பெயர்த்து மேலே தூக்கினான்.

கொண்டான் உயர் தேர் மிசை; கோல்வளையாள்
கண்டாள் தனதுஆ ருயிர்கண் டிலளால்
மண்தான்உறு மின்னின் மயங்கினளால்
விண்தான் வழியாய் எழுவான் விரைவான்.

பெயர்த்தெடுத்த பர்ணசாலையோடு சீதையைத் தேரினுள் வைத்தான்; அதைக்கண்டாள் சீதை. அதன் பிறகு அவள் தனது அருமையான உயிரையும் உணர முடியவில்லை; மண்ணில் விழுந்த மின்னற்கொடிபோல் மயக்கமுற்றாள்; இராவணன் விமானத்தை ஆகாய மார்க்கமாகக் கிளப்பி வேகமாகச் செலுத்தினான்.

இப்படியாகக் கம்பர், இராவணன் சீதையை அபகரித்த காட்சியைக் காட்டுகிறார். முன்னால் வால்மீகி முனிவர் காட்டிய காட்சிகளையும் கண்டோம். இவ்விரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் என்னவென்பது எல்லாருக்கும் எளிதில் விளங்கும்.

## 8. பெண்மைக்குப் பெருமை

வால்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தில், அடிக்கடி பெண்களை மிகவும் இழிவுபடுத்திப் பேசப்படுகிறது. இதற்கு ஓர் உதாரணம், மாரீசன் அலறிய குரலைக்கேட்டு இலட்சுமணனை உடனே இராமரைப் பார்க்கப் போகும்படி, சீதை அவனையும் பரதனையும் நிந்தித்துப் பேசினதைக்கேட்டு வருத்தமுற்ற இலட்சுமணன்:

''இது இவ்வுலகத்திலுள்ள மாதர்கள் இயல்பு; அவர்கள் பெரும்பாலும் தருமத்தை அறியாதவர்களும், சபலம் உள்ளவர்களும், கொடியவர்களும், சினேகத்தைக் கெடுப்பவர்களாகவும் இருக்கிறார்கள்'' (45ஆம் சருக்கம்) என்று சொல்லுகிறான்.

அத்துடன் வால்மீகியின் வாக்குப்படி கௌதமருடைய மனைவியாகிய அகலிகையும் வாலியின் மனைவியாகிய தாரையும் கற்பில்லாதவர்களாகச் சொல்லப்படுகின்றனர். குறிப்பாகத் தாரையைப் பற்றிய கதை வால்மீகி முனிவரின் வாக்குப்படியே முன்னுக்குப் பின் முரண்பட்டதாகி எந்தக் குற்றத்துக்காக வாலி கொல்லப்பட்டானோ அதே குற்றத்தைச் சுக்கிரீவன் செய்ததாகச் சொல்லப்படுகிறது. அதனால் சுக்கிரீவனுக்கு அபயம் கொடுத்து இராமர் வாலியைக் கொன்ற நியாயம் அழிந்து போகிறது. இப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் கம்பர், மிகவும் பாராட்டத்தக்க மாறுதல்களைப் புகுத்திப் பெண்மைக்குப் பெருமை செய்திருக்கிறார். அந்த மாறுதல்களைச் சிறிது பார்ப்போம்.

அகலிகை: வால்மீகி இராமாயணத்தில் அகலிகை, தன் கணவர் கௌதமரைப்போலவே வேடந்தரித்து வந்த இந்திரனை, அவன் இந்திரன் என்று தெரிந்தே மிக்க விருப்பத்தோடு அவனுடன் காம இன்பம் அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. அத்துடன் அந்தப் பகுதிக்கான கதை மிகவும் கொச்சையான சிற்றின்பச் சித்திரமாக இருக்கிறது.

வால்மீகி இராமாயணத்தின் தமிழ்மொழி பெயர்ப்பில் இந்தப் பகுதி விடுபட்டிருக்கிறது. வடமொழி இராமாயணத்திலுள்ள மற்ற எல்லாப் பகுதிகளையும் வார்த்தைக்கு வார்த்தை சரியாகத் தமிழில் மொழி பெயர்த்துதவிய ஸ்ரீ பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் இந்தப் பகுதியையும் இதைப்போன்ற வேறு சில



சிருங்காரப்பகுதிகளையும் மட்டும் மொழி பெயர்க்காமலேயே விட்டுவிட்டுக் கதையை மட்டும் சுருக்கிச் சொல்லி மொழி பெயர்த்திருக்கிறார். அவை விரும்பத்தகாத விஷயங்களென்று, வேண்டுமென்றே விட்டுவிட்டதாகத் தமது முன்னுரையிற் கூறுகின்றார். மூலத்தில் அகலிகை இந்திரன் என்று மனமறிந்தே குற்றம் புரிந்ததாக இருக்கிறது.

ஆனால் கம்பர், கௌதமர் வடிவுடன் வந்து தன்னுடன் இன்பம் அனுபவித்தவன் உண்மையான கௌதமர் அல்லர் என்பதை அகலிகை முன்னால் அறிந்தவளல்லளென்றும் இடையில் உணர்ந்து வருந்திப் பின் வாங்கினாள் என்றும் சொல்கின்றார். கம்பர் காவியத்திலுள்ள அந்தப் பகுதியைப் பார்ப்போம்:—

விசுவாமித்திரருடைய வேள்வியைக் காத்தபின், இராமரும் தம்பியும் விசுவாமித்திரரின் விருப்பத்தின்படி அவருடன் மிதிலைக்குப் போகிறபோது, இராமனுடைய பாததூளி வழியில் கிடந்த ஒரு கல்லின்மீது பட்டவுடனே அந்தக் கல் ஒரு பெண்ணாக மாறிவிட்டது. அதைக்கண்ட இராமன் அதிசயமுற்று அந்தப் பெண் யாரென்று முனிவரைக் கேட்கின்றான். அப்போது விசுவாமித்திரர் சொல்லுகின்றார்.

''மாயிரு விசும்பிற் கங்கை மண்மிசை இழித்தோன் மைந்த
மேயின உவகை யோடும் மின்என ஒதுங்கி நின்றாள்
தீவினை நயந்து செய்த தேவர்கோன் தனக்குச் செங்கண்
ஆயிரம் அளித்தோன் பன்னி, அகலிகை ஆகும்'' என்றான்.

மிகப்பெரிய ஆகாய கங்கையைப் பூமியில் இறங்கும்படிச் செய்த பகீரதனுடைய வமிசத்தில் வந்த இராமா! மிக்க மகிழ்ச்சியுற்றவளாய் மின்னற்கொடிபோல் ஒதுங்கி நிற்கும் இந்தப் பெண்மணி, வஞ்சனையாகத் தீய

காரியத்தைச் செய்த தேவேந்திரனுக்கு உடம்பெல்லாம் ஆயிரம் கண்கள் உண்டாகும்படிச் சபித்த கௌதம முனிவருடைய பத்தினி; இவள் பெயர் அகலிகை என்று விசுவாமித்திரர் சொல்ல,

*பொன்னையேய் சடையான்கூறக் கேட்டலும் பூமி கேள்வன்*
*''என்னையே! என்னையே! இவ் வுலகியல் இருந்த வண்ணம்*
*முன்னைஊழ் வினையி னாலோ நடுவொன்று முடிந்த துண்டோ*
*அன்னையே அனையாட்கு இவ்வாறு அடுத்தவாறு அருளுக''* என்றான்.

பொன்னையொத்த சடைமுடியுடைய முனிவர் இப்படிச் சொல்ல இராமன், என்ன விந்தை! என்ன விந்தை! இந்த உலகத்தின் இயல்பு இப்படிப்பட்டதா! இது முன் செய்த கர்மங்களால் ஏற்பட்டதா? இப்பிறப்பின் இடையில் உண்டானதா? என்னுடைய அன்னையே போன்ற இவருக்கு இப்படி நேரிட்ட விதத்தைச் சொல்லியருளுங்கள் – என்றான்.

*அவ்வுரை இராமன்கூற அறிஞனும் அவனை நோக்கிச்*
*''செவ்வியோய் கேட்டி, மேல்நாள் செறிசுடர்க் குலிசத் தண்ணல்*
*அவ்வியம் அவித்த சிந்தை முனிவனை அற்றம் நோக்கி*
*நவ்விபோல் விழியி னாள்தன் வனமுலை நணுக லுற்றான்.''*

அப்படி இராமன் சொல்ல, அறிவாளியாகிய விசுவாமித்திரர் அவனைப் பார்த்து, 'நற்குணமுடையவனே! சொல்லுகிறேன் கேள்; முன்னொரு நாள் சுடரொளி வீசுகின்ற வச்சிராயுத பாணியான இந்திரன், பொறாமைக்குணத்தை ஒழித்தவராகிய கௌதம முனிவரை அவருடைய மனையில் இல்லாதிருக்கும்படி சூழ்ச்சி செய்துவிட்டு, மான் போன்ற விழிகளையுடைய இப்பெண்மணியின் அழகான தனங்களை நெருங்கலானான்.

*''தையலாள் நயன வேலும் மன்மதன் சரமும் பாய*
*உய்யலாம் உறுதி நாடி உழல்பவன் ஒருநாள் உற்ற*



*மையலால் அறிவு நீங்கி மாமுனிக்கு அற்றம் செய்து*
*பொய்யிலா உள்ளத் தான்தன் உருவமே கொண்டு புக்கான்.''*

அகலிகையின் வேல் போன்ற விழிகளின் கூர்மையும் மன்மதனுடைய பாணமும் பாய்ந்து காமவேதனை மிகுந்துவிட்ட இந்திரன், அந்த வேதனையைத் தீர்த்துக்கொள்ள வழிதேடிக் கொண்டிருந்து, ஒரு நாள் அவனுக்கு உண்டான அடக்கமுடியாத காம ஆசையினால் அறிவு கெட்டவனாகி, கௌதம முனிவர் அவருடைய ஆச்சிரமத்தைவிட்டு வெளியே போகும்படியான ஒரு தந்திரம் செய்து, அவர் இல்லாத சமயத்தில் பொய்யில்லாத மனமுடையவரான அவரைப்போலவே வடிவந்தாங்கி, (வெளியே போனவர் திரும்பி வந்துட்டதுபோல்) அகலிகை தனித்திருந்த ஆசிரமத்துக்குள் புகுந்தான்.

*''புக்கு, அவளோடும் காமப் புதுமண மதுவின் தேறல்*
*ஒக்கஉண்டு இருத்தலோடும் உணர்ந்தனள்; உணர்ந்த பின்பு*
*தக்கதன்று என்னஓராத் தாழ்ந்தனள்; இருப்பத் தாழா*
*முக்கணான் அனையஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்.''*

(புகுந்து அகலியைக் கலவிக்கு அழைத்தான்; அவளும் அவனைத் தன் கணவனென்றே எண்ணிக்கொண்டு இசைந்தாள்) புகுந்து அவளோடும் கலவி செய்து இருவரும் காம இன்பத்தைச் சமமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், (அந்தக் கலவி, தன் கணவனுடன் வழக்கமாக அனுபவித்ததுபோல் இல்லாமல்) புதுமணமாக இருந்ததனால் அகலிகையானவள் தன்னைப் புணரும் அவன் தன்னுடைய கணவன் அல்லனென்பதை உணர்ந்தனள்; உணர்ந்தவுடன், தகாத காரியத்தைச் செய்துவிட்டோமே என்று வருந்தி மனம் குலைந்தாள்; அந்தச் சமயத்தில் (வெளியே போயிருந்த) முக்கண்ணனாகிய பரமசிவனைப் போன்ற ஆற்றலுடைய கௌதம முனிவரும் வேகமாக ஆசிரமத்துக்குத் திரும்பி வந்தார்.

இந்தப் பாடல் புத்தகங்களில் வேறுவிதமாக அச்சிடப்பட்டிருப்பது தவறு. இதுதான் சரியான பாடம், புத்தகங்களில் இது எப்படிக் காணப்படுகிறதென்றால் –

''புக்கு அவளோடும் காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்த லோடும் உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
தக்கதன்று என்ன ஓராள் தாழ்ந்தனள் இருப்பத் தாழா
முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்.''

என்று அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் 'கலவியின் மத்தியில் அவன் தன் கணவனல்லன் என்பதை உணர்ந்தாள்; உணர்ந்த பின்பும் அது தகாத காரியம் என்று எண்ணாமல் அடங்கியிருந்தாள்' என்று பொருளாகிறது. இப்படி இருக்கமுடியாது என்பது பின்னால் வரும் இரண்டு பாடல்களால் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. வால்மீகி முனிவர் சொன்னதற்கு ஒத்த கருத்துள்ளதாகச் செய்யவேண்டும் என்று யாரோ இப்படிப் பாடபேதம் செய்திருக்கவேண்டும் என்று எண்ண இடமிருக்கிறது.

இனி, கதையைத் தொடர்ந்து இந்தப் பாடபேதம் தவறானது என்பதைப் பார்ப்போம்.

கௌதமர் வந்துவிட்டதைக் கண்ட இந்திரன் ஒரு பூனை வடிவெடுத்து ஓடலானான். அகலிகை மிக்க வருத்தத்தோடு பெரும்பழி வந்துவிட்டதே என்று நாணி நடுங்கி நின்றாள். கௌதமர் நடந்ததை அறிந்துகொண்டு, இந்திரனுக்கு உடம்பெல்லாம் ஆயிரம் கண்களுண்டாகவும், அகலிகை கல்லாய்க் கிடக்கவும் சாபமிட்டார். அகலிகை கணவனை வணங்கி, சாப விமோசனம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, 'தசரத ராமன் இங்கே வருவான்; அவனுடைய பாத தூளி பட்டுக் கல்லுருவம் மாறிப் பழைய வடிவு கொள்வாய்' என்று விமோசனம் அளித்தார் என்ற விருத்தாந்தத்தை விசுவாமித்திரர் இராமனுக்குச் சொல்லிவிட்டு,



''இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றுஓர் துயர்வண்ணம் உறுதல் உண்டோ
மைவண்ணத்து அரக்கிபோரில் மழைவண்ணத்து அண்ணலே உன்
கைவண்ணம் அங்கு கண்டேன் கால்வண்ணம் இங்கு கண்டேன்.''

(இவள் கல்லாக இருந்தது) இப்படி நிகழ்ந்தது. இனிமேல் (நீ இந்த உலகில் அவதரித்திருப்பதால்) இந்த உலகத்தார்களுக்கெல்லாம் துன்பங்களிலிருந்து விமோசனம் கிடைக்குமேயல்லால் துயரம் என்பது இருக்குமா? மேகம் போன்ற மேனியுடையவனே! கருநிறத்து அரக்கியாகிய தாடகையுடன் நீ செய்த போரில் உன் கைகளின் மகிமையை அங்கே கண்டேன்; உன் பாதத் துகள்பட்டு இவள் சாப விமோசனம் பெற்றதில் உன் கால்களின் மகிமையை இங்கே கண்டேன், என்று விசுவாமித்திரர் சொன்னார். அதற்கு இராமன்,

''தீதிலா உதவி செய்த சேவடிக் கரிய செம்மல்
கோதிலா மனத்தான் சொன்ன பொருளெலாம் மனத்திற் கொண்டு
மாதவன் அருள் உண்டாகில் வழிபடர் படர் உறாதே
போதி நீ அன்னாய் என்னப் பொன்னடி வணங்கப் போனாள்.''

தீவினை தீரும்படியான உதவியைச் செய்த திருப்பாதங்களையுடைய உத்தமனாகிய இராமன், மாசற்ற மனத்தோடு விசுவாமித்திரர் சொன்ன விஷயங்களையெல்லாம் மனத்தில் வாங்கிப் புரிந்துகொண்டு, 'தங்களைப் போன்ற மகிமையுள்ள தவசியின் அருள் எனக்கு இருப்பதனால் வழியில் வரக்கூடிய எந்தத் துன்பமும் ஒன்றும் செய்யாது' என்று சொல்லிவிட்டு அகலிகையைப் பார்த்து 'வாருங்கள் தாயே' என்று அவளுடைய பாதத்தை வணங்கி அழைக்க, அவளும் அவர்களுடன் போனாள்.

அகலிகையை அழைத்துக்கொண்டு எல்லாரும் அருகிலிருந்த கௌதமருடைய ஆசிரமத்துக்குப் போனார்கள். அவர்களைக் கண்ட கௌதமர்,

"அருந்தவன் உறையுள் தன்னை அனையவர் அணுக வோடும்
விருந்தினர் தம்மைக் காணா மெய்ம்முனி வியந்த நெஞ்சன்
பரிந்து எதிர் கொண்டு புக்குக் கடன் முறை பழுது நாமல்
புரிந்தனன்; காதி செம்மல் புனிதமா தவனை நோக்கி."

அருமைத் தவசியாகிய கௌதமருடைய இருப்பிடத்தை அவர்கள் நெருங்கியவுடன், விருந்தினர்களைக் கண்ட மெய்யான முனிவராகிய கௌதமர், வியப்படைந்த மனத்துடன் பரிவோடு எதிர்கொண்டு வந்து, வரவேற்பு உபசாரங்களைத் தவறில்லாத முறையில் செய்தார்; அதன் பின் காதியின் புத்திரனாகிய விசுவாமித்திரர் கௌதமரைப் பார்த்து,

"அஞ்சன வண்ணத்தான்தன் அடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோல் இடையாள் முன்னை வண்ணத்தாள் ஆகி நின்றாள்
நெஞ்சினால் பிழைப்பி லாளை நீ அழைத் திடுக என்ன,
கஞ்சமா முனிவன் அன்ன முனிவனும் கருத்து உட் கொண்டான்."

அஞ்சன மை போன்ற நிறத்தவனாகிய இந்த இராமனுடைய பாததூளி பட்டவுடனே வஞ்சிக்கொடி போன்ற இடையுள்ளவளாகிய இவள் (உங்கள் பத்தினி) கல்லுருவம் நீங்கிப் பழைய வடிவத்தளாகி எழுந்தாள்; மனமறிந்து குற்றம் செய்தவள் அல்லாத இவளைத் தாங்கள் அழைத்துக்கொள்ள வேண்டுமென்று (விசுவாமித்திரர்) சொல்ல, தாமரை மலரின் மேலுள்ள பிரமதேவனுக்குச் சமானமான கௌதமரும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார்.

இந்தப் பாட்டில் விசுவாமித்திரருடைய வாக்கால் அகலிகை 'நெஞ்சினால் பிழைப்பிலாள்' என்று சொல்லப்படுவது மிகவும் குறிப்பிடத்தக்கது. மேலும் இதற்கடுத்த பாட்டில்,



"குணங்களால் உயர்ந்த அண்ணல் கோதமன் கமலத் தாள்கள்
வணங்கினன் வலங்கொண்டு ஏத்தி மாசறு கற்பின் மிக்க
அணங்கினை அவன்கை ஈந்து ஆண்டு அருந்தவ னோடும் வாச
மணம்கிளர் சோலை நீங்கி மணிமதில் கிடக்கை கண்டார்."

குணங்களில் சிறந்தவனாகிய இராமன் கௌதமருடைய தாமரை போன்ற பாதங்களில் விழுந்து வணங்கியெழுந்து கும்பிட்டுக் குற்றமற்ற கற்பிற் சிறந்த அகலிகையை அவருடைய கையில் ஒப்படைத்துவிட்டு, அப்போதே தவசியாகிய விசுவாமித்திரருடன் மிக்க வாசனையுள்ள நறுமணம் நிறைந்த அந்தச் சோலையை விட்டுச் சென்று மிதிலாபுரியின் அழகான மதிற்சுவர்களைக் கண்டார்கள்.

இந்தப் பாட்டில் இராமன் மதிப்பில் அகலிகை 'மாசறு கற்பின் மிக்க அணங்கு' என்று சொல்லப்படுகிறது.

மேலுள்ள இரண்டு பாட்டுக்களும் கம்பருடைய பாட்டுக்களானால் முன்னே சொன்ன 'புக்கவளோடும் காம' என்ற பாட்டு, புத்தகங்களில் காணப்படுகிற மாதிரி கம்பர் பாடினதாக இருக்கமுடியாது.

எனவே கம்பர், வால்மீகி சொன்னதற்கு முற்றிலும் மாறாக அகலிகை மனமறிந்து குற்றம் செய்தவள் அல்லவென்று சொல்லியிருக்கின்றார். அப்படி அவர் சொல்லியிருப்பதுதான் சரி. ஏனென்றால் வடமொழி சம்பிரதாயப்படிக்கு, விவாக காலங்களில் ஓதப்படுகிற மந்திரங்களுள் ஒன்றில் சீதை, தாரை, அகலிகை, திரௌபதை, மண்டோதரி ஆகிய பஞ்ச கன்னிகைகளும் கற்பிற் சிறந்த உத்தமிகள் என்று நினைபூட்டப்படுகிறார்கள்.

இந்தப்பஞ்ச கன்னிகைகளுள் ஒருத்தியாகிய தாரையும், சந்திரனுக்கு நிர்வாணமாக எண்ணெய் தேய்த்ததாக

நாடகங்களில் காட்டப்படுகிற பிரகஸ்பதியின் மனைவியாகிய தாரையாக இருக்க நியாயமில்லை. அது கம்பர் காட்டுகின்ற வாலியின் மனைவி தாரையாகத்தான் இருக்கவேண்டும். வாலியின் மனைவியும் அங்கதனின் அன்னையுமாகிய தாரையின் கற்பைப்பற்றி இக்கட்டுரையில் பின்னால் சொல்லப்படுகிறது. இப்படிக் கம்ப நாட்டாழ்வார், வால்மீகி முனிவர் சொன்னதற்கு முற்றிலும் மாறாக, அகலிகை, தாரை ஆகிய இவ்விருவருடைய கற்புப் பெருமையை நிலைநாட்டியதால் வடமொழி மந்திரங்களுக்கே அரும்பெருஞ் சேவை செய்வதவராகிறார்.

இனி, வாலியின் மனைவியாகிய தாரையைப் பற்றிச் சொல்வதில் வால்மீகி முனிவருக்கும் கம்ப நாட்டாழ்வாருக்கும் உள்ள வேற்றுமையைப் பார்ப்போம்:

வால்மீகர்:—

இராமர் வாலியைக் கொல்வதாகச் சுக்கீரிவனுக்கு வாக்களித்ததற்கு முக்கிய காரணம், வாலி சுக்கீரவனுடைய மனைவியாகிய உருமியை அபகரித்துக் கொண்டான் என்பதே. அந்த வாக்குறுதி; 'இலக்குத் தவறாதனவும் நன்றாகத் தீட்டப்பட்டுச் சூரியனைப் போல் விளங்குவனவுமாகிய எனது பாணங்கள் உமது மனைவியை அபகரித்துக்கொண்ட அந்தக் கொடிய பாவியான வாலியின் மேல் பாயப்போகின்றன. என் கண்முன் எதிர்ப்படும் வரையுந்தான் அவன் உயிரோடிருப்பான்; நீர் துயரக்கடலில் ஆழ்ந்திருக்கிறீர் என்பதை என்னுடைய சொந்த அனுபவத்தால் அறிந்துகொண்டேன். அதனின்றும் உம்மை நான் கரையேற்றிவிடுகிறேன். உம்முடைய மனைவியையும் இராச்சியத்தையும் நீர் நிச்சயமாய் அடைவீர்' என்று இராமர் சுக்கிரீவனுக்கு வாக்களித்தார். *(கிஷ்கிந்தா காண்டம் 10–ஆம் சருக்கம்)*



இந்த வாக்குறுதியின்படி வாலி கொல்லப்பட்டான். வாலி கொல்லப்பட்டதைக் கேட்ட தாரையின் சோகமும் சொல்லும் பின் வருமாறு:— வாலி மாண்டுபோனதைக் கேட்டு அலறிக்கொண்டு ஓடிவந்த தாரை, வானரர்கள் இராமருக்கு அஞ்சி ஓடிவருவதைக் கண்டாள். அவர்கள் ஏன் அப்படி ஓடுகிறார்கள் என்று கேட்டாள். அதற்கு அருகிலிருந்த வானரர்கள், "அம்மணி உம்முடைய குழந்தை உயிரோடு இருக்கின்றார். ஆதலால் திரும்பிச் சென்று உம்முடைய குழந்தையைக் காப்பாற்றும்; யமனே இராமன் உருவெடுத்து வந்து வாலியை வதைத்தனன்.

வாலி எறிந்த பெரிய விருக்ஷங்களையும் மலைகளையும் இராமன் வச்சிராயுதத்துக் கொப்பான தனது பாணங்களால் பிளந்து அவனைக் கொன்றனன். இந்திரன் போன்ற பராக்கிரமத்தையுடைய நமது மன்னவன் மாண்டது கண்டு இந்தப் பெரிய வானர சேனை பயந்து கலைந்தோடுகின்றது. கிஷ்கிந்தையின் கோட்டை வாயிலைக் காவல் செய்து, அங்கதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டும். வானரர்கள் வாலியின் புத்திரனை மன்னவனாகக் கொண்டு அவனுக்கு அடங்கி நடப்பார்கள். நாம் இவ்விடத்தில் இருப்பது உசிதமல்ல. நமது சத்ருக்களாயுள்ள மற்றை வானரர்கள் இக்கோட்டைக்குள் புகுந்து கொள்வார்கள். அவர்களுள் பத்தினி உள்ளவர்களும் இல்லாதவர்களும் அநேகர் இருக்கின்றார்கள். அவர்கள் வாலியால் முன்னே தங்கள் பதியை இழந்தவர்களாதலால் அவர்களைக் கண்டு நாம் அஞ்சவேண்டியதாக இருக்கிறது," என்று சொன்னார்கள்.

தன் சமீபத்திலிருந்த வானரர்கள் கூறியதைத் தாரை கேட்டு அவர்களைப் பார்த்துத் தன் பெருமைக்குத் தக்கவாறாக, "மகாபாக்கியம் பொருந்திய வானர சிங்கமான

என் நாயகன் மாண்டதன்பின் எனக்குப் புத்திரன் ஏன்? இராமபாணத்தால் உயிர் துறந்து கிடக்கின்ற அந்த மகாத்துமாவின் திருவடிகளை நான் அடைவேன்," என்றாள். (18—ஆம் சருக்கத்தில்)

இதற்கடுத்த இருபதாவது சருக்கத்தில் தாரை, இறந்துகிடக்கும் கணவன் மேல் விழுந்து நெடுநேரம் புலம்பிவிட்டு 'வாலி இறந்து கிடந்த இடத்திலேயே தான் பட்டினி கிடந்து உயிர் துறக்க நிச்சயித்தாள்.

அப்படி, தாரை அவ்விடத்தில் பட்டினி கிடந்து உயிர் துறப்பதாகச் சொன்னதை அறிந்த அனுமான் பலவாறான நியாயங்களை எடுத்துச் சொல்லித் தாரையை சமாதானப்படுத்தி கடைசியாக, "அவர் இப்போது தருமம் செய்தார் சேரும் சுவர்க்கலோக முற்றார்; ஆதலால் அவர் பொருட்டுத் துக்கப்படலொழிக. நல்லாய், இங்குள்ள வானர சிரேஷ்டர்களும், இந்த அங்கத குமாரனும், இந்த வானர ராச்சியமும் எல்லாம் இனி உம்முடைமையதன்றோ? ஆதலால் இனிச் சோகத்தையும் தாபத்தையும் விட்டுவிடும். உம்முடைய சொல்லின்படி அங்கதன் அரசாளட்டும். புத்திரர்களால் செய்யப்படவேண்டுமென்று சாஸ்திரங்களிற் சொல்லப் பட்டுள்ள சடங்குகளெல்லாவற்றையும் இப்போது அங்கதன் வானர வேந்தன் பொருட்டுச் செய்யட்டும். அந்திய கருமங்கள் செய்யவேண்டிய காலம் இதுவே. அவைகள் செய்தான பின் அங்கதனுக்கு முடிசூட்டும். பின்பு உமது புத்திரனைச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கக் காண உமக்குத் துக்கம் ஆறிவிடும்" என்றான்.

இந்த வார்த்தைகளைக் கணவனையிழந்த துன்பத்தால் வருந்தும் தாரை கேட்டு, அருகில் நின்ற அனுமானைப் பார்த்து "அங்கதனைப்போல நூறு குமாரர்களை



உடையவளாயிருத்தலினும் இங்கு மாண்டுகிடக்கும் வீரனாகிய என் நாயகனோடு உயிர் துறப்பதே எனக்கு மேலான காரியம். என் நாயகனுக்குச் செய்யவேண்டிய பிரேத கர்மங்களைச் செய்விப்பதற்காவது, அங்கதனுக்கு முடிசூட்டுவதற்காவது யான் உரியளல்லேன். அந்தக் கடமைகளெல்லாம் அங்கதனுக்குச் சிற்றப்பனான சுக்ரீவனைச் சேர்ந்தவை. ஐய அனும, நான் இந்த இராச்சியத்தை அங்கதனுக்குக் கொடுக்க வேண்டுமென்று நீர் எண்ணுவதை விட்டுவிடும். இந்தக் காரியத்தில் பிள்ளைக்குப் பந்துவாயுள்ளவன் தந்தையேன்றித் தாயல்லள். எனக்கு என் கணவனைப் பின் தொடர்வதைவிட இம்மையிலாவது மறுமையிலாவது நன்மை தருவது வேறொன்றுமில்லை. இதோ மாண்டுகிடக்கும் என் நாயகன் படுக்கையே எனக்கும் ஏற்றது" என்று கூறினாள். (21—ஆம் சருக்கம்)

மீண்டும் இருபத்து மூன்றாம் சருக்கத்தில்:—

"பின்பு தாரை, இறந்துகிடக்கின்ற வானர வேந்தனாகிய தன் நாயகனது முகத்தை மோந்து அவனை விளித்து, "வீர, என் சொல்லைக் கேளாமையினாலன்றோ, நீர் பருக்கைக் கற்களையுடையதும் மேடும் பள்ளமுமானதான இவ்வன்னிலத்தில் கிடக்கின்றீர். வானரக் கோமானே, என்னைப் பார்க்கினும் உமக்கு இப்பூமி அன்பினள் போலும்! ஏனெனில் என்னை உவந்தேற்றுக் கொள்ளாது நீர் அவளையே தழுவிக்கொண்டு கிடக்கின்றீரே! காதல, தெய்வமும் சுக்ரீவன் பக்கலில் இருக்கின்றதே! இது என்ன அதிசயம்! இனி அவனன்றோ வீரனாக மதிக்கப்படுவான். உமது தொழும்பு புரியும் குரங்குகளும் கரடிகளும் அங்கதனும் நானும் புலம்புவதைக் கேட்டும் நீர் ஏன் எழும்பாதிருக்கிறீர்? உம்மாற் கொல்லப்பட்டு உமது பகைவர்கள் விழுந்து கிடந்த சேக்கையிலே நீர் இப்போது மாண்டு கிடக்கின்றீரே!

நற்குலத்தில் பிறந்தவரே, போரில் பிரியமுள்ளவரே, என் நாதரே, என்னைக் கைம்மையாக்கி நீர் எங்குப் போயினீர்? இனி உலகத்தார் தங்கள் பெண்களை வீரர்களுக்கு விவாகம் செய்து கொடாதொழிவாராக; ஐயோ! வீரனுக்குப் பெண்டாகிய நான் இதோ கணப்பொழுதில் கைம்பெண்ணானேனே! என் மானம் அழிந்தது; இன்பம் தொலைந்தது; நானும் துன்பக்கடலில் ஆழ்ந்துவிட்டேன்; ஆ! என் கணவன் இறக்கக்கண்டும் எனது கன்னெஞ்சம் நூறு சுக்குகளாகப் பிளவாதிருக்கிறதே! என் அன்ப, என் காதல் நாயக, வீர, நீர் போரில் மாண்டு கிடக்கின்றீரே! கணவனை இழந்தவளுக்குப் பிள்ளையிருந்தென்ன? பெருஞ்செல்வ மிருந்தென்ன? அவளை உலகத்தார் கைம்பெண் என்றுதானே கூறுவார்கள்!..." (23–ஆம் சருக்கத்தில்)

பின்னும் இருபத்து நான்காம் சருக்கத்தில் தாரை இராமரைப் பார்த்துப் பின் வருமாறு புலம்புகின்றாள்; "என் நாயகனைக் கொன்ற அம்பால் என்னையும் கொன்றருளும். அவ்வாறு கொல்லப்பட்டால் நான் எனது நாயகனைச் சென்று கூடுவேன். என்னையன்றி அவர் வேறொருவரைச் சேர விரும்பார். தாமரைக் கண்ண, அவர் சுவர்க்கம் சென்று என்னைக் கண்டு கொள்ளப்பெறாதவராய், சிறந்த ஆடையாபரணங்களையணிந்த தேவரம்பையர் கூட்டத்தில் விழைவுறார்.

இந்த அழகிய மலையின் மத்தியில் வைதேகியைப் பிரிந்து வருந்தும் உம்மைப்போல், சுவர்க்கத்திலும் என் நாயகர் என்னைப் பிரிந்தமையால் வருந்தி ஒளியிழந்து தோன்றுவார். மனைவியைப் பிரிந்த அழகிய ஆண்மகனுறும் துயரத்தை நீர் நன்றாயறிவீர்; ஆகையால் என்னைப் பிரிந்து என் நாயகன் அலக்கணுறாவண்ணம் என்னைக் கொன்றருளும். மகாத்துமாவாகிய நீர் என்னைக் கொன்றால் பெண்கொலை



செய்த பாபம் வருமென்று எண்ணுகின்றீர் போலும். என்னை வாலியின் ஆன்மாவாகப் பாவித்து நீர் கொல்லும்; அவ்வாறு செய்தால் நீர் பெண்கொலை செய்த பாவத்துக்கு உள்ளாகமாட்டீர்.

வேதங்களும் மற்றை நூல்களும் பத்தினி தன் பதியினின்றும் வேறல்லள் என்று கூறுகின்றனவே. பத்தினியை அவள் பதியினிடத்தில் சேர்ப்பதிலும் சிறந்த தருமம் வேறில்லையென்று தருமநூலுணர்ந்தோர் கூறுகின்றனர். ஆதலால் நீர் என்னை என் பதியிடத்துச் சேர்த்துவிடுக; அப்படிச் சேர்த்து வைப்பதானால் நீர் பெண் கொலை செய்த பாபத்துக்கு ஆளாக மாட்டீர். நாயகனையிழந்து, அவனினின்றும் பிரிக்கப்பட்டு, அலக்கணுற்று வாடுகின்ற என்னைக் கொல்லாதிருப்பது உமக்குத் தகுதியன்று. மதயானை போல்பவனும் பொன்மாலையணிந்தவனுமாகிய அறிவிற் சிறந்த வானரர் கோமானைப் பிரிந்து நான் உயிர் வாழேன்" என்று கூறினாள்.

இவற்றால், தாரை தன் கணவன் இறந்தபின் கைம்பெண்ணாக உயிர் வாழவும் விருப்பமில்லாத மிக உயர்ந்த பதிவிரதையாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்படித் தாரைக்கு இவ்வளவு ஏற்றம் கொடுத்த வால்மீகி முனிவர், பின்னால் அவளைச் சுக்கிரீவனுக்கே வைப்பாட்டியாக்கிவிட்டது மிகவும் வருந்தத்தக்கது.

சுக்கிரீவனுடைய மனைவியை அபகரித்ததற்காக வாலியைக் கொன்றது நியாயமானால், வாலியின் பத்தினியாகிய தாரையைச் சுக்கிரீவன் வைப்பா டியாக்கிக் கொள்வது எப்படிப்பொருந்தும்? கணவன் இறந்தபின் மறுமணம் செய்துகொள்வது அவர்களுக்குள் வழக்கமென்றால், தாரை கைம்பெண்ணாக உயிர்வாழ

மாட்டேன் என்று சொல்லுவானேன்? தாரை புலம்புவதில் வெளியிட்ட கருத்துக்களெல்லாம் கணவனை இழந்த பின் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற கட்டாயமுள்ள சமூகத்தினர் சொல்லும் நியாயங்களாகவே அல்லவா இருக்கின்றன? அவள் புலம்பலெல்லாம் பொய்ப் புலம்பலா? 'என்னை வாலியின் ஆன்மாவாகப் பாவித்துக் கொல்லுங்கள்' என்றதும், 'வேதங்களும் மற்றைய நூல்களும் பத்தினி தன் பதியினின்றும் வேறல்லள் என்று கூறுகின்றனவே' என்று சொன்னதும் அர்த்தமற்ற வார்த்தைகளா?

இங்கே இவ்வளவு கற்பிலக்கணங்களோடு காணப்படுகின்ற தாரையை வால்மீகி முனிவரே பின்னால் எப்படிக் காட்டுகிறார் என்பதைப் பார்ப்போம்:

வாலிக்குப்பின் சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து அங்கதனை இளவரசனாக்கினார்கள். அப்போது மழைக்காலமாக இருந்ததனால் அது கழிந்தவுடன் வானர சேனையைத் திரட்டிக்கொண்டு சீதையைத் தேட வரவேண்டும் என்று சுக்கிரீவனுக்கு ஆணையிட்டு அவனைக் கிஷ்கிந்தைக்கு அனுப்பிவிட்டு இராமர் தம்பியுடன் வனத்தில் தங்கியிருந்தார். சீதையின்மேல் ஏக்கம் மிகுந்து மழைக்காலம் கழிவதற்காகக் காத்துக்கொண்டிருந்தார்.

மழைக்காலம் நீங்கிற்று. சொல்லியிருந்தபடி சுக்கிரீவன் வரவில்லை. உடனே இராமர் இலக்குமணரை அழைத்து, கிட்கிந்தைக்குப் போய் சுக்கிரீவன் வாக்களித்திருந்தபடி ஏன் வரவில்லையென்பதைக் கண்டறிந்து வரச்சொன்னார். இலக்குவன் வெகு கோபங்கொண்டு, சுக்கிரீவன் மிக்க நன்றிகெட்டவன் என்றும் உடனே அவனைக் கொன்றுவிட்டு அங்கதனைக் கொண்டு சீதையைத் தேடலாம் என்றும் இராமரிடம் சொல்லுகிறான்.



அப்படி இலக்குவன் சொல்லுவது மிகவும் தவறு என்று இராமர் "உன்னையொத்தவர்கள் உலகத்தில் இவ்விதமான பாபத்தைச் செய்யார்கள். பாபத்தைத் தனது நல்லறிவினால் நீக்கிவிடுபவனே வீரன்; அவனே புருஷோத்தமன். இத்தகைய காரியம், நல்லொழுக்கத்தையுடைய நீ செய்யத்தக்கதன்று; சுக்கிரீவனிடத்தில் நாம் முன் செய்த நட்பைப் பாராட்டவேண்டுமன்றோ? காலந் தப்பிவிட்டானாயினும் அவனிடத்தில் நீ கொடிய சொற்களைச் சொல்லாமல் நல்ல இதமான சொற்களையே சொல்லு," என்று கிஷ்கிந்தைக்குப் போகச் சொன்னார்.

அப்படி அனுப்பப்பட்ட இலட்சுமணன் கிஷ்கிந்தைக்குள் வந்து நுழைந்தார். அவரைக் கண்ட வானரர்கள் பயந்து நடுங்கிப் பல திக்குகளிலும் ஓடினார்கள்.

"அவர்களிற் சிலர் சுக்கிரீவனுடைய மாளிகைக்குச் சென்று லக்ஷ்மணர் கோபங்கொண்டு வந்திருப்பதை அறிவித்தார்கள். சுக்கிரீவன் ஏகாந்தத்திலே தாரையுடனே கூடிக் காம இன்பத்திலாழ்ந்து வானரத் தலைவர்கள் வந்து சொல்லிய வார்த்தைக்குச் செவிகொடா திருந்தான்." *(31–ஆம் சருக்கத்தில்)*

இலட்சுமணர் வெகு கோபத்தோடு கிஷ்கிந்தை நகருக்குள் நடந்து சுக்கிரீவனுடைய மாளிகையின் வாயிலை அடைந்து, தன் வரவைச் சுக்கிரீவனுக்குத் தெரிவிக்கும்படி அங்கதனிடம் சொல்லுகின்றார். அங்கதன் அனுமான் முதலானவர்கள் மிகவும் பயந்து சுக்கிரீவனுக்குத் தெரியப்படுத்தி, உடனே வந்து இலட்சுமணரை வணங்கிச் சமாதானப்படுத்தும்படித் தூண்டுகிறார்கள். [illegible]ளுண்ட மயக்கம் தெளிந்து நிலைமையை உணர்ந்த சுக்கிரீவன், தான் உடனே இலட்சுமணனுக்கு முன்னால்வர மிகவும் பயந்து, பக்கத்திலிருந்த தாரையைப் பார்த்து,

"மாதே, சுபாவத்தில் இளகிய மனதையுடையவராகிய லக்ஷ்மணர் கோபங்கொண்டு வருவதற்கான காரணம் என்ன? அவருடைய கோபத்துக்கு இடம் யாது என்று நீ அறிவாயா? ஒரு காரணமும் இல்லாமல் அவர் கோபங்கொள்ளார். நான் அவருக்குச் சிறிதாவது குற்றஞ் செய்திருக்கிறேனோவென்று நீ நன்கு ஆராய்ந்து எனக்குச் சீக்கிரம் சொல்லு; அல்லது நீயே நேரே போய் அவரைக் கண்டு பேசி, நல்ல வார்த்தைகளால் அவர் கோபத்தைத் தணி. உன்னைப் பார்த்து அந்தச் சுத்தாத்மா கோபங்கொள்ள மாட்டார். பெரியவர்கள் பெண்களுக்கு ஒருக்காலும் தீங்கு செய்யமாட்டார்கள். உன்னால் கோபந் தணிந்து மனந் தெளிந்தபின் அந்தக் கமலக்கண்ணனை நான் காண்கிறேன்," என்று இதமாகக் கூறினான்.

அழகிய தாரை கள்ளுண்ட மயக்கத்தால் கால்கள் தள்ளாட, கண்கள் சுழல, இடையிலணிந்த காஞ்சிக்கோவையும் பொன்ஞாணும் நழுவ, உடல் வளைய லக்ஷ்மணருக்கு முன்னே போயினாள். வானரவேந்தன் பத்தினியாகிய தாரையை லக்ஷ்மணர் கண்டு, கோபத்தைத் துறந்து, தலைகுனிந்து ஒதுங்கி நின்றார். தாரை, லக்ஷ்மணருடைய அருள் நோக்கத்தைப் பெற்று, கள்ளுண்ட மயக்கால் நாண் துறந்து "கோமானே, உமது கோபத்துக்குக் காரணம் யாது? உலர்ந்த காட்டை நோக்கி வருகின்ற தாவாக்கினியைக் கண்டு மனக் கவலையின்றி இருப்பவன் யாவன்?" என்று அவருடைய கோபத்தைத் தணிக்குமாறு அன்பான வார்த்தைகள் கூறினாள்.

தாரை கூறிய சாந்தமுடையதும் அச்சமில்லாததுமான வார்த்தையை லக்ஷ்மணர் கேட்டுத் தமது அன்பினை நன்றாகக் காட்டவேண்டிய அவளை நோக்கி, "கணவனுக்கு நன்மை செய்பவளே, உன்னுடைய நாயகன் காமவின்பத்தில் ஈடுபட்டு, அறம் பொருள்களை ஈட்டாது கழிகின்றதை, நீ காணவில்லையா? அவன் தன் இராச்சியத்தின் நன்மையையும், துன்பத்தால் மீதூரப்பட்ட எங்களையும் சிறிதும் எண்ணாது தனது மந்திரிமார் முதலிய பரிவாரங்களுடன் கள்ளுண்டு களிக்கின்றானே! அவன் நான்கு மாசங்கழிந்து வருவேன் என்று எங்களுக்குப் பிரதிக்னை செய்துவிட்டுக் களியாட்டில் மனம் வைத்தவனாய் அந்நான்கு மாசமும் கழிந்ததை அறியாமலிருக்கிறானே! அறம் பொருள்களை அடைவதற்குக் கள்ளுண்டல் காரணமென்று சொல்லப்படவில்லை; கள்ளுண்டலினால் அறமும் பொருளும் இன்பமும் அழிந்துவிடும். செய்ந்நன்றி கொன்றவன் அறத்தை இழந்துவிடுவான்;..." இவ்வாறு கூறிய இலட்சுமணரைப் பார்த்துத் தாரை,

"…. காமவேட்கையுற்றவன் காலதேசங்களையாவது அறம் பொருள்களையாவது அறியான். என்னருகில் இருக்கின்றமையால் காமமுற்று அதனால் நாணிழந்திருக்கிற உமது பிராதாவாகிய அரிக்குலத் தலைவனைப் பொறுத்தருளும். தர்மத்திலும் தவத்திலும் பற்றுவைத்த முனிவர்களும் காம இன்பத்தை விரும்பி மோகமடைவார்களாயின் இயல்பாகவே திண்மையில்லாத குரங்கினத்தவனாகிய சுக்ரீவன் காமவின்பத்தில் அழுந்தாதிருப்பது எவ்வண்ணம்!" என்று விசுவாசம் பிறக்கும்படியாகப் பொருள் பொதிந்த சொற்களைச் சொல்லிவிட்டு, பெயர்த்தும் தனது நாயகன் பொருட்டு லட்சுமணரை நோக்கி "நரோத்தம, சுக்கிரீவன் காமமுற்றிருந்தானாயினும் முன்னரே தங்கள் காரியத்தை முடிப்பதில் முயற்சி செய்யும்படி, கட்டளை யிட்டிருக்கின்றனன்…. தடந்தோள, நீர் ஒழுக்கத்தில் தவறினவரல்லர்; நல்லோர்கள் சிநேகத் தன்மையினாலே

பிறர் மனைவியரைக் காணுவது குற்றமாகாது. ஆகையால் உள்ளே வருக," என்று கூறினாள்.

இவ்வாறு தாரையால் அழைக்கப்பட்ட லட்சுமணர், தாம் வந்த காரியத்தைச் சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று, அந்தப்புரத்தினுள் பிரவேசித்து, அங்கே தேவேந்திரனைப்போல் வெல்லற்கரிய புகழ் படைத்த சுக்கிரீவன் விலையுயர்ந்த கம்பளம் விரிக்கப்பட்ட ஒரு சிறந்த பொன்னாசனத்தின் மேலே, திவ்வியாபரணம் அணிந்து, திவ்விய மாலை புனைந்து, திவ்விய வஸ்திரம் தரித்து, ஆபரணாலங்கிர்தராகிய பெண்கள் சூழ ஆதித்தன்போல் வீற்றிருக்கக்கண்டார். பொன்னிறமுடைய சுக்ரீவன் சிறந்த ஆசனத்திலிருந்து, தன் மனைவியாகிய உருமியை இறுகத் தழுவிக்கொண்டு இலட்சுமணர் வருவதைக் கண்டான்.' (31, 33 சருக்கங்களில்)

வால்மீகத்தில், வாலி இறக்கும்போது காணப்பட்ட தாரைக்கும் இங்கே காணப்படுகிற தாரைக்கும் உள்ள முரண்கள் தாரையின் பதிவிரதத் தன்மையை அழித்து விடுவதுடன் வாலியைக் கொன்ற நியாயத்தையும் குலைத்து விடுகின்றது.

இந்தக் கதைப் பகுதியைக் கம்பர் எப்படிக் காட்டுகிறார் என்பதைக் காண்போம்.

கம்பர்: கம்பரும், இராமன் சுக்கிரீவனுக்கு அபயங்கொடுத்து வாலியைக் கொல்லுவதாக வாக்களித்ததற்கு முக்கிய காரணம் வாலி தன் தம்பியின் தாரத்தை அபகரித்துக்கொண்டான் என்பதே என்று சொல்லுகிறார்: அனுமான், வாலி சுக்கிரீவனுக்குச் செய்துள்ள அநியாயங்களையெல்லாம் விவரமாகச் சொல்லிவிட்டுக் கடைசியாக,



"உருமை என்று இவற்கு உரிய தாரமாம்
அருமருந்தையும் அவன் விரும்பினான்
இருமையும் துறந்து இவன் இருந்தனன்
கருமம் இங்குஇதே கடவுள்" "என்றனன்.

(வாலியானவன்) இவருக்கு (சுக்கிரீவனுக்கு) உரிய தாரமாகிய உருமி என்ற அமிழ்தத்தையும் அவன் இச்சித்துக் கவர்ந்துகொண்டான். (நாடு, மனைவி) ஆகிய இரண்டையும் இழந்துவிட்டு இவர் இருக்கிறார். நடந்த காரியம் இங்கே இதுதான் தெய்வமே, என்றான். அதைக்கேட்ட இராமன்,

பொய்யி லாதவன் வரன்முறை இம்மொழி புகல
ஐயன் ஆயிரம் பெயருடை அமலர்க்கும் அமலன்
வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கண்
செய்ய தாமரை ஆம்பலம் போதுஎனச் சிவந்த,

சத்தியவானாகிய அனுமான் இந்த விருத்தாந்தத்தைச் சொல்ல, ஆயிரம் திருநாமங்களையுடைய தெய்வத்துக்கும் தெய்வமான இராமன், (முன் கிருஷ்ணாவதாரத்தில் உலகத்தை விழுங்கிய) அவனுடைய வாயிதழ் துடிக்க, அழகான தாமரைபோன்ற அவன் கண்கள் (கோபத்தால்) செவ்வாம்பல் மலர்போலச் சிவந்தன.

திறத்த மாமறையவனொடு ஐம்முகன் பிறர்தேடிப்
புறத்து அகத்து உணர்வரிய தன் பொலன் அடிக்கமலம்
உறச் சிவப்ப இத்தரைமிசை உறல் அறமாக்கல்
மறத்தை வீட்டுதல் அன்றியே பிறிதுமற்று உண்டோ

(நான்கு) விதமாகிய வேதங்களைத் தந்த பிரமன், ஐந்து முகங்களையுடைய சிவன் முதலியவர்களும் தேடிப் புறத்திலும் அகத்திலும் உணர்ந்துகொள்ள முடியாத, தன்னுடைய பொற்பாத கமலங்கள் நொந்து சிவக்கும்படி இந்தத்

தரையின்மீது நடந்து (இராமனாக) வந்தது. தருமத்தை ஆக்கவும் அதருமத்தை அழிக்கவுமேயல்லாமல் வேறொன்றுக்கும் அல்ல.

ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன
ஆரம் வீங்குதோள் தம்பிக்குத்தன் அரசுரிமைப்
பாரம் ஈந்தவன் பரிவிலன் ஒருவன்தன் இளையோன்
தாரம் வௌவினன் என்ற சொல் தரிக்குமாறு உளதோ.

இரக்கமில்லாத சிற்றன்னை சொன்னவுடனேயே மாலையணிந்த தோளையுடைய தன் தம்பிக்கு, (பரதனுக்கு) தன்னுடைய உரிமையான அரசாங்க பாரத்தைக் கொடுத்துவிட்டவனாகிய இராமன், அன்பில்லாத ஒருவன் (வாலி) தன்னுடைய தம்பியின் (சுக்கிரீவனின்) மனையாளை அபகரித்துக்கொண்டான் என்பதைப் பொறுத்துக் கொள்வானா? அதனால் உடனே இராமன் சுக்கிரீவனைப் பார்த்து,

"உலகம் ஏழினோடு ஏழும்வந்து அவன் உயிர்க்கு உதவி
விலகும் என்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
தலைமையோடு நின்தாரமும் உனக்கு இன்று தருவேன்
புலமையோய், அவன் உறைவிடம் காட்"டென்று புகன்றான்.

ஏழோடு ஏழு பதினான்கு உலகங்களும் சேர்ந்து வந்து, அந்த வாலியின் உயிரைக் காக்க உதவியாக என்னை எதிர்த்தாலும் என்னுடைய வில்லின் பாணத்தால் அவனைக் கொன்று, கிஷ்கிந்தைக்குத் தலைமைப் பதவியையும் உன் தாரத்தையும் இன்றைக்கே உனக்குத் தருகிறேன். அறிவாளியானவனே, அந்த வாலி இருக்குமிடத்தைக் காட்டு – என்றான்.

இந்த வாக்கின்படி வாலி கொல்லப்பட்டான். தாரை, இறந்துபோன கணவன்மீது விழுந்து புலம்புகிறாள். வால்மீகி சொல்வதில் தாரை, தன்னையும் கொன்று கணவனோடு



சேர்த்துவிடும்படி இராமரை வேண்டுகிறாள். ஆனால் கம்பர் அப்படிச் சொல்லவில்லை. தன்னையும் கூட்டிக் கொள்ளும்படிக் கணவனையே விளித்துப் புலம்புகின்றாள்.

"துயரா லேதொலை யாத என்னையும்
பயிரா யோபகை யாத பண்பினோய்
செயிர் தீராய் விதியான தெய்வமே,
உயிர் போனால் உடலாரும் உய்வரோ"

நாதா, நீங்கள் இறந்து போயும் அந்தத் துயரத்தால் நான் இன்னும் இறந்து தொலையாமல் இருக்கின்றேனே! பகைமை இல்லாத குணவானே, என்னையும் உங்களுடன் கூட்டிக்கொள்ள மாட்டீரா? அப்படிக் கூட்டிக்கொண்டு என் துன்பத்தைத் தீருங்கள். விதியே! தெய்வமே! உயிர் போய்விட்டால் உடல் அழியாமலிருக்குமா?

"நையா நின்றனன் நான் இருந்து இங்ஙன்
மெய்யா வானோர் திருநாடு மேவினாய்
அய்யா 'நீஎனது ஆவி'யென்பது
பொய்யோ பொய் உரையாத புண்ணியா"

நான் இங்கிருந்து கொண்டு இப்படித் துயரப்படுகிறேன். நீங்கள் என்னைவிட்டு விட்டு மெய்யான அழகான தேவலோகத்துக்குச் சென்றுவிட்டீரே! ஐயா, நீங்கள் என்னிடத்தில் 'நீ என் உயிர்' என்று சொல்லுவீர்களே! அப்படிச் சொன்னதெல்லாம் பொய்தானா? பொய் சொல்லாத புண்ணியவானே, சொல்லுங்கள்.

"செருவார்தோள நின் சிந்தையுளென் எனின்
மருவார் வெஞ்சரம் என்னையும் வௌவுமால்;
ஒருவேன் உள் உளையாகில் உய்தியால்
இருவேம் உள் இரு வேமும் இருந்திலேம்."

போரில் களிக்கும் தோள்களையுடையவரே, உம்முடைய மனத்தில் நான் இருந்தது உண்மையானால் உம்மைக்கொன்ற பகைவருடைய பாணம் என்னையும் கொன்றிருக்கவேண்டும். என்னுடைய உள்ளத்தில் நீங்கள் இருந்தது உண்மையானால் நீங்களும் இப்போது என்னைப்போல் உயிரோடிருக்கவேண்டும். அப்படியில்லையே! அதனால் நாமிருவரும் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் இருந்ததில்லை.

இன்னும் பலவாறாகத் தாரை புலம்புகின்றாள். ஆனால் வான்மீகி முனிவர் காட்டுவதுபோல் தாரை. பட்டினி கிடந்து இறக்கப் போவதாகவோ, இனி உயிர் வாழமாட்டேன் என்பதாகவோ, தன்னையும் இராமர் கொல்ல வேண்டியதுதான் நியாயம் என்பதாகவோ, கைம்பெண்ணாகி உயிருடன் இருக்கக்கூடாது என்பதாகவோ புலம்பினதாகக் கம்பர் காட்டவில்லை.

வாலியின் தகனகிரியைகளுக்குப் பின் இராமர் இலக்குமணரைக் கொண்டு சுக்கிரீவனைக் கிட்கிந்தைக்கு அரசனாகவும், அங்கதனை இளவரசனாகவும் முடிசூட்டும்படி ஆணையிடுகிறார். அதன்படி நகரத்தில் முடிசூட்டப்பெற்ற சுக்கிரீவனும் அங்கதனும் அனுமானுடன் இராமர் தங்கியிருந்த வனத்திற்கு வந்து ஆசி பெறுகிறார்கள். சுக்கிரீவன் இராமரைக் கிட்கிந்தைக்கு வந்து தங்கியிருக்கும்படி காலில் விழுந்து அழைத்தான்.

இராமர் தம்முடைய விரதகாலம் பதினான்கு வருடங்களும் முடிகிறவரை வனத்திலன்றி வேறெங்கும் தங்கமுடியாது என்று சொல்லுகிறார். (வால்மீகியும் இதை அப்படியேதான் சொல்லியிருக்கிறார். ஆனால் மற்றெல்லாம் வேறாக இருக்கின்றன.) வால்மீகி முனிவர் சுக்கிரீவன்



பட்டாபிடேகச் சடங்கை மட்டும் சுருக்கமாகக் கூறிவிட்டுச் 'சுக்கிரீவன் தனக்குப் பட்டாபிடேகம் ஆன சமாசாரத்தை இராமருக்கு அறிவித்து, தன்மனைவி உருமையைப் பெற்று இந்திரனைப்போல் அரசுபுரிந்தான்' என்பதோடு பட்டாபிஷேகத்தைப் பற்றிய சருக்கத்தை முடித்துவிடுகிறார். இங்கே 'தன் மனைவி உருமையைப் பெற்று' என்ற சொற்றொடரைக் கவனிக்கவேண்டும். தாரையைப் பற்றிய பேச்சு ஒன்றுமில்லை. ஆகவே பின்னால் சுக்கிரீவனோடு கள்ளுண்டு காம இன்பத்தில் அழுந்திக் கிடந்தாள் தாரை என்பது, விதவா விவாகம் செய்து கொள்ளப்பட்டவளாகவும் இல்லாமல் விபசாரம் செய்தவளாகத் தான் காணப்படுகிறாள்.

நிற்க, கம்பர், சுக்கிரீவன் பட்டாபிடேகச் சடங்குக்குப்பின் மகுடதாரியாக இராமர் இருப்பிடத்துக்கு வந்து வணங்கி ஆசிபெற்றதாகச் சொல்லுவதுடன், சுக்கிரீவனுக்கு இராமர், எப்படி அரசாளவேண்டும் என்பதைப் பற்றி அப்போதே அறிவுறுத்துவதாகவும் சொல்லுகிறார். அந்த அரசியலறிவு பதினோரு பாடல்களில் மிகவும் தெளிவாகச் சொல்லப்படுகிறது.

இந்த அரசியல் அறிவு உபதேசத்தை இராமரிடம் கேட்டுக்கொண்டு போன சுக்கிரீவன், தாரையை எந்த நிலையில் வைத்து அரசாட்சி நடத்தினான் என்பதைச் சொல்லித் தாரைக்கும் சுக்கிரீவனுக்கும் வாலிக்குப் பின் எப்படிப்பட்ட தொடர்பு இருந்தது என்பதைக் கம்பர் மிகத்தெளிவாகச் சொல்லி விடுகிறார். அது என்னனெில்:

*ஆரியன் அருளிற் போய், அவ்வகல் மலை அகத்தனான*
*சூரியன் மகனும், மானத் துணைவரும், கிளையும் சுற்ற*
*தாரையை வணங்கி அன்னாள் தாய்எனத் தந்தை முந்தை*
*சீரியன் சொல்லே என்னச் செவ்விதின் அரசு செய்தான்*

மேலோனாகிய இராமனுடைய அருள் நிறைந்த அறிவுரைகளுடன் போய், அகலமான மலையிலுள்ள கிட்கிந்தையை அடைந்தவனான சூரிய புத்திரன் சுக்கிரீவன், அவனுடைய அபிமானத்துக்குரிய துணைவர்களும் சுற்றத்தார்களும் சூழத் தாரையைத் தனது தாய்போல் வணங்கி, உயர்ந்த குணங்களுள்ளவனும் தந்தை போன்றவனுமான இராமர் முன்னே சொல்லியனுப்பியபடியே செம்மையான முறையில் அரசு புரிந்தான் — என்பது.

இந்த உறவில்தான், இராமருடைய ஏவலின் மேல் கிட்கிந்தைக்கு வந்த இலக்குமணனைத் தாரை எதிர் கொள்ளுகின்றாள். கம்பர் தரும் அந்தக் காட்சியைப் பார்ப்போம்.

இலக்குமணன் கடுங்கோபத்துடன் வெகு வேகமாக கிட்கிந்தைக்கு வருவதைக்கண்ட வானரங்கள் மிகவும் பயந்து நாலா பக்கத்திலும் சிதறி ஓடினார்கள். அதையறிந்த அங்கதன் உடனே சுக்கிரீவனுடைய மாளிகைக்கு ஓடிச் செய்தியை அறிவிக்கிறான். கள்ளுண்டு மயங்கிக்கிடந்த சுக்கிரீவன் அதை உணரவில்லை. அங்கதன் அங்கிருந்து தன் அன்னை தாரையின் மாளிகைக்குச் சென்று தெரிவிக்கிறான்.

தாரை, இலக்குமணன் கோபத்தோடு வரவேண்டிய காரணத்தைச் சரியாக அனுமானித்து, இராமருக்குச் சுக்கிரீவன் வாக்களித்திருந்தபடி மாரிக்காலம் கழிந்தும் இன்னும் சீதையைத் தேடவேண்டிய ஏற்பாடுகள் நடைபெறாததால் கிட்கிந்தைக்கு அபாயம் வந்துவிடுமே என்று அஞ்சி, என்ன செய்வதென்று ஆலோசனை செய்யும்போதே இலக்குமணன் கிட்கிந்தையின் இராசவீதிக்கு வந்துவிட்டான்.



அந்தச் சமயத்தில் அனுமான் தாரையை அணுகி, 'நீங்கள் சென்று இலக்குமணரை எதிர்கொண்டு கேட்டால் அவருடைய கோபம் தணியலாம்; அவர் கருத்தையும் அறியலாம்' என்று ஆலோசனை சொன்னான். உடனே தாரை அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு, அங்கிருந்த ஆண்களையெல்லாம் போய்விடச் சொல்லிப் பணிப்பெண்கள் கூட்டத்தோடு இலக்குமணருக்கு எதிர்ப்படுகின்றாள்.

“நீரெலாம் அயல்நீங்குமின் நேர்ந்து யான்
வீரன் உள்ளம் விளங்குவல்” என்றலும்,
பேர நின்றனர் யாவரும்; பேர்கலாத்
தாரை சென்றனள் தார்குழ லாரொடும்.

'நீங்களெல்லாரும் அப்புறம் போய்விடுங்கள்; நான் நேரிற் சென்று அந்த வீரனுடைய கருத்தை அறிகிறேன்' என்று தாரை சொன்னவுடன் அங்கிருந்த (ஆடவர்கள்) எல்லாரும் ஒதுங்கிவிட்டனர். பிறகு எப்போதும் தன்னுடன் இருப்பவர்களாகிய மலர் சூடிய கூந்தல்களையுடைய பெண்களுடன் தாரை போனாள்.

உரைசெய் வானர வீரர் உவந்து உறை
அரைசர் வீதிகடந்து அகன் கோயிலைப்
புரைசை யானையன்னான் புகலொடும் அவ்
விரைசெய்வார் குழாத் தாரை விலக்கினாள்.

யானை போன்ற இலக்குமணன், வானரத் தலைவர்கள் மகிழ்ச்சியுடன் வசிக்கும் அரச வீதியைக் கடந்து பரந்து கிடந்த அரச மாளிகையின் வாசலிற் புகுந்தவுடன், மணங்கமழும் பெண்கள் கூட்டத்துடன் தாரை குறுக்கிட்டாள். பெண்களின் பெரிய கூட்டம் வந்து வழிமறிக்க,

ஆர்க்கும் நூபுரங்கள் பேரி அவர்மேனி தடந்தேர் ஒத்த
வேல்கண்; வெம்புருவம் போர்வில் மெல்லியர் வளைத்தபோது

பேர்க்கரும் சீற்றம்பேர முகம் பெயர்ந்து ஒதுங்கிற்று; அல்லால்
பார்க்கவும் அஞ்சினான் அப்பணையினும் உயர்ந்த தோளான்.

ஓசையிடும் காற்சிலம்புகளே பேரிகை போலவும், அப்பெண்களின் வடிவமே தேர்களாகவும், வளைந்த புருவங்களே வில்களாகவும் கொண்ட பெண்களின் சேனை தன்னை வளைத்துக்கொண்டபோது, நீக்கமுடியாத அவனுடைய கோபமும் நீங்கி, முகத்தைத் திருப்பிக்கொண்டு ஒருபுறம் ஒதுங்கினானேயல்லாமல் அவர்களைப் பார்க்கவும் கூசினான், அரசமரத்தைவிடப் பருத்துயர்ந்த தோள் வலியுடைய இலக்குமணன்.

தாமரை வதனம் சாய்த்துத், தனுநெடுந் தரையில் ஊன்றி,
மாமியர் குழுவின் வந்தான் ஆமென மைந்தன் நிற்பப்
பூமியில் அணங்க னார்தம் பொதுவிடைப் புகுந்து பொற்றோள்
தூமன நெடுங்கண் தாரை நடுங்குவாள் இனைய சொன்னாள்.

தாமரை போன்ற தன் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு, வில்லைத் தரையில் ஊன்றி, மாமியார்களின் கூட்டத்தின் மத்தியில் நிற்கும் மருமகனைப்போல் இலக்குமணன் நிற்க, தேவலோகத்தைவிட்டுப் பூலோகத்துக்கு வந்துள்ள அரம்பையர் போன்ற பெண்களை விலக்கிக்கொண்டு முன்னால் வந்து, பரிசுத்தமான மனமுடைய நீண்ட கண்களுள்ள தாரையானவள் நடுங்கிக்கொண்டு பின்வருமாறு பேசலானாள்:

"அந்தமில் காலம் நோற்ற ஆற்றல் உண்டாயின் அன்றி
இந்திரன் முதலினோரால் எய்தலரும் இயல்பிற்று அன்றே!
மைந்த, நின்பாதம் கொண்டு எம் மனைவரைப்பெற்று வாழ்ந்தேம்;
உய்ந்தனம்; வினையும் தீர்ந்தோம்; உறுதிவேறு இதின் ஊங்கு உண்டோ"

எல்லையில்லாக் காலம் தவம் செய்த தபோபலம் இருந்தாலல்லாமல் இந்திரன் முதலானவர்க்கும்கூட



அடையக்கூடிய பாக்கியம் அல்லவே; ஐய உங்களுடைய பாதங்கள் நோவ எங்கள் மனைக்கு, நீங்கள் வரப்பெற்றதனால் வாழ்வடைந்தோம்; ஈடேறிவிட்டோம்; எங்கள் தீவினைகளெல்லாம் நீங்கிவிட்டன; இதைக்காட்டிலும் நாங்கள் அடையக்கூடிய பாக்கியம் வேறு என்ன இருக்கிறது?

"வெய்தில் நீவருதல் நோக்கி, வெருவும் நும்சேனை வீர,
செய்திதான் உணர்ந்திலாது; திருவுளம் தெரித்தி" என்றாள்.
அய்ய நீ ஆழிவேந்தன் அடியினை பிரிந்திலாதாய் எய்தியது
என்ன?" என்றாள் : இசையினும் இனிய சொல்லாள்.

வேகமாக நீர் வருவதைக் கண்டு செய்தி என்னவென்று தெரியாமல் உங்கள் சேனையாகிய வானரர்கள் பயப்படுகின்றார்கள்; ஐய, நீங்கள் சக்கரவர்த்தியான இராமருடைய திருவடிகளைப் பிரிந்து வரமாட்டீர்களே, இப்படி அவரைப் பிரிந்து தனியே வந்தது என்ன காரணம்? என்று சங்கீதத்தினும் இனிய சொற்களைச் சொல்லி, தாரை கேட்டாள்.

வில்லைத் தரையில் ஊன்றித் தலை குனிந்து கொண்டிருந்த இலக்குமணன் அந்த இசையினும் இனிய குரலைக் கேட்டு,

ஆர்கொலோ உரைசெய்தார் என்று அருள்வரச் சீற்றம்அஃகாப்
பார்குலாம் முழுவெண் திங்கள் பகல் வந்த வடிவம் போலும்
ஏர்குலாம் முகத்தினாளை இறைமுகம் எடுத்து நோக்கித்
தார்குலாம் அலங்கல் மார்பன் தாயரை நினைந்து நைந்தான்.

(அப்படி இனிமையாகப் பேசினது) யாராக இருக்கும் என்று கருணை வந்து, கோபம் குறைந்து, உலகம் கண்டு மகிழ்கின்ற பூரண சந்திரன் பகலில் உதயமானது போன்ற அழகு பொருந்திய முகத்தவளாகிய தாரையைச் சற்றே முகமெடுத்துப் பார்த்து, இலக்குமணன் (அவளுடைய

அமங்கல வடிவத்தைக் கண்டு) தன்னுடைய தாய்மாரை நினைத்து வருத்தமுற்றான்.

மங்கல அணியை நீக்கி, மணியணி துறந்து, வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றான்.

மங்கல ஆபரணமாகிய தாலியை நீக்கிவிட்டு, மற்ற மணிகள் பதித்த ஆபரணங்கள் எதையும் அணியாமல், கூந்தலில் வாசனையுள்ள மலர்களைச் சூடாமல், குங்குமமும் சந்தனமும் பூசிக்கொள்ளாமல், மதர்த்த மார்புகளும் கமுகுபோன்ற கழுத்தும் மறையும்படி உடலை ஆடையால் மூடிக்கொண்டு நின்ற தாரையைப் பார்த்த வள்ளல் இலக்குமணன் தன் கண்களில் நீர் பெருக அழுதுவிட்டான். ஏனென்றால்,

"இனையராம் என்னை ஈன்ற இருவரும் என்ன வந்த
நினைவினான்" அயர்ப்புச் சென்ற நெஞ்சினன் நெடிது நின்றான்;
வினவினாட்கு எதிர் ஓர்மாற்றம் விளம்பவும் வேண்டுமென்று அப்
புனைகுழலாட்கு வந்த காரியம் புகல்வதானான்.

'என்னைப்பெற்ற தாய்மார்கள் இருவரும் (சுமித்திரையும் கோசலையும்) இப்படித்தானே அமங்கலிகளாக இருக்கிறார்கள்' என்ற நினைப்பு வந்து மெய்ம் மறந்தவனாக நெடுநேரம் செயலற்று நின்றான்; (பிறகு தான் வந்த காரியம் என்னவென்று) கேட்டவளுக்கு மறுமொழி ஒன்று சொல்லவேண்டுமே என்று வந்த காரியத்தைச் (தாரைக்குச்) சொல்லலானான்.

கம்பர் காட்டுகின்ற தாரையைப் பற்றி நாம் இப்போது கவனிக்கவேண்டியது இவ்வளவுதான். வாலி இறந்தபின் சுக்கிரீவன் தாரையைத் தாயென வணங்கி அரசாண்டான்



என்பதும், கிட்கிந்தைக்கு வந்த இலக்குமணன் தாரையின் அமங்கல கோலத்தைக் கண்டவுடன் அவளைத் தன் தாய்மார்கள் சுமித்திரை, கோசலை ஆகிய இருவருக்கும் சமானமாக எண்ணினான் என்பதும் குறிப்பிடத்தக்கன. வாலிக்குப் பின் தாரை கைம்பெண் நோன்பு காத்தாள் என்பது கம்பர் வாக்கு. வால்மீகி முனிவர் வாலி இறந்தபோது காட்டுகின்ற தாரைக்கு இந்த நிலைதான் பொருத்தமானது. அப்படியிருக்க, முனிவர் தாரையைச் சுக்கிரீவனுக்குக் காமப் பெண்ணாக்கியது ஏனோ தெரியவில்லை. வால்மீகத்துக்கும் கம்பன் காவியத்துக்கும் உள்ள எண்ணிறந்த மாறுபாடுகளில் மகத்தானவற்றுள் இதுவும் ஒன்று.

**வாலிவதம்:**

வாலியை இராமன் மறைந்து நின்று கொன்றது சரியா? இராமன் க்ஷத்திரியன்; சுத்தவீரன்; அரச தர்மத்தின்படி நடக்க வேண்டியவன். பொதுவான தருமத்தையும் நடந்துகாட்ட வந்தவன். வாலி இராமனுக்கு எவ்வித குற்றமும் செய்தவனல்லன். தீயவரைத் தண்டித்து நல்லவர்களைக் காப்பாற்றக் கங்கணம் பூண்டவன் இராமன். தண்டிக்க வேண்டியவர்ளையும் அவர்கள் குற்றவாளிகளா என்பதை விசாரித்தறிந்த பிறகுதான் தண்டிக்கவேண்டும். மறைந்திருந்து திருட்டுத்தனமாகச் செய்யக்கூடாது. இராமன், வாலி தண்டிக்கப்பட வேண்டியவனா என்பதை விசாரித்தானா? தண்டிக்கும்போது ஏன் மறைந்திருந்து பாணம் விட்டுக் கொன்றான்?

இந்தக் கேள்விகளுள் முதற் கேள்வியாகிய 'விசாரித்தறிந்தானா?' என்பதற்கு ஓரளவு சமாதானம் வால்மீகி, கம்பர் ஆகிய இரண்டு மகா கவிகளும்

ஒன்றாகத்தான் சொல்லுகின்றார்கள். அதாவது கவந்தன் என்பவன் இராமருடைய தரிசனத்தால் தனக்குச் சாபத்தால் உண்டாகியிருந்த விகாரமான வடிவம் நீங்கிப் பழைய தேவ வடிவை அடைந்தான். அவன் தேவ வடிவோடு விண்ணிற் கிளம்பித் தேவலோத்துக்குப் போகும்போது ஆகாயத்திலிருந்து கொண்டு இராம லட்சுமணர்களை வாழ்த்தினான். அப்போது கவந்தன் அவர்களுக்குச் சுக்கிரீவனுடைய பெருமைகளைச் சொல்லி, சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் உள்ள பகைமையையும் சொல்லி, அவர்கள் சுக்கீரிவனுடைய நட்பை உறுதிப்படுத்திக்கொண்டு அவனுக்கு உதவி செய்தால் அந்தச் சுக்கிரீவன் சீதை எங்கேயிருந்தாலும் கண்டுபிடிப்பான் என்றும், சுக்கிரீவனால் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகப்போவது நிச்சயம் என்றும் தீர்க்கதரிசனம்போல் சொல்லுகிறான். மேலும் அந்தச் சுக்கிரீவன் இருக்குமிடத்திற்குப் போகவேண்டிய வழியையும் சொன்னான்.

தேவ சொரூபத்தில் ஆகாயத்திலிருந்து கொண்டு கவந்தன் சொன்னதைச் சத்தியமாகக்கொண்டு அப்போதே இராமர் சுக்கிரீவனைத் தன்னுடைய மனைவியைத் தேடித் தரப்போகிற உத்தம நண்பனாகவும் அவனுக்கு விரோதியான வாலியைத் தனக்கும் விரோதியாகவும் தீர்மானித்து விட்டதாகக் கொள்ளலாம். ஆகவே வாலியைப் பற்றிய விசாரணைக்கு இதுபோதும்.

ஆனால் இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றது எப்படி நியாயமாகும்? இதற்குச் சமாதானம் சொல்ல வால்மீகி இராமாயணத்தில் இடமில்லை. ஆனால் கம்பர் இதற்குச் சரியான சமாதானம் சொல்லக்கூடிய ஒரு காரணத்தைக் கற்பித்துக்கொண்டிருக்கிறார். அது வேறு எந்த இராமாயணத்திலும் இல்லாத புதுமை.



என்னவென்றால் வாலிக்கு ஒரு வரம் உண்டு. அதன்படி வாலிக்கு விரோதியாக யார் வந்து அவனுக்கு எதிரில் நின்றபோதிலும் அப்படிப்பட்டவனுக்கு உள்ள சகல சக்திகளிலும் சரி பாதி வாலிக்கு வந்துவிடும். எதிரியின் பாதிபலம் தனக்கு வந்துவிட்டால் அந்தப் பாதி பலத்துக்கு எதிரியிடத்தில் மிஞ்சியிருக்கிற பாதி பலம் சரியாகிவிடுகிறது. வாலியின் சொந்த பலம் எப்போதும் அதிகமாகவே இருக்கிறது. அதனால் அவனைப் பகைத்துக் கொள்ளுகிற எவரும் அவனிடம் தோல்வியுற்றே தீரவேண்டும்.

இராமன் வாலியைப் பகைவன் என்று கொள்ளாமல் அரச நீதியின்படி அவனுக்குத் தூது அனுப்பிச் சுக்கிரீவனுடைய மனைவியை மீட்டுக்கொடுத்து உதவி செய்யலாமே என்றால், அந்தப் பேச்சை வாலி ஏற்றுக்கொள்ளாவிட்டால் உடனே இராமன் வாலிக்குப் பகைவன் என்ற நிலைமையை அடைந்துவிடுகிறான். அதன் பிறகு வாலியை ஒன்றும் செய்யமுடியாது. சுக்கிரீவனுக்கு உதவி செய்யமுடியாமற் போவதுடன் தானும் தோல்வியுறவேண்டும். ஆதலால் கவந்தனுடைய யோசனையின்படி சுக்கிரீவனைத் தனக்கு நண்பனாகக் கொண்டுவிட்ட இராமன், சுக்கிரீவனுடைய விரோதியான வாலியை வெல்லத் ‘தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்’ வேண்டும் என்ற முறையில், வாலிக்கு இருந்த அந்த வரத்தைக் கருதி அவனை மறைந்திருந்து கொல்லவேண்டியதே அரச தர்மமாகிவிட்டதாகக் கற்பித்துக் கம்பர் இராமனைக் குற்றமற்றவனாக்குகின்றார்.

இப்படிப்பட்ட வரம் வாலிக்கு உண்டு என்பதைக் கம்பர் வாலியின் வாக்காகவே சொல்லுகின்றார். அது எப்படியெனில் இராமனுடைய ஆணையினால் சுக்கிரீவன்

வாலியைப் போருக்கழைக்கிறான். உடனே வாலி சுக்கிரீவனை எதிர்க்கப் புறப்படுகின்றான். அந்தச் சமயத்தில் வாலியின் மனைவியாகிய தாரை அவனைத் தடுத்து, இதுவரையிலும் பயந்து ஓடி ஒளித்துக் கொண்டிருந்த சுக்கிரீவன் இப்போது திடீரென்று வலிய வந்து போருக்கு அழைப்பதால், அவனுக்கு இது வரையிலும் இல்லாத பெருந்துணை கிடைத்திருக்கவேண்டும் என்பதை ஊகிக்கவேண்டும் என்று சொன்னாள். அதற்கு வாலி, தன்னுடைய பிரதாபத்தைப் பலவாறு விரித்துரைத்துவிட்டுத் தன்னை வெல்ல யாராலும் முடியாது என்றும், அதனால் யாரும் தன்னை எதிர்க்கமாட்டார்கள் என்றும். 'மூடர்கள் தாம் என்னை எதிர்ப்பார்கள்; அப்படி எதிர்த்தாலும் அவர்கள் பெற்றுள்ள தவப்பயனாகிய வரங்களிலும் மற்ற வல்லமைகளிலும் உள்ளதில் சரிபாதி என்னுடையதாகிவிடும்; அதனால் என்னைப் பகைத்துக் கொள்வது எப்படி? நீ துயரத்தை விட்டொழிவாயாக – என்று நிதானமாக உறுதி கூறினான்.

## 9. பெருந்தகைமைக்குப் பொருந்தாமை

**வா**ல்மீகி இராமாயணத்தில், இராமர் தமது மேலான தகைமைக்குப் பொருந்தாத விதத்தில் பல இடங்களில் காணப்படுகிறார். இதற்கு ஓர் உதாரணம் அவர் சூர்ப்பணகையுடன் பேசுவது. சூர்ப்பணகை இராமரைப் பார்த்து மோகங்கொண்டு, தன்னை மணந்துகொள்ளும்படி கேட்பது மிகவும் அநாகரிகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காட்சிகளைக் கம்பர் முற்றிலும் வேறுவிதமாக மாற்றி



அரக்கருடைய மாயாவித்தனத்தையும் இராமருடைய பெருந்தகைமையையும் அழகுற அமைக்கிறார்.

வால்மீகி இராமாயணத்தில் சூர்ப்பணகை இராமரைச் சந்திப்பதும் மற்ற நிகழ்ச்சிகளும் பின்வருமாறு:

"சூர்ப்பணகை இராமரைக் கண்டு மயங்கி அவரை நோக்கி, 'சடைமுடி தரித்துத் தவவேடம் பூண்டு வில்லேந்திக் கொண்டு மனைவியுடன் ராக்ஷசர்கள் சஞ்சரிக்கும் இந்த இடத்திற்கு ஏன் வந்திருக்கிறீர்? நீர் வந்த காரணம் என்ன? அதன் உண்மையை எனக்குச் சொல்லவேண்டும்', என்று வினவினாள். இவ்வாறு அரக்கியாகிய சூர்ப்பணகை தம்மைக் கேட்கவே, எல்லா விஷயங்களையும் நேரியனவாக எண்ணும் குணமுள்ள இராமர் அவளைப் பார்த்து, "இந்திரனுக்கு ஒப்பாகிய பராக்கிரமம் பொருந்திய தசரதர் என்ற மன்னன் ஒருவர் இருந்தார். நான் அவருடைய மூத்த குமாரன். என்னை இராமன் என்று சொல்லுவார்கள். அதோ இருக்கிறாரே அவர் என் தம்பி இலட்சுமணர். எப்பொழுதும் என்னைச் சார்ந்து நிற்பவர்; இவள் என் மனைவி; சீதை இவள் பெயர். நாங்கள் எங்கள் தாய் தந்தையரின் உத்தரவுப்படி அறம் வளர்க்க இக்காட்டிற்கு வந்திருக்கிறோம். நீ யார் என்று அறிய விரும்புகிறேன். நீ யார் மகள்? உன் பெயர் யாது? நீ யாரைச் சேர்ந்தவள்? மனோகரமான உருவமுடைமையால் நீ அரக்கிபோலும். நீ இங்கு வந்த காரணம் என்ன? அதை உள்ளபடி சொல்லவேண்டும்," என்று கூறினார்.

இதைக் கேட்டுக் காமத்தால் வருத்தப்பட்டுக் கொண்டிருந்த சூர்ப்பணகை இராமரைப் பார்த்து, 'கேளும் இராமரே, நான் உண்மையைச் சொல்லுகிறேன். நான் சூர்ப்பணகை என்னும் அரக்கி, இஷ்டப்படி உருவங்கொள்ளும் சக்தி எனக்குண்டு. பார்ப்பவர்கள்

உள்ளத்தை நடுங்கச் செய்துகொண்டு நான் இந்தக் காட்டில் தனிமையாக எப்பொழுதும் சஞ்சரிப்பவள்.

இராவணன் என் தமையன். அவன் வெகு பலசாலி; அரக்கர்களுக்கெல்லாம் இறைவன். அவ்வீரன் விசிரவசுவுடைய குமாரன். அவனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். எப்பொழுதும் தூங்கிக் கொண்டேயிருக்கும் மகா பலம்பொருந்திய கும்பகர்ணனும், ராக்ஷச குலத்தில் பிறந்தும் வெகு தர்மாத்துமாவாய் ராக்ஷச குணமே இல்லாத விபீஷணனும், போரில் கீர்த்தி பெற்ற கரனும், தூஷணனுமாகிய இவர்கள் எல்லாரும் என் சகோதரர்கள். நான் இவர்கள் எல்லாரையும் விட்டு விட்டு என்னிஷ்டப்படி சஞ்சரிக்க வல்லவள்.

இராமரே, நான் தங்களைக் கண்டமாத்திரத்தில் தாங்கள் எனக்குப் புருஷனாக வேண்டுமென்று எண்ணிக்கொண்டு தங்களிடம் வந்திருக்கிறேன். நான் வெகு பலமுள்ளவள். என்னுடைய மகாபலத்தால் என்னிஷ்டப்படி எங்கும் சஞ்சரிக்கவல்லவள். என்றென்றைக்கும் என் கணவராகத் தாங்கள் ஆகவேண்டும். சீதை உங்களுக்கு என்ன செய்யப்போகிறாள்? வெகு விகாரமும் அவலக்ஷணமும் உள்ள சீதை உங்களுக்குச் சரியான மனைவியல்லள். நான்தான் தங்களுக்கு ஏற்ற மனைவி. ஆகையால் நீங்கள் என்னை மனைவியாக ஒப்புக்கொள்ளுங்கள்.

மகா விகாரமுள்ளவளும், கெட்டவளும், குரூபியும், சரிந்த வயிறுள்ளவளும் மனிதப் பிறப்பினளுமான இச்சீதையைத் தங்களுடைய தம்பி இலட்சுமணனுடன் சேர்த்து நான் புசித்து விடுகிறேன். அதன் பிறகு என் கணவரே, அநேக மலைகளின் சிகரங்களையும் அநேக ஆரணியங்களையும் என்னுடன்கூடப் பார்த்துக்கொண்டு தாங்கள் சுகமாகச் சஞ்சரிக்கலாம்' என்றனள். மயக்கம் கொண்ட சூர்ப்பணகை இவ்வாறு சொல்ல, பேசுவதில் வெகு சமர்த்தரான இராமர் சிரித்து அவ்வரக்கியைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்." (ஆரணிய காண்டம் 17–ம் சருக்கம்)



(அடுத்த சருக்கத்தில்) 'இவ்வண்ணம் காமவலையில் கட்டுண்டு பேசிய சூர்ப்பணகையைப் பார்த்து இராமர் சிறிது முறுவலித்துப் பரிகாசமாகக் கூறலுற்றார்:– 'மெல்லியலே, நான் கல்யாணமானவன். இவள் என் மனைவி. உன்னைப்போன்ற மங்கையர்கள் மற்றவர்களைக் கண்டால் சகியார்கள். என் தம்பி லக்ஷ்மணன் மிக நல்லவன்; அவனுக்கு மனைவியில்லை. அவன் அதி பலசாலி. அவன் மனைவியாற் பெறும் இன்பத்தை அறியான். சிறு பிராயத்தான். உன்னுடைய அழகான உருவத்துக்கு அவன்தான் சரியான புருஷன். ஆகையால் மேருமலையைச் சூரியனுடைய கிரணம்போய் அடைவதுபோல நீ அவனைப் புருஷனாக அடைந்தால் சக்களத்தி பயமில்லாமல் இருக்கலாம்.' இவ்வாறு இராமர் சொல்லவே காமத்தால் மோகித்திருந்த சூர்ப்பணகை உடனே அவரை விட்டுவிட்டு விரைவாக லக்ஷ்மணரிடம் ஓடி அவரைப் பார்த்து, 'வெகு அழகான உருவம் படைத்த தங்களுக்குத் தகுந்த மனைவி நான் ஒருத்தியே. தாங்களும் என்னுடன் சுகமாகத் தண்டகையின் இடமெங்கும் சஞ்சரிக்கலாம்' என்று சொன்னாள்.

இவ்விதமாகத் தம்மைப் பார்த்துச் சூர்ப்பணகை சொல்ல, பேசுவதில் சமர்த்தராகிய லக்ஷ்மணர் புன்னகை செய்து அவளை நோக்கி, 'தாமரை போன்ற அழகான நிறமுள்ள மாதே, நான் ஸ்வதந்தரம் உள்ளவனல்லன். என் தமையனாருடைய தாஸன். தாஸபூதனான எனக்கு நீ

மனைவியாகுவது நன்றாக விருக்கவில்லை. மிக்க சிறு பெண்ணாகிய நீ உன் மனோரதங்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்பின் வெகு பாக்கியசாலியான தமையனாருடைய மனைவியாகிவிடு. அதி குரூபியும், கெட்டவளும், அழகற்றவளும், சரிந்த வயிறுள்ளவளும், கிழவியுமாயிருக்கிற சீதையை அவர் கைவிட்டு உன்னையே மணம் புரிவார்.

நிகரற்ற நேரிழையே, வருணிக்கமுடியாத அழகமைந்தவளே, கொஞ்சமாவது பகுத்தறிவுள்ள ஒருவன், இவ்வித சிலாக்கியமான வடிவத்தைத் தனக்கு வேண்டாமென்று தள்ளிவிட்டு மனிதசாதியிற் பிறந்த மாதிடத்தில் அன்பு வைப்பானா?' என்று கூறினார்.

இது பரிகாசம் என்றறியும் புத்தியில்லாத சரிந்த வயிறுடைய அக்கொடிய ராக்ஷசி அவர் சொன்ன சொல்லை உண்மையென்றெண்ணிக் காதலால் மயங்கிச் சீதாதேவியுடன் பர்ணசாலையில் உட்கார்ந்திருந்த, தெவ்வரை அடக்கும் திறலுடைய நிகரற்ற பராக்கிரமமுடைய இராமரை நாடிச்சென்று அவரை நோக்கி, 'இந்த அழகற்ற கெட்ட நடத்தையுள்ள, சரிந்த வயிறுள்ள கிழவியை மனைவியாக அடைந்திருக்கிறபடியால் தாங்கள் என்னிடம் அன்பற்றிருக்கிறீர்கள். மனுஷியாகிய இப்பேதையை நான் இதோ தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கப் புசித்துவிடுகிறேன்,' என்று சொல்லி, எரிகின்ற அக்கினி போன்ற கண்களையுடைய அவ்வரக்கி வெகு கோபத்துடன் உரோகிணி நக்ஷத்திரத்தை ஒரு தூமகேது சீறிச்செல்வதுபோல், மான்போன்ற பார்வையுடைய சீதையை நோக்கி ஓடினாள். காலபாசத்துக்கு ஒப்பாக அவ்வாறு ஓடிவரும் அரக்கியை வலிமிகுந்த இராமர் தடுத்து வெகு கோபங்கொண்டு லக்ஷ்மணரைப் பார்த்து, 'கொடிய குணமுள்ள துஷ்டர்களுடன் விளையாடல் ஒருபொழுதும் கூடாது. சீதையினுடைய உயிருக்கு நாசம் வரப்பார்த்தது. குரூபியும், கொடியவளும், மதம் பிடித்தவளும், வயிறு பெருத்தவளுமாகிய இந்த ராக்ஷசியை உருவம் குலைத்துவிடு,' என்றார்.



இராமர் அவ்வாறு சொல்ல, லக்ஷ்மணர் சூர்ப்பணகையைப் பார்த்து வெகுகோபங்கொண்டு தமது கத்தியை எடுத்து அவளுடைய காதுகளையும் மூக்கையும் அறுத்துவிட்டார்.

தனது மூக்கும் காதும் வெட்டுண்டவுடன் சூர்ப்பணகை வெகு பயங்கரமாகக் கதறிக்கொண்டு தான் வந்த வழியாகவே காட்டுக்குள் ஓடினாள். மகா கோரமுள்ள அவ்வரக்கி அங்கபங்கமடைந்தவுடன் தேகமெல்லாம் இரத்தம் வழிந்தோட மழைக்காலத்தில் மேகம் ஒலிப்பதுபோலச் சத்தமிட்டுக்கொண்டு, தனது கைகளை மேலே உயர்த்திக்கொண்டு காட்டில் புகுந்தாள்.

அதன் பிறகு அவள் கரன் என்ற தனது தமையனிருந்த ஜனஸ்தானத்துக்குச் சென்று ராக்ஷசர்கள் சூழச் சபையில் பயங்கரமாக விளங்கிக் கொண்டிருந்த அவன் முன்பாக ஆகாசத்திலிருந்து இடிவிழுவதுபோலப் போய் விழுந்தாள். அதன் மேல் அவள் பயத்தாலும் மோகத்தாலும் மூர்ச்சையடைந்து அது தெளிந்தவுடன், அவனுக்கு, சீதா லக்ஷ்மணரோடு இராமர் பஞ்சவடியில் வந்திருப்பதையும் தான் அங்க பங்கமடைந்த கதையையும் தன்மேல் இரத்தமோடும் வகையையும் மற்றெல்லாச் சமாசாரங்களையும் தெரிவித்தாள்." (ஆரணியகாண்டம் 18—ஆம் சருக்கம்).

சூர்ப்பணகை இராமரைக் கண்டது முதல் அவள் மூக்கும் காதும் அறுபடுகிறவரைக்கும் வால்மீகி — முனிவர் சொல்லுவது இவ்வளவுதான்.

இதே கதைப் பகுதியைக் கம்பர் எப்படிச் சொல்லுகிறார் என்பதைப் பார்ப்போம்:

தண்டகாரணியத்தில் பஞ்சவடி என்னுமிடத்தில் தம்பியால் கட்டப்பட்ட சாலையில் இராமனும் சீதையும் இருக்கும்போது,

*நீலமா மணிநிற நிருதர் வேந்தனை*
*மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்;*
*மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்விளை*
*காலம்ஓர்ந்து உடன்உறை கடிய நோயனாள்.*

இருண்ட நீலமணிபோல் கருத்த நிறமுடைய அரக்கரின் மன்னவனாகிய இராவணனை நிர்மூலமாக அழித்துவிடும் தன்மையுடையவளாய், பிறக்கும்போதே உடன் பிறந்து தன்னுடைய காலம் வருமளவும் காத்திருந்து உயிரைக் கொன்றுவிடுகிற கர்ம வியாதியைப்போல் (இராவணன் உடன்பிறந்த) சூர்ப்பணகை என்பவள்,

*வெய்யதுஓர் காரணம் உண்மை மேயினள்;*
*வைகலும் தமியள் அவ்வனத்து வைகுவாள்;*
*நொய்தின் இவ்வுலகெலாம் நுழையும் நோன்மையள்;*
*எய்தினள்; இராகவன் இருந்த சூழல்வாய்.*

கடுமையான ஒரு காரணம் உடையவளாய் எப்போதும் அந்த வனத்தில் வசிப்பவளாய் (வேண்டும்போது) எந்த உலகத்திலும் நுழையக்கூடிய சக்தியுடையவளான சூர்ப்பணகை இராகவன் இருந்த இடத்துக்கு வந்தாள்.

*எண்தகும் இமையவர் அரக்கர் எங்கண்மேல்*
*விண்டனர் விலக்குதி என்ன மேலைநாள்*
*அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயனைக்*
*கண்டனள் தன் கிளைக்கு இறுதி காட்டுவாள்.*



எண்ணிக்கை மிக்க தேவர்கள் 'அரக்கர்கள் எங்களைத் துன்பப்படுத்துகிறார்கள் அதை விலக்கியருளவேண்டும்' என்று வேண்டிக்கொள்ள முன்னே படுத்துறங்கிய (ஆதிசேடனாகிய) பாம்பணையை விட்டு வந்தவனாகிய இராமனைக் கண்டனள், தன்னுடைய சுற்றத்தாருக்கெல்லாம் அழிவை உண்டாக்கப்போகிற சூர்ப்பணகை.

இராமனைக் கண்டவுடன் அவனுடைய அற்புத அழகில் சொக்கிப் போனவளாய் அவன்மீது மோகங்கொண்டு இராமனுடைய அழகைத் தனக்குள்ளேயே பலவாறு வருணித்து மகிழ்ந்தாள். நெடுநேரம் அவனுடைய அழகைப் பார்த்துக்கொண்டே நின்றாள்.

*நின்றவள் இருந்தவன் நெடிய மார்பகம்*
*ஒன்று வென்; அன்றெனின் அமுதம் உண்ணினும்*
*பொன்று வென்; போக்குஇனி அரிதுபோன் மெனா*
*சென்று எதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள்.*

அப்படி நின்ற அவள் 'இங்கிருக்கும் இவனுடைய அகன்ற மார்பைத்தழுவி (காம இன்பம்) அனுபவிப்பேன்; அல்லாவிட்டால் அமிர்தத்தை உண்டாலும் என் உயிர் தரிக்காது (இறந்தே போவேன்); இந்த ஆசையை விட்டுவிட முடியாது போலிருக்கிறதே' என்று நினைத்து, அவனுக்கு முன்னால் போய் நிற்பதற்கு என்ன செய்யலாம் என்று வழிதேடி ஆலோசனை செய்தாள்.

*'எயிறுடை அரக்கி எவ்வுயிரும் இட்டதுஓர்*
*வயிறுடையாள்' என மறுக்கும்; ஆதலால்*
*குயில்தொடர் குதலைஓர் கொவ்வை செய்யவாய்*
*மயில்தொடர் இயலியாய் மருவல் நன்று எனா*

'இவள் நீண்டு வளைந்த பற்களையுடைய அரக்கி, எல்லாவிதமான சீவராசிகளையும் தின்று நிரம்பிய

வயிறுடையவள்' என்று என்னை ஏற்றுக்கொள்ள மறுப்பான். ஆகையினால், நான் இப்போது குயில் போன்ற இனிய ஓசையுள்ள சொல்லுடையவளாகவும். கோவைப் பழத்தைப் போன்ற சிவந்த உதடுகளையுடையவளாகவும், மயில்போன்ற சாயலுடையவளாகவும் இருக்கும் வடிவமெடுத்து அவனை நெருங்குவதுதான் நல்லது' என்று தீர்மானித்து,

*பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா*
*அங்கையி னாயமந் திரத்தை ஆய்ந்தனள்;*
*திங்களிற் சிறந்து ஒளிர் முகத்தள் செவ்வியள்*
*பொங்கொளி விசும்பினிற் பொலியத் தோன்றினாள்.*

தாமரையில் உறைபவளாகிய திருமகளை மனத்தில் நினைத்துத் தனக்குத் தெரிந்திருந்த மந்திரத்தைத் தியானித்தாள்; உடனே பூரண சந்திரனைப்போல் பிரகாசிக்கும் முகத்தோடு அழகான பெண்ணாக மாறி அவளுடைய பிரகாசம் ஆகாயத்திலும் வீசும்படிக் கான வடிவத்தோடு விளங்கினாள்.

*பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர்ப் பல்லவம் அனுங்கச்*
*செஞ்செவிய கஞ்சம்நிமிர் சீறடியளாகி*
*அஞ்சொல் இள மஞ்ஞையென அன்னம்என மின்னும்*
*வஞ்சியென நஞ்சமன வஞ்சமகள் வந்தாள்.*

பஞ்சுபோல் மிருதுவாகவும், பிரகாசமுள்ள மிகக் குளிர்ச்சியான இளந்தளிர்கள் பட்டாலும் உறுத்தும்படியான செக்கச் சிவந்த தாமரையைவிட அழகான பாதங்களையுடையவளாக, இனிய சொற்களைப் பேசும் இளமயில் போன்ற சாயலையுடையவளாய், அன்னம்போல் நடந்து, மின்னுகின்ற வஞ்சிக்கொடிபோல் விஷத்துக்குச் சமானமான மாயக்காரி வந்தாள்.



*பொன்ஒழுகு பூவிலுறை பூவைஎழில் பூவைப்*
*பின்னெழில் கொள் வாளிணைபிறழ்ந்து ஒளிர்முகத்தாள்*
*கன்னிஎழில் கொண்டது கலைத்தட மணித்தேர்*
*மின்இழிவ தன்மைஇது விண்ணிழிவ தென்ன.*

அழகு சொட்டுகின்ற தாமரையில் வீற்றிருக்கும் மகாலட்சுமி போன்ற அப்பெண், அழகுமிக்க அவளுடைய வாள் போன்ற இரு கண்களும் பிறழ்ந்து ஒளி வீசுகின்ற முகத்தையுடையவளாக, ஒரு கன்னிப்பெண் போல ஆடை புனைந்த மேனியுடன் ஆகாயத்திலிருந்து மின்னல்கொடி இறங்கி வந்ததுபோல்,

*கானின்உயர் கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி*
*மேனிநனி பெற்றுவிளை காமநெறி வாசத்*
*தேனின்மொழி உற்றினிய செவ்வி நனிபெற்று ஓர்*
*மானின்வழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்.*

அந்தக் கானகத்தில் வளர்ந்த ஒரு கற்பக மரம் (நினைத்தவுடனே) உண்டாக்கிய பிரகாசமுள்ள அப்பெண், நல்ல வடிவுடையவளாய், காம ஆசை மூட்டக் கூடியதான வாசனையுள்ள தேன்போலத் தித்திக்கும் சொற்களையுடையவளாய், எல்லா அழகுகளும் அமையப்பெற்று, மான் விழிகளோடு ஒரு மயில் வருவதுபோல் வந்தாள்.

*நூபுரமும் மேகலையும் நூலும் அறல் ஓதிப்*
*பூமுரலும் வண்டும்இவை பூசலிடும் ஓசை*
*தாமரை செய்கின்ற தொருதையல் வரும் என்னாக்*
*கோமகனும் அத்திசை குறித்தனன் விழித்தான்.*

பாதச் சிலம்புகளும், மேகலாபரணமும், மணிவடங்களும், கூந்தலில் சூடிய மலர்களை மொய்க்கும் வண்டுகளும் ஆகிய இவைகளின் ஓசைகள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கிளப்பிய இரைச்சல், ஒரு பெண் வருகிறாள்

என்பதைத் தெரியப்படுத்த, அரசகுமாரனாகிய இராமனும் இரைச்சல் வந்த அந்தத் திசையில் திரும்பிப் பார்த்தான்.

விண்அருள வந்ததொரு மெல்அமுதம் என்ன
வண்ணமுலை கொண்டுஇடை வணங்கவரு போழ்தத்து
எண்ணருளி ஏழைமை துடைத்து எழும் மெய்ஞ்ஞானக்
கண் அருள்செய் கண்ணன் இருகண்ணின் எதிர்கண்டான்

தேவலோகத்தவருடைய அருளினால் வந்த ஒரு சிறந்த அமுதம்போலக் கனத்த தனங்களைத் தாங்கமாட்டாமல் இடை வளைய அந்தப் பெண் நடந்து வருவதை, சிந்தனையைத் தந்தருளி அறியாமையை அகற்றி, மெய்ஞ்ஞான அறிவைக் கொடுத்தருளிய (பகவத் கீதையை உபதேசித்த) கண்ணனாகிய இராமன் தன்னுடைய இரண்டு கண்களுக்கெதிரில் கண்டான்.

பேருழைய நாகர்உலகில் பிறிதின் வானின்
பாருழையின் இல்லதொரு மெல்லுருவு பாரா
ஆருழை அடங்கும் அழகிற் கவதிஉண்டோ
நேரிழையர் யாவரிவர் நேரென நினைத்தான்.

பேரிடமான நாகலோகத்திலும், மற்ற உலகங்களிலும், தேவலோகத்திலும் இந்தப் பூமியிலும் இல்லாததான அந்த அபூர்வமான வடிவத்தைக்கண்டு, அழகு என்பது எந்த ஒரு தனி மனிதரிடத்தும் முற்றிலும் அமைந்துவிட்டதாக இல்லை; அழகுக்கு எல்லையும் உண்டோ! பெண்களில் எந்தப் பெண் இவளுக்கு இணையாகக் கூடும்!' என்று எண்ணினான்.

அவ்வயின ஆசைதன் அகத்துடைய அன்னாள்
செவ்வி முகம் முன்னிஅடி செங்கையின் இறைஞ்சா
வெவ்விய நெடுங்கண் அயில் வீசிஅயல் பாரா
நவ்வியின் ஒதுங்கி இறைநாணி அயல்நின்றாள்.

அப்போது, மனத்தில் காம ஆசையுடைய அவள், அழகான முகத்தை அசைத்து (இராமருடைய) பாதங்களைத் தன் சிவந்த கைகளால் வணங்கி, கூர்மையுள்ள நீண்ட அவளுடைய வேல் போன்ற கண்களை வீசி வேறு பக்கத்தில் பார்வையைத் திருப்பிக்கொண்டு, சற்றே வெட்கப்பட்டுக்கொண்டு அருகில் நின்றாள்.



"தீதில்வரவு ஆகதிரு நின்வரவு சேயோய்
போதஉளது எம்முழைஓர் புண்ணியம் அதன்றோ
ஏதுபதி? ஏதுபெயர்? யாவர் உறவு?" என்றான்
வேதமுதல் பேதைஅவள் தன்நிலை விரிப்பாள்.

'மகளே, உன் வரவு தீமையற்ற நல்வரவாகட்டும். நீ எம்மிடை வர, நான் ஏதோ புண்ணியம் செய்திருக்கவேண்டும். எந்த ஊர்? என்ன பெயர்? உன் உறவினர்கள் யார்?' என்று வேதங்களுக்கெல்லாம் தலைவனான இராமன் சொன்னான்; அந்தப் பேதைப் பெண் தன் நிலைமையை விரித்துரைக்கலானாள்.

"பூவிலோன் புதல்வன் மைந்தன்புதல்வி; முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவனான செங்கையோன் தங்கை; திக்கின்
மாவெலாம் தொலைத்து வெள்ளிமலை யெடுத்து உலகம் மூன்றும்
காவலோன்பின்னை; காமவல்லியாம் கன்னி" என்றாள்.

நான், தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரமதேவனுடைய மகனுக்கு மகனுடைய மகள் (பிரமதேவனுடைய பேரன் மகள்); திரிபுரங்களையும் எரித்த மிக்க பலவானாகிய பரமசிவனுக்குத் துணைவனான (கைலாய மலையில் சிவனொடு வசிக்கும்) குபேரனுடைய தங்கை; திக்கு யானைகளையெல்லாம் வென்று வெள்ளிமலையாகிய கைலாய மலையைத் தூக்கி, மூன்று உலகத்தையும் அரசாளும் இராவணனுக்கு இளையவள்; என் பெயர் காமவல்லி; நான் இன்னும் கல்யாணமாகாத கன்னிகை — என்றாள்.

அவ்வுரை கேட்ட வீரன் ஐயுறும் மனத்தான் 'செல்கை
செவ்விதன்று; அறிதலாகும் சிறிதின்' என்று உணர 'செங்கண்
வெவ்வுரு அமைந்தோன் தங்கையென்றது மெய்ம்மை யாயின்
இவ்வுரு இயைந்ததன்மை இயம்புதி இயல்பின்' என்றான்.

அந்தச் சொற்களைக்கேட்ட இராமன் சந்தேகமடைந்தான்; 'இந்தப் பெண்ணினுடைய போக்கு ஒழுங்கானதாக இல்லை. அதைச் சிறிது நேரத்தில் தெரிந்துகொள்ள முடியும்' என்று எண்ணி, அந்தப் பெண்ணைப் பார்த்துச் 'சிவந்த கண்களும் பயங்கரமான உருவமும் உள்ள இராவணனுடைய தங்கை என்றால் இப்படிப்பட்ட (அழகான) உருவம் உனக்கு எப்படி வந்தது? உள்ளபடி சொல்லு' என்றான்.

தூயவன் பணியா முன்னம் சொல்லுவாள் சோர்விலாள்; "அம்
மாயவல் லரக்கரோடு வாழ்வினை மதிக்க லாதேன்,
ஆய்வரும் மனத்தேனாகி அறம்தலை நிற்ப தானேன்;
தீய்வினை தீய நோற்றுத் தேவரில் பெற்ற" தென்றாள்.

பரிசுத்தனாகிய இராமன் கேட்பதற்கு முன்னால் தயக்கமில்லாமல் சொல்லலானாள். 'நான் அந்த மாயக்காரர்களான (இராவணாதி) அரக்கர்களோடு சேர்ந்து வாழ விருப்பமில்லாமல், ஆராய்ந்து பார்க்கும் சிந்தனையுடன் தர்ம மார்க்கம் தவறாமல் இருந்து, (அரக்கர்களோடு பிறந்த) தீவினைகள் தீய்ந்து போகும்படியாகத் தவம் புரிந்து, தேவர்களிடத்தில் பெற்றது (இந்த நல்லுருவம்)' என்றாள்.

அதைக்கேட்ட இராமன்,

"இமையவர் தலைவனேயும் எளிமையின் ஏவல் செய்யும்
அமைதியின் உலகம் மூன்றும் ஆள்பவன் தங்கை யாயின்
சுமையுறு செல்வத்தோடும் தோன்றலை, துணையும் இன்றித்
தமியைநீ வருதற் கொத்த தன்மைஎன்? தையல்" என்றான்.



தேவர்களுக்குத் தலைவனான இந்திரனும்கூடப் பணிந்து ஏவல் செய்யும் பெருமையுடன் மூன்று உலகத்தையும் ஆளுகின்ற இராவணனுடைய தங்கையென்றால், நிறைந்த செல்வமுள்ளவளாகக் காணப்படாமல், ஒரு துணைப்பெண்கூட இல்லாமல் தனியாக நீ வரவேண்டிய காரணம் என்ன பெண்ணே? என்றான்.

அதற்கு அவள்,

வீரன்அஃது உரைத்தலோடும் மெய்யிலாள், "விமல யான் அச்
சீரியர் அல்லார் மாட்டுச் சேர்கிலென்; தேவர் பாலும்
ஆரிய முனிவர் பாலும் அடைந்தனென்; இறைவ ஈண்டுஓர்
காரியம் உண்மை நின்னைக் காணிய வந்தேன்" என்றாள்.

வீரன் அப்படிச் சொன்னவுடன் அந்த உண்மை இல்லாதவள் 'மாசற்றவரே, நான் அந்த ஒழுக்கம் கெட்ட அரக்கர்களுடன் சேருவதில்லை; தேவர்களிடத்திலும் மேலோர்களாகிய முனிவர்களிடத்திலும்தான் சகவாசம் செய்வேன்; தலைவனே, இப்போது ஒரு காரியம் இருப்பதால் உங்களைக் காண வந்தேன்" என்றாள்.

அன்னவள் உரைத்த லோடும் ஐயனும் 'அறிதற் கொவ்வா
நன்னுதல் மகளிர் சிந்தை நன்னெறிப் பாலவல்ல
பின்னிது தெரியும் 'என்னாப்' பெய்வளைத் தோளி என்பால்
என்னை காரியத்தை? சொல்அஃது இயையுமேல் இழைப்பல்' என்றான்.

அவள் அப்படிச் சொன்னதும் இராமனும் 'அறிய முடியாத இந்தப் பெண்ணினுடைய எண்ணங்கள் நல்லொழுக்கத்தைச் சேர்ந்தது அல்லல்போல் தோன்றுகிறது. பின்னால் அது தெரியவரும்' என்று எண்ணிக்கொண்டு, அவளைப் பார்த்து 'வளையல்கள் அணிந்துள்ளவளே, என்னிடத்தில் என்ன காரியமாக வந்தாய்? சொல்லு; முடியுமானால் செய்கிறேன்' என்றான்.

அதற்கு அவள்,

"தாமுறு காதல் தன்மை தாங்களே உரைப்பதென்பது
ஆமெனல் ஆவ தன்றே அருங்குல மகளிர்க்கு அம்மா
ஏமுறும் உயிர்க்கு நோவேன்; என் செய்கேன்? யாருமில்லேன்;
காமன்என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி," என்றாள்.

தங்களுக்குள்ள காதலின் தன்மையைத் தாங்களே வாய்விட்டுச் சொல்லுவது என்பது நல்ல குலத்திற் பிறந்த (என் போன்ற) பெண்களுக்குச் செய்யக்கூடிய காரியமல்ல; என்ன செய்வேன்? துணை புரியத் திக்கற்றவளாக இருக்கிறேன்; (அதனால் நானே சொல்லுகிறேன்). (காமப்)பித்து கொண்டுவிட்டேன்; என் உயிர் போய்விடும்போல் துன்பமடைந்திருக்கிறேன்! அந்தக் காமன் என்ற ஒருவன் செய்யும் கொடுமையிலிருந்து என்னைக் காப்பாற்றவேண்டும் – என்றாள்.

அதைக்கேட்ட இராமன்,

சேணுற நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வேறு
ஏணுற மிளிர்ந்து நானாவிதம் புரண்டு இருண்ட வாள்கண்
பூனியல் கொங்கை அன்னாள் அம்மொழி புகல்தலோடும்
நாண்இலள் ஐய, நொய்யள் நல்லளும் அல்லள்' என்றான்.

வெகுதூரப் பார்வையாக நீண்டு, உடனே திரும்பிச் சுருங்கி, செவ்வரிகள் சிதறுவதுபோல வெவ்வேறு விதமாகச் சுழலும் கரிய கண்களையுடையவளாய், ஆபரணங்களை அணிந்த கொங்கைகளையுடைய அப்பெண் அந்த வார்த்தை சொன்னவுடனே 'இவள் வெட்கங் கெட்டவள். மிகவும் அற்பத்தனமுடையவள், நல்லவளாகவும் இருக்கமுடியாது' என்று எண்ணினான்.

அப்படித் தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டு பதில் ஒன்றும் பேசாதிருப்பதைக் கண்ட அவள்,



பேசலன் இருந்த வள்ளல் உள்ளத்தின் பெற்றி ஓராள்
பூசல்வண்டு அரற்றும் கூந்தல் பொய்ம்மகள், 'புகன்ற என்கண்
ஆசைகொண்டு அருளிற்றுண்டோ அன்றெனல் உண்டோ' என்னும்
ஊசலால் உலாவுகின்றாள் மீட்டும் ஓர் உரையைச் சொல்வாள்.

பேசாமலிருந்த வள்ளல் இராமனுடைய மனநிலையை அறியாதவளாய், சத்தமிட்டு வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய அந்தப் பொய்க்காரி, 'என்மேல் ஆசை கொண்டருளி அப்படிப் பேசாமல் இருக்கிறாரா, அல்லது ஆசை கொள்ளவில்லை என்பதனாலா' என்று ஊசலாடும் மனத்தவளாகி, மறுபடியும் ஒரு வார்த்தை சொல்லலானாள்.

"எழுதரும் மேனியாய் ஈண்டு எய்தியது அறிந்திலாதேன்,
முழுதுணர் முனிவர் ஏவல் செய்தொழில் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மை யோடும் இளமையும் பயனின் றேகப்
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலும்" என்றாள்.

சித்திரத்தில் எழுதமுடியாத அழகுடையவரே, தாங்கள் இங்கே வந்திருப்பது இதுவரைக்கும் எனக்குத் தெரியாமற் போய்விட்டது; (தெரிந்திருந்தால் முன்னாலேயே வந்திருப்பேன்). அது தெரியாததால், முற்றும் உணரக்கூடிய முனிவர்களுக்குப் பணிவிடைகள் செய்யும் கடமைகள் மிகுந்தவளாய், குற்றமற்ற என் பெண்மையும் இளம்பருவமும் பயனற்றுப் போகும்படி, பொழுதும் வாழ்நாளும் வீணாகக் கழிந்துபோயின போலிருக்கிறது – என்றாள்.

அதைக்கேட்ட இராமன்,

"நிந்தனை அரக்கி நீதி நிலையிலாள்; வினைமற்ற ீண்ணி
வந்தனள் ஆகும் என்றே வள்ளலும் மனத்துட் கெ. ண்டான்;
சுந்தரீ மரபிற்கு ஒத்த தொன்மையின் துணிவிற்று அன்றால்
அந்தணர் பாவைநீ யான் அரசரில் வந்தேன்;" என்றான்.

நிந்திக்கத்தகுந்த இந்த அரக்கி நீதி நெறி கெட்டவள்; ஒழுக்கங்கெட்ட வேறு காரியத்தை (விபசாரத்தை) எண்ணி வந்தவளாகத் தெரிகிறது என்று இராமனும் மனத்தில் எண்ணிக்கொண்டவனாக, அவளைப் பார்த்து, 'சுந்தரியே, குலமுறைக்கும் முன்னோர்களுடைய வழக்கத்துக்கும் இது ஒத்ததாக இல்லையே. நீ பிராமணப் பெண், நானோ க்ஷத்திரியன்' என்றான்.

அதைக்கேட்ட அவள் "நான் பிராமணப் பெண் என்பதற்காக நீங்கள் என்னை மணந்துகொள்ள மறுத்தால் நான் இப்போதே உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்றாள்.

அதற்கு இராமன் "பெண்ணே வருத்தப்பட வேண்டாம்; அரக்கர் பெண்ணை மானிடர் மணப்பது ஒருவிதப் பொருத்தமும் இல்லாதது என்று சோதிட நூல் வல்லவர்களாகிய அறிவாளிகள் சொல்லியிருக்கிறார்கள்," என்றான்.

அதற்கு அவள் "நான்தான் அவர்களுடைய சகவாசத்தை விட்டுவிட்டேன் என்றும் அவர்களோடும் சேராமல் முனிவர்களோடும் தேவர்களோடும் இருந்து வருகிறேன் என்றும் முன்னாலேயே சொன்னேனே, பின்னும் நான் எப்படி அரக்கியாவேன்?" என்றாள்.

அதற்கு இராமன், "என்ன இருந்தாலும் உன் சகோதரர்களுக்குத் தெரியாமல் நான் உன்னை மணக்கலாமா? அவர்கள் மிகப் பெரியவர்கள். ஒருவனோ மூன்று உலகங்களையும் அரசாளும் தலைவன். இன்னொருவன் குபேரன். அவர்கள் இருவரும் சேர்ந்து உன்னை எனக்குக் கன்னிகாதானமாகக் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளலாம்; இல்லாவிட்டால் வேறு வழியில் ஏற்றுக்கொள்ள நான் மிகவும் அவர்களைக் கருதி அஞ்சுகிறேன்," என்றான்.



இதைக்கேட்டதும் அவளுடைய பொய்வேடம் நிலைகுலையும்படி, தனக்கும் தன் தமையன்மார்களுக்கும் உள்ள உண்மையான உறவைக் கக்கிவிடுகிறாள்.

"காந்தர்ப்பம் என்பது உண்டால் காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும் மறைகளே வகுத்த கூட்டம்;
ஏந்தற் பொற்றோளினாய், இஃது இயைந்தபின் எனக்குமுத்த
வேந்தர்க்கும் விருப்பிற்றாகும் வேறும் ஓர் உரை உண்டு" என்றாள்.

"(அவர்கள் வந்து கன்னிகாதானமாகத் தர வேண்டும் என்பது அவசியமில்லை) காதல்கொண்டு மனம் கலந்துவிட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் காந்தர்வ விவாகம் என்று சாஸ்திரங்களே வகுத்திருக்கிற திருமணமுறை இருக்கிறது. அழகு பொருந்திய தோள்களை உடையவரே, இந்த முறையில் நாம் காந்தர்வ விவாகம் செய்து கொண்டுவிட்டால் அது எனக்கு மூத்த வேந்தர்களாகிய இராவணருக்கும் குபேரருக்கும் விருப்பமுள்ள காரியமாகிவிடும். அது மட்டும் அல்ல; வேறொரு நன்மையும் உண்டு. அது என்னவெனின்,

முனிவரோடு உடையர் முன்னே முதிர்பகை முறைமை நோக்கார்;
தனியை நீ ஆதலால் மற்று அவரொடும் தழுவற்கு ஒத்த
வினையம் ஈதல்லது இல்லை; விண்ணும்நின் ஆட்சியாக்கி
இனியராய் அன்னர் வந்து உன் ஏவலில் நிற்பர் என்றாள்.

அவர்கள் (இராவணனும் குபேரனும்) இதுவரையிலும் (உம்மைப்போன்ற) தவசிகளிடத்தில் பாராட்டிவருகிற கடும் பகைமையையும் இனி விட்டு விடுவார்கள். நீங்களோ துணைவரில்லாமல் தனியாக இருக்கின்றீர்கள்; ஆகையால் நட்புக்கொண்டு அவர்களைத் தழுவிக்கொள்ளத் தகுந்த உபாயமும் இதைவிட (என்னைக் காந்தர்வ விவாகம் செய்துகொள்வதைவிட) வேறு இல்லை. அதன்பிறகு வானுலகத்தையும் உங்களுடைய ஆட்சிக்கு உட்பட்டதாக்கி

உங்களுக்கு இனிய உறவினர்களாகி உங்களுடைய ஏவலைச் செய்யக் காத்து நிற்பார்கள் என்றாள்.

அதைக்கேட்ட இராமன்,

"நிருதர்தம் அருளும் பெற்றேன்; நின்நலம் பெற்றேன்; நின்னோடு
ஒருவரும் செல்வத்து யாண்டும் உறையவும் பெற்றேன்; அன்றோ?
திருநகர் தீர்ந்தபின்பு செய்வதம் பயந்தது" என்னா
வரிசிலை வடித்த தோளான் வாளெயிறு இலங்க நக்கான்.

(பேஷ்!) அரக்கர்களுடைய அருளையும் அடைந்தேன்; உன்னுடைய அழகையும் அடைந்தேன்; ஒப்பரிய செல்வத்தில் எந்த உலகத்திலும் போய்த் தங்கியிருக்கக் கூடிய பெருமையும் பெற்றுவிட்டேன்! (இதைவிட என்னவேண்டும்?) அயோத்திமா நகரத்தை விட்டுவந்த பின் செய்த தவம் பயனளித்துவிட்டது என்று பெரிய வில்லைத் தரித்த தோளையுடைய இராமன் அவனுடைய பிரகாசமான பற்கள் விளங்கும்படி சிரித்தான்.

சூர்ப்பணகை வந்து, அவளுக்கும் இராமனுக்கும் இவ்வளவு பேச்சுக்கள் நடக்கிறவரையிலும் சீதை இராமனுடன் இல்லை. பர்ணசாலைக்குள் காரியமாக இருந்தாள். இலக்குமணனும் அங்கில்லை. வால்மீகி முனிவர், சூர்ப்பணகை வந்தபோது சீதையும் இலட்சுமணரும் இராமருடன் இருந்ததாகவும் அவர்களை இராமர் சூர்ப்பணகைக்கு அறிமுகப்படுத்தினதாகவும் சொல்லுகிறார். இந்த வேற்றுமையின் சிறப்பைப்பற்றிப் பின்னால் ஆராய்வோம்.

இப்போது, மேலே சொன்னபடி இராமன் கலகலத்துச் சிரித்தபின் நடந்ததைக் கம்பர் சொல்லுகிறபடி காண்போம். சிரிப்பொலியைக் கேட்டுச் சீதை பர்ணசாலைக்குள்ளிருந்து வெளியே வந்தாள்.



விண்ணிடை இம்பர், நாகர் விரிஞ்சனே முதலோர்க் கெல்லாம்
கண்ணிடை ஒளியின் பாங்கர், கடிகமழ் சாலை நின்றும்,
பெண்ணிடை அரசி தேவர் பெற்றநல் வரத்தால் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள் வந்தாள்.

தேவலோகத்தோர், இவ்வுலகத்தார், நாகலோகத்தார், பிரம்மனே முதலான எல்லாருக்கும் கண்ணின் ஒளி போன்றவனாகிய இராமனிருக்கும் இடத்துக்கு, மணம் கமழ்கின்ற பர்ணசாலையை விட்டு, பெண்களுக்கெல்லாம் அரசியாகிய மகாலட்சுமி, பின்னால் தேவர்கள் (நாராணனிடத்தில்) பெற்ற வரத்தினால் பூமியில் பெண்ணாக வந்த தர்ம தேவதையாகிய சீதை வந்தாள்.

வருகின்ற சீதையைப் பார்த்தாள் சூர்ப்பணகை,

ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்விலி, உருவ நாறும்
வான்சுடர் சோதி வெள்ளம் வந்திடை வயங்கல் நோக்கி
மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போரரக்கர் என்னும்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணிற் கண்டாள்.

உடம்பு வெதும்ப, திறந்த வாய் வறண்டுபோக, உணர்விழந்தவளாகிய சூர்ப்பணகை, பெண் வடிவத்தோடு தோன்றிய சூரியனுடைய சோதி வெள்ளம் இடையே வருவதுபோலப் பார்த்து, நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்ற வானுலகத்திலும் பூலோகத்திலும் பரந்து கிடக்கிற போருக்கலையும் அரக்கர் என்னும் காட்டைச் சுட்டெரிக்கத்தோன்றிய கற்பு நெருப்பாகிய சீதையைக் கண்ணால் கண்டாள்.

சீதையைக் கண்ட சூர்ப்பணகை,

"மருவொன்று கூந்த லாளை வனத்து இவன் கொண்டு வாரான்;
உருவு இங்கு இது உடையாராக மற்றையோர் யாருமில்லை;

அரவிந்த மலருள் நீங்கி அடியிணை படியில் தோயத்
திருஇங்கு வருவாள் கொல்லோ!" என்று அகம் திகைத்து நின்றாள்.

(இவள் யாராக இருக்கக்கூடும்? இவருடைய மனைவியாக இருந்தால்) இருண்ட கூந்தலையுடைய இவளை இந்தக் காட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்திருக்கமாட்டார். இப்படிப்பட்ட அழகுடைய பெண் இங்கே வேறு யாருமில்லை. (இவள் இலட்சுமியாக இருக்குமோ) தாமரை இருப்பிடத்தை விட்டுவிட்டுப் பாதங்கள் பூமியில் படும்படி இலட்சுமி இங்கே வருவாளா! (நல்ல சமயத்தில் இவள் ஒருத்தி யாரோ குறுக்கே வந்துவிட்டாளே) என்று மனம் திகைத்து நின்றாள்.

அப்படித் திகைப்படைந்த சூர்ப்பணகை இராமனையும் சீதையையும் மாறி மாறிப் பார்த்து, பிரமதேவன் ஆண் அழகுக்கு எல்லையாக இவனையும், பெண்ணழகின் எல்லையாக அவளையும், இந்த மூன்று உலகத்திலும் இணையற்ற அழகுடையவர்களாக இந்த இருவரையும் படைத்தானோ என்று வியப்படைகிறாள்.

வியப்படைந்த அவள் காம மேலீட்டால் பின்வருமாறு எண்ணுகின்றாள்: 'இவள் இவருடைய மனைவியாக இருக்கமுடியாது. சொந்த மனைவியாயிருந்தால் இந்தப் பயங்கரமான வனத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்திருக்கமாட்டார். இவள் இலட்சுமியாகவும் இருக்க நியாயமில்லை. இவளும் என்னைப்போல் அவருடைய அழகைக் கண்டு மோகித்து அழகான வடிவெடுத்துக் கொண்டு வந்து அவரை மயக்கிவிட்ட ஓர் அரக்கியாகத்தான் இருக்கவேண்டும். இவளை அவர் இகழ்ந்துவிடும்படிச் செய்கிறேன்' என்று இராமனைப் பார்த்து,

"வரும் இவள் மாயம்வல்ல வஞ்சனை அரக்கி, நெஞ்சம்
தெருவிலள்; தேருந்தன்மை சீரியோய், செயலிற்று அன்றால்



உருவிது மெய்யதன்றால் ஊன்நுகர் வாழ்க்கை யாளை
வெருவினென் எய்திடாமல் விலக்குதி வீர," என்றாள்.

இதோ வருகின்ற இவள் மாயங்கள் செய்யக்கூடிய மோசக் கருத்துடைய அரக்கி; மனம் சுத்தமில்லாதவள்; இவளை நம்புவது செய்யத் தகாதது! உத்தமரே, இவளுடைய இந்த உருவம் உண்மையானதல்ல; இவள் உயிர்களை வதைத்து ஊனுண்டு சீவனம் செய்பவள்; (இவள் உங்களுக்கு அபாய முண்டாக்கிவிடுவாளே என்று) பயப்படுகின்றேன்; வீரா, இவள் உங்களிடம் வராதபடி தடுத்து விடுங்கள் — என்றாள்.

அதைக்கேட்ட இராமன், தன்னுடைய முத்துக்களை ஒத்த பல் வரிசை நன்றாகத் தெரியும்படிக் கலகலத்துச் சிரித்து, சூர்ப்பணகையைப் பார்த்து, 'ஆமாம் அவள் அரக்கிதான்; உன்னுடைய புத்திசாலித்தனத்துக்கு இணையானவர்கள் யாரிருக்கிறார்கள்? உன்னுடைய கருத்தை அறிந்துகொண்டேன்' என்றான்.

அதைக்கேட்ட சூர்ப்பணகை இராமன் தன்னைப் பாராட்டுவதாக எண்ணிக்கொண்டு, அவளே சீதையை மருட்டுகின்றாள்.

ஆயிடை அமுதின் வந்த அருந்ததிக் கற்பின் அம்சொல்
வேயிடை தோளினாளாம் வீரனைச் சேரும் வேலை
"நீ, இடைவந்தது என்னை? நிருதர்தம் பாவை," என்னாக்
காய்எரி அனைய கள்ள வுள்ளத்தாள் கதித்த லோடும்.

அப்போது, அமிர்தத்தில் உதித்தவளாகிய, அருந்ததியைப் போன்ற கற்புடைய, இனிய சொல்லுடைய, மூங்கிலைப்போன்ற தோள்களையுடைய சீதையும் வீரனாகிய இராமனுக்கு அருகில் வந்து சேரும்போது, எரிகின்ற நெருப்பைப்போல் பொறாமையினால்

கொதித்துக்கொண்டிருக்கும் மனத்தவளாகிய சூர்ப்பணகை சீதையைப் பார்த்து "அடீ, அரக்கப்பெண்ணே! எங்களுக்கு இடையூறாக நீ ஏன் வந்தாய்?" என்று கொதிப்போடு கேட்டவுடன்,

அஞ்சினள்; அஞ்சி அன்னம் மின்இடை அலச ஓடிப்
பிஞ்சின் மெல்லடிகள் நோவப் பதைத்தனள்; பருவக் கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லி என்ன,
குஞ்சரம் அனைய வீரன் குவவுத் தோள் தழுவிக் கொண்டாள்.

சீதை பயந்துவிட்டாள்; பயந்து அன்னம் போன்ற அவள் தன்னுடைய மின்னல்போன்ற இடை துன்புற, பஞ்சுபோன்ற பாதங்கள் நோக ஓடிப்போய், பருவ காலத்து இருண்ட மேகத்தின் மத்தியில் அழகாகப் பிரகாசிக்கும் ஒரு பவளக்கொடி போலக் கருத்த யானைபோன்ற வீரனான இராமனுடைய பருத்த தோள்களைத் தழுவிக்கொண்டாள்.

உடனே இராமன்,

வளை எயிற்றவர்களோடு வரும் விளையாட் டென்றாலும்
விளைவன தீமையேயாம் என்பதை உணர்ந்து வீரன்,
"உளைவன இயற்றல்; ஒல்லை உன்நிலை உணருமாயின்
இளையவன் முனியும்; நங்கை, ஏகுதி விரைவின்;" என்றான்.

வளைந்த பற்களையுடைய அரக்கர்களுடன் விளையாட்டுப் பேச்சுக்களைப் பேசினாலும் தீமைதான் உண்டாக்கும் என்பதை உணர்ந்து, இராமன் சூர்ப்பணகையைப் பார்த்துத் தொந்தரவு செய்யாதே; உன்னுடைய சமாச்சாரம் என் தம்பிக்குத் தெரிந்தால் அவன் கோபங்கொள்வான் (அவனுக்குத் தெரிவதற்கு முன்னால்) விரைவாகப் போய்விடு – என்றான்.

அதற்கு அந்த அரக்கி, இராமனைப் பார்த்து,



பொற்புடை அரக்கி, "பூவில், புனலினில், பொருப்பில் வாழும்
அற்புடை உள்ளத்தாரும் அனங்கனும் அமரர் மற்றும்
எற்பெறத் தவம் செய்கின்றார் என்னைநீ இகழ்வது என்னே!
நற்பொறை நெஞ்சின் இல்லாக் கள்ளியை நச்சி," என்றாள்.

அந்த அழகுடைய அரக்கி 'பூமியிலும், சமுத்திரத்திலும், மலைகளிலும், வசிக்கின்ற என்மேற் காதல் கொண்டவர்களும் மற்றும் அந்த மன்மதனும் தேவர்களும்கூட என்னை மனைவியாக அடையத் தவம்புரிகின்றார்கள்; அப்படியிருக்க, நீ இந்த நல்ல குணம் நெஞ்சில் இல்லாத கள்ளியாகிய அரக்கிமேல் ஆசைகொண்டு என்னை இகழ்வது ஆச்சரியந்தான்!" என்றாள்.

அதைக்கேட்ட இராமன் மேலும் அங்கிருந்து அவளோடு பேச்சுக் கொடுக்க விரும்பாதவனாய்,

"தன்னொடும் தொடர்பு இலாதேம் என்னவும் தவிராள்தான் இக்
கன்னெடும் மனத்தி சொல்லும் கள்ள வாசகங்கள் என்னா
மின்னொடும் தொடர்ந்து செல்லும் மேகம்போல் மிதிலை வேந்தன்
பொன்னொடும் புனிதன் போய் அப்பூம்பொழில் சாலை புக்கான்."

'இவளோடு ஒரு தொடர்பும் வேண்டாம் என்று சொன்ன பிற்பாடும்கூட விடமாட்டேன் என்று கல்லினும் கெட்டியான நெஞ்சமுத்தமுள்ள இவள் மேலும் மேலும் கள்ளப் பேச்சுகளைப் பேசுகிறாள்; (இனி இங்கு இருக்கக்கூடாது என்று) மின்னலோடு சேர்ந்து போகும் மேகத்தைப்போல் மிதிலை மன்னன் செல்வியாகிய சீதையோடும் போய்ப் புனிதனாகிய இராமன் அப் பூஞ்சோலையிலிருந்த அவர்களுடைய பர்ணசாலைக்குள் புகுந்தான்.

அப்படி இராமன் போய்விட்டதும், சூர்ப்பணகை மிகவும் ஏமாற்றமடைந்தவளாய், உயிர்போய் விட்ட உடல்போல் செயலற்றுச் சிறிதுநேரம் நின்றுவிட்டு, மறுபடியும்

இராமனை அணுக ஒரு தந்திரமும் இல்லாதவளாய்க் கோபமுற்றாள். பிறகு அங்கிருந்து பயனில்லை யென்று கண்டு,

*நின்றிலள்; அவனைச் சேரும் நெறியினை நினைந்து போனாள்;*
*இன்று இவன் ஆகம் புல்லேன் எனின் உயிரிழப்பேன்; என்னா*
*பொன்திணி சரளச் சோலைப் பளிக்கறைப் பொதும்பர் புக்காள்;*
*சென்றது பரிதிமேல் பால்; செக்கர் வந்து இறுத்தது அன்றே.*

அதற்கு மேல் சூர்ப்பணகை அங்கே நிற்கவில்லை. (இராமனை) அவனை எப்படியாவது கூடவேண்டும்; அதற்கு என்ன வழி தேடலாம் என்று நினைத்துக்கொண்டே போனாள்; 'இன்றைக்கு இவன் தேகத்தைத் தழுவவில்லையானால் என் உயிர் போய்விடும்' என்று அழகு மிகுந்த தேவதாரு மரங்களடர்ந்த ஒரு சோலைக்குள், பளிங்கு மண்டபம் இருந்த மரச்செறிவுக்குள் புகுந்தாள். அப்போது சூரியன் அத்தமனமானான். செவ்வானம் படர்ந்தது.

இதற்குப் பின் அன்று இரவு முழுதும் சூர்ப்பணகை இராமன் மீதுகொண்ட மோகத்தால் காம வேதனை அடைந்து துன்பப்பட்டதைக் கம்பர் பதினேழு கவிகளால் வருணிக்கிறார். இந்த வருணனைகளிலுள்ள கற்பனைகள் வெகு நன்றாக இருந்தாலும் இப்போது நாம் சொல்லப் புகுந்த விஷயங்களுக்கு அவை அவசியமானவைகளல்ல. சூர்ப்பணகை இராமனைச் சந்தித்த விதத்தையும் நடந்த சம்பாஷணைகளையும், சூர்ப்பணகை அங்க பங்கம் அடைந்தவிதத்தையும் காட்டுகின்ற மாதிரியில் வால்மீகி முனிவருக்கும் கம்ப நாட்டாழ்வாருக்கும் உள்ள வேற்றுமைகளை ஆராய்வதுதான் இப்போது வேலை. விடிகிறவரைக்கும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த சூர்ப்பணகை விடிந்த பின் என்ன செய்தாள், எப்படி, யாரால் மூக்கறுபட்டாள் என்பதைப் பார்ப்போம்.



இரவெல்லாம் காமவேதனையால் உயிர்போய் விடுவது போலத் துன்பப்பட்டுக்கொண்டிருந்த சூர்ப்பணகை,

*விடியல் காண்டலின் ஈண்டுதன் உயிர்கண்ட வெய்யாள்,*
*படியிலாள் மருங்கு உள்ளளவு எனை அவன் பாரான்;*
*கடிதின் ஓடினென் எடுத்து ஒல்லை கரந்து, அவள் காதல்*
*வடிவினானுடன் வாழ்வதே வாழ்வுஎன மதியா.*

பொழுது விடிந்தவுடன் தன் உயிர்போய்விடாமல் இருப்பதைக் கண்ட அந்தக் கொடியவள், 'ஒப்பில்லாத அழகுடைய அந்தப்பெண் பக்கத்திலிருக்கிற வரையிலும் அவன் என்னைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான். ஆகையால் வேகமாக ஓடி அவளை எடுத்துக்கொண்டு போய் மறைத்துவிட்டு, அவள் காதலிக்கும் அழகனுடன் நான் வாழ்வதுதான் வாழ்ந்திருப்பதன் பயன்' என்று எண்ணி,

*வந்து நோக்கினள்; வள்ளல்போய் ஒரு மணித்தடத்தான்*
*சந்தி நோக்கினன் இருந்தது கண்டனள்; தம்பி*
*இந்து நோக்கிய குழலியைக் காத்து, அயல் இருண்ட*
*கந்தம் நோக்கிய சோலையில் இருந்தது காணாள்.*

வேகமாக வந்து பார்த்தாள்; வள்ளல் இராமன் (சீதை இருக்கும் பர்ணசாலையை விட்டுப் போய்) ஒரு தெளிந்த நீர் நிறைந்த தடாகத்தில் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்ததைக் கண்டாள்; ஆனால் அவனுடைய தம்பி இலட்சுமணன் சந்திரனைப் போன்றவளாகிய சீதைக்குக் காவலாய், பக்கத்திலிருந்த இருண்ட சோலைக்குள் இருந்ததை அவள் பார்க்கவில்லை.

பர்ணசாலையில் இராமன் இல்லையென்பதைக் கண்ட அவள்,

தனி இருந்தனள்; சமைந்தது என் சிந்தனை; தாழ்வுற்று
இனிஇருந்து எனக்கு எண்ணுவது இல்லென எண்ணாத்,
துனிஇருந்த வன்மனத்தவள் தோகையைத் தொடர்ந்தாள்,
கனிஇரும் பொழில் காத்து அயலிருந்தவன் கண்டான்.

'அவள் தனியே இருக்கிறாள்; என்னுடைய எண்ணம் கைகூடிவிட்டது; இனித் தாமதித்து நான் ஆலோசிக்க வேண்டியது ஒன்றுமில்லை' என்று எண்ணிக்கொண்டு, கோபம் குமுறிக்கொண்டிருந்த மனத்தவளாகிய சூர்ப்பணகை சீதையைப் பிடிக்கப்போனாள்.

அந்தச் சமயத்தில்,

'நில்லடீ' எனக் கடுகினன்; பெண்ணென நினைத்தான்
வில்லெடாது அவள் வயங்கெரி யாமென விரிந்த
சில்ல லோதியைச் செங்கையில் திருகுறப் பற்றி,
ஒல் வயிற்று உதைத்து, ஒளிகிளர் சுற்றுவாள் உருவி.

(அதைக் கண்ட இலட்சுமணன்) 'நில்லடீ' என்று வேகமாக வந்தான்; பெண் என்பதற்காக வில்லை எடுக்காமல், எரிகின்ற நெருப்பின் சுடர்கள்போல் விரிந்த அவளுடைய பறட்டைத் தலைமயிரைத் தனது சிவந்த கையால் முறுக்கிப் பிடித்துக்கொண்டு, அவளுடைய வயிற்றில் உதைத்து, தன் உடைவாளை உருவி,

ஊக்கித் தாங்கி விண்படர்வெம் என்று உருத்து எழுவாளை
நூக்கி நொய்தினின், வெய்து இழையேல் எனநுவலா
மூக்கும், காதும், வெம் முரண் முலைக்கண்களும் முறையால்
போக்கிப் போக்கிய சினத்துடன் புரிகுழல் விட்டான்.

பெருமுயற்சியுடன், அவனையும் தாங்கிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பி விடலாமென்று கோபத்தோடு எழுந்த அவளை இலட்சுமணன் சுலபமாகக் கீழே தள்ளி, 'தீய காரியம் செய்யாதே' என்று சொல்லிக்கொண்டே அவளுடைய



மூக்கையும், காதுகளையும், முரட்டு முலைக் கண்களையும் வரிசையாக அறுத்துவிட்டு, அத்தோடு கோபம் தீர்ந்து அவளுடைய கூந்தலை விட்டான்.

சூர்ப்பணகை இராமன் மீது காமங்கொண்டு அவனிடம் வந்தது முதல், அவள் இலட்சுமணனால் அங்கபங்கம் செய்யப்பட்ட வரையில் வால்மீகி, கம்பர் ஆகிய இரண்டு கவிஞர்களும் எப்படியெப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தோம். வால்மீகி சொன்னதை முற்றிலும் மாற்றிக் கம்பர் சொல்லுவதிலுள்ள நயம் குறிப்பிடத்தகுந்தது.

வால்மீகி சொல்லுவதில், சூர்ப்பணகை இராமரிடம் வந்து பேசும்போது, இலட்சுமணனும் சீதையும் பக்கத்திலிருக்கிறார்கள். இராமனும் இலட்சுமணனும் பக்கம் பக்கமாக இருந்து கொண்டு, இராமன் 'நான் மனைவியுடன் இருக்கிறேன்; என் தம்பி தான் மனைவியில்லாமல் பெண்ணின்பம் இல்லாமலிருக்கிறான். நீ அவனை மணந்துகொண்டால் சக்களத்தி இல்லாமல் இருக்கலாம் என்பதும், உடனே சூர்ப்பணகை இலட்சுமணனைக் காமுறுவதும், அவன் 'நான் தாசன்; எனக்கு வேண்டாம்; நீ என் தமையனையே மணந்துகொள்' என்று சொல்லுவதும் இராமருக்கும் இலட்சுமணருக்கும் உள்ள உறவின் கண்ணியத்தைக் கெடுத்துவிடுகிறது. அதுவும் சீதையை வைத்துக்கொண்டு இவர்களிருவரும் இப்படிப்பேசுவது குணங்களைக் குறைத்து விடுகிறது.

மேலும் வால்மீகியின்படி, இராமரே இலட்சுமணரைக் கூப்பிட்டுச் சூர்ப்பணகையின் அங்கங்களைப் பங்கப்படுத்தி விடும்படி ஆணையிடுகிறார்.

ஆனால் கம்பர் சொல்லுகிறபடி, இலட்சுமணன் சூர்ப்பணகையை அங்கபங்கம் செய்தது இராமனுக்குத்

தெரியாது. இராமன் சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு பர்ணசாலைக்குத் திரும்பி வரும்போதுதான் யாரோ ஓர் அரக்கி இரத்தம் வடிய அழுதுகொண்டிருப்பதைப் பார்க்கிறான். அப்போது சூர்ப்பணகை நேற்று வந்த சுந்தரவடிவில் இல்லை. விகார வடிவமுள்ள அரக்கியாக இருக்கிறாள். அவளை அடையாளம் தெரியாமல் யாரென்று இராமன் விசாரிக்கிறான்.

அவள் 'நேற்று நான் வந்திருக்கவில்லையா?' என்று கேட்டுவிட்டு, மறுபடியும் இராமன் தன் காம ஆசையைத் தீர்க்கவேண்டுமென்று வெகு நேரம் வாதாடுகிறாள். அங்கே இலட்சுமணன் வந்து நடந்ததைச் சொல்லி அவளைக் கொன்றுவிடவேண்டும் என்கிறான். இராமன் அவளை ஓடிப் போகும்படிச் சொல்லுகிறான். அவள் இவர்களுக்கு எமனாகக் கரனைக் கூட்டிக்கொண்டு வருவதாகச் சபதம் செய்துவிட்டுப் போய்விடுகிறாள்.

இந்த விஷயங்களெல்லாம் வால்மீகத்தில் இல்லை. அவை இல்லாததைக் குறையாகச் சொல்லப் புகவில்லை. ஆனால் கம்பர், சூர்ப்பணகை அங்கங்களைப் பங்கப்படுத்தும்படி இராமர் இலக்குமணனுக்கு ஆணையிட்டதாக வால்மீகி முனிவர் சொன்னதை, மாற்றிவிட்டதனால் இராமனுக்குக் குணதோஷமில்லாமல் இருக்கிறது. இலக்குமணன் அண்ணனுக்காகவும் அண்ணிக்காகவும் எதையும் செய்துவிடக் கூடியவன். ஆனால் இராமனுக்கு அப்படிப்பட்ட குற்றங்கள் இருக்கக்கூடாது என்ற நோக்கம் எந்த இடத்திலும் தவறாமல் கம்பர் இராமனுடைய பெருந்தகைமையைப் பாதுகாப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.



# 10. இராமாவதாரம்

இதுவரையிலும் வால்மீகி, கம்பர் ஆகிய இரண்டு மகாகவிகளும் வெவ்வேறு விதமாகச் சொல்லியிருக்கிறதைப் பற்றி, அரைகுறையாக அறிந்தவர்களும் அடிக்கடி பேசிக்கொள்ளுகிற வேறுபாடுகளிற் சிலவற்றை ஆராய்ந்தோம்.

அப்படி அடிக்கடி விவாதிக்கப்படாத வித்தியாசங்கள் பலப்பல. முதலில் இராம அவதாரத்தைப் பற்றிய அடிப்படையே இரண்டு இராமாயணங்களிலும் மிகவும் வேறுபடுகிறது. இரண்டு கவிகளும், இராமர் அரக்கர்களால் மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் செய்யப்பட்டு வந்த துன்பங்களை நீக்கி, அறங்களை நிலைநாட்டவென்றே அவதரித்த தெய்வமாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் இராமன் யார் என்பதும் அவன் எப்படி அவதரித்தான் என்பதிலும் இரண்டு கவிகளும் மிகவும் வேறுபடுகின்றார்கள்.

இந்த வேறுபாடுகளில், காலத்தினால் மாறுபட்டுப்போன யாகத்தைப் பற்றிய சடங்கு முறைகளைப் பற்றியும் மற்றப் பழக்கவழக்கங்களின் நுணுக்கங்களைப் பற்றியுமாக இருக்கிற மாறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், நித்தியமான சத்தியங்களிலும் நெறிமுறைகளிலும் ஆன்ம ஞான தத்துவங்களிலும் உள்ள வித்தியாசங்களை மட்டும் கவனிக்கவேண்டும். இனி, இரண்டு கவிகளும் அவதாரத்தை எப்படியெப்படிச் சொல்லுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

வால்மீகி முனிவர் சொன்னபடி அவதார நிகழ்ச்சி பின் வருமாறு:–

நீதியோடும் பராக்கிராமத்தோடும் அரசாண்டு கொண்டிருந்த தசரத மகாராஜர் அநேக தர்மங்களைச் செய்தும் புத்திர பாக்கியம் இல்லாமல் இருந்தார். பலவாறு ஆலோசனை செய்து, முடிவில் அவர் 'புத்திர சம்பத்தை அடையும் பொருட்டு நாம் ஏன் அசுவமேத யாகம் பண்ணக்கூடாது' என்று கருதினார். அது அவர் தமக்குள்ளே செய்துகொண்ட ஆலோசனையன்று! தம்மைச் சூழ்ந்த மகா தரும சீலர்களாகிய மந்திரிகளுடன் கலந்து செய்த ஆலோசனை. இவ்வித உறுதி மனத்திலுதித்தவுடன், அவர் முக்கிய மந்திரியான சுமந்திரரைப் பார்த்து, "நீர் தாமதமின்றி நமது குருக்களையும் புரோகிதர்களையும் அழைத்து வாரும்," என்று கட்டளையிட்டார்.

அவர் விதித்தபடியே சுமந்திரர் விரைவாகச் சென்று வேதவித்துக்களான அம்மான்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்தார். அவ்விதம் வந்தவர்கள் சுயஜ்ஞர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், புரோகிதராகிய வசிஷ்டர், இன்னுமுள்ள முக்கியமான பிராமணர்கள். தசரதர், வந்தவர்கள் எல்லாருக்கும் தக்க மரியாதை செய்து வந்தனம் பண்ணி நீதிமுறை வழுவாத தர்மார்த்த கர்மங்களைக் குறித்த சில விஷயங்களை வெகு மதுரமாய்ப் பேசலுற்றவராய், "புத்திர பாக்கியமில்லாமல் பரிதபிக்கிற எனக்குச் சுகம் என்பது ஒரு சிறிதுமில்லை; இந்தக் குறையை நீக்க நான் சாஸ்திர விதிப்படி அசுவமேத யாகம் பண்ணுவதாக நிச்சயித்திருக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன? எவ்விதமாய்ச் செய்தால் என் மனோரதம் கைகூடுமோ அவ்விதத்தை ஆலோசித்துச் சொல்ல வேண்டும்," என்று பிரார்த்தித்தார்.



இவ்வாறு தசரதர் சொல்லியதைக் கேட்டு அங்கு வந்திருந்த வசிஷ்டர் முதலாகிய எல்லாப் பிராமணர்களும் அரசர் கொண்ட எண்ணம் நியாயமான எண்ணம் என்று அங்கீகரித்து மகிழ்ச்சியடைந்தவர்களாய் அவரைப் பார்த்து, "மகாராஜாவே! யாகத்தை நடத்துவதற்கு அவசியமான பொருள்களைச் சேரும். அசுவத்தைச் செலுத்தும். புத்திர சம்பத்தை அடைய வேண்டுமென்ற விஷயத்தில் உண்மையான தருமசிந்தையுடன் நீர் அபிப்பிராயம் வைத்திருக்கிறபடியால் உமக்குத் தப்பாமல் இஷ்டப்படி நல்ல புத்திரர்களுண்டாவார்கள்." என்றார்கள். (பாலகாண்டம் 8ஆவது சருக்கம். இங்கே குறிப்பிட வேண்டியது தசரத மன்னன் புத்திர காமேஷ்டியாகம் செய்வதற்கு யாகாதி காரியங்களுக்கு யோசனை சொல்ல வேண்டிய வேத சாஸ்திர வித்துக்களாகிய அந்தணர்களையும் குலகுருவாகிய வசிஷ்டரையும் கலந்து ஆலோசிக்காமல் அரசாங்க காரியங்களுக்கு யோசனை சொல்லக் கூடியவர்களாகிய மந்திரிகளுடன் முதலில் கலந்து ஆலோசித்த பின் யாகம் செய்யப் போவதாகிய சேதியை அந்தணர்களுக்கும் குலகுருவுக்கும் பின்னால் தெரியப்படுத்தியதாக இருக்கிறது. இதைக் கம்பர் மாற்றிவிடுகிறார்.)

வால்மீகியைத் தொடர்வோம் : அப்படி – அந்தணர்களும் புரோகிதர்களும் சொன்ன பிறகு, அரசன் தன் மந்திரிமார்களைப் பார்த்து, அந்தணர்களும் புரோகிதரும் சொல்லுகிறபடி யாகத்துக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்து மற்ற ஏற்பாடுகளையும் செய்யக் கட்டளையிட்டுவிட்டு, அசுவமேதம் என்பது சாதாரணமாய் எல்லா அரசர்களாலும் எளிதாக நடத்தப்படும் யா ம் அன்று. அதை நடத்துவதிலும் ஒருவிதமான குற்றமும் குறையுமின்றி நடத்துவதுதான் கீர்த்தி. இவ்விதமான நற்காரியங்களுக்கு

விக்கினங்கள் எங்கென்று காத்திருக்கும்; கல்வியில் தேர்ந்த பிரம ராட்சசர்கள் என்ற துர்த்தேவதைகள் எந்த வேளையில் ஒரு குற்றம் நேரும் என்று பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். சாத்திரப் பிரகாரம் சடங்குகளை நடத்துவதில் ஏதாவது ஒரு சிறு பிழை நேர்ந்தாலும் உடனே அந்தத் துர்த்தேவதைகள் யாகத்தை அழித்துவிடுவார்கள். யாகத்தைச் செய்கிறவனும் உடனே மாண்டுபோவான். ஆதலால் நான் ஆரம்பிக்கும் யாகம் சாஸ்தரப்பிரகாரம் நிறைவேறும்படி உங்களுடைய மேலான புத்தி வல்லமையைக் கொண்டு நீங்கள் தக்க முயற்சி செய்ய வேண்டும், என்று சொன்னார் (8ஆம் சருக்கம்)

ஒன்பதாவது சருக்கத்தில், முதல் மந்திரியாகிய சுமந்திரர் தசரத மகாராஜா ஏகாந்தமாக இருந்தபோது அவரைப் பார்த்து "மகாராஜாவே! இந்தப் புத்திரகாமேஷ்டி விஷயமாய்ச் சனத்குமாரர் என்ற பெரியவர் முனிவர்களின் முன்னிலையில் ஒரு வரலாறு சொல்லியிருக்கிறார். அவர் சாதாரண முனிவரல்லர்; மூன்று காலங்களும் உணர்ந்தவர். அவர் சொன்னது யாதெனில்" என்று ஆரம்பித்து காசியப மகரிஷிக்கு விபண்டகர் என்று ஒரு குமாரர் இருப்பதையும், ஒரு காலத்தில் உரோமபத மன்னன் ஆண்ட அங்கதேசத்தில் நெடுங்காலம் மழையில்லாதிருக்க அப்பொழுது அந்தணர்களின் ஆலோசனைப்படி உரோமபதர் விபண்டகரை அழைத்துவந்து அந்நாட்டில் உடனே மழை பெய்வித்ததையும் விரிவாகச் சொன்னார்.

அத்துடன் சுமந்திரர், 'இட்சுவாகு வம்சத்தில் உதிக்கப்போகிற தசரதர் பிள்ளையில்லாமல் வருந்துவார். பிறகு உருசியசிருங்கர் என்னும் விபண்டகர் வந்து புத்திர காமேட்டி யாகம் செய்து அதன் பயனாகத் தசரதருக்கு நான்கு புத்திரர்கள் பிறப்பார்கள் என்று சனத்குமாரர் வெகு நாளைக்கு முன்னாலேயே முனிவர்களிடத்தில் சொன்னது



தமக்குத் தெரியும் என்றும் சுமந்திரர் தசரதரிடம் சொல்லுகிறார்.

அதைக்கேட்ட பிறகு தசரதர் தம் மனைவிமார்களுடன் உரோமபத மகாராசனிடம் சென்று, அவருடைய நாட்டில் இருந்த உருசியசிருங்கரைத் தாம் எண்ணியுள்ள புத்திரகாமேட்டி யாகத்தைச் செய்விக்க அயோத்திக்கு அனுப்பித்தரவேண்டு மென்று கேட்டுக் கொண்டார். உரோமபத மன்னர் தசரதரை உருசியசிருங்கரிடம் அழைத்துச் சென்றார். தசரதர் தாம் வந்த காரியத்தை முனிவருக்குச் சொல்லி, புத்திர காமேஷ்டி யாகத்தை முடித்துவைக்க அயோத்திக்கு உருசிய சிருங்கர் வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். உரோமபத மன்னரும் சிபார்சு பேசினார். முனிவரும், அவர்கள் கேட்டுக் கொண்டபடி அயோத்திக்கு வந்தார். யாகத்தை நடத்தித்தர ஏற்றுக் கொண்டார்.

அதன் பிறகு **12, 13, 14** ஆம் சருக்கங்களில் யாக காரியங்கள் நடக்கின்றன. அசுவமேத யாகம் முடிந்த பிறகு **15**ஆம் சருக்கத்தில்தான் புத்திரர்கள் உற்பத்திக்கான தனி யாகம் நடக்கிறது. அப்போதுதான் இராம அவதாரம் தேவர்களால் நிச்சயிக்கப்படுகிறது.

அவதாரத்தைப் பற்றி வால்மீகியும் கம்பரும் சொல்லுவதிலுள்ள வேற்றுமைகளைத் தெரிந்து கொள்ள இந்த **15**ஆம் சருக்கம் மிகவும் முக்கியமானது அதில் :

மகா புத்திசாலியும் வேதங்களை அறிந்தவருமாகிய உருசிய சிருங்கர் சற்று ஆலோசித்துத் தசரதரை நோக்கி, "உம்முடைய மனோரதமாகிய புத்திர லாபத்திற்காக, அதர்வண வேதத்தில் சொல்லியிருக்கும் மந்திரங்களின் பலத்தால் இன்னுமொரு யாகம் பண்ணிவைக்கிறேன்", என்று சொல்லி உடனே அந்த யாகத்தையும் செய்யத் தொடங்கி,

மந்திர சாத்திர விதிப்படி அக்கினியில் ஓமம் செய்யலானார். அப்பொழுது நேரில் சென்று அவிர்ப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுத் தேவர்களும், கந்தர்வர்களும், சித்தர்களும், மகரிஷிகளும் அங்கு வந்து கூடினார்கள்.

அவர்கள் எல்லாரும் அவ்விடத்தில் ஒரு சபையாகச் சேர்ந்து, உலகத்தைச் சிருஷ்டித்தவரான பிரமதேவரைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னார்கள். "பிரமதேவரே, உம்மிடமிருந்து வரம் பெற்றதனால் அதி பராக்கிரம சாலியான இராவணன் என்னும் அரக்கன் எங்களையெல்லாம் வருத்துகின்றான். அவனை அடக்க எங்களில் ஒருவராலும் முடியவில்லை. நீர் ஒரு சமயத்தில் அவனிடம் சந்தோஷமடைந்து அவனுக்கு வரங் கொடுத்துவிட்டபடியால் அதற்கு நாங்கள் பயந்து அவன் செய்கிறதையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

துர்ப்புத்தியுள்ள அவனோ மூன்று உலகங்களையும் லோக பாலகர்களையும் எப்போதும் பீடித்துக் கொண்டேயிருக்கிறான். வரத்தின் செருக்கால், தேவர்களுக்கெல்லாம் அரசனான தேவேந்திரனையும் திருணமாக எண்ணி அவனைத் தனக்குக் கீழ்ப்படியும்படி செய்கிறான். தன்னைச் சபிப்பவர் எவருமில்லாமையினால் மிகவும் கர்வங்கொண்டு அவன் அநேக விதமாக ரிஷிகள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், பிராம்மணர்கள், அசுரர்கள் முதலான எல்லாரையும் வருத்தப்படுத்துகிறான். அவனைக்கண்டு சூரியன் கூட நடுங்கி அவன்மேல் மிருதுவாக வெயில்படும்படி பிரகாசிக்கிறான்.

வாயுபகவானும் அவன் சமீபத்தில் மெதுவாக உலாவுகிறான். கொந்தளித்து அலைகிளரும் தன்மையுள்ள கடலும் அவனைக் கண்டால் அஞ்சி அலைவீசாமல் அமர்ந்து



நின்றுவிடுகிறது. அந்தப் பாவி அரக்கனால் எங்களெல்லாருக்கும் உண்டாகும் பயத்துக்கு அளவேயில்லை. ஆகையால் அவனைக் கொல்ல எப்படியாவது நீர் ஓர் உபாயந் தேடவேண்டும்."

இப்படி எல்லாத் தேவர்களும் சொன்னதைக் கேட்டுப் பிரமதேவர் சிறிது நேரம் ஆலோசித்துப் பின்வருமாறு சொல்லலானார். "அந்தத் துராத்மாவை வதைப்பதற்கு உபாயம் ஒன்று முன்னமே தானாய் அமைந்திருக்கிறது. அவன் வரங்கேட்ட காலத்தில் கந்தர்வர்களாலும், யக்ஷர்களாலும், தேவர்களாலும், அசுரர்களாலும், ராக்ஷசர்களாலும் தனக்கு மரணம் சம்பவிக்கக் கூடாவண்ணம் வரமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அப்படியே ஆகட்டும் என்று நானும் வரமளித்தேன். மனிதர்களால் தனக்கு மரணம் உண்டாகாமலிருக்க வேண்டுமென்று அவன் அலட்சியத்தால் கேட்கவில்லை. அதுதான் இப்பொழுது நமக்கு உபாயம். மனிதரால் இராவணன் மாய உபாயம் தேடவேண்டும். இதைத்தவிர நமக்கு வேறு மார்க்கமில்லை", என்றார்.

இவ்வண்ணம் ஒருவித நம்பிக்கையைச் சுட்டிப் பிரமதேவர் சொன்னதைக் கேட்டு அங்கிருந்த தேவர்களும் முனிவர்களும் மிக்க சந்தோஷத்தையடைந்தார்கள். அந்தத் தருணத்தில், அங்கே, பீதாம்பரம் தரித்துக் கொண்டு கைகளில் சங்கு, சக்கரம், கதை என்னும் படைக்கலங்களை ஏந்தி மிகவும் விளங்குகின்ற திருமேனியுடன் ஜகத்பதியான விஷ்ணு பகவான் வந்தார். எல்லாத் தேவர்களும் எழுந்து வணங்கி நிற்க, அவர் காரியத்தை முடிக்கிற கருத்துடையவராய்ப் பிரமதேவரருகில் போய் வீற்றிருந்தார்.

அவர் ஆசனத்தில் எழுந்தருளியிருந்தவுடன் தேவர்களெல்லாரும் அவருக்குச் சாஷ்டாங்க தண்டன்

சமர்ப்பித்து எழுந்து ஸ்தோத்திரம் பண்ணி, "ஐயா விஷ்ணு பகவானே,. உலகங்களினுடைய க்ஷேமத்தின் பொருட்டே நாங்கள் இப்பொழுது உம்மை ஒரு காரியத்துக்காகத் தூண்டுகிறோம்; தருமங்களை அறிந்தவராயும், உதார குணமுடைவராயும், மகாமுனிவருக்கொப்பான தேஜோமயராகவும் தசரதர் என்னும் அரசர் ஒருவர் அயோத்திமா நகரத்தில் ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்.

நாணம், செல்வம், புகழ் என்பவைகளே உருக்கொண்டு வந்தாற் போல மூன்று மனைவிகள் அவருக்கு இருக்கிறார்கள். நீர் அந்த மூன்று பெண்மணிகளுடைய வயிற்றில் உம்மை நான்கு பாகமாகப் பண்ணிக் கொண்டு மனித ரூபமாகப் பூலோகத்தில் அவதாரம் பண்ணி உலக கண்டகனாயிருந்து கொண்டு செழித்து, ஒருவராலும் தன்னை அடக்க முடியாதென்று வெகு இறுமாப்புடன் எல்லாரையும் துன்பப்படுத்துகிறவனும் தேவர்களால் வெல்ல முடியாதவனுமான இராவணனைப் போர் செய்து கொல்லத் திருவுளம் செய்ய வேண்டும். நீரே எங்களுக்குக் கதி, மூர்க்கனான அந்த இராவணனோ தேவர்கள், கந்தவர்கள், சித்தர்கள், மகா முனிவர்கள் இவர்களெல்லாரையும் தனது வல்லமையின் இறுமாப்பில் இம்சிக்கிறான். இன்னும், கொடியனான அவன் தேவலோகத்தில் நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருக்கிற கந்தர்வர்களையும் அப்ஸர ஸ்திரீகளையும் வருத்துகிறான். ஆபத்திலடிபட்டுத் தஞ்சம் என்று வந்து அடைகிறவர்களைக் காப்பாற்றுவதும், சத்துருக்களை நாசம் பண்ணுவதும் உம்முடைய கடனன்றோ. எங்களுடன் முனிவர்கள், சித்தர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள் இவர்களெல்லோரும் உம்மைச் சரணடைந்திருக்கிறார்கள். ஆகையால் தேவ சத்துருக்களாயிருக்கிற இராவணாதியரைச் சங்கரிக்க நீர் மனுஷ்யாவதாரம் செய்ய வேண்டும்," என்று பலவிதமாகப் புகழ்ந்து பிரார்த்தித்தார்கள்.



இவ்வாறு தேவர்கள் பிரார்த்தித்தவுடனே, தேவ தேவரும் சர்வலோக சரண்யருமான திருமால் பிரமதேவருடன் விளங்கும் அந்தத் தேவ சபையைப் பார்த்து தேவர்களே, உங்கள் பயத்தை விட்டுவிடுங்கள். இன்று முதல் உலகத்துக்கு க்ஷேமம் வந்துவிட்டதென்று நிச்சயமாய் எண்ணுங்கள். உங்களுடைய நன்மைக்காக இராவணனை அவனுடைய பிள்ளைகள், பேரன்மார்கள், மற்றைத் தாயாதிகள், பந்துக்கள், சிநேகிதர்கள், மந்திரிகள் முதலான எல்லாருடனும் நான் வதை செய்கிறேன். அவன் வெகு குரூரனாய்த் தேவர்களையும் ரிஷிகளையும் உபத்திரவம் பண்ணிக் கொண்டிருக்கிறான். நான் ஒரு மானிடனாய் அவதாரம் பண்ணிப் பூலோகத்தைப் பரிபாலித்துக் கொண்டு பதினோராயிரம் வருஷகாலம் வாசம் பண்ணப்போகிறேன்," என்றார்.

இவ்விதம் தேவர்களுக்கு வரங்கொடுத்துவிட்டுத் திருமால் தாம் மனுஷ்யராக அவதரிப்பதைப் பற்றிச் சற்று ஆலோசித்து உடனே தாம் நான்கு அம்சமாய்த் தசரதரைத் தந்தையாகக் கொண்டு தோன்றுவதாக நிச்சயித்தார். (பாலகாண்டம் 15ஆம் சருக்கம்)

வால்மீகி இராமாயணப்படி அவதாரசங்கல்பம் இப்படி இருக்கிறது. இங்கே குறிப்பிட வேண்டிய விஷயங்கள்: 1) தசரதர் செய்த யாகத்தின் அவிர்ப்பாகங்கள் ஏற்றுக் கொள்ள வந்த பிறகுதான் இராவணனைக் கொல்ல வழி என்ன என்று ஆலோசிக்கப்படுவது 2) தேவர்களும் மற்றவர்களும் பிரமதேவனிடம் அவர் கொடுத்த வரங்களால்தான் இராவணன் அகங்கரித்திருக்கிறான் என்று குற்றஞ் சாட்டி, அவரையே அதற்கு வழி கேட்பது 3) பிரமதேவன் உபாயம் சொல்லிக் கொண்டிருக்கும் போதுதான் மகாவிஷ்ணு அங்கே வந்ததாக இருப்பது.

4) மகாவிஷ்ணுவைக் கண்டபிறகுதான் தேவர்களும் மற்றவர்களும் அவரை மனிதனாக அவதரிக்கும்படி கேட்டுக்கொள்வது 5) அப்படிக் கேட்டுக் கொள்ளுவதில் மகாவிஷ்ணு தம்மை நான்கு பாகங்களாக்கிக் கொண்டு, நான்கு புத்திரர்களாகப் பிறக்க வேண்டும் என்ற யோசனையை மகாவிஷ்ணுவுக்குத் தேவர்கள் தாம் சொல்லிக் கொடுத்தார்கள் என்றிருப்பது. அவர்கள் கேட்டுக் கொண்டபிறகுதான் மகாவிஷ்ணு அவர்கள் சொன்னபடி பிறந்து இராவணாதியரைக் கொல்வதாகச் சங்கல்பம் செய்தார் என்றிருப்பது 6) இந்தத் தேவர்கள் கூடியிருந்த சபையில் சிவபிரான் இல்லாதிருப்பது.

மேற்சொன்ன எல்லா விஷயங்களிலும் கம்பர் வால்மீகிக்கு முற்றிலும் மாறுபடுகின்றார். இந்த மாறுபாடுகள் வால்மீகர் காலத்துக்கும் கம்பர் காலத்துக்கும் உள்ள காலவேறுபாட்டால் உண்டானவை என்று சொல்லிவிட முடியாது. வால்மீகி முனிவர் எந்த வேதங்களையும், புராணங்களையும், தேவர்களையும் தேவலோகத்தின் இயல்பையும் ஆதாரமாகக் கொண்டு கதையைச் சொல்லுகிறாரோ அதே ஆதாரங்களைக் கொண்டுதான் கம்பரும் மாற்றியிருக்கிறார். அப்படி மாற்றியிருப்பது இராமனை என்றென்றும் எல்லாரும் வணங்கத்தக்க தெய்வமாக்கவேயன்றி வால்மீகி முனிவருக்குக் குறை சொல்ல அல்ல. அதைப் பின்னால் காண்போம்.

இப்போது வால்மீகி முனிவர் அருளியபடி இராமன் தசரதபுத்திரனாகப் பிறப்பதைப் பார்ப்போம்:

இப்படி, மகாவிஷ்ணு தாம் தசரதருக்கு நான்கு புத்திரர்களாப் பிறக்கப்போவதாகச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறார் – அவர் மறைந்தவுடனே தசரதர் ஓமம் பண்ணி முடித்த யாக குண்டத்திலிருந்து மிக்க காந்தியுடன் ஒரு பெரிய உருவம் வெளிப்பட்டது. உலகத்தில் எக்காலத்திலும் பார்த்திராத மிக்க பலமும் வீரியமும் அதனிடம் காணப்பட்டது.



அது அக்கினிக் குண்டத்தை விட்டு வெளிக் கிளம்பும்பொழுது, வெள்ளி மூடி மூடப்பட்டதும் தேவலோகத்துப் பாயசம் நிரம்பினதுமான பெரிய தங்கக் கிண்ணம் ஒன்றை, தனது அன்புள்ள மனைவியையே மாயையால் அவ்வுருவாக்கிக் கையிற் பிடித்ததற்கொப்பாய்ப் பிடித்துக் கொண்டு வந்தது. அவ்வண்ணம் தோன்றிய அவ்வுருவம் தசரத மகாராஜாவைப் பார்த்து, "ஓ! வேந்தே! பிரமதேவரிடமிருந்து உமது சந்நிதிக்கும் வந்த புருஷன் நான்", என்றது. அதைக் கேட்டு அரசர் தமது இரு கைகளையும் கூப்பி நமஸ்காரம் செய்து, "ஸ்வாமி, உமது வரவு நல்வரவாகுக. நான் உமக்கு என்ன செய்ய வேண்டும்.? கட்டளையிட்டபடி நடந்துகொள்ளக் காத்திருக்கிறேன்" என்றார்.

அவ்வாறு அவர் சொன்னதைக் கேட்டு அவ்வுருவம் தசரதரைப் பார்த்து, "மன்னவரே, தேவர்களை நன்றாய் ஆராதித்த பாக்கியத்தால் நீர் இப்பொழுது இந்தப் பொருளைப் பெற்றீர். இந்தத் தேவலோக பாயசத்தைக் கைப்பற்றும். இதன் மூலமாகவே நீர் புத்திரப் பேறும் மற்றைப் பாக்கியங்களும் ஆரோக்கியமும் ஆகிய இவைகளை அடையப் போகிறீர். இதை உமக்கு உரிய மனைவிகளிடம் கொடுத்து உண்ணச்சொல்லும். அவர்கள் வயிற்றினின்றும் உமக்குப் புத்திரர்கள் பிறப்பார்கள். எந்தக் குறையை நீக்குவதற்கு நீர் இவ்வளவு சிரமப்பட்டு யாகம் பண்ணினீரோ அந்தக் குறை உமக்கு நீங்கிவிடும்" என்றது. உடனே தசரதர், "உமது உத்தரவின்படியே செய்கிறேன்", என்று சொல்லித்

தேவர்களால் நியமிக்கப்பட்டிருந்த அந்தப் பாயசம் அடங்கிய பொற்கிண்ணத்தை அன்போடு கைப்பற்றித் தமது சிரத்தின் மேல் வைத்துக் கொண்டார். வெகு ஆச்சரியமாய்த் தோன்றித் தமக்கு ஆனந்தத்தை அளித்த அவ்வுருவை வணங்கி, மிக்கக் களிப்புடன் அடிக்கடி பிரதக்ஷிணம் செய்து வந்தார்; ஆனந்தக் கடலில் முழுகினார்; மிக்க வறுமையுடையவனுக்குப் புதையல் அகப்பட்டால் அவன் எவ்வாறு களிப்பானோ அவ்வாறு களித்தார். அதிக காந்தியால் விளங்கிக் கொண்டு வெகு அற்புதமாய்த் தோன்றிய அப்பூதம் தான்வந்த காரியத்தைச் செய்து விட்டு உடனே தான் நின்ற இடத்திலேயே மறைந்துவிட்டது.

தசரதர் பாயசத்தை எடுத்துக் கொண்டு தமது அந்தப்புரத்தை நோக்கித் திரும்பினார். அப்பொழுது அவர் முகத்திற் காணப்பட்ட சந்தோஷத்திலுண்டான காந்தியால் அந்த அந்தப்புரம் முழுதும் அழகான சரத்கால சந்திரிகையால் விளங்கும் ஆகாசம்போலப் பிரகாசித்தது. அந்தப்புரத்துள் புகுந்தவுடனே தசரதர் கௌஸல்யையைப் பார்த்து, "உனக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும்; இப்பாயசத்தை நீ கைப்பற்று," என்றார். அப்படிச் சொல்லித் தாம் கொண்டுவந்த பாயசத்தில் பாதியை அவளுக்கு மன்னர் கொடுத்தார்; எஞ்சிய பாயசத்தில் பாதியைச் சுமித்திரைக்குக் கொடுத்தார்; நின்ற பாயசத்தில் பாதியைக் கைகேயிக்குக் கொடுத்தார். அதன்பின் மிகுந்து நின்ற பாயசத்தைக் கொஞ்சநேரம் ஆலோசனை செய்து சுமித்திரைக்குக், கொடுத்தார்; புத்திரருண்டாக வேண்டுமென்று இவ்வாறு பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட தேவாமிருதத்துக்கொப்பான பாயசத்தை தசரதர் மனைவிகள் கொண்டாட்டத்தோடு பெற்றுக் கொண்டு தனித்தனி புசித்து வெகு சந்தோஷமடைந்து தங்கள் மனோரதம் எல்லாம் நிறைவேறினதாய் எண்ணினார்கள். சக்கரவர்த்தி தமக்குப் பாயசம் பங்கிட்டுக் கொடுத்த முறையைக் குறித்து அவர்களில் எவரும் சிறிதேனும் அதிருப்தி அடையவில்லை. அதைத் தமது தகுதிக்கு ஏற்றவிதம் என்றே கருதிக் களிப்படைந்தார்கள். அந்தத் தேவபாயசத்தைப் புசித்த சில காலத்துக்குள் அவர்கள் கர்ப்பவதிகளானார்கள். அவர்களுடைய தேஜசு அக்கினி போலவும் விளங்கிற்று. தசரதர் தமது மனைவியர் மூவரும் கருவுற்றதை அறிந்து கவலை ஒழிந்து, தேவலோகத்தில் தேவர்களாலும் சித்தர்களாலும் முனிவர்களாலும் பூசிக்கப்பட்டு விளங்குகிற இந்திரனைப்போல் மிகுந்த ஆனந்தத்தை அடைந்தார் (16ஆம் சருக்கம்).



யாகம் முடிந்து ஆறு ருதுக்கள் கழிந்தபின் பனிரெண்டாம் மாதத்தில் கௌஸல்யை சித்திரை மாதத்து சுக்கில பட்ச நவமி திதியில், புனர்வசு நக்ஷத்திரத்தில், கற்கடக லக்கினத்தில், ஐந்து கிரகங்கள் உச்சமாய் நிற்க, லக்கினத்தில் சந்திரனும் குருவும் சேர்ந்திருக்க, எல்லாராலும் வணங்கப்படுகிறவரும் ஜகந்நாதரும் சர்வ லக்ஷணங்களும் பொருந்தியவருமான இராமர் என்ற குழந்தையைப் பெற்றாள். விஷ்ணு பகவானுடைய பாதி அம்சமாய் இக்ஷ்வாகு வம்சம் விளங்கத் தோன்றிய மகா பாக்கியசாலியான இராமராகிய அளவில்லாத தேஜசுடன் விளங்கிய அக்குழந்தையைப் பெற்ற கௌஸல்யாதேவி, வச்சிராயுதத்தைக் கையில் தரித்த தேவேந்திரனை ஈன்ற அதிதி தேவியைப் போல் விளங்கினாள். வெகு சத்தியசந்தனும், எல்லா நற்குணங்களையும் உடையவனும், விஷ்ணுவின் அம்சத்தில் நான்கில் ஒரு பங்கு அம்சமுள்ளவனுமான பரதனைக் கைகேயி பெற்றாள். வீரர்களாயும் எல்லா அஸ்திர வித்தைகளிலும் வல்லவர்களாயும் விஷ்ணுவினுடைய அம்சமாயும் விளங்கும் லட்சுமணன், சத்துருக்கனன் என்பவர்களைச் சுமித்திரை பெற்றாள். களங்கமற்ற புத்தியையுடைய பரதன் புஷ்ய நக்ஷத்திரத்தில் மீன லக்கினத்திலே ஜனித்தான்.

லட்சுமணனும் சத்துருக்கனனும் ஆயிலிய நக்ஷத்திரத்தில் கடக லக்கினத்தில் பிறந்தார்கள்.

குழந்தைகள் பிறந்து பதினோரு நாள் சென்ற பின்பு மகாராஜா தமது குழந்தைகளுக்கு வெகு சிறப்பாக நாம கரணம் செய்யலானார். மூத்த குமாரனுக்கு இராமன் என்றும், கைகேயியினிடம் பிறந்தவனுக்குப் பரதன் என்றும், சுமித்திரையின் குழந்தைகளுக்கு லட்சுமணன். சத்துருக்கனன் என்றும் வசிஷ்ட முனிவர் வெகு அன்புடன் பெயரிட்டார். (18ஆம் சுருக்கம்)

தசரத மன்னன் புத்திரப் பேறில்லாமல் வருந்தியதும் புத்திரகாமேஷ்டி யாகம் செய்ய தீர்மானித்ததும், யாகம் நடந்ததும், புத்திரர்கள் பிறந்ததும், பெயரிடப்பட்டதும் ஆகிய கதைப் பகுதி வால்மீகி முனிவர் இராமாயணத்தில் மேலே கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது.

இதே கதைப் பகுதியைக் கம்பர் எப்படி மாற்றிச் சொல்லுகிறார் என்பதைப் பார்ப்போம்:

எய்யென எழுபகை எங்கும் இன்மையான்
மொய்பொரு தினவுறும் முழவுத் தோளினான்
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய்எனக் காத்து இனிது அரசு செய்யும்நாள்.

(தசரத மன்னன், தன்னுடைய நாட்டின்மீது) போர்புரியப் படையெடுத்து வரக்கூடிய பகைவர்கள் எங்குமில்லாதபடி (பகைவர்களை ஒடுக்கி) தன்னுடைய போர் வலிமையுள்ள தோள்கள் எதிர்ப்பவரில்லாமல் தினவெடுக்கும்படி போரே இல்லாமல், ஓர் ஏழைக் குடியானவன் தனக்குள்ள ஒரே செய் வயலை (¼ ஏகரா) எவ்வளவு கண்ணும் கருத்துமாகக் காத்துப் பயிர்களை



வளர்ப்பானோ அப்படிக் குடிகளைப் பாதுகாத்து அரசாட்சி நடத்தி வரும் நாளில்,

ஆயவன் ஒருபகல் அயனையே நிகர்
தூயமா முனிவரன் தொழுது "தொல்குலத்
தாயரும் தந்தையும் தவமும் அன்பினால்
மேயவான் கடவுளும் பிறவும் வேறும்நீ."

அப்படிப்பட்ட தசரத மன்னன் ஒரு நாள் பிரமதேவனுக்கே சமானமான முனிவராகிய வசிஷ்டரை வணங்கி, "எங்கள் புராதன குலமாகிய இட்சுவாகு வம்சத்துக்குத் தாயும் தந்தையும், தவமும், கருணையின் காரணமாக நாங்கள் வணங்கி வரும் உயர்ந்த தெய்வமும் மற்றும் பிறவும் தாங்களே.

"எங்குலத் தலைவர்கள் இரவி தன்னினும்
தம்குலம் விளங்குறத் தரணி தாங்கினார்;
மங்குநர் இல்லென வரம்பில் வையகம்
இங்குனது அருளினால் இனிதின் ஓம்பினேன்."

எங்கள் குலத்து அரசர்கள் சூரியனைக் காட்டிலும் தங்கள் குலம் பிரகாசிக்கும்படி உலகத்தை அரசாண்டார்கள். நானும் தங்களுடைய அருளால், இந்த எல்லையில்லாத ராச்சியத்தை இதில் குறையுள்ளவர்கள் ஒருவரும் இல்லாதபடி, குடிகளைப் பாதுகாத்து அரசாண்டேன்.

"அறுபதினாயிரம் ஆண்டு மாண்டுற
உறுபகை ஒடுக்கி இவ்வுலகை ஓம்பினேன்;
பிறிதொரு குறையிலை; எற்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்கம் உண்டரோ."

அறுபதினாயிரம் ஆண்டுகள் கழிந்துபோக, வந்த பகைவர்களையெல்லாம் வென்று ஒடுக்கி, இந்த நாட்டை

அரசாண்டேன். எனக்கு வேறொரு குறையும் இல்லை; ஆனால், எனக்குப் பின்னால் (என்னுடை முன்னோர்களும் நானும் பாதுகாத்தது போல் இந்த நாட்டைப் பரிபாலிக்க எனக்குப் புத்திரரில்லாததால்) இந்த உலகம் வருந்துமே என்ற மனக்கவலை ஒன்றுதான் எனக்கு இருந்து வருகிறது.

''அருந்தவ முனிவரும் அந்தணாளரும்
வருந்துதல் இன்றியே வாழ்வின் வைகினார்;
இருந்துயர் உழக்குநர் எற்பின் என்பதோர்
அருந்துயர் வருத்தும்என் அகத்தை'' என்றனன்.

கடினமான தவத்தை மேற்கொண்டுள்ள முனிவர்களும் அந்தணர்களும் ஒரு துன்பமும் இல்லாமல் (என்னுடைய பாதுகாப்பில்) வாழ்ந்து வந்தார்கள். எனக்குப் பின்னால் அவர்களெல்லாம் பெருந்துயரமடைவார்களே என்ற பெரிய கவலை என் உள்ளத்தை வருத்திக் கொண்டிருக்கிறது — என்றார் தசரத மன்னன்.

முரசறை செழுங்கடை முத்த மாமுடி
அரசர்தம் கோமகன் அனைய கூறலும்
விரைசெறி கமலமென் பொகுட்டு மேவிய
வரசரோருகன் மகன் மனத்தின் எண்ணினான்.

எப்போதும் மங்கல முரச வாத்தியம் முழங்கிக் கொண்டிருக்கும் ஆசார வாசலையுடைய முத்து மகுடம் புனைந்த அரசர்க்கரசனான தசரதன் அப்படிச் சொன்னவுடன், மணமிக்க தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனுடைய புத்திரரான வரந்தரவல்ல வசிட்டர் மனத்துக்குள்ளேயே எண்ணிப் பார்த்து (தம்முடைய ஞானப் பெருமையினால் பின்வரும் உண்மை) நினைவுக்கு வரப்பெற்றார்.

அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை
மலையென விழிதுயில் வளரும் மாமுகில்



கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பென்; என்று
உலைவுறும் அமரருக்கு உரைத்த வாய்மையே.

அலைகளுள்ள கடலின் நடுவில் ஒப்பரிய ஆதிசேடன் மேல் மலைபோல் பள்ளிகொண்டிருக்கும் மகிமை மிக்க மேக வண்ணனாகிய நாராயணன், கொலைத்தொழிலைச் செய்துவரும் அரக்கர்களுடைய கொடுமையை நான் நீக்கி வைக்கிறேன் என்று முன்னே தேவர்களுக்குச் சொல்லியுள்ள சத்தியத்தை நினைவு கூர்ந்தார்.

அப்படி நாராயணன் தேவர்களுக்கு வாக்களித்தது எப்படி நிகழ்ந்தது என்பதும் வசிட்டருக்கு நினைவுக்கு வந்தது. எப்படி நிகழ்ந்ததென்றால், தசரதன் புத்திர காமேட்டி யாகம் செய்வதற்கு முன்னாலேயே,

சுடுதொழில் அரக்கரால் தொலைந்து வானுளோர்
கடுஅமர் களன்அடி கலந்து கூறலும்
படுபொருள் உணர்ந்த அப்பரமன் யாம்இனி
அடுவதில் என மறுத்து அவரொடு ஏகினான்.

தீய செயல்களையே செய்யும் அரக்கர்களால் தோல்வியடைந்த தேவர்கள் விடமுண்ட நீலகண்டனாகிய சிவபிரானுடைய பாதங்களில் வணங்கி, (அந்தத்தேவர்கள் அரக்கர்களால் படும் துன்பத்தை) சொன்னதற்கு, உள்ளத்தை அறிந்த அந்தப் பரமசிவம், நாம் இனிமேல் சண்டையிடுவதில்லையென்ற விரதம் பூண்டிருக்கிறோம் என்று, உதவி செய்ய மறுத்து, ஆனால் பிரமனிடத்திற் சொல்லுவோம் என்று தேவர்களைக் கூட்டிக் கொண்டு பிரமனிடம் போனார்.

கறைமிடற்று இறைவனும் கடவுளோர்களும்
மறைமுதல் கிழவனை வந்து நண்ணலும்
முறைமையின் கடன்முறை முற்றி முண்டகத்து
இறைவனும் அவரொடும் இனிதின் ஏகினான்.

நீலகண்டனாகிய பரமசிவனும் தேவர்களும் வேதங்களுக்கு உரிமையாளனாகிய பிரமனிடம் வந்து சேர்ந்ததும் வந்தவர்களுக்கு முறைப்படி உபசாரங்கள் செய்து தாமரை மலரோனாகிய பிரமனும் வந்தவர்களோடு சேர்ந்து எல்லாருமாக மேருமலைக்குச் சென்றார்கள்.

அங்கே எல்லாரும் அமர்ந்து ஆலோசனை செய்தார்கள். அந்த ஆலோசனையில்,

''இருபது கரம் தலை ஈரைந்து என்னும் அத்
திருவிலி வலிக்கு ஒரு செயலின்று எங்களால்
கருமுகில் எனவளர் கருணையங்கடல்
பொருது இடர்தணிப்பின் உண்டு;'' எனும் புணர்ப்பினார்.

இருபது கைகளும் பத்துத் தலைகளும் உள்ள அந்தக் கொடிய இராவணனுடைய வல்லமையை வெல்ல நம்மால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை கருமேகம் போல் (பாற்கடலில்) கண் வளரும் கருணைக் கடலாகிய நாராயணன் போர்புரிந்து அவனைக் கொன்று நம்முடைய துன்பங்களைத் தீர்த்தால்தான் உண்டு; வேறு வழியில்லை என்ற உபாயத்தைத் தீர்மானித்தவர்களாக (எல்லாரும் சேர்ந்து)

''திரைகெழு பயோததி துயிலும் தெய்வ வான்
மரகத மலையினை வழுத்தி நெஞ்சினால்
கரகமலம் குவித்து இருந்த காலையில்,
பரகதி உணர்ந்தவர்க்கு உதவு பண்ணவன்

அலைகள் மிகுந்த பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் மேலான தெய்வமான மரகதமலை போன்ற நாராயணனை மனத்தில் தியானம் செய்து, கரங்குவித்து வணங்கினவுடனே, தன்னை உணர்ந்தவர்களுக்கு முத்திகொடுக்கும் தகைமையுடைய அந்த நாராயணன்,



கருமுகில் தாமரைக் காடுபூத்து, நீள்
இருசுடர் இருபுறத் தேந்தி, ஏடவிழ்
திருவொடும் பொலிய ஓர் செம்பொன் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினான்.

கருத்த மேகம், பூத்த தாமரைக் காட்டோடு, சூரியன் சந்திரன் ஆகிய இரண்டு சுடர்களையும் இரண்டு பக்கத்திலும் தாங்கிக் கொண்டு அழகுசொட்டும் திருமகளோடும் விளங்க ஒரு சிவந்த பொன்மலைமேல் வருவதுபோலக் கருடன்மீது வந்து காட்சியளித்தான். உடனே,

எழுந்தனர் கறை மிடற்று இறையும் தாமரை
செழுந் தவிசு உகந்த அத்தேவும்; சென்று எதிர்
விழுந்தனர் அடிமிசை விண்ணுளோ ரொடும்;
தொழுந்தொறும் தொழும்தொறும் களி துளங்குவார்.

கழுத்தில் கறுப்புள்ள பரமசிவனும், செழுமையான தாமரை ஆசனத்தில் மகிழ்ந்து வீற்றிருக்கும் பிரமனும் எழுந்து சென்று நாராயணனுக்கு எதிரில் சாஷ்டாங்கமாக அவன் பாதத்தில் தேவர்களோடும் விழுந்தார்கள். பலமுறை விழுந்து விழுந்து வணங்கி மிகுந்த களிப்படைந்தார்கள்.

இப்படித் தொழுது ஆடிப் பாடித் திருமாலை வணங்க அவனும் கருடனை விட்டிறங்கி ஒரு மண்டபத்தில் அமர்கின்றான். உடனே தேவர்கள் இராவணன், தமக்கும் உலகத்துக்கும் செய்துவரும் கொடுமைகளைச் சொன்னார்கள்.

''ஐயிரு தலையினோன் அனுசர் ஆதியாம்
மெய்வலி அரக்கரால் விண்ணும் மண்ணுமே
செய்தவம் இழந்தன; திருவின் நாயக,
உய்திறம் இல்லை,'' என்று உயிர்ப்பு வீங்கினார்.

பத்துத் தலைகளையுடைய இராவணன், அவன் தம்பி முதலான தேகபலம் மிகுந்த அரக்கர்களால் தேவலோகமும் பூலோகமும் நல்வாழ்வை இழந்துவிட்டன. அதிலிருந்தும் தப்ப எங்களுக்கு வல்லமையில்லை; லக்ஷ்மி நாயகனே! (இனி நீதான் கதி) என்று பெருமூச்சு விட்டார்கள்.

மேலும்,

''எங்கள் நீள்வரங்களால், அரக்கர் என்றுளார்
பொங்கும் மூவுலகையும் புடைத்து அழித்தனர்;
செங்கண் நாயக, இனித் தீர்தல் இல்லையேல்
நுங்குவர் உலகை ஓர் நொடியில்'' என்றனர்.

அந்த அரக்கர்கள் நாங்கள் கொடுத்த பெரிய வரங்களைக் கொண்டே, (இவர்களால் துன்பப்பட்டுப்) பொங்கிக் கொண்டிருக்கும் மூன்று உலகத்திலும் வாழ்கின்றவர்களை அடித்து அழிக்கின்றார்கள்; செந்தாமரைக் கண்களையுடைய எங்கள் தலைவனே, இனி இவர்களைத் தொலைக்காவிட்டால் உலகத்தை ஒரு நொடிப்பொழுதில் விழுங்கிவிடுவார்கள் — என்றார்கள்.

என்றனர் இடர்உழந்து இறைஞ்சி ஏத்தலும்
மன்றல்அம் துளவினான் "வருந்தல் வஞ்சகர்
தம்தலை அறுத்து இடர் தணிப்பென் தாரணிக்கு;
ஒன்றுநீர் கேள்'' என உரைத்தல் மேயினான்.

என்று அவர்கள் துயரம் மிகுந்து வணங்கித் தோத்திரம் செய்தவுடன், வாசனை வீசும் துளபமாலை யணிந்த நாராயணன் "வருத்தப்பட வேண்டாம். அந்த வஞ்சகர்களுடைய தலைகளை அறுத்து உலகத்தின் துன்பங்களை நீக்குவேன்; ஆனால் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள்.



''வானுளோர் அனைவரும் வானரங்களாக்
கானினும் வரையினும் கடிதடத்தினும்
சேனையோடு அவதரித்திடுமின் சென்று,'' என
ஆனனம் மலர்ந்தனன் அருளின் ஆழியான்.

தேவலோகத்திலுள்ள நீங்களெல்லாரும் வானரங்களாகக் காடுகளிலும் மலைகளிலும் தாயின் கருப்பத்திலும் உங்கள் பரிவாரங்களோடு போய்ப் பூலோகத்தில் அவதாரம் செய்யுங்கள் என்று கருணைக்கடலாகிய திருமால் முகம் மலர்ந்து சொன்னான்.

''மசரதம் அனையவர் வரமும் வாழ்வும் ஓர்
நிசரத கணைகளால் நீறு செய்ய, யாம்
கசரத துரக மாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதும் தாரணி''

பேய்த்தேர் போன்ற அந்த அரக்கர்களையும், அவர்கள் பெற்றுள்ள வரங்களையும், அவர்கள் வாழ்வையும், தப்பாமல் பாயக்கூடிய பாணங்களால் சுட்டெரித்துச் சாம்பலாக்கநான், யானை, தேர், குதிரை, காலாள் படைகள் மிகுந்தவராகிய தசரத மன்னனுடைய புத்திரனாக பூலோகத்தில் அவதரிக்கிறேன்.

''வளையொடு திகிரியும் வடவை தீ தர
வினைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளையவர் எனஅடி பரவ ஏகியாம்
வளைமதில் அயோத்தியில் வருதும்'' என்றனன்.

சங்கும், சக்கரமும், வடவைக் கனலையும் தீய்த்து விடக்கூடிய விஷத்தையுடைய விசாலமான பள்ளியணையாகிய ஆதிசேடனும் எனக்குத் தம்பிமார்களாகி அடிபணிந்து ஏவல் செய்யும்படி, நான் வளைந்த மதிற்சுவர்களையுடைய அயோத்தியில் அவதரிக்கிறேன்.

என்று திருமால் சொன்னது கேட்ட தேவர்கள் துள்ளி மகிழ்ந்து மங்கல கீதங்கள் பாட ஆரவாரித்தார்கள்.

போயது எம் பொருவல் என்னா இந்திரன் உவகை பூத்தான்;
தூயமா மலருளோனும் சுடர்மதி சூடினோனும்
சேய்உயர் விசும்புளோரும் தீர்ந்தது எம் சிறுமை'' என்றார்;
மாயிரு ஞாலம் உண்டோன் கலுழன்மேல் சரணம் வைத்தான்.

என்னுடைய துன்பம் நீங்கிவிட்டது என்று இந்திரன் மிக்க மகிழ்ச்சியடைந்தான்; பரிசுத்தமான தாமரை மலரின் மேலுள்ள பிரமனும், ஒளிர்மதி சூடிய சிவபிரானும் மிக்க உயரத்தில் வாழும் வானவர்களும் எங்கள் குறைகள் நீங்கின என்றார்கள்; மிகப் பெரிய உலகத்தைத் தன் சிறு வாயால் விழுங்கிய கிருஷ்ணனாக இருந்த திருமாலும் கருடன்மேல் ஏறிக் கொண்டார்.

நாராயணன் போய்விட்டபின் தேவர்கள் வானரங்களாகவும் கரடிகளாகவும் பூமியில் போய்ப் பிறப்பதைப் பற்றி அவரவர்களுடைய யோசனைகளைச் சொல்லி அந்தந்தப்படியே பூமியிற் பிறக்கப் போய்விடுகிறார்கள்.

மேலே சொன்ன நிகழ்ச்சிகளையெல்லாம் தமது ஞானக்கண்ணால் கண்டிருந்த வசிஷ்ட மகாமுனிவர்,

"ஈதுமுன் நிகழ்ந்தவண்ணம் எனமுனி இதயத்தெண்ணி,
மாதிரம் பொருத திண்தோள் மன்ன, நீ வருந்தல் ஏழேழ்
பூதலம் முழுதும் காக்கும் புதல்வரை அளிக்கும் வேள்வி
தீதற முயலின் ஐய, சிந்தைநோய் தீரும்,'' என்றான்.

இப்படி முன்னே நடந்துள்ளது என்று வசிஷ்டர் மனத்தில் எண்ணிப் பார்த்து "திக்குக்களையெல்லாம் வென்ற தோள்வலிமையுள்ள மன்னரே, நீங்கள் வருத்தப்பட



வேண்டாம் : (இந்த அயோத்தியை மட்டுமல்ல) ஏழும் ஏழுமான பதினான்கு உலகங்களையும் அரசாளக் கூடிய புதல்வரை உமக்குத் தரக்கூடிய புத்திரகாமேட்டி யாகத்தைக் குற்றமில்லாமல் செய்து முடித்தால் உம்முடைய மனக்கவலை நீங்கிவிடும்" என்றார்.

என்ன மாமுனிவன் கூற, எழுந்த பேருவகை பொங்க
மன்னவர் மன்னன் அந்த மாமுனி சரணம் சூடி,
"உன்னையே புகல் புக்கேனுக்கு உறுகண் வந்தடைவதுண்டோ
அன்னதற்கு அடியேன் செய்யும் பணி இனிது அளித்தி" என்றான்.

என்று வசிஷ்ட மாமுனிவர் சொன்னதும், பொங்கியெழுந்த பூரிப்போடு மன்னர் மன்னனாகிய தசரதன் அந்த மாமுனிவருடைய பாதங்களை வணங்கி "தங்களிடம் அடைக்கலம் புகுந்துள்ள எனக்குத் துன்பமும் உண்டாகுமா, அந்த யாகத்தைச் செய்வதற்கு அடியேன் செய்ய வேண்டிய காரியங்களைத் தயவு கூர்ந்து சொல்லுங்கள்" என்றான்.

தசரதன் அப்படிக்கேட்டு யாகம் செய்யத் துரிதப்படுவதைக் கண்ட வசிஷ்டர், விபண்டகர் என்னும் கலைக்கோட்டு முனிவரைப் பற்றியும், அவர் வசிக்கும் உரோமபத மன்னனுடைய தேசத்தைப் பற்றியும், அவரை அழைத்து வந்தால்தான் அந்த யாகம் குறைவற நடக்கும் என்பதையும் விரிவாகவே சொல்லுகிறார். இந்தப் பகுதிகளில் வால்மீகருக்கும் கம்பருக்கும் உள்ள வேற்றுமைகளைப்பற்றி இப்போது ஆராய வேண்டாம்.

தசரத மன்னன் ''மக்கட் பேறில்லாமல் வருந்தினதும் அதற்காகப் புத்திரகாமேட்டியாகம் செய்யத் தொடங்கியதும் எப்படி என்று கம்பர் சொல்லியிருப்பதை மேலே பார்த்தோம். புத்திரகாமேட்டி யாகம் முடிவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் வசிஷ்டர் ஒருவரே தசரதனுக்குப் புகட்டினதாகக் கம்பர் சொல்லுகிறார். இதுவரையிலும்

சொல்லப்பட்ட பகுதியில் வால்மீகி முனிவருக்கும் கம்பநாட்டாழ்வாருக்கும் உள்ள வேற்றுமைகள் மிகவும் கவனிக்கத் தக்கன.

வால்மீகர் சொல்லுகிறபடி, புத்திர காமேட்டி யாகத்தைச் செய்ய தசரதர் மந்திரிகளின் யோசனையைக் கேட்டுத் தீர்மானித்தார். தீர்மானித்த பிறகுதான் வசிஷ்டருக்கும் மற்ற முனிவர்களுக்கும் பிராமணர்களுக்கும் தெரிவித்தார். மேலும் புத்திர காமேட்டி யாகத்தை யாரைக் கொண்டு எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் கூடத் தசரதருக்கு வசிஷ்டர் சொன்னதாக இல்லாமல் யாக காரியங்களுக்கு அதிகாரியல்லாத சுமந்திரர் சொன்னதாக இருக்கிறது. அத்துடன் திருமால் இராமனாக அவதரிக்கச் செய்து கொண்ட சங்கற்பம், அவிர்ப்பாகத்தை வாங்கிக் கொள்ள வந்த தேவர்கள் சொன்ன பிறகுதான் மகா விஷ்ணு செய்துகொண்டதாக இருக்கிறது. அத்துடன் வால்மீகி சொல்லுவதில் இராமன் மகாவிஷ்ணுவின் பூரண அவதாரமல்ல. மகாவிஷ்ணுவின் பாதிதான் இராமன்.

அவிர்ப்பாகம் வாங்கிக்கொள்ள எல்லாத் தேவர்களும் இந்திரனும், பிரமனும், மகாவிஷ்ணுவும் வந்திருக்க அங்கே சிவபிரான் இல்லை. மும்மூர்த்திகளில் ஒருவரான சிவன் அங்கே இல்லாதிருப்பது பெருங்குறை. மகா விஷ்ணு வருவதும், ஏதோ அகஸ்மாத்தாக அவராகவே வந்ததாக இருக்கிறதன்றி, தேவர்கள் வேண்டி வந்ததாக இல்லை. அவர் அங்கே வந்த பிறகுதான் பிரமன் முதலாவனவர்களுக்கு மகாவிஷ்ணுவை, தசரதருக்குப் புத்திரனாகப் போகச் சொல்லலாம் என்ற எண்ணம் உதித்தது போல் இருக்கிறது.

இந்தக் குறைகளையெல்லாம் நீக்கி பகவானுடைய சங்கற்பத்தை, சாஸ்திரங்களுக்குப் பொருந்துவதாக்கி, இராமனைப் பூரண அவதாரமாக்கி, அவனை மனோவாக்குக் காயங்களுக்கு எட்டாத் பரம்பொருளாக்கித் தந்த பெருமை கம்பருடையது.



தசரத மன்னன் யாகம் செய்வதற்கு முன்னாலேயே பகவான் சங்கற்பம் செய்து கொண்டதாகவும், அதை ஞானக் கண்ணால் அறிந்து வசிஷ்டர் சொன்னார் என்றும் சொன்னது மட்டுமன்றி, யாக காரியம் முழுதும் வசிஷ்டராலேயே கவனிக்கப்பட்டது என்பதும் கம்பர் வாக்கு. அதனால் இட்சுவாகு வம்சத்துக்கு நெடுங்காலமாகக் குலகுருவாக இருந்துவரும் பிரமனுடைய புத்திரரும் மகிரிஷிகளுக்குள் மிகவும் மதிக்கப்பட்டவருமான வசிஷ்டரிடம் தசரதருக்கு எவ்வளவு பக்தியும் நம்பிக்கையும் இருந்தது என்பதும் உரியமுறையில் சொல்லப்படுகிறது.

வசிஷ்டர் மிகப் பெரியவர் என்பதைப் புத்திர காமேஷ்டி யாகம் செய்ய அழைத்து வரப்பட்ட விபண்டகர் என்னும் கலைக் கோட்டு முனிவரே தசரதனிடம் சொன்னதாகக் கம்பர் சொல்லுகிறார். அதைப் பார்ப்போம்.

தசரதர் வசிஷ்டர் சொல்லிய முறையில் உரோமபதன் நாட்டிற்குச் சென்று அந்த மன்னனுடைய உதவியுடன் கலைக் கோட்டு முனிவரை அயோத்திக்கு அழைத்து வந்தபின் யாக காரியங்களைத் தொடங்குமுன், தசரதர் கலைக் கோட்டு முனிவரை வணங்கி,

"சான்றவர் சான்றவ தரும மாதவம்
போன்றுஒளிர் புனிதநின் அருளில் பூத்தஎன்
ஆன்ற தொல்குலம் இனி அரசின் வைகுமால்
யான் தவமுடைமையும் இழப்பு இன்றாம் அரோ."

சான்றோர்களுக்கெல்லாம் சான்றோனே, தருமம் தவறாத மாதவமே வடிவெடுத்து வந்ததுபோலப்

பிரகாசிப்பவரே, தேவரீருடைய அருளினால் மலர்ந்த என்னுடைய மிகப்பழைய பரம்பரை அறுந்து போகாமல், இனி எனக்குப் பின்னும் தொடர்ந்து அரசாளும்; நான் புண்ணியம் செய்யாதவன் என்று எனக்குப் பழியும் இனி இல்லாமற் போகும் — என்றார்.

அதற்குக் கலைக்கோட்டு முனிவர் சொல்லுகிறார்.

என்றலும் முனிவரன் இனிது நோக்குறா
"மன்னவர் மன்ன கேள் வசிட்டன் என்றஇந்
நன்னெடும் தவன்துணை நவையில் செய்கைநீ
நின்னை இவ்வுலகினின் நிருபர் நேர்வரோ"

என்று தசரதர் சொன்னதும், கலைக்கோட்டு மாமுனிவர் இனிய முகத்துடன் பார்த்து, "மன்னர் மன்னனே கேள், வசிஷ்டர் என்ற இந்த நல்ல பெருந்தவசியைத் துணையாகக் கொண்டு குற்றமற்ற காரியங்களையே செய்துவருபவன் நீ; இந்த உலகத்திலுள்ள மற்ற மன்னர்கள் உனக்குச் சமானமாவார்களா?" என்று சொன்னார்.

யாக காரியங்களைப் பற்றி, கம்பர் மிகவும் சுருக்கமாகத்தான் சொல்லுகிறார். இதுதான் வால்மீகருக்கும் கம்பருக்கும் இடையிலுள்ள காலத்தால் மாற்றப்பட்டதெனக் கொள்ளத் தகுந்தது. யாகம் நடந்தது. கடைசியாகக் கலைக்கோட்டு முனிவர்,

"முகமலர் ஒளிர்தர மொய்த்து வானுளோர்
அகவிரை நறுமலர் தூவி ஆர்த்தெழ
தகவுடை முனிவனும் அத்தழலின் நாப்பணே
மகவுஅருள் ஆகுதி வழங்கினான் அரோ."

அந்த யாகம் நடப்பதை, ஆகாயத்தில் பெருங்கூட்டமாகக் கூடிப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்களுடைய முகங்கள் மகிழ்ச்சியினால் பிரகாசிக்கவும், மிக்க வாசனையுள்ள மலர்களைத் தூவி ஆரவாரம் செய்யவும், பெருந்தகைமையுடைய கலைக்கோட்டு முனிவரும், அந்த ஓமத்தீயின் மத்தியில் புத்திர பாக்கியத்தைத் தரக்கூடிய ஆகுதியைப் பெய்தார் — அப்போது,



ஆயிடைக் கனலின்நின்று அம்பொன் தட்டம்மீத்
தூயநற் சுதைநிகர் பிண்டம் ஒன்றுசூழ்
தீ எரிப் பங்கியும் சிவந்த கண்ணுமா
ஏயெனப் பூதம் ஒன்று எழுந்து ஏந்தியே

அப்பொழுது அந்த ஓமகுண்ட நெருப்பிலிருந்து, நெருப்பு எரிவதைப்போல் பிரகாசிக்கும் உரோமங்களும் சிவந்த கண்களும் உள்ளதான ஒரு பூதம், அழகிய பொன்னால் செய்யப்பட்ட தட்டத்தில் பரிசுத்தமான அமிர்தத்தை ஒத்த உண்ணத்தக்க பொருளைக் கையில் ஏந்திக்கொண்டு வேகமாகக் கிளம்பிற்று.

வைத்தது தரைமிசை; மறித்தும் அவ்வழி
தைத்தது பூதம்; அத்தவனும் வேந்தனை,
"உய்த்த நல்அமிர்தினை உரிய மாதர்கட்கு
அத்தகு மரபினால் அளித்தியால்" என்றான்.

அந்தப் பூதம் தான் கொண்டுவந்த அமிர்தமுள்ள தட்டத்தை, தரையின்மேல் வைத்தது; உடனே தான் வந்த வழியே நுழைந்து மறைந்துவிட்டது. அந்த கலைக்கோட்டு முனிவர் தசரத மன்னனைப் பார்த்து, "அந்தப் பூதம் கொண்டு வந்து சேர்த்த அமுதத்தை உம்முடைய மனைவிகளுக்கு முறைப்படி உண்ணக் கொடும்" என்றார்.

மாமுனி அருள்வழி, மன்னர் மன்னவன்
தூமமென் சுரிகுழல் தொண்டைத் தூயவாய்
காமர்ஒண் கௌசலை கரத்தின் ஓர் பகிர்
தாமுற அளித்தனன் சங்கம் ஆர்த்தெழ

கலைக்கோட்டு முனிவர் சொல்லியருளியபடி, மன்னர் மன்னனாகிய தசரதர், மணமுள்ள அழகான சுருள்கள் உள்ள கூந்தலை உடையவளும், கொவ்வைக் கனிபோல் சிவந்த உதடுகளை உடையவளும், அழகு பொருந்தியவளுமான கோசலையின் கரத்தில் அந்த அமுதத்தின் ஒரு பாதியை, மங்கல சங்கநாதம் முழங்க ஆசையோடு கொடுத்தார்.

*கைகயன் தனையைதன் கரத்தும் அம்முறை*
*செய்கையின் அளித்தனன் தேவர் ஆர்த்தெழப்*
*பொய்கையும் நதிகளும் பொழிலும் ஓதிமம்*
*வைகுறு கோசல மன்னர் மன்னனே.*

கைகயன் மகளாகிய கைகேசியின் கரத்திலும் அதே மாதிரியான செயலாக (கோசலைக்குக் கொடுத்தபின்) இருந்த அமுதத்தில் பாதியைத் தேவர்கள் மகிழ்ந்து துள்ளும்படி கொடுத்தான், தடாகங்களிலும் நதிகளிலும் சோலைகளிலும் அன்னங்கள் வசிக்கும்படியான கோசல நாட்டின் மன்னர் மன்னனாகிய தசரதன்.

இந்த இடத்தில் வால்மீகருக்கும் கம்பருக்கும் ஒரு மிகவும் முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. வால்மீகி முனிவர், தசரதர் கோசலைக்குக் கொடுத்தபின் உடனே சுமித்திரைக்குக் கொடுத்து விட்டுக் கடைசியாகக் கைகேசிக்குக் கொடுத்ததாகச் சொல்லுகிறார். அதிலும் கடைசியாகக் கொடுக்கப்பட்ட கைகேசிக்கே கடைசியாகப் பாத்திரத்தில் இருந்ததையும் வழித்துக் கொடுத்துவிடாமல், சற்று யோசனை செய்துவிட்டுக் கைகேசியைத் தாண்டிச் சென்று சுமத்திரைக்குக் கொடுத்ததாக வால்மீகி முனிவர் சொல்லுகிறார். கோசலைக்கு அடுத்தபடி கைகேசிக்குத் தரவேண்டியது முறையாக இருக்க வால்மீகி ஏன் இப்படிச் சொன்னாரென்பது விளங்கவில்லை. கம்பரைத் தொடர்வோம் :



*நமித்திரர் நடுக்குறும் நலம்கொள் மொய்ம்புடை*
*நிமித்திரு மரபுளான் முன்னர் நீர்மையில்*
*சுமித்திரைக் களித்தனன் சுரர்க்கு வேந்து இனி*
*சமித்தது என் பகையெனத் தமரொடு ஆர்ப்பவே*

பகைவர்கள் நடுங்கும்படியான மிகுந்த வல்லமையுள்ளவனும் நிமி என்ற பெயருடைய அரசனின் நல்ல வம்சத்தில் வந்தவனுமான தசரதன் முன்னைய முறைப்படி சுமித்திரைக்குக் கொடுத்தான்; அப்போது தேவேந்திரன் தனது சுற்றத்தாருடன் இனி என் பகைவன் ஒழிந்தான் என்று துள்ளிக்குதித்து மகிழ்ந்தான். (இந்திரசித்தைக் கொல்லப்போகிற ,லட்சுமணனை, சுமித்திரை பெறப்போகிறாள் என்ற மகிழ்ச்சியால் இந்திரன் ஆர்த்தான் என்பது குறிப்பு)

*பின்னும் அப்பெருந்தகை பிரிந்து வீழ்ந்தவை*
*தன்னையும் சுமித்திரை தனக்கு நல்கினான்;*
*ஒன்னலர்க்கு இடமும் வேறு உலகின் ஓங்கிய*
*மன்னுயிர் தமக்கு நீள் வலமும் துள்ளவே.*

மறுபடியும் அப்பெருந்தகை தசரதன், பாத்திரத்தில் மிஞ்சியிருந்த அமுதத்தையும் சுமித்திரைக்குக் கொடுத்தான்; அப்போது பகைவர்களுக்கெல்லாம் இடப்பக்கமும் உலகத்தில் மற்றுள்ள எல்லார்க்கும் வலப்பக்கமும் (சகுனங்களாகத்) துடித்தன.

இப்படி அமுதத்தை உண்ட கோசலை, கைகேசி, சுமித்திரை ஆகிய மூவரும் கருப்பவதிகளாகி விளங்கினார்கள்.

*ஆயிடைப் பருவம் வந்தடைந்த எல்லையின்*
*மாயிரும் புவிமகள் மகிழ்வின் ஓங்கிட*
*வேய் புனர் பூசமும் விண்ணுளோர்களும்*
*தூய கற்கடகமும் எழுந்து துள்ளவே*

அப்படியிருக்க, பிரசவிக்கும் பருவகாலம் வந்தபோது பூமாதேவி மிக்க மகிழ்ச்சியடைய, புனர்பூச நட்சத்திரமும் கற்கடக லக்கினமும் சேர்ந்திருக்க, தேவர்கள் துள்ளிக்குதித்துக் களிக்கும்படி,

ஒருபகல் உலகெலாம் உதரத்துள் பொதிந்து
அருமறைக்கு உணர்வரும் அவனை, அஞ்சனக்
கருமுகில் கொழுந்து எழில்காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனன் திறம்கொள் கோசலை.

ஒரு நாள் உலகங்களையெல்லாம் தன் வயிற்றில் அடக்கிப் (பின் விரியச் செய்யக்கூடியனவென்று சொல்லப்படும்) அரிய வேதங்களாலும் கண்டறிய முடியாத பரம்பொருளாகிய அஞ்சனமை போல் கருத்த மேகத்தின் அழகுடைய ஆண் குழந்தையைப் பாக்கியவதியான கோசலை மங்களகரமாகப் பெற்றாள்.

ஆசையும் விசும்பும் நின்று அமரர் ஆர்த்தெழ,
வாசவன் முதலினோர் வணங்கி வாழ்த்துற,
பூசமும் மீனமும் பொலிய நல்கினாள்
மாசறு கேகயன் மாது மைந்தனை.

திசைகளிலும் ஆகாயத்திலும் கூடி நின்று தேவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரிக்க, இந்திரன் முதலியவர்கள் வணங்கி வாழ்த்துக்கள் சொல்ல, பூசநட்சத்திரமும் மீன லக்கினமும் சேர்ந்து விளங்கும் முகூர்த்தத்தில் குற்றமற்ற கேகயன் மகளாகிய கைகேசி மகனைப் பெற்றாள்.

தளையவிழ் தருவுடை சயில கோபனும்
கிளையும் அந்தரம் மிசை கெழுமி ஆர்ப்புற,
அளைபுகும் அரவினோடு அலவன் வாழ்வுற
இளையவற் பயந்தனள் இளைய மென்கொடி.



மலர்கள் விரியும் கற்பகத் தரு உடையவனான இந்திரனும் அவன் சுற்றத்தார்களும் ஆகாயத்திலிருந்து கொண்டு மகிழ்ந்து ஆரவாரிக்க ஆயிலிய நட்சத்திரமும் கற்கடக லக்கினமும் சேர்ந்த முகூர்த்தத்தில் இளையவனைப் பெற்றாள், மூன்று மனைவிகளிலும் இளையவளான சுமித்திரை.

படங்கிளர் பஃறலைப் பாந்தள் ஏந்துபார்
நடங்கிளர்தர, மறைநவில நாடகம்,
மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட
விடங்கிளர் விழியினாள் மீட்டும் ஈன்றனள்.

படம் விரிந்துள்ள (ஆயிரம்) தலைகளையுடைய ஆதிசேடன் தாங்கிக்கொண்டிருக்கிற இந்தப் பூமியிலுள்ளவர்கள் ஆனந்தத்தால் நடனமாடவும், வேதங்களை ஓதவும், நாடகம் நடத்தவும், மக நட்சத்திரமும் சிம்ம லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் சுமித்திரை மறுபடியும் இன்னொரு மகனைப் பெற்றாள்.

இந்த இடத்தில் சத்துருக்கனன் பிறந்த முகூர்த்தம் வால்மீகி முனிவர் சொன்னதற்கு வேறுபட்டிருக்கிறது. வால்மீகி இலட்சுமணனும் சத்துருக்கனனும் ஆயிலிய நட்சத்திரத்தில் கற்கடக லக்கினத்தில் பிறந்தார்கள் என்கிறார். ஆனால் கம்பர் சத்துருக்கனன் மக நட்சத்திரமும் சிம்ம லக்கினமும் கூடியிருந்த முகூர்த்தத்தில் பிறந்ததாகச் சொல்லுகிறார். இந்த வேறுபாடு மிகவும் துணிகரமுள்ளது. இது மருத்துவ சாஸ்திரத்தையும் சோதிட சாஸ்திரத்தையும் ஒட்டியது. அந்த சாஸ்திரங்களில் வல்லவர்கள் ஆராயவேண்டிய விஷயம்.

# 11. தசரதன் பெருமை

மனிதன் மிக உயர்ந்த பிராணி. அதாவது உலகத்தில் காணப்படுகிற மற்றெல்லாப் பிராணிகளிலும் உயர்ந்தவன். மற்றப் பிராணிகளுக்கில்லாத பல சிறப்புக்கள் அவனுக்கு இருக்கின்றன என்றும், அவன்தான் இயற்கை என்றும் கடவுள் என்றும் சொல்லப்படுகிற மாபெரும் சக்தியை உணரக்கூடிய பகுத்தறிவு உடையவனென்றும், அதனால் அவனைக் கடவுளின் மாபெரும் சக்திக்கு ஒரு சிறு பிரதிநிதியாகக் கொள்ளப்படுகிறது என்றும் முன்னே சொல்லப்பட்டது. ஆனால் அந்தப் பகுத்தறிவைப் பயன்படுத்திக் கொண்டு தெய்வத்தை உணரக்கூடிய வழியில் தன் ஒழுக்கத்தை உயர்த்திக் கொள்ளுகிற வரையிலும் மனிதனும் மற்ற உயிர்களைப் போன்ற பிராணியாகத்தான் இருக்கிறான். எந்த அளவுக்கு இந்த ஒழுக்கத்தில் உயர்கின்றானோ அந்த அளவுக்குத்தான் அவன் தெய்வ சக்தியை உணர்ந்தவனாகிறான். அப்படி ஒழுக்கத்தில் உயர்ந்த மக்கள் அடங்கிய சமுதாயமே சந்தோஷமாக வாழ முடியும்.

இந்த உண்மையை அறிந்த பின்னும் பெரும்பாலும் மனிதர்கள் அந்த ஒழுக்கத்தின் அவசியத்தை மறந்துவிட்டோ அல்லது கோபத்தால் மறுத்துவிட்டோ தான் வாழ்க்கை நடத்துகிறார்கள். அப்படி மறந்துவிடுவதையும் மறுத்துவிடுவதையும் மாற்றி, மறந்தவர்களுக்கு நினைப்பூட்டவும், மறுப்பவர்களுக்கு நிரூபிக்கவுமே உயர்ந்த ஒழுக்கமுள்ள மகா புருஷர்கள் அடிக்கடி தோன்றுகிறார்கள். அப்படிப்பட்ட உத்தமர்களிற் சிலர் உலகத்தில் பிறந்து வாழ்ந்து வழிகாட்டிய சரித்திர புருஷர்களாக விளங்குகின்றார்கள். இன்னும் சிலர் கதைகளில் நடந்து காட்டும் பாத்திரங்களாக விளங்குகின்றார்கள். இப்படிப்பட்ட உயர்ந்தவர்கள், அவர்கள் எந்தத் தருமத்தை வாழ்ந்து காட்டி மனித சமுதாயத்தை உயர்த்தத் தோன்றினார்களோ அந்த தருமத்தில் உச்சமான ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்.



அரிச்சந்திரன் பொய் சொல்லக்கூடாது என்று வாழ்ந்தவன். அதில் தவறிவிடக்கூடிய சூழ்நிலைகள் பல நேரிட்டும் அவன் தவறவில்லை என்பதால்தான் அவனை என்றென்றும் மக்கள் நினைத்துப் பொய் சொல்லுவதை விலக்க முயல்கிறார்கள். மகாத்மா காந்தி சாந்த சத்தியாக்கிரகத்தைப் போதித்தார். அதில் அவர் துளிகூடப் பிசகாததனால் இந்திய மக்களுக்குத் தெய்வமாகவும் உலகத்துக்கே வழிகாட்டும் சோதியாகவும் விளங்குகின்றார்.. இப்படிப் பல உதாரணங்கள் உண்டு.

நல்ல கதைகளின் நோக்கமும் அப்படிப்பட்ட உத்தமப் பாத்திரங்களைக் கற்பனை செய்து, அவர்கள் தங்களுடைய கொள்கையில் தவறாது வாழ்ந்தார்கள் என்றும், அதற்காக உயிரையும் இழந்துவிடத் தயங்கவில்லையென்றும் காட்டி மக்களின் ஒழுக்கத்தை உயர்த்துவதேயாகும். அப்படிப்பட்ட ஒரு கதைதான் இராமாயணம். அதில் ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு தனிக் குணத்திற்குப் பிரதிநிதியாக விளங்குகின்றது. அந்தந்தப் பாத்திரம் அந்தந்தத் தனிக் குணத்தில் தவறிவிடாமல் இருப்பதுதான் சிறப்பு. அந்தச் சிறப்பைப் பாதுகாக்கவே கம்பர் பல இடங்களி ும் கதை நிகழ்ச்சிகளை முற்றிலும் மாற்றியிருக்கிறார்.

தசரதர், சொன்ன சொல் தவறக் கூடாது என்று சத்தியத்துக்காக உயிரை இழக்கத் துணிந்தவர் என்றே

வால்மீகி முனிவரும் கம்பரும் சொல்லுகிறார்கள். ஆனால் வால்மீகியின் கதைப் போக்கில் அந்தநிலை தவறிவிட்டவர் போலத் தசரதர் காணப்படுகிறார். அது எப்படியெனில் :

வால்மீகி முனிவர் தசரதருடைய குணப் பெருமைகளைச் சொல்லும்போது : — அயோத்திமா நகரத்தை ஆண்டவர் தசரத மகாராஜர் என்று பெயர் கூறப்படுபவர். அவர் நான்கு வேதங்களையும் நன்றாக ஓதி உணர்ந்தவர்; எல்லாரையும் தம் வசப்படுத்துகிறவர்; பின்வருங் காரியங்களை முன்பாகவே வெகு கூர்மையாய் ஊகித்தறிபவர்; வெகு பராக்கிரமசாலி; நாட்டிலும் நகரத்திலும் வசிக்கும் ஒவ்வொரு மனிதரிடத்தும் நட்புள்ளவர்; இக்ஷ்வாகு வம்சத்தில் அதிரதர் என்று கீர்த்தி பெற்றவர்; அநேக யாகங்களையும் தருமங்களையும் தினந்தோறும் பண்ணிக் கொண்டிருப்பவர்; மனம் அடங்கினவர்; ஐம்புலன்களையும் தமக்குள் அடக்கினவர்; மகாமுனி என்று சொல்லும்படியான கடோர தபசி; மூவுலகத்திலும் கீர்த்தி பெற்ற இராஜ ரிஷி; வெகு பலசாலி; சத்துருக்களை நாசம் பண்ணினவர்; அநேக மித்திரர்களோடு கூடியவர்; ஐசுவரியங்களில் இந்திரனையும் குபேரனையும் போன்றவர்; ஆதிமநு எப்படிக் குடிகளை ரக்ஷித்தாரோ அவ்வண்ணம் குடிகளை ரக்ஷிப்பவர்; சொன்ன சொல் தவறாதவர்; தாம் செய்ய வேண்டிய தொழிலைச் சந்தோஷத்துடன் எக்காலத்தும் செய்பவர். இந்திரன் அமராவதி என்னும் நகரத்தை ஆள்வது போல் அவர் அயோத்தியை ஆண்டு வந்தார். (6—ஆம் சருக்கம், பாலகாண்டம்)

இப்படிப்பட்ட தசரதர் யாகம் செய்து இராமர் முதலான நான்கு மக்களைப் பெற்று மிக்க மகிழ்ச்சியுடன் இருக்கிறபோது, விசுவாமித்திர முனிவர் தாம் செய்யும் யாகத்தைக் காக்க இராமனை அனுப்பும்படி தசரதரைக்



கேட்பதற்காக அயோத்திக்கு வந்தார். அவரை வெகு மரியாதையுடன் வரவேற்ற தசரதர் அவரைப் பார்த்து,

''முனிபுங்கவரே! இன்று நீர் இங்கு வர நான் பெற்ற பாக்கியமானது அமிர்தம் கிடைக்கப் பெற்றால் எவ்வண்ணம் இருக்குமோ அவ்வண்ணமிருக்கிறது; மழையில்லாமல் தவிக்கும் தேசத்தில் மிகுதியாக மழை பெய்தால் எவ்வித சந்தோஷமுண்டாகுமோ அவ்வித சந்தோஷம் எனக்கு உண்டாயிருக்கின்றது; புத்திர பாக்கியம் இல்லாதவனுக்குச் சரியான மனைவியிடம் புத்திரோற்பத்தியானால் அவனுள்ளம் எப்படிக் களிக்குமோ அப்படி என் மனம் ஆனந்தமடைகிறது; பெருநஷ்டமடைந்தவனுக்கு இலாபம் கிடைத்தால் எவ்விதமான திருப்தி உண்டாகுமோ அவ்விதமான திருப்தி எனக்கு உண்டாயிருக்கிறது; பெரிய உத்சவத்தால் எவ்விதமான சந்தோஷமுண்டாகுமோ அவ்விதமான சந்தோஷத்தை நான் அடைகிறேன்; உமக்கு எந்தக் காரியம் எந்த விதமாய் முடிக்க வேண்டுமோ, அந்தக் காரியத்தை அந்த விதமாகவே நான் மகிழ்ச்சியோடு செய்து முடிக்கக் காத்திருக்கிறேன்.

தானங்களைப் பெறுவதற்கு உத்தம பாத்திரமானவர் நீர்தாம். எனது பாக்கிய விசேஷத்தாலேயே நீர் இங்கு வந்தீர். இப்பொழுது உமது வரவால் என் ஜன்மம் பலமாயிற்று. என் பிழைப்பும் நற்பிழைப்பாயிற்று. முதலில் ராஜரிஷியாயிருந்து பின்பு கடினமான தவம் புரிந்து பிரம்மரிஷி பட்டம் பெற்ற உம்மை நான் பலவிதமாகப் பூசிக்க வேண்டியவனாயிருக்கிறேன்; நீர் இவ்விடம் வந்தது வெகு ஆச்சரியம்; இன்று உம்மைத் தரிசித்தது ஒன்றே எ[illegible]ு பிறப்பை மிகவும் பரிசுத்தமாகப் பண்ணிவிட்டது. உமது வருகையால் இந்த க்ஷேத்திரம் புண்ணிய க்ஷேத்திரமாயிற்று. நீர் காரியம் எதையாவது உத்தேசித்து வந்திருந்தால் அதைச் சொல்லியருள

வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். எவ்விதமாயாவது நான் உமக்கு ஊழியம் செய்ய அதிக ஆசையுடையவனாக இருக்கிறேன்.

நீர் சொன்ன காரியத்தை நான் செய்கிற விஷயத்தில் நீர் சிறிதும் சந்தேகிக்க வேண்டியதில்லை. நீரே எனக்குக் கடவுளாதலால் நீர் சொல்லும் வேலையையெல்லாம் செய்யச் சித்தனாய்க் காத்துக் கொண்டிருக்கிறேன். உமது வருகை எனக்கு இன்று முதல் எல்லாவிதமான சம்பத்துகளும் மிகச் சிறந்த தருமங்களும் வந்துவிட்டன என்பதற்கு அடையாளம்,'' என்றார். இவ்வாறு மனத்துக்கும் காதுக்கும் சுகமாகவும், மனப்பூர்வமாகவும் அரசர் வணக்கத்தோடு சொன்ன சொல்லைக் கேட்டு, பெருங்கீர்த்தி பெற்றவரும் மகா குணசாலியுமான விசுவாமித்திர மகிரிஷி வெகு திருப்தியடைந்தார். *(18ஆம் சருக்கம், பாலகாண்டம்)*

விசுவாமித்திரர் சொல்லுகிறார் :

இராஜ சிங்கமே. உயர்ந்த குலத்தில் உதித்து வசிஷ்டரைக் குருவாக அடைந்து விளங்கும் உமக்கேயல்லது உலகத்தில் வேறு மன்னவர்க்கு இவ்வித உபசார வார்த்தைகள் சொல்லத் தெரியுமோ? நான் எதை உத்தேசித்து இங்கு வந்தேனோ அதை இப்பொழுதே தெரிவிக்கிறேன். அதைச் சத்தியவந்தரான நீர் நிறைவேற்றி வைக்க வேண்டும். நல்ல பேறு பெறும் பொருட்டு நான் ஒரு யாகம் ஆரம்பித்திருக்கிறேன். அதற்கு விகாதஞ் செய்ய மாயாரூபங் கொள்ளவல்ல மாரீசன், சுபாகு என்னும் இரண்டு ராக்ஷசர்கள் தலைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வெகு பராக்கிரமம் உள்ளவர்கள். யாகமோ பெரும்பாலும் முடிவு பெறும்படியான நிலைமையில் இருக்கிறது. அவ்விருவரும் அதைக் கெடுக்க யாக பூமியில் கூடை கூடையாக



மாம்சங்களையும், குடங்குடமாக இரத்தத்தையும் கொண்டு வந்து சொரிகிறார்கள்.

இவ்வண்ணமாக அவர்கள் என் யாகத்துக்கு இடையூறு செய்வதால் நான் பட்ட சிரமங்களெல்லாம் வீணானதைப் பார்த்துக் குதூகலம் குன்றி என் ஆச்சிரமத்தை விட்டு வந்துவிட்டேன். யாகத்துக்கு தீக்ஷை பண்ணிக்கொண்டிருக்கிறவன் கோபத்துக்கு இடங் கொடுக்கலாகாது என்பது விதியாகையால், கோபங்கொண்டு அவர்களைச் சபிக்க எனக்குப் புத்தி வரவில்லை.

"இந்த விஷயத்தில் என்னைக் காக்க உமது மூத்த குமாரரான இராமரை உம்மைக் கேட்டு அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிறேன். அவர் பக்கக் குடுமி வைத்துக் கொண்டிருக்கிற சிறு குழந்தையென்றாலும் ஒப்பற்ற சாமர்த்தியம் உடைவர். அவர் என்னால் பாதுகாக்கப்பட்டு என்னுடைய ஆச்சிரமம் சேர்ந்ததும், அந்த ராக்ஷசர்களால் உண்டாகும் இடையூறைத் தமது திவ்விய தேஜோ மகிமையால் நீக்குவார் என்பது திண்ணம். இதன்மூலமாக அவருடைய பலவிதமான மேன்மையும் கீர்த்தியும் மூன்று லோலகங்களிலேயும் பரவப் போகின்றன.

இந்த விஷயத்தை நிறைவேற்றுவதற்காக நான் அவருக்கு அநேகவிதமான அஸ்திர சாஸ்திரங்களை அளிக்கும்படி நேரிடும். இராமன்முன்பு மாரீசன் சுபாகு என்ற இரண்டு ராக்ஷசர்களும் ஒரு நிமிஷங்கூட நிற்க மாட்டார்கள். இராமரையல்லது வேறு யாரும் வதை செய்ய முடியாது. காலன் அவர்களை முன்னரே தனக்கு இரையாக இலக்கு வைத்துவிட்டான். அவர்கள் இராமருக்கு எதிராகுந் தரமுடையவரல்லர். குழந்தையாயிற்றே என்று நீர் மனங் கலங்க வேண்டாம். இராமர் என் ஆச்சிரமம்

வந்ததும் அரக்கர்கள் இருவரும் மாண்டார்கள் என்பதாக நான் சொல்லுவதை நீர் நிச்சயமாய் நம்பும்.

"மகாத்துமாவும் சத்திய பராக்கிரமருமான இராமரை உண்மையாய் அறிந்தவன் நான் ஒருவன்; வசிஷ்டர் ஒருவர்; மற்றும் தவம் புரிந்தவர்களும் இராமனை உள்ளபடி கண்டறிந்திருக்கிறார்கள். உலகத்தில் அழியாத பேரறமும் பெரும் புகழும் அடையவேண்டுமென்று உமக்கு இஷ்டமிருந்தால், உடனே இராமரை நீர் என்னுடன் அனுப்ப வேண்டும். அரசரே, இது விஷயமாக வேண்டுமானால் நீர் வசிஷ்டர் முதலான பெரியவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்கலாம், அவர்கள் இராமரை என்னுடன் அனுப்பலாம் என்று சொன்னால் பிறகு உமக்கு என்ன ஆக்ஷேபம்? எனது யாகமோ பத்து நாளைக் காரியம். இல்லையென்று சொல்லாமல் இராமரை உடனே என்னுடன் அனுப்ப வேண்டும். சிறுகுழந்தையைப் பெரிய காரியத்தில் அனுப்புகின்றோமே என்று உமது மனதில் கொஞ்சமேனும் வருத்தப்பட வேண்டாம்'' என்று இவ்விதமாய் அந்தத் தர்மாத்துமாவாகிய விசுவாமித்திர முனிவர் தசரதரைப் பார்த்துத் தமது காரியத்தின் பொருட்டும் உலகத்தின் நன்மையின் பொருட்டும் இராமரைத் தாம் அழைத்துக் கொண்டு போக வேண்டிச் சொல்லி முடித்தார். அவர் சொன்னவற்றையெல்லாம் கேட்டுத் தசரதர் மிக்க சோகமும் பயமுமுற்று, தம் பிள்ளைமேல் தாம் வைத்திருந்த ஆசையால் மூர்ச்சையடைந்தார். (19ஆம் சருக்கம், பாலகாண்டம்)

இங்கே குறிப்பிட வேண்டிய விஷயம், தசரதர் விசுவாமித்திரர் வந்தவுடன் அவரை வரவேற்கும் போதே, முனிவர் எதைக் கேட்டாலும் அதைச் செய்துவிடுவதாக வலிய வாக்குறுதி கொடுத்து அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லுவது.



விசுவாமித்திரர் பேச்சிலும், தசரதர் எந்தவிதமான பதிலும் சொல்லாதிருக்கும் போதே அவர் மறுத்துவிடுவார் என்று எதிர்பார்ப்பது போல,

"அழியாத பேரறமும் பெரும்புகழும் அடைய வேண்டுமென்று உமக்கு இஷ்டமிருந்தால் உடனே இராமரை நீர் என்னோடு அனுப்ப வேண்டும்; வேண்டுமானால் வசிஷ்டர் முதலானவர்களைக் கேளும், அவர்கள் அனுப்பலாம், என்று சொன்னால் பிறகு உமக்கென்ன ஆக்ஷேபம்" என்றெல்லாம் சொல்லுவதும், தசரதர் வசிஷ்டருடைய கருத்தையும் கேட்காமல் உடனே மூர்ச்சையாகி விட்டதும் குறிப்பிடத்தக்கன.

மூர்ச்சை தெளிந்தபின்பு தசரதர் முனிவரைப் பார்த்து "முனிபுங்கவரே! செந்தாமரைக் கண்ணனான என் குழந்தை இராமனுக்கு இன்னும் பதினாறு பிராயங்கூட ஆகவில்லையே. அவனை ராக்ஷசர்கள் முன்னின்று போர் புரிய வல்லவன் என்று நான் எவ்வாறு நினைக்கக் கூடும்? நானோ அக்ஷௌகிணிக் கணக்காயுள்ள சேனைக்குத் தலைவனாயிருக்கிறேன். எனது போர்வீரர்களோ மிகச் சமர்த்தர்கள்; எல்லாவகை அஸ்திரப் பயிற்சியிலும் தேர்ந்தவர்கள்; வெகு பல பராக்கிரமசாலிகள்; ராக்ஷச சமூகத்தோடு போரிடத் தக்கவர்கள்; இராமனை மாத்திரம் விட்டு அவர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டால் உடனே நான் புறப்பட்டுவிடுகிறேன். நானே கையில் விற்பிடித்து யாகத்தைப் பாதுகாத்துக் கொண்டு நின்று எனது உயிருள்ளளவும் போர்புரிகிறேன். இராமனைமட்டும் அழைத்துப் போதல் தகாது. நானே நேர் நின்று உம்முடைய யாகம் இடையூறடையாதவண்ணம் நன்றாகப் பாதுகாத்துவிட்டுத் திரும்புகிறேன். இராமனை மாத்திரம்

இங்கு விட்டருளுவீர். அவனோ குழந்தை; ஆயுதப் பயிற்சி இன்னும் நன்றாகக் கைவந்தவனல்லன்; அரக்கர்களுடையவும் தன்னுடையவும் பலாபலங்களைப் பகுத்தறியும் திறமில்லாதவன்; அஸ்திர பலம் பொருந்திய வனல்லன்; இன்னும் அவன் போரையே கண்டறியான்.

அவன் அரக்கர்கள் முன் நின்று சண்டையிட வல்லவனா? அவர்கள் வெகு கபடமாக யுத்தம் பண்ணுகிறவர்கள் அன்றோ! இராமனைப் பிரிந்து நான் ஒரு நிமிஷங்கூட என் பிராணனை வைத்திருக்க மாட்டேன்; ஆதலால் ஓ, முனிரத்தினமே, என் குழந்தையை அழைத்துப் போக வேண்டாம்; முடியாது. அவனை அழைத்துக் கொண்டு தான் போக வேண்டுமென்பது உமது நிச்சயமானால், என்னையும் என்னுடைய சதுரங்க சைநியத்தையும் அவனோடு அழைத்துவர விடை கொடுத்தருள்வீர்.

எனக்கோ பிராயம் அறுபதினாயிரம் ஆய்விட்டது. இந்த வயதில் நான் எவ்வளவோ சிரமப்பட்டுப் புத்திரகாமேஷ்டி பண்ணிப் பெற்ற பிள்ளை இவன். அதற்காகவாவது மனமிரங்கி அவனை விட்டுவிடும். எனக்குக் குழந்தைள் நால்வர்கள் இருந்தாலும் இராமனிடம் எனக்கு விருப்பம் அதிகமாக இருக்கிறது. அதன் பொருட்டாவது, தரும குணங்களுடையவனும் மூத்தவனுமான அவனை அழைத்துப் போகவேண்டாம்,

"அவ்வரக்கர்கள் யாவர்? அவர்கள் எந்த ராக்ஷச வமிசத்தில் பிறந்தவர்கள்? அவர்கள் பல பராக்கிரமம் எப்படிப்பட்டது? அவர்களுக்கு உதவி செய்பவர்கள் யாவர்? அவர்கள் உருவம் எவ்விதமாயிருக்கும்? எவ்வாறு அவர்களை இராமனைக் கொண்டு வதைக்க நீர் உத்தேசித்திருக்கிறீர்? நானாவது எனது சைநியமாவது, கபடமாக யுத்தம் பண்ணுகிற



கொழுத்த கொடிய அவர்கள் முன் நின்று சண்டை செய்து அவர்களை வதை செய்யும் உபாயம் என்ன? இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் பற்றி விவரமாகச் சொல்ல வேண்டும்," என்று தசரததர் கேட்டார்.

அதற்கு விசுவாமித்திர முனிவர் "புலஸ்தியர் வமிசத்திற் பிறந்த இராவணன் என்னும் பெயருடைய ஒரு ராக்ஷசன் இருக்கின்றான்; அவன் பிரமதேவரிடம் பல வரங்கள் பெற்று அதிக பல பராக்கிரமசாலியாய் அநேக ராக்ஷசர்களுடைய உதவியுடன் மூன்று உலகங்களையும் எப்பொழுதும் தைரியமாய் எதிர்த்து மிகவும் உபத்திரவம் செய்து கொண்டு வருகிறான். அவன் குபேரனுடைய தம்பி; பெருந்தவமுள்ள விசிரவ முனிவருடைய பிள்ளை. அவன் தான் யாகங்களைக் கெடுக்க முயலுகிறவனாகக் காட்டிக் கொள்வதில்லை. ஆனாலும், அவனுடைய ஏவுதலினால் சுபாகு, மாரீசன் என்ற கொடிய பராக்கிரமமுள்ள இரண்டு ராக்ஷஸர்கள் எப்பொழுதும் யாகத்தைக் கெடுப்பதிலேயே நோக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள்" என்றார்.

அதைக் கேட்ட தசரதர் திகைத்து, "ஐயோ! அந்த இராவணனுக்கு எதிரில் நின்று நான் போர் செய்ய வல்லவனல்லேன். என் சிறு குழந்தையிடம் நீர் மனமிரங்க வேண்டும்; நீரே எனக்குத் தெய்வம்; நீரே எனக்குக் குரு; தேவர்கள், தானவர்கள், கந்தருவர்கள், யக்ஷர்கள், கருடர்கள், நாகர்கள் முதலிய பெயர்பெற்றவர்களும் அந்த இராவணன் முன் போரில் நிற்கமாட்டார்களே! மனிதர்கள் எவ்வாறு எதிர் நிற்பார்கள்? அவனோ வீரர்களுக்குள் வீரனையும் ஒரு நொடியில் வெல்ல வல்லவன். அவனுடனாவது அவனுடைய சைநியத்துடனாவது போர் செய்ய என்னால் முடியாது. மாமுனிவரே, என் குழந்தைகளையோ அல்லது என் சைநியங்களையோ அழைத்துக் கொண்டு சென்றாலும்

என்ன செய்ய முடியும்? தேவர்களுக்கொப்பானவனும், போர் என்பதை இன்னும் அறியாதவனுமான என் குழந்தையைக் கொடேன்.

சுந்தன், உபசுந்தன் என்பவர்களுடைய குமாரர்களன்றோ உமது யாகத்தைக் கெடுக்க எத்தனித்திருக்கிறார்கள். அவர்கள் யுத்தத்தில் யமன் போன்றவர்கள்; பலத்திலும் ஆயுதப் பயிற்சியிலும் சிறந்தவர்கள். நான் ஒருபொழுதும் என் பிள்ளையை அனுப்பேன்; ஆனால் அவ்விருவரில் ஒருவனுடன் போர் புரிய நானும் என் சைநியமும் வருகின்றோம். அதற்கு நீர் எப்படியாவது இசைய வேண்டும். நான் இரந்து கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றார்.

இவ்வாறு தசரதர் சொல்லச் சொல்ல விசுவாமித்திர முனிவருக்குக் கோபம் பொங்கி, யாகத்தில் நன்றாக நெய் விடப்பட்டுத் தாவும் ஓமத் தீபோலக் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. (பாலகாண்டம் 20ஆம் சருக்கம்)

தசரதருடைய இந்தப் பேச்சு மிகவும் தடுமாற்றமுள்ளதாக இருக்கிறது. இராமன் மேலுள்ள பிரியத்தால் அவனை அனுப்பமாட்டேன் என்று சொல்வது அவருடைய புத்திர வாஞ்சையைக் காட்டுகிறது. ஆனால் இராவணனுடைய பெயரையும் சுபாகு மாரீசன் என்ற பெயரையும் கேட்ட மாத்திரத்தில், அவர் மிகவும் பயந்து நடுங்கி, அரக்கர்களுடைய பராக்கிரமத்தைச் சொல்லி, ஆரம்பத்தில் "நானே அக்ஷௌகினிகணக்காயுள்ள சேனைக்குத் தலைவனாயிருக்கிறேன். எனது சேனையோடு நானே நேராக வந்து அவ்வரக்கர்களுடன் போர் புரிகிறேன்.

எனது போர்வீரர்கள் சமத்தர்கள். எல்லாவித அஸ்திர சாஸ்திரப் பயிற்சியிலும் தேர்ந்தவர்கள்; வெகு பல



பராக்கிரமசாலிகள்; ராக்ஷச சமூகத்தோடு போரிடத்தக்கவர்கள். இராமனை மாத்திரம் விட்டு அவர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டால் உடனே நான் புறப்பட்டுவிடுகிறேன். நானே கையில் விற்பிடித்து யாகத்தைப் பாதுகாத்துக் கொண்டு நின்று உயிருள்ளளவும் போர்புரிகிறேன்...'' என்றெல்லாம் சொன்னதை அழித்துவிட்டு அவர்களோடு போர்புரியத் தன்னாலும் முடியாதென்றும், வேண்டுமானால் சுபாகு, மாரீசன் என்ற இருவரில் ஒருவரோடு மட்டும் போர்புரிய வருவதாகச் சொல்லுவதும், தசரதருடைய பெருமைகளைக் கெடுத்துவிடுகின்றது. அவருடைய சிறப்புக்களாக முதலில் சொல்லப்பட்ட எல்லாக் குணங்களுக்கும் மாசுண்டாக்குவதாக இருக்கிறது. கோழைத்தனத்தைக் கூட்டுகிறது.

வால்மீகி முனிவர் சொல்லுவதைத் தொடர்வோம் :—

புத்திர வாஞ்சையால் தசரதர் இவ்விதமாய் வெகு மனோவியாகுலத்துடன் குழறிக்கொண்டு சொன்ன சொல்லை விசுவாமித்திரர் கேட்டுக் கோபங்கொண்டு வேந்தரைப் பார்த்து "நான் கேட்டதைத் தப்பாமல் கொடுப்பதாய் முதலில் சொல்லிவிட்டு, இப்பொழுது இப்படித் தவறிச் சொல்லுகிறது உமக்குத் தருமமன்று. இது இரகு வமிசத்தார்கள் கொண்ட நோன்புக்கே விரோதமான காரியம். இப்படிச் சொல்லுவது உமக்குத் தகுதியாகுமானால் நான் வந்த வழியே தரும்பிச் செல்லுகிறேன். சொன்ன சொல் தவறிய நீர்தாமே பந்துக்களோடு சுகமாக வாழும்,'' என்று கூறினார்.

அப்போது அவருக்குண்டான கோபத்தைப் பார்த்துப் பூமி முழுவதும் நடுங்கிற்று; தேவர்கள் எல்லோரும் அஞ்சினார்கள்; இப்படி உலக முழுவதும் மிகவும் அஞ்சி

நடுங்கியதை, முக்காலங்களையுமறிந்த தைரியசாலியான வசிஷ்டமா முனிவர் பார்த்துத் தசரதரை நோக்கி "மகாராஜாவே! நீர் இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்து இரண்டாவது தருமதேவதை போல விளங்குகின்றீர். மனோதைரியத்தையும் நல்லோரன்பையும் கைப்பற்றியிருக்கும் நீர் உமது குலாசாரத்தை இப்பொழுது விட்டு விடுவது நியாயமன்று; நீர் தருமாத்மா என்பது மூவுலகமும் பரவியிருக்கிறது. ஆகையால் உமது குலதருமத்தைக் கைப்பற்றும்; தருமம் தவறி நடப்பது உமக்கு நியாயமன்று. இன்னபடி நடக்கிறேன் என்று வாக்குக் கொடுத்தால் அதற்கேற்றபடி நடக்க வேண்டும். அப்படி நடவாத பக்ஷத்தில் செய்த தருமங்களெல்லாம் பலனில்லாதனவாம். ஆதலால் இராமனை அனுப்பும். அஸ்திர சஸ்திர வித்தைகளில் இராமன் தேர்ந்தவனானாலும் இல்லையென்றாலும் விசுவாமித்திரருடைய பாதுகாப்பிலிருக்கிற வரையில் அவனை ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியாது. அக்கினி சக்கரம் அமிர்தத்தைக் காப்பது போல விசுவாமித்திரர் இராமனைக் காக்கும் பொழுது அரக்கர்கள் அவனை என்ன செய்ய முடியும்?" (21–ஆம் சருக்கம். பாலகாண்டம்)

மேலே உள்ளதைத் தொடர்ந்து வசிஷ்டர், விசவாமித்திரருடைய பெருமைகளைப் பற்றித் தசரதருக்கு விரித்துரைத்துக் கடைசியாக, "ஆகையால், இராமன் அவருடன் புறப்பட்டுப் போவதில் கொஞ்சமேனும் உமக்கு அச்சம் வேண்டாம். அரக்கர்களைத் தாமாகவே கொல்ல விசாமித்திரரால் முடியும் ஏன்பது உமக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கட்டும். இவர் இப்பொழுது உம்மை அடைந்து இராமனை யாசிப்பதெல்லாம் இராமனுடைய நன்மைக்காகவேயல்லது வேறல்ல", என்று சொல்லத் தமது மனக் கலக்கம் நீங்கினவராய்த் தசரதர் அதிக



சந்தோஷமடைந்து, விசுவாமித்திரருடன் தமது குமாரரைப் பயமில்லாமல் அனுப்பலாம் என்று நிச்சயித்தார். (21ஆம் சருக்கம்)

இங்கே குறிப்பிட வேண்டியது என்னவென்றால், விசுவாமித்திர முனிவரும், குலகுருவாகிய வசிஷ்டரும், தசரதரைச் சொன்ன சொல் தவறிவிட்டதாக இடித்துக் கூறுவது. விசுவாமித்திரர் இயல்பாகவே கோபக்காரர். தசரதனைக் கடிந்து அவர் சொன்னது சகஜம். ஆனால் குருவாகிய வசிஷ்டர், தசரதர் சொன்ன சொல் தவறிவிட்டதாகக் கூறுவதை இலேசாக எண்ணிவிட முடியாது. தசரதர் சொன்ன சொல் தவறாதவர் என்று வால்மீகி முனிவரே தசரதருடைய குண விசேஷங்களைச் சொல்லும் போது வருணித்தார். அத்துடன் தசரதர், சத்துருக்களை நாசம் பண்ணினவர் என்றும் வருணிக்கப்பட்டது.

அதனால் விசுவாமித்திரர் வந்தவுடனேயே, அவர் தாம் வந்த காரியத்தைச் சொல்லுவதற்கு முன்னால் தசரதர், முனிவர் எதைக் கேட்டாலும் தரக் காத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிவிட்டதும், யாகத்தைக் கெடுக்கிறவர்கள் இராவணனைச் சேர்ந்தவர்கள் என்று விசுவாமித்திரர் சொன்னவுடனே தசரதர் நடுங்கிவிட்டதும் அவரைச் சுதர்மத்தை மறந்து விட்ட பயங்கொள்ளி என்று சொல்லும் நிலைமையை உண்டாக்கி விடுகின்றன.

இந்தச் சங்கடங்களுக்கு இடமில்லாதபடி, இந்தப் பகுதியைக் கம்பர் மாற்றி அமைத்திருப்பது தசரதருடைய பெருமைகளைப் பாதுகாக்கிறது. அதைப் பார்ப்போம் :

விசுவாமித்திர முனிவர், தசரதரைக் கேட்டு இராமனைத் தம்முடைய யாகத்தைக் காப்பதற்கு அழைத்துக் கொண்டு போகத் தசரதருடைய சபைக்கு வருகிறார்.

மடங்கல்போல் மொய்ம்பினான் முன்னர் ''மன்னுயிர்''
அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரோடு
இடம்கொள் நான்முகனையும் படைப்பென் ஈண்டு'' எனாத்
தொடங்கிய துனியுறும் முனிவன் தோன்றினான்.

சிங்கத்தைப் போன்ற வலிமையுடைய தசரதருக்கு முன்னால், எல்லா சீவராசிகளும் சேர்ந்த வேறு உலகங்களை உண்டாக்கி, வேறு தேவர்களையும் உண்டாக்கி, வேறு பிரமனையும் உண்டாக்குகிறேன் என்று ஆரம்பித்த கோபம் மிகுந்த விசுவாமித்திர முனிவர் வந்தார். (விசுவாமித்திரர் திருசங்கு என்பவனை மனித உடலோடு சொர்க்கத்துக்கு அனுப்பினார். மனித உடலோடு சொர்க்கத்துக்குள் யாரும் நுழையக் கூடாது என்று தேவர்கள் அவனை மீண்டும் பூலோகத்துக்கே தள்ளிவிட்டார்கள். அதனால் கோபங் கொண்ட விசுவாமித்திரர், வேறு சொர்க்கத்தையும் வேறு உலகங்களையும், வேறு தேவர்களையும், வேறு பிரமனையும் சிருஷ்டி செய்து, அந்தச் சொர்க்கத்தில் திருசங்குவை அமர்த்துகிறேன் என்று ஆரம்பித்தார். பிறகு தேவர்கள் வணங்கிக் கேட்டுக் கொண்டதற்காக அப்படிச் செய்யவில்லை)

அப்படிப்பட்ட விசுவாமித்திரர் தசரதனிடம் வந்தார்.

வந்துமுனி எய்துதலும் மார்பின் அணிஆரம்
அந்தரதலத்து இரவி அஞ்ச ஒளி விஞ்சக்
கந்த மலரின் கடவுள் தன்வரவு காணும்
இந்திரன் எனக் கடிது எழுந்து அடிபணிந்தான்

முனிவர் வந்ததும், தசரதர் அவருடைய மார்பில் அணிந்திருந்த இரத்தின மணிகளால் ஆக்கப்பட்ட மாலைகள் ஆகாயத்திலுள்ள சூரியனும் கண் கூசும்படியாகப் பிரகாசிக்கும்படி, பிரமதேவனுடைய வரவைக் கண்ட இந்திரனைப் போல வேகமாக எழுந்து அவருடைய பாதங்களில் வணங்கினார்.



பணிந்து மணிசெற்றுபு குயிற்றி அவிர்பைம் பொன்
அணிந்த தவிசுஇட்டு அதின் அருத்தியொடு இருத்தி,
இணைந்த கமலச்சரண் அருச்சனை செய்து, இன்றே
துணிந்தது என்வினைத் தொடர்பு'' எனத் தொழுது சொன்னான்.

வணங்கி, பசும்பொன்னில் நவரத்தினங்கள் இழைக்கப்பட்ட ஆசனமிட்டு, அதில் முனிவரை அமரும்படி பணிவோடு கேட்டுக்கொண்டு, அவருடைய இரண்டு பாதகமலங்களுக்கும் அருச்சனை செய்து, என்னுடைய தீவினைகளெல்லாம் இன்றைய தினமே என்னை விட்டு நீங்கிவிட்டன. என்று வணங்கிச் சொன்னார், தசரதர்.

மேலும் தசரதர் முனிவரைப் பார்த்து,

''நிலம்செம் தவம்என்று உணரின் அன்று; நெடியோய், என்
நலம்செய் வினை உண்டெனினும் அன்று; நகர், நீ, யான்
வலம் செய்து வணங்க வெளிவந்த இது முந்து என்
குலம் செய் தவம்'' என்று இனிது கூற. முனி கூறும்.

பெரியோய், தேவரீர் இந்த நகரத்துக்கு எழுந்தருளி, நான் தங்களை வலம் வந்து வணங்கும்படி, தங்களுடைய ஆச்சிரமத்தை விட்டு வந்திருக்கிற இந்தப் பாக்கியம், இந்த என்னுடைய நாட்டு மக்கள் செய்த புண்ணியமோ! எண்ணிப் பார்த்தால் அதுவல்ல; நான் செய்த நல்வினைகளின் பயனோ என்றால் அதுவும் அல்ல; என்னுடைய குலத்தில் எனக்கு முன்னால் தோன்றிய என் மூதாதைகளெல்லாரும் செய்துள்ள புண்ணியங்களின் பயனாகத்தான் இருக்க வேண்டும் என்று, தசரதர் இனிமையாகச் சொல்ல அதற்கு விசுவாமித்திர முனிவர் சொல்லலுற்றார்.

''என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூறு ஒன்று உடையரானால்
பன்னகமும் நகு வெள்ளிப் பனிவரையும்,
பாற்கடலும் பதுமபீடத்
தன்நகரும், கற்பகநாட்டு அணிநகரும்,
மணிமாட அயோத்தி என்னும்
பொன்நகரும் அல்லாது புகழ் உண்டோ
இகல் கடந்த புலவு வேலோய்''

பகைவர்களை வென்று நிணம் கண்ட வேலையுடைய வேந்தே, என்னைப் போன்ற முனிவர்களும் தேவர்களும், அவர்களுக்கு ஒரு துன்பம் நேரிட்டால், அவர்கள் பல மலைகளையும் பார்த்துச் சிரிப்பதுபோல் வெண்மையாக விளங்கும் பனிமூடிய (சிவபிரான் இருக்கும்) கைலாயமலை அல்லது (நாராயணன் பள்ளி கொண்டிருக்கும்) பாற்கடல், அல்லது தாமரையில் வீற்றிருக்கும் பிரமனுடைய நகரம், அல்லது கற்பக மரம் இருக்கின்ற (இந்திரனுடைய) அளகாபுரி, (அங்கெல்லாம் சென்றும் தங்கள் துன்பங்கள் நீங்காவிட்டால்) கடைசியாக மணிகளால் இழைக்கப்பட்ட மாடங்கள் நிறைந்த இந்த அயோத்தி என்னும் அழகான நகரம் ஆகிய இவைகளைத் தவிர அவர்களுக்கு வேறுபுகலிடம் ஏது? மேலும்,

''இன்தளிர் கற்பக நறும்தேன் இடைதுளிக்கும் நிழல்
இருக்கை இழந்து போந்து,
நின்தளிர்க்கும் தனிக்குடைக்கீழ் அதின் ஒதுங்கி
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்கும் குலமணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீ கொண்டு
அன்றுஅளித்த அரசன்றோ புரந்தரன் இன்று
ஆள்கின்றது அரச'' என்றான்.



இனிய தளிர்களையுடையதும் மணமிகுந்த தேன் சொட்டுகின்ற மலர்களையுடையதுமான கற்பக நிழலில் சுகப்பட்டுக் கொண்டிருந்த தன் இந்திர பதவியை (சம்பராசுரன் பறித்துக் கொண்டதனால்) இழந்து விட்டு உன்னுடைய செழிப்பான ஒப்பரிய ஆட்சியின் கீழ் அபயம் புகுந்து (தன் பதவியை அசுரன் பறித்துக் கொண்ட) குறைகளைச் சொன்னான். அவனுக்காக நீ மனமிரங்கி அந்த மலைபோன்ற தோள்களுடைய சம்பராசுரனையும் அவனைச் சேர்ந்த எல்லாரையும் கொன்று விட்டு, அன்றைக்கு நீ மீட்டுக்கொடுத்த இராச்சியமல்லவா தேவேந்திரன் இன்றைக்கு அரசாள்வது? என்றார், விசுவாமித்திரர்.

முனிவர் சொன்ன முறையில், அவருக்கு ஏதோ துன்பம் உண்டாகி, அதைத் தீர்த்துக் கொள்ளத் தன்னை நாடி வந்திருக்கிறார் என்பதை எளிதில் அறிந்து கொண்ட தசரதர்,

''உரைசெய்யும் அளவில் அவன் முகம்நோக்கி உள்ளத்தில் ஒருவராலும்
கரைசெய்ய அரியதுஒரு பேருவகைக் கடல்பெருகக் கரங்கள் கூப்பி
அரைசுஎய்தி இருந்தபயன் எய்தினென் மற்று
இனிச்செய்வது அருளு கென்று
முரசுஎய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியும் முனிவன் ஆங்கே''

முனிவர் அப்படிச் சொன்னவுடன், தசரதர் முனிவருடைய முகத்தைப் பார்த்துத் தன்னுடைய மனத்தில் எவராலும் அளந்தறிய முடியாதபடி மிகப் பெரிய மகிழ்ச்சியடைந்து, இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு "அரசனாக இருந்த பயனை இன்றுதான் அ ந்தேன். (தங்களைப் போன்று பெரியவருக்கு ஒரு குறை நேர்ந்து, அதை நான் நீக்கி உதவினேன் என்பதைவிட அரசனாக இருப்பதால் அடையக் கூடிய பெரிய பயன்

வேறொன்றுமில்லை என்ற கருத்துடன்) இனி நான் செய்ய வேண்டியது என்ன? பணித்தருளுங்கள்" என்று முரசவாத்தியம் முழங்கிக் கொண்டிருக்கும் ஆசாரவாசலையுடைய தசரதர் முன்னால் சொல்ல, உடனே முனிவர் சொல்லலானார்.

"தருவனத்துள் யான்இயற்றும் தவவேள்விக்கு இடையூறாத்
தவம் செய்வோர்கள்
வெருவரச்சென்று அடைகாம, வெகுளியென நிருதர்
இடைவிலக்காவண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினும் கரியசெம்மல்
ஒருவனைத் தந்திடுதி

என உயிர் இரக்கும் கொடும் கூற்றின் உளையச் சொன்னான்.

"மரங்களடர்ந்த வனத்தில் நான் செய்கின்ற தவமுறையைச் சேர்ந்த யாகத்துக்கு இடையூறாகத் தவசிகள் அஞ்சி நடுங்கும்படி வந்து சேர்ந்துவிடுகிற காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களைப் போல் (சுபாகு, தாடகை, மாரீசன் என்ற மூன்று அரக்கர்கள் என் யாகத்தைக் கெடுக்கிறார்கள். அந்த) அரக்கர்கள் யாகம் நடக்கும்போது இடையில் வந்து கெடுக்காதபடி அவர்களுடன் போரிட்டு என்னுடைய யாகத்தைக் காக்கும்படி சொல்லி, உன்னுடைய குழந்தைகள் நால்வருள்ளும் கரிய அழகனாகிய இராமன் ஒருவனை மட்டும் என்னிடம் ஒப்படைத்துவிடு" என்று, யமனானவன் ஒருவனிடத்தில் உன்னுடைய உயிரைக் கொடு என்று கேட்டால் எப்படியிருக்குமோ, அதைவிடத் துன்பமுண்டாகும்படி தசரதரிடத்தில் விசுவாமித்திரர் கேட்டார்.

இப்படி விசுவாமித்திரர் இராமனைக் கேட்டவுடனே தசரதருக்குப் பழைய நினைவுகள் வந்து, தன்னுடைய உயிர்பிரியக்கூடிய காலம் வந்துவிட்டதோ என்ற கவலை



உண்டாகிவிட்டது. அந்தப் பழைய நினைவுகள் என்னவென்றால் : முன் ஒரு காலத்தில், இராமன் பிறப்பதற்கு நெடுநாட்களுக்கு முன்னால், ஒரு பிராமணச் சிறுவன் தன்னுடைய கண்ணிழந்த வெகு முதியவர்களான தாய், தந்தை இருவரையும் காவடி கட்டிச் சுமந்து கொண்டு ஊரூராகத் தலயாத்திரைக்காகப் போய்க்கொண்டிருந்தான்.

ஓர் இடத்தில் அந்தக் கிழவர்களுக்குத் தாகம் வந்து, தண்ணீர் கேட்டார்கள். காவடியை ஓரிடத்தில் இறக்கி வைத்துவிட்டு, அந்தச் சிறுவன் அருகிலிருந்த ஓடைக்குப் போய்த் தான் கொண்டுபோன குறுகிய வாயுள்ள சுரைபுருடையில் தண்ணீர் மொண்டான். அப்போது இருள் படர்ந்துவிட்ட நேரம். தசரதன் யானை வேட்டைக்காக அந்த ஓடைக்கு நீரருந்த வரும் யானைகளுக்காக மறைந்து காத்திருந்தான். பிராம்மணச் சிறுவன் புருடையில் தண்ணீர் மொள்ளும்போது யானை தண்ணீரை உறிஞ்சுவது போன்று ஓசையுண்டாயிற்று. தசரதன் யானைதான் அது என எண்ணி அம்பெய்துவிட்டான்.

அம்பு பிராமணச் சிறுவன்மேற் பாய, அவன் அலறிக்கொண்டு விழுந்தான். மனிதக் குரலாக இருப்பதைக் கேட்டு தசரதன் ஓடிப்போய்ப் பார்த்தான். பெரும் பாவம் நேர்ந்து விட்டதற்குப் பயந்து அந்தச் சிறுவனைத் தூக்கி தெரியாமல் யானையென்று எய்துவிட்டதைத் தெரிவித்து மன்னிக்கக் கேட்டான். அந்தப் பிராமண இளைஞன், அப்படி இறக்கத் தனக்கு விதித்திருந்ததற்கு இனி வருந்திப் பயனில்லையென்று சொல்லி, அந்தத் தண்ணீரை மட்டும் கொண்டு போய்த் தன்னுடைய பெற்றோருக்குக் கொடுத்து விடும்படி தசரதனைக் கேட்டுக்கொண்டு தன் மரணத்தையும் தெரிவிக்கச் சொல்லிவிட்டு இறந்து போனான்.

தசரதன் மிக்க வருத்தத்தோடு சென்று அந்தக் கிழவர்களுக்குத் தண்ணீரைக் கொடுத்து நடந்து விட்டதையும் சொல்லித் தன்னை மன்னிக்க வேண்டுமென்றும், தான் அவர்களுக்கு மகன் போல உதவுவதாகவும் சொல்லிக் காலில் விழுந்தான். அந்த முதியவர்கள், "எங்களுடைய ஒரே பிள்ளை போனபின் நாங்கள் இனி உயிர் வாழமாட்டோம். இதோ இப்படியே இருந்து இறந்துவிடப் போகிறோம். நீ தெரியாமற் செய்துவிட்டதாகக் கெஞ்சுவதால் உனக்குக் கடிய சாபம் இடாமல், எப்படி நாங்கள் எங்கள் மகனைப் பிரிந்த ஏக்கத்தால் சாகப்போகிறோமோ அப்படியே நீயும் உன் மகனைப் பிரிந்த ஏக்கத்தால் சாகக்கடவாய்" என்று சாபமிட்டார்கள்.

அப்போது தசரதனுக்கு மக்களில்லை. கவலையற்றிருந்தான். இராமன் பிறந்த பின் இந்தச் சாபத்தின் நினைவு அடிக்கடி வந்து 'எப்போது இராமன் நம்மை விட்டுப் பிரிவானோ, அதனால் இறந்து போக வேண்டுமே' என்று தசரதன் ஏங்குவதுண்டு. அந்தச் சாபம் நிறைவேறக் கூடிய காலம் வந்து விட்டதோ, முனிவர் இராமனைக் கேட்கிறாரே! இவரோ வெகு கோபக்காரர்; வேறு அண்டத்தையே சிருஷ்டிப்பேன் என்றவர். இராமனைக் கொடுக்காமல் தப்ப வழியில்லை. என்ன செய்வதென்று,

*எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்*
*மருமத்தில் எறிவேல் பாய்ந்த*
*புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்எனச்*
*செவியில் புகுதலோடும்*
*உள்நிலாவிய துயரம் பிடித்து உந்த ஆருயிர்நின்று ஊசலாடக்*
*கண்ணிலான் பெற்று இழந்தான் என உழந்தான்*
*கடுந்துயரம் காலவேலான்.*

எண்ணிப் பார்க்கவும் முடியாதபடி அவ்வளவு பெருந்தவங்களைச் செய்துள்ள விசுவாமித்திரர் சொன்ன



சொற்கள், பகைவன் எறிந்த வேல் பாய்ந்து மார்பில் உண்டாயிருந்த புண்ணின் துவாரத்துக்குள் கொள்ளிக் கட்டையைச் செருகியதுபோல (அந்தக் கிழட்டு அந்தணர் இட்ட சாபத்தைப் பற்றி) உள்ளத்தில் இருந்து கொண்டிருந்த துயரம் உயிரைப் பிடித்து வெளியே உந்த (இராமனைவிட்டுப் போய்விட விரும்பாமல் அந்த உயிர் மீண்டும் உள்ளே ஓட) இப்படியாக அந்த உயிர் ஊசலாடக் கண்ணில்லாத குருடன் கண்ணைப் பெற்று மறுபடியும் அதை இழந்துவிட நேரிட்டால் எப்படித் துயரப்படுவானோ அப்படித் துயரப்பட்டான், பகைவர்களுக்கு எமன்போன்ற வேலாயுதத்தையுடைய தசரதன்.

இராமனைப் பிரியவோ மனமில்லை; பிரிந்தால் இறந்து போக நேரும். மறுத்துச் சொன்னாலோ எண்ணிலா அருந்தவத்தோன் சபிப்பார் என்று வருத்தமுற்று மனம் குழம்பிய தசரதர் ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டு,

*''தொடையூற்றும் தேன்துளிக்கும் நறுந்தாரன்*
*ஒருவண்ணம் துயரம் நீங்கிப்*
*படையூற்றம் இலன்; சிறியனிவன்; பெரியோய்,*
*பணிஇதுவேல் பனிநீர்க் கங்கை*
*புடையூற்றும் சடையானும் நான்முகனும்*
*புரந்தரனும் புகுந்துசெய்யும்*
*இடையூற்றுக்கு இடையூறாய் யான்காப்பென்*
*பெருவேள் விக்கு எழுக''* என்றான்.

தேன் துளிக்கும் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்த தசரதர், ஒருவாறு துயரத்தை நீக்கி விட்டு, விசுவாமித்திரரைப் பார்த்து "(இராமன் எதற்கு?) அவன் ஆயுதப் பயிற்சி இல்லாதவன்; சிறு குழந்தை; மகாபுருஷரே, செய்யவேண்டிய வேலை இதுதானே? (உங்கள் யாகத்தைக் கெடுக்க வரும் சுபாகு, தாடகை, மாரீசன் ஆகிய

மூன்று அரக்கர்கள் கிடக்கட்டும்) குளிர்ந்த கங்கையைச் சடா முடியில் தாங்கியுள்ள சிவனும், பிரமனும், இந்திரனும் ஆகிய இந்த மூன்று பேர்களுமே சேர்ந்து உங்கள் யாகத்தைக் கெடுக்க வந்தாலும் அவர்கள் செய்யும் இடையூற்றுக்கு இடையூறு செய்து யாகத்தை நான் காக்கின்றேன்; அப்பெரிய யாகத்தைச் செய்து முடிக்கப் புறப்படுங்கள் இப்போதே போவோம்" என்றார்.

இவ்வளவுதான் தசரதர் சொன்னது. இதைச் சொன்ன உடனே,

*"என்றனன் என்றலும் முனிவோடு எழுந்தனன்*
*மண்படைத்தமுனி; இறுதிக்காலம்*
*அன்றென ஆமென இமையோர் அயிர்த்தனர்; மேல்*
*வெயில்கரந்தது; அங்குமிங்கும்*
*நின்றனவும் திரிந்தன; மீ நிவந்தகொழும்*
*கடைப்புருவம் நெற்றிமுற்றச்*
*சென்றன; வந்தனநகையும்; சிவந்தனகண்;*
*இருண்டனபோய்த் திசைகளெல்லாம்"*

என்று சொன்னார் தசரதர்; சொன்னவுடனே வேறு பூலோகத்தை உண்டாக்கினவராகிய விசுவாமித்திரர் கோபத்தோடு ஆசனத்தைவிட்டு எழுந்துவிட்டார்; உலகத்துக்கு முடிவுகாலம், வந்துவிட்டதா இல்லையா என்று தேவர்கள் சந்தேகித்தார்கள்; ஆகாயத்திலிருந்த சூரியன் பயந்து ஒளிந்து கொண்டான்; நிலையாகவுள்ள நட்சத்திரங்களும் தமது இடத்தைவிட்டு அங்குமிங்குமாக மாறின; விசுவாமித்திரருடைய மயிர் செறிந்த திரண்ட புருவங்கள் நெற்றியின் உச்சிக்கு ஏறின; சிரிப்பு வந்தது; கண்கள் சிவந்தன; திக்குக்களெல்லாம் இருண்டு போய்விட்டன.

இதைப் பார்த்தார் தசரதருடைய குருவாகிய வசிஷ்டர். விசுவாமித்திரருடைய உட்கருத்தை அறிந்து, வசிஷ்டர்.



*கறுத்த மாமுனி கருத்தை உன்னி, "நீ*
*பொறுத்தி," என்று அவற்புகன்று "நின்மகற்கு*
*உறுத்தலாகலா உறுதி எய்தும் நாள்*
*மறுத்தியோ" எனா வசிட்டன் கூறினான்.*

அப்படிக் கோபித்துக் கொண்ட விசுவாமித்திரரின் கருத்தை ஆராய்ந்துணர்ந்த வசிஷ்டர், விசுவாமித்திரரைப் பொறுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, தசரதரைப் பார்த்து "உன் மகனுக்கு, வேறு எவரும் சொல்லிக் கொடுக்க முடியாத வித்தைகளெல்லாம் (விசுவாமித்திரரால்) கிடைக்கப் போகிறதை வேண்டாமென்கிறாயா?" என்று சொன்னார்.

மேலும் வசிஷ்டர் தசரதரிடம்,

*"பெய்யும் மாரியால் பெருகும் வெள்ளம் போய்*
*மெய்கொள் வேலைவாய் முடுகுமாறு போல்*
*அய்ய, நின்மகற்கு அளவில் விஞ்சை வந்து*
*எய்து காலம் இன்று எதிர்ந்தது என்னவே"*

"பெய்கின்ற மழையால் பெருகும் வெள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் சமுத்திரத்துக்கே போய்ச் சேர்வது போல (சமுத்திரத்து நீரே மேகமாக மாறி, மழையாகப் பெய்து, வெள்ளமாக ஓடி, மீண்டும் சமுத்திரத்தையே சேர்வதுபோல) அய்யா, உன் மகனுக்கு அளவில்லாத வித்தைகள் வந்து சேரும் நல்ல காலம் இன்று வந்திருக்கிறது" என்னவே, (சமுத்திர நீர் சமுத்திரத்தையே அடைவது போல எல்லா வித்தைகளுக்கும் இருப்பிடமான பரம்பொருள் இராமன், அவனிடமிருந்து வெளியே போயிருந்த வித்தைகள் அவனையே வந்து அடைகின்ற காலம் இன்று வந்திருக்கிறது என்று வசிஷ்டர் சொல்லவே)

தசரதருக்கு உதித்திருந்த அச்சம் நீங்கி விட்டது. இப்போது இராமன் தன்னைப் பிரிவது தனக்கு மரணம்

உண்டாக்கக் கூடியது அல்ல; அவனுக்கு அபூர்வமான வித்தைகள் வருவதற்குத்தான் என்பதைக் குலகுருவின் சொற்களால் கண்டு கொண்டு,

குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்
''திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்று'' என.
'வருக' என்றனன்; என்றலோடும் வந்து
அருகு சார்ந்தனன், அறிவின் உம்பரான்.

குருவின் சொல்லை ஏற்றுக் கொண்டு தசரத மன்னன் (பணியாட்களைப் பார்த்து) திருமகள் நாயகனாகிய இராமனைப் போய் அழைத்து வாருங்கள் என்று சொல்ல (உடனே ஓடிச் சென்று, மன்னவர் அழைக்கிறார்) வாருங்கள் என்று சொன்னவுடனே அறிவுகளுக்கெல்லாம் மேலான அறிவாளியான இராமன் தசரதருக்கு அருகில் வந்து சேர்ந்தான்.

வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி, ''நல்
தந்தை நீ தனித்தாயும் நீ இவர்க்கு;
எந்தை, தந்தனன் இயைந்த செய்'' லென்றான்.

தம்பியாகிய லக்ஷ்மணனோடும் வந்த இராமனை, தசரதர் நான்கு வேதங்களையுமறிந்த விசுவாமித்திர முனிவருக்குக் காட்டி, 'என் தந்தை போன்றவரே, (இதோ இவர்களைத் தங்களிடம் ஒப்படைத்து விட்டேன் இனிமேல்) இவர்களுக்குத் தாங்கள் தாம் தந்தையும் ஒப்பரிய தாயும்; இவர்களைக் கொண்டு தங்களுக்கு இஷ்டமான காரியங்களை முடித்துக் கொள்ளுங்கள்' என்றார்.

கம்பர் சொல்லுகிறபடி விசுவாமித்திரருக்கும் தசரதருக்கும் இடையே, இராமனை முனிவருடன் அனுப்புவதைப்பற்றி நடந்த பேச்சு இவ்வளவுதான்.



வால்மீகிக்கும் கம்பருக்கும் உள்ள வேற்றுமைகளை வாசகர்கள் எளிதிற் காணலாம்.

இனி, இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்யத் தசரதர் தீர்மானித்தபின், கைகேசியின் சூழ்வினையால் இராமன் காட்டுக்குப் போக நேரிட்ட சமயத்திலும் சில முரணான சொற்கள் தசரதருடைய பெருமையைக் குறைத்துவிடுகின்றன.

வால்மீகி முனிவர் தசரதருடைய பெருமைகளைச் சொன்னபோது, தசரதர் ''மனம் அடக்கினவர்; ஐம்புலன்களையும் தமக்குள் அடக்கினவர்; மகாமுனி என்று சொல்லும்படியான கடோர தபசி,'' என்றெல்லாம் சொல்லப்பட்டது. இந்தக் குணங்களுக்குச் சிறிதும் பொருந்தாத முறையில், தசரதர் முற்றிலும் காமவசப்பட்டவராகக் கைகேசியிடம் பேசுகிறார். வெறுங் காமப்பேச்சாக மட்டும் பேசினாலும் குற்றமில்லை. ஆனால் கைகேசியின் கோபத்தைப் போக்குதற்காகத் தம்முடைய நீதிபரிபாலன முறையிலும் தவறி நடக்கத் தயாராக இருப்பது போலப் பேசுகிறார். அப்படிப்பட்ட சொற்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

இராமனுக்கு நடத்தப் போகிற பட்டாபிஷேகத்தைத் தடுத்து, பரதனுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்றும் இராமனைப் பதினான்கு ஆண்டுகள் காட்டில் இருக்கச் செய்யவும், முன் தசரதர் கைகேசிக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்களையும் கேட்கும்படி கூனியானவள் கைகேசிக்கு வழிசொல்லிக் கொடுத்து விட்டுப் போய் விடுகிறாள்.

அதன் பிறகு கைகேசியானவள் அந்த வரங்களைப் பெறப் பொய்ப் பிணக்கம் காட்டித் தன் அலங்காரங்களையெல்லாம் நீக்கிவிட்டுத் தன்னை

அலங்கோலப்படுத்திக் கொண்டு — வேர் களைந்து எறியப்பட்ட கொடி போலவும், சுவர்க்கத்திலிருந்து புண்ணியத்தின் முடிவில் தள்ளப்பட்ட தேவதை போலவும், துடித்துக் கொண்டிருக்கும் கின்னரி போலவும், கீழே விழுந்து விட்ட தேவ கன்னிகை போலவும், ஏவி விடப்பட்ட மாயை போலவும், வலையிலகப்பட்ட பெண் மான் போலவும், ஒரு வேடன் விடுத்த அம்பால் தைக்கப்பட்டு வெருண்டோடிய பெண் யானை போலவும் கைகேயியானவள் அவ்விடத்தில் பரிதபித்துக் கொண்டிருப்பதைத் தசரத மன்னர் அன்போடு கண்டார்.

காட்டினிடத்து மதயானையானது தனது பிடியானையைக் கண்டால் எவ்வாறு தடவிக் கொடுக்குமோ, அது போலத் தசரதரும் கலங்கின உள்ளத்துடன் அவளைத் தமது கைகளால் தடவிக் கொடுத்து, அவளைப் பார்த்து அவள் விசனப்படும் காரணத்தை விசாரிக்கலானார். "தேவி, நீ என் பேரில் யாது காரணத்தாற் கோபம் அடைந்திருக்கிறாயோ, அது எனக்குத் தெரியவில்லை. உன்னை யார் நிந்தித்தார்கள்? அல்லது அவமானம் பண்ணினார்கள்? நீ ஏன் இவ்வண்ணம் பூமியிற் புரண்டு கொண்டிருக்கிறாய்? உன்னை இந்த நிலைமையிற் பார்க்க எனது மனம் வேகின்றதே! உன்னிடத்தில் அன்பு வைத்த என் முன்பு எனது மனந்துடிக்கப் பிசாசு பிடித்தவள்போற் புழுதி படிந்த பூமியிற் புரளுவது உனக்குத் தக்கதா? சமர்த்தர்களாயும் மனமுவந்தவர்களாயுமிருக்கும் அநேக வைத்தியர்கள் என்னிடத்தில் இருக்கின்றார்கள். உனக்கு ஏதாவது நோய் என்றால் உடனே சொல்லு; அவர்களைக் கொண்டு நான் அதை ஒரு நொடியில் தீர்த்துவைக்கிறேன்.

உனக்கு நன்மை செய்தவர் யார்? தீமை செய்தவர் யாவர்? உன்னிடத்திலிருந்து யார் நன்மையைப் பெற வேண்டும்? யார் தீமையைப் பெற வேண்டும்? நீ அழ வேண்டாம். உனது தேகத்தை வருத்தாதே; யாருடைய தலையையாவது வாங்கிவிட வேண்டுமா? அல்லது தலைவாங்கக் கட்டளையிடப்பட்ட எவனையாவது அந்தத் தண்டனையிலிருந்து நீக்கிவிட வேண்டுமா? எந்த ஏழையையாவது செல்வனாக்க வேண்டுமா? அல்லது எந்தத் தனிகனையாவது வறியனாக்க வேண்டுமா? நானும் என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் உன் இஷ்டப்படி நடப்பவர்களே; நீ சொல்லுவதற்குப் பிரதிகூலமாய் நடக்க ஒரு நாளும் பொறேன்.



என் பிராணனைக் கொடுத்தாவது உனது வேண்டுகோளை நான் முடித்து வைக்கிறேன். உனக்கு என்னிட மிருக்கும் செல்வாக்கு உனக்கே தெரியும்; ஆகையால் சந்தேகமே வேண்டாம்; உனது மனத்தை எப்படியாது சந்தோஷப்படுத்தி வைக்கிறேன். இதைப் பற்றி எனது புண்ணியத்தின் மேலும் சத்தியம் பண்ணுகிறேன். சூரியனுடைய தேர்ச்சக்கரம் எதுவரையிற் சுழல்கின்றதோ அதுவரையில் என்னுடையது இவ்வுலகம்..." (அயோத்தியா காண்டம் 10ஆம் சருக்கத்தில்)

இதில் தசரதர், கைகேசிக்குத் தவறிழைத்தவர்களைத் தண்டிப்பேன் என்பதோடு நில்லாமல் கைகேசி யார் தலையை வாங்கச் சொன்னாலும் வாங்கிவிடுவதாகவும் மற்றும் எதைச் சொன்னாலும் செய்வதாகவும் சொல்லுகிறார். மேலும் கைகேசி விரும்பினால் எந்த ஏழையையும் பணக்காரனாக்கி விடுகிறதாகச் சொல்லுகிறார். அதில் குற்றமில்லை. ஆனால் அவள் சொன்னால் எந்தத் தனிகனையும் வறியவனாக்கி விடுவதாகச் சொல்லுவது என்ன? இந்தப் பேச்சு தசரதருடைய தகைமையைக் குறைத்துவிடுகிறது.

இதே நிகழ்ச்சியைக் கம்பர் எப்படிச் சொல்லுகிறார் என்பதைப் பார்ப்போம்.

*நாழிகை கங்குலின் நள்ளடைந்த பின்றை*
*யாழிசை அஞ்சிய அம்சொல் ஏழைகோயில்*
*வாழிய என்றுஅயில் மன்னர்துன்ன வந்தான்*
*ஆழி நெடுங்கை மடங்கலாளி யன்னான்.*

நடுராத்திரியான பிறகு, வேலேந்திய சிற்றரசர்கள் வாழ்த்துக்கள் சொல்லிக்கொண்டு தொடர்ந்து வர, சிங்கம் போன்ற தசரதச் சக்ரவர்த்தி, யாழின் இசையும் தோற்றுவிடக்கூடிய இனிமையான குரலோடு பேசக்கூடிய கைகேசியின் மாளிகைக்கு வந்தார்.

*வாயிலின் மன்னர் வணங்கிநிற்ப, வந்துஆங்கு*
*ஏயின செய்யும் மடந்தைமா ரொடு ஏகி,*
*பாயல் துறந்த படைத்தடங்கண் மென்தோள்*
*ஆயிழை தன்னை அடைந்த ஆழிமன்னன்.*

மாளிகையின் வாசலில், உடன்வந்த சிற்றரசர்கள் நின்றுவிட, கைகேசியின் பணிப் பெண்களோடு போய், பஞ்சணையை விட்டுத் தரையில் படுத்துக் கிடந்த வேல் போன்று அகன்று கூர்ந்த கண்களும் மென்மையான தோள்களையுமுடைய கைகேசியைப் பார்த்த சக்ரவர்த்தி,

*அடைந்துஅவண் நோக்கி, அரந்தை என்கொல் வந்து*
*தொடர்ந்தது எனத் துயர்கொண்டு சோரும் நெஞ்சன்,*
*மடந்தையை மானை எடுக்கும் ஆனையேபோல்*
*தடம்கைகள் கொண்டுதழீஇ எடுக்க லுற்றான்.*

அருகிற் சென்று, அவள் கிடந்த நிலைமையைப் பார்த்து, என்ன துன்பம் நேர்ந்துவிட்டதோ என்று கவலை கொண்டு சோர்ந்த மனத்தவனாக, கீழே கிடக்கின்ற மானை ஒரு யானை தன் துதிக்கையால் எடுப்பது போல் தன்னுடைய நீண்ட கைகளால் தழுவி எடுக்கலானான்.



அப்போது கைகேசி,

*நின்று தொடர்ந்த நெடுங்கை தம்மை நீக்கி,*
*மின்துவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தாள்;*
*ஒன்றும் இயம்பலள் நீடுஉயிர்க்கல் உற்றாள்,*
*மன்றல் அருந்தொடை மன்னன் ஆவியன்னாள்.*

தசரதர் தூக்கி நிறுத்திய கைகேசி, நின்றபடியே தன்னைத் தூக்கி கைகளைத் தள்ளிவிட்டு மின்னல் போலத் துவண்டு, மீட்டும் தரையில் விழுந்தாள்; ஒன்றும் சொல்லாமல் பெருமூச்சு விடலானாள், மணம் மிகுந்த மலர்மாலை யணிந்திருந்த அந்த மன்னனுக்கு உயிர் போன்ற கைகேசி.

அதைக் கண்ட தசரதர்,

*அன்னது கண்ட அலங்கல் மன்னன் அஞ்சி,*
*என்னை நிகழ்ந்தது? இஞ்ஞாலம் ஏழில் வாழ்வார்*
*உன்னை இகழ்ந்தவர் மாள்வர்; உற்றதெல்லாம்*
*சொன்னபின் என்செயல் காண்டி; சொல்லிடென்றான்.*

அதைக் கண்டு துயரமடைந்த அரசன் பயந்து, "என்ன நடந்தது? இந்த ஏழு உலகத்திலும் வசிப்பவர்கள் யாராக இருந்தாலும் உன்னை அவமதித்தவர்கள் உயிரிழப்பார்கள்; நடந்ததையெல்லாம் சொல்லு; பிறகு நான் அவர்களை என்ன செய்கிறேன் பார்; சொல்லிவிடு" என்றான்.

இவ்வளவுதான் தசரதன் சொன்னது. இதன்பிறகு கைகேசி உடனே தனக்கு மன்னன் முன்னொரு காலத்தில் வாக்களித்திருந்த வரங்களை நினைப்பூட்டுகின்றாள். அடுத்த பாட்டு.

வண்டுள தாரவன் வாய்மைகேட்ட மங்கை,
கொண்ட நெடுங்கணின் ஆலிகொங்கை கோப்ப,
உண்டுகொலாம் அருள் என்கண் உன்கண் ஒக்கில்
பண்டைய இன்று பரிந்து அளித்தி'' என்றாள்.

(தேனுக்காக வண்டுகள் மொய்க்கும் புதுமலர்) மாலையணிந்த மன்னன் அப்படிச் சொல்லக் கேட்ட கைகேசி, அவளுடைய பெரிய கண்களிலிருந்து வடியும் கண்ணீர் அவளுடைய மார்பில் ஒழுக, மன்னனைப் பார்த்து "என்மீது உங்களுக்கு அன்பிருப்பது உண்மையானால் முன் ஒரு காலத்தில் நீங்கள் வாக்களித்தவைகளைப் பிரியத்தோடு இப்போது கொடுங்கள்" என்றாள். இது கம்பர் சொல்லுவது.

வால்மீகி முனிவரைத் தொடர்வோம்.

கைகேசி வரங் கேட்டதும், தசரதருக்கும் அவளுக்கும் நடந்த பேச்சுக்களும், இராமனைக் காட்டுக்கனுப்ப மனமில்லாமல் தசரதர் பட்ட துயரமும், கோசலையின் வருத்தமும், இலட்சுமணனுடைய சீற்றமும், கடைசியாக இராமர் வனத்துக்குப் புறப்படுவதும் ஆகியவற்றையெல்லாம் வால்மீகி முனிவர் வெகு விஸ்தாரமாக இருபத்திரண்டு சருக்கங்களில் சொல்லுகிறார். இந்த நிகழ்ச்சிகளிலும் வால்மீகருக்கும் கம்பருக்கும் மிக்க வேறுபாடுகள் இருக்கின்றன.

அந்த வேற்றுமைகளைப் பற்றி இங்கே விவரிக்க வேண்டாம். இப்போது, வால்மீகி முனிவர் சொல்லுவதில், தசரதருடைய பெருமைக்குக் குறைவுண்டாக்கத் தக்கதான விஷயத்தையும் வேறு சில முரண்களையும் மட்டும் கவனிப்போம்.

கம்பர் செய்திருக்கும் ஒவ்வொரு மாறுதலும் மிக நல்ல நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாத்திரமும் அதனதன் பெருமைக்குப் பழுது வராமல் நடந்து



கொள்ளச் செய்து, இராம காதையை உண்மையாகவே தெய்வமாக்கதை யாக்கியிருக்கிறார்.

வால்மீகத்தில் இராமனைப் பற்றிய முரண்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு முரண் இராமன் காட்டுக்குப் புறப்படுகின்ற இந்தப் பகுதியில் இருக்கிறது. அதை இங்கேயே சொல்லி விடுவோம்;

இராமர் தாம் காட்டுக்குப் போவதைக் கோசலைக்குத் தெரியப்படுத்த வருகிறார்.

தாயைக் கண்டவுடன் இராமர், அவளுடைய பாத கமலங்களில் அபிவாதனம் பண்ணினார். கௌசலையும் அவரை அணைத்து உச்சி மோந்து, பகைவரால் அணுக ஒண்ணாத பலத்தையுடைய தன் புத்திரரான அவரைப் பார்த்து, வெகு பிரியமாயும் இதமாயும் சொல்லலுற்றாள். "என் குழந்தாய், நீ வெகு தருமவான்களும், முதியவர்களும் மகான்களுமான இக்குலத்துதித்த இராஜரிஷிகளுடைய ஆயுளையும், கீர்த்தியையும், அறத்தையும் அடைவாயாக! உனது தந்தையாரைச் சொல் தவறாதவராக அறி. அந்தத் தருமப் பிரபுவானவர், இன்றைத் தினமே உன்னை இராச்சியத்தில் இளவரசனாகப் பட்டாபிஷேகம் செய்துவைக்கப் போகிறார்,'' என்று சொல்லி இராமர் இருப்பதற்கு ஓர் ஆசனம் இட்டு அவரைப் போஜனத்திற்கு அழைக்க, இராமர் வெட்கித் தமது கைகளைக் குவித்துக் கொண்டு ஆசனத்தைத் தொட்டுச் சொல்லலானார். இயற்கையாகவே வெகு வணக்கமுள்ளவராகையாலும், தமது அன்னையிடத்தில் தாம் வைத்திருந்த கௌரவத்தினாலும், இராமர், மிக்க வணக்கத்துடன், தண்டகாரணியத்திற்குப் பிரயாணப் பட்டவராய் விடைபெற்றுக்கொள்ள ஆரம்பித்தார்.

"அம்மா இப்பொழுது வந்திருக்கும் பயம் இன்னும் நிச்சயமாகத் தெரியாது. இப்பயம் உமக்கும் சீதைக்கும், இலட்சுமணனுக்கும் அதிகமாகத் துக்கத்தைத் தரும். நான் தண்டகாரணியத்துக்குச் செல்லப் போகிறேன். எனக்கு இந்த ஆசனம் எதற்கு? இனி நான் இருக்க வேண்டிய ஆசனம், நுனியோடிருக்கும் இருபத்தைந்து தருப்பைகளாற் செய்த முனிவனுக்குரிய ஆசனத்திலன்றோ! நான் ரிஷிபோல் மாம்சத்தை நீக்கிக் காய், கிழங்கு, தேன் இவைகளை உணவாகப் புசித்துக் கொண்டு, மனுஷ்ய சஞ்சாரமற்ற காட்டில் பதினான்கு வருஷம் வசிக்கப் போகிறேன். மகாராஜர், பரதனுக்கு இளவரசுப் பட்டத்தைக் கொடுத்து, என்னைத் தண்டகாரணியத்தில் ரிஷிபோல் வசித்திருக்கக் கட்டளையிட்டார். ஆகையால் நான் ஜனங்களில்லாத காட்டில் ஆறெட்டு வருஷம் வாநப்பிரஸ்தர்களுடைய அனுஷ்டானத்தைக் கொண்டு, காய் கனிகளைப் புசித்துக் கொண்டு, வசிக்கப் போகிறேன்" என்றார். (அயோத்தியா காண்டம் 20ஆம் சருக்கம்)

இந்தப் பேச்சின் தொனி மகாத்துமாவாகிய இராமனுடைய பெருங்குணத்துக்கு ஒத்ததாக இல்லை. அதைப்பற்றிப் பின்னால் ஆராய்வோம். இப்போது நாம் எடுத்துக்காட்ட வந்தது, இந்தப் பேச்சிலுள்ளபடி பின்னால் இராமன் நடந்துகொள்ளவில்லையே என்ற முரண் இருப்பதைத்தான். இங்கே இராமன், தான் மாமிசம் உண்பதை விட்டுவிட்டுக் காய், கனி, கிழங்குகளையும் தேனையும் உண்டு தர்ப்பை ஆசனத்தில் அமர்ந்திருக்கத் தண்டகாரணியத்திற்குப் போவதாகச் சொல்லுகிறான். ஆனால் பின்னால் வனவாசத்தில், இராமன் மான், பன்றி முதலிய மிருகங்களை வேட்டையாடி அந்த மாமிசங்களைத்தான் உண்டு கொண்டு வனவாசம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. க்ஷத்திரியன் மாமிசபக்ஷணம் செய்தததாக இருப்பதில் குற்றமில்லை. ஆனால் இங்கே மாமிசத்தை விட்டுவிட விரதம் மேற்கொள்ளப் போவதாகச் சொல்லிவிட்டுப் பின்னால் மாமிசம் உண்டதாக இருப்பதுதான் முரண்.



கோசலையிடம் சொன்னது, ஒன்று உண்மையாகவே மனமார சொன்னதாக இருக்கவேண்டும்; அல்லது மாமிசத்தை விட்டுவிட்டுத் தவசிபோலக் கந்தமூல பலாதிகளைத் தின்று வாழவேண்டி வந்துவிட்டதே என்று மனக்குறையுடன் தவசியின் உணவையும் ஆசனத்தையும் பரிகாசம் செய்யச் சொன்னதாக இருக்கவேண்டும். மனமாரச் சொன்ன உண்மையானால் பின்னால் மாமிசம் உண்டதாக இருக்கக் கூடாது. அன்றி, அது பரிகாசமாக உள்ளொன்று வைத்துப் புறமொன்று சொன்னதானால் அது இராமனுடைய பெருங்குணத்துக்குப் பொருந்தாது. இராமனுடைய பெருந்தகைமையைப்பற்றி இப்படிச் சந்தேகிக்க இடமிருப்பது சரியல்ல.

கம்பர், இந்தச் சந்தேகத்துக்கு இடமே இல்லாதபடி, இராமன் காட்டு மிருகங்களை உணவுக்காக வேட்டையாடியதாகச் சொல்லவில்லையென்பது மட்டுமல்லாமல் காய், கனி, கிழங்குகளைத்தான் புசித்து வனவாசம் செய்தான் என்று சொல்லுவதோடு ஊனுணவை விலக்கினான் என்றும் காட்டுகின்றார். அத்துடன் வனவாசம் மேற்கொள்ளுவதற்கு முன்னாலாவது இராமன் மாமிசம் உண்டவன் என்று சொல்லவும்கூடக் கம்பராமாயணத்தில் இடமில்லை. ஏனென்றால் வால்மீகி முனிவர் காட்டுவது போல், இராமன் தன் தாயாரிடம் தான் தண்டகாரணியத்துக்குப் போவதைச் சொல்லும்போது, "நான் இனி மாமிசத்தை நீக்கி, காய், கனி, கிழங்கு, தேன்

முதலியவற்றை உணவாகக் கொள்ளப் போகிறேன்" என்று சொன்னதாகக் கம்பர் காட்டவில்லை.

வனத்துக்கு வருமுன் இராமனுடைய உணவு எப்படியிருந்தாலும், வனவாசத்தில் இராமன் ஊன் உண்ணவில்லை என்பது கம்பராமாயணத்தில் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. தண்டகாரணியத்திலிருந்த தவசிகளும் முனிவர்களும் இராமனுக்கு அங்கங்கே விருந்தளித்தபோதெல்லாம் காய், கனி, கிழங்குகளே உணவாகச் சொல்லப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல், இராமனுக்கு ஊனுணவு கொண்டுவந்திருப்பதாக, இராமனைக் காண வந்த குகன் சொன்னபோது இராமன் சொன்ன பதில், இராமன் ஊனுண்பவனல்லவென்பது தெரியக் கிடக்கிறது. அதைப் பார்ப்போம் :— வனத்துக்கு இராமன் வந்திருப்பதைக் கேள்விப்பட்ட குகன் இராமனைக் கண்டு கொள்ள வந்தான். அவனைப்பற்றிக் கம்பர் வருணிக்கும் போது,

ஊற்றும் மெய்நறவு, ஊனொடு மீன்நுகர்
நாற்றம் மேய நகையில் முகத்தினான்;
சீற்றம் இன்றியும் தீயெழ நோக்குவான்,
கூற்றும் அஞ்சக் குமுறும் குரலினான்.

வேர்வை ஊற்றிக் கொண்டிருக்கும் உடம்பு; கள்ளும், மாமிசமும் மீனும் உண்ட நாற்றம் வீசுவதாய், சிரிப்பில்லாத முகத்தையுடையவன்; கோபம் இல்லாமலும் அவன் கண்களில் நெருப்பெரிவதுபோல் பார்ப்பவன்; எமனும்கூடக் கேட்டு நடுங்கக்கூடியதான இடிமுழக்கம் போன்ற ஓசையுடன் பேசும் இயல்புடையவன்.

அவன்,



சிருங்கிபேரம் எனத் திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகருடை வாழ்க்கையான்
ஒருங்கு தேனொடு மீன் உபகாரத்தான்
இருந்த வள்ளலைக் காண வந்து எய்தினான்.

கங்கைக் கரையிலுள்ள சிருங்கிபேரம் என்ற ஊரில் வசிப்பவன்; (இராமனுக்குக் காணிக்கையாக) தேனும் மீனும் சேர்த்து எடுத்துக்கொண்டு, அங்கிருந்த வள்ளல் இராமனைக் கண்டுகொள்ள வந்து சேர்ந்தான். அப்போது இராமன் ஓர் ஆச்சிரமத்துக்குள் தபோதனர்களுடன் பேசிக் கொண்டிருந்தான். வெளியே நின்று கொண்டிருந்த இலட்சுமணன் குகனை யாரென்று கேட்டான். குகன் தான் இராமரைக் கண்டுகொள்ள வந்திருப்பதாகச் சொல்ல, இலட்சுமணன் உள்ளே சென்று இராமனிடம் குகன் வந்திருப்பதைச் சொன்னான்.

அண்ணலும் விரும்பி, என்பால் அழைத்தி நீ அவனை என்றான்;
பண்ணவன் வருக என்னப், பரிவினன் விரைவிற் புக்கான்;
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன்; இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து, மேனி வளைத்து, வாய்புதைத்து நின்றான்.

மேலோனாகிய இராமனும் விருப்பத்தோடு, அந்தக் குகனை என்னிடம் அழைத்து வா என்று சொல்ல, உடனே சென்று இலட்சுமணன் அழைக்க, ஆர்வம் மிகுந்த குகனும் வேகமாக ஆச்சிரமத்துக்குள் புகுந்து, தாமரைக்கண்ணனாகிய இராமனைக் கண்ணாரக் கண்டு மனங்களித்துத் தன்னுடைய கறுத்த தலைமயிர் பூமியில் புரளும்படி விழுந்து வணங்கியெழுந்து, உடம்பு வளைய வாய்பொத்தி வணங்கி நின்றான். இராமன்,

இருத்திஈண்டு என்றலோடும் இருந்திலன்; எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்

திருத்தினென் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன, வீரன்
விருத்த மாதவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்.

இராமன் குகனைப் பார்த்து, இப்படி உட்காரு என்று சொல்லியும் குகன் உட்காரவில்லை. எல்லையில்லாத அன்போடு இராமனைப் பார்த்து, தேனும் மீனும் உண்பதற்குத் தகுதியாகத் துண்டு செய்து சமைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்; தேவரீர் திருவுளம் கூர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று குகன் சொல்ல, இராமன் அதைக் கேட்டு அங்கிருந்த முதிர்ந்த தபோதனர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டுக் குகனைப் பார்த்துச் சொல்லலுற்றான்:

''அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிர்தினும் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய என்னிற் பவித்திரம்; எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனம் அன்றோ'' என்றான்.

(நீ தேனும் மீனும் கொண்டு வந்திருப்பது) மிகவும் பாராட்டத்தகுந்த அருமையான காரியம்; உள்ளன்பினால் உண்டான பிரியத்திற்கு அது அறிகுறி; அதனால் (நீ கொண்டு வந்துள்ள அன்புக் காணிக்கையான அவை) அமிர்தத்தைவிட உயர்ந்தனவாகும்; (சுத்தமல்லாத பொருளும்) அன்போடு கலந்துவிட்டால் பரிசுத்தமானதே; எம்மைப்போன்ற (விரதிகளுக்கும்) ஏற்றுக்கொள்ளத் தக்கனவே; ஏற்றுக்கொண்டேன் என்பதே அவற்றை நான் இன்பமாக உண்டதற்குச் சமானமல்லவா, என்றான்.

இதனால் இராமன் வனவாச காலத்தில் மாமிசத்தை உண்ணவில்லையென்பது நிச்சயமாகின்றது. இந்த நிலை தான் இராமன் தன் தாயாரிடம், 'நான் மாமிச உணவை நீக்கிவிட்டுக் காய்கனிகளை உணவாகக் கொண்டு தவசிகளைப் போல் வசிக்கத் தண்டகாரணியத்துக்குப் போகிறேன் என்று சொன்னதாக வால்மீகர் காட்டுவதற்கு ஒத்ததாகும்.



இராமன், தன் தாயாரிடத்தில், பட்டாபிஷேகம் தனக்கில்லையென்பதையும், பரதன் முடிசூடப்போகிறான் என்பதையும், தான் வனவாசம் செய்யப் போவதையும் சொன்ன காட்சியைக் கம்பர் எப்படிக் காட்டுகிறார் என்பதைப் பார்ப்போம்.

உடனே வனவாசத்துக்குப் புறப்படுவதாகக் கைகேசியிடம் விடை பெற்றுக்கொண்டு, இராமன் கோசலையின் மாளிகைக்குச் சென்றான்.

குழைக்கின்ற கவரியின்றிக் கொற்ற வெண்குடையுமின்றி
இழைக்கின்ற விதி முன்செல்லத் தருமம் பின் இரங்கிஏக
மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வரும்
என்று, எண்ணி
தழைக்கின்ற உள்ளத் தன்னாள்முன் ஒரு தமியன் சென்றான்.

சாமரை வீசப்பெறாமல், (அரச சின்னமாகிய) வெண்குடை பிடித்துப் பணியாட்கள் உடன்வரப் பெறாமல், நடக்க வேண்டியபடி ஆட்டிவைக்கும் விதியானது (வழி காட்டுவதுபோல்) முன்னால் நடக்க, தருமதேவதை அழுதுகொண்டு பின்னால் போக, கறுத்த மலைபோன்ற தன் மகன், திருமுடி புனைந்த கோலத்தோடு, தன்னிடம் வரப்போகிறான் என்று எண்ணியெண்ணி மகிழ்ந்து கொண்டிருந்த கோசலைக்கு முன்னால், இராமன் தனியாகச் சென்றான்.

இராமன் அப்படிக் கோசலை மாளிகைக்குப் போன நேரம் பட்டாபிஷேகத்துக்காகக் குறிப்பிட்டிருந்த முகூர்த்த நேரம் கடந்துவிட்ட காலம். முகூர்த்த நேரம் தாண்டியபின் அரச சின்னங்கள் இல்லாமல் ஏகாங்கியாக வரும் மகனைக்

கண்ட கோசலை, பட்டாபிஷேகம் நடக்கவில்லையென்பதை அனுமானித்து,

"புனைந்திலன் மௌலி, குஞ்சி மஞ்சனப் புனிதநீரால்
நனைந்திலன், என்கொல் என்னும் ஐயத்தாள், நளினபாதம்
வனைந்த பொற் கழற்கால்வீரன் வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்ததுஎன் இடையூறுண்டோ நெடுமுடி புனைதற்கு?"
என்றாள்.

(பட்டாபிஷேக முகூர்த்த நேரம் கடந்துவிட்டதே!) தலையில் திருமுடி காணவில்லை! குடுமி நனையாமலிருப்பதால் மங்கள ஸ்நானம்கூடச் செய்யவில்லையெனத் தெரிகிறது! என்ன காரணமோ! என்று சந்தேகித்த கோசலையின் தாமரைபோன்ற பாதங்களில் விழுந்து, பொன்னாலான வீரகண்டையைக் காலில் அணிந்துள்ள இராமன் வணங்கினவுடன், அவனை மனமுருக வாழ்த்திய பின் பட்டாபிஷேகம் நடப்பதற்கு ஏதாவது தடங்கல் ஏற்பட்டுவிட்டதா? என்றாள்.

அதைக் கேட்ட இராமன்,

மங்கை அம்மொழி கூறலும் மானவன்
செங்கை கூப்பி "நின் காதல் திருமகன்
பங்கமில் குணத்து எம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றான்" என்றான்.

கோசலை அப்படிச் சொன்னவுடன், மேலான குணங்களுடைய இராமன் அழகிய கைகளைக் கூப்பிக் கொண்டு, "அம்மா, உங்களுக்கு மிகவும் பிரியமுள்ள மகனாகிய என் தம்பி பரதனுக்கே பட்டாபிஷேகம் நடக்கப்போகிறது" என்றான்.

அதற்குக் கோசலை,



"முறைமையன்று என்பது ஒன்று உண்டு; மும்மையின்
நிறை குணத்தவன்; நின்னினும் நல்லனால்
குறைவில் என்?" எனக்கூறினள், நால்வர்க்கும்
மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்.

"மூத்தவன் இருக்க இளையவனுக்குப் பட்டம் கட்டுதல் முறையல்ல என்று உலகத்தார் சொல்லுவார்கள். அது ஒன்றுதான் குறை. மற்றப்படி பரதன் முற்றிலும் நல்ல குணங்களே நிறைந்தவன். உன்னைக் காட்டிலும் நல்லவன். ஆகையினால் அவனுக்குப் பட்டம் கட்டுவதில் குற்றமென்ன?" என்றாள், (இராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கனன் ஆகிய) நான்கு மக்களுக்கும் அன்பு செய்வதில் வேற்றுமையில்லாத கோசலை.

அத்துடன்,

என்று, பின்னரும் "மன்னவன் ஏவியது
அன்று எனாமை, மகனே, உனக்கு அறன்;
நன்று, நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து
ஒன்றி வாழுதி ஊழிபல" என்றாள்.

என்று சொல்லி, அதன் பின்பும் "(மூத்தவன் இருக்க இளையவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வது முறையல்லவென்று பிறர் சொன்னாலும் சொல்லட்டும்) மகனே! அரசன் எப்படிச் சொல்லுகிறாரோ அப்படிச் செய்; அவர் சொல்லுவதை மறுக்காமல் அதன்படி நடப்பதுதான் உனக்குத் தருமம்; நல்லது, உன் தம்பிக்கு இராச்சியத்தை நீயே கொடுத்து அவனுடன் மனமொத்துப் பல ஊழி காலம் வாழ்வாயாக" என்று வாழ்த்தினாள்.

அதைக் கேட்ட இராமன்,

தாய் உரைத்தசொல் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தைஅத் தோமில் குணத்தினான்,

"நாய கன்எனை நன்னெறி உய்ப்பதற்கு
ஏயது உண்டு ஓர் பணி" என்று இயம்பினான்.

தாய் சொன்ன அவ்வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சி பொங்கும் பரிசுத்தமான மனமும் குற்றமற்ற குணங்களுமுடைய இராமன், அரசன் நான் சன்மார்க்க சீலன் ஆவதற்காக எனக்கு இட்டுள்ள கட்டளை ஒன்று இருக்கிறது" என்றான்.

அந்தக் கட்டளை என்னவென்று கோசலை கேட்க,

"ஈண்டு உரைத்த அப்பணி என்னை?" என்றவட்கு
"ஆண்டு ஓர் ஏழினோடு ஏழு அகன் கானிடை
மாண்ட மாதவரோடு உடன் வைகிப் பின்
மீண்டும் நீவரல் வேண்டும் என்றான்" என்றான்.

"இப்போது நீ சொன்ன அந்தக் கட்டளை என்ன?" என்று கேட்ட அன்னைக்கு இராமன், "ஏழோடு ஏழு, பதினான்கு வருடங்கள் நீ அகன்ற (தண்டகாரணிய) காட்டில் மகிமைமிக்க தவமுனிவர்களுடன் தங்கியிருந்து பின் திரும்பிவர வேண்டும் என்று எனக்கு அரசன் சொல்லியிருக்கிறார்" என்றான்.

இதற்குப்பின் கோசலையின் துயரம் ஆரம்பமாகிறது. தான் வனவாசம் போவதைப் பற்றித் தன் தாயாரிடம் இராமன் முதன் முதல் தெரியப்படுத்தினதை வால்மீகர் சொல்லுவதும் கம்பர் சொல்லுவதும் எவ்வளவு வேறுபடுகின்றனவென்பதும் அந்த வேறுபாட்டின் பயனும் எளிதில் விளங்குகின்றன.

இனி, தசரதருடைய பெருந்தன்மைக்குக் குறைவு உண்டாக்குகிற இன்னொரு முரண் வால்மீகத்தில் வருவதைப் பார்ப்போம் : —



இராமன் தான் வனவாசத்திற்குப் போவதைக் கோசலைக்குத் தெரியப்படுத்தி, அவள் அதைத் தடுத்துச் சொன்ன ஆட்சேபனைக்குச் சமாதானம் சொல்லித் தேற்றி விட்டு இலட்சுமணனைச் சந்திக்கிறான். இலட்சுமணன் கொண்ட கடுங்கோபத்தைத் தணிக்கிறான். இலட்சுமணன் தானும் காட்டுக்கு வருவதாக வாதாடுகிறான். அவன் உடன் வருவதற்கு ஒப்புக் கொண்ட இராமன் சீதையைச் சந்திக்கிறான். சீதையும் காட்டுக்கு வரப் பிடிவாதம் செய்கிறாள். அவளும் வனத்துக்கு வருவதை ஒப்புக் கொண்ட இராமன், இலட்சுமணன் சீதை இருவரும் பின் தொடரத் தசரதரிடம் வனத்துக்குப் புறப்பட விடைபெற்றுக் கொள்ள வந்தான். அவனைக் கண்ட தசரதர் எழுந்து ஓடிவந்து கீழே விழுந்து மூர்ச்சையாகி விட்டார். அவரை இராமனும் இலட்சுமணனும் சீதையும் தூக்கிக் கட்டிலில் படுக்க வைத்து ஆயாசம் தீரச் செய்தார்கள். சிறிது நேரத்தில் தசரதர் மூர்ச்சை நீங்கித் தெளிவடைந்தார். உடனே இராமர் தசரதரைப் பார்த்து,

"எல்லார்க்கும் ராஜாவான எங்கள் மகாராஜரே! தங்களிடம் தண்டகாரணியத்துக்குப் போக விடைபெற வந்தேன். எங்களை அழகிய உங்கள் கண்களால் கடாக்ஷிக்க வேண்டும். லக்ஷ்மணனும் சீதையும் என்னுடன் காட்டுக்கு வர விடையளிக்க வேண்டும். காட்டுக்கு வர வேண்டாமென்று நான் அநேகவிதமாக அவர்களுக்குச் சொல்லியும் அவர்கள் அவ்வாறிருக்க விரும்பவில்லை. பகைவர்களின் மானத்தை அழிப்பவரே, பிரமன் மக்களுக்கு அனுமதி கொடுப்பது போல், லக்ஷ்மணன், சீதை, நான் ஆகிய எல்லாருக்கும் சோகப்படாமல் அனுமதி கொடுத்து அனுப்பும்" என்றார்.

தசரதர் இவ்விதமாகத் தமது குமாரர் காட்டுக்குச் செல்ல விடைபெறக் காத்திருப்பதைப் பார்த்து, "இராகவா, நான் கைகேயிக்கு வரத்தைக் கொடுத்ததால் வஞ்சிக்கப்பட்டேன். அதனால், என்னை நீ மறுத்து அயோத்திமா நகருக்கு மன்னனாவாய்," என்றார்.

இங்ஙனம் தசரதர் சொல்ல, தருமத்தில் நிலைநின்ற வரும் பேசவல்லவருமான இராமர், அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு, மன்னவரை நோக்கி "அரசரே, தாங்கள் அநேகமாயிரம் வருஷமாகப் பூமிக்கு அரசராயிருக்கின்றீர்கள். இப்படிப்பட்ட தங்களை நான் பொய்யராகச் செய்யக்கூடாது; ஆகையால் நான் காட்டில் வசிக்கிறேன். நான் ஆரணியத்தில் பதினான்கு வருஷம் விளையாடித் தங்கள் வாக்கைக் காப்பாற்றி, அதன் பிறகு தங்கள் பாதங்களையடைவேன்," என்றார்.

எளிமையாகத் துக்கிக்கும் அரசர், கைகேயியின் வலையில் அகப்பட்டுச் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவராய், அருமைக் குழந்தையாகிய இராமரை நோக்கி, ஏகாந்தத்தில் பின் வருமாறு சொல்லலுற்றார் :– "குழந்தாய், இம்மையிலும் மறுமையிலும் நன்மையுண்டாவதற்கும், சுகமாகத் திரும்பிவருவதற்கும், சுபமாயும் அச்சமற்றதாயுமிருக்கும் வழியில் ஜாக்கிரதையுடையவனாய்ப் போ. நீ உண்மையின் வடிவாக இருக்கிறாய். உன்னுடைய சிந்தையோ தருமத்தை நிறைவேற்றுவதை நோன்பாகக் கொண்டது. இப்படிப்பட்ட உன்னுடைய புத்தியைத் தடுக்க எவ்வாறு முடியும்? ஆனால், இன்றை இராத்திரி ஒருபடியாலும் நீ புறப்பட வேண்டாம். ஒரு தினம் உன்னைப் பார்த்தலினாலேனும் நான் சுகமாகச் சஞ்சரிப்பேன். நீ இன்றிரவு என்னையும் உன் தாயாரையும் பார்த்துக் கொண்டு இங்குத் தங்கியிரு. நீ, உனது எல்லா விருப்பங்களிலும் திருப்தி செய்யப்பட்டவனாய், நாளைக் காலையில் புறப்பட்டுப் போவாய்.



இராம, நீ எனக்கு விருப்பைச் செய்வதற்காக உன் நண்பர்களையெல்லாம் கைவிட்டு, மனித சஞ்சாரமற்ற காட்டுக்குப் போகிறாயே! உன்னைப் போல் எல்லாப்படியாலும் செய்தற்கரிய தொழிலை மேற்கொள்ளுகிறவர்களும் உண்டோ! புதல்வ, இவ்வண்ணம் உன்னைக் காட்டுக்கனுப்புவதில் எனக்கு மனமேயில்லை. இராகவ, சத்தியமாகச் சொல்லுகிறேன். நீறு பூத்த நெருப்பைப் போல் கெட்ட எண்ணத்தை உள்ளே கொண்ட கைகேயியால் மோசம் போனேன். குலத்தைக் கெடுக்க வந்த கைகேயியின் ஏவலால் அவள் எனக்குச் செய்த வஞ்சனையையும் கடக்க விரும்புகின்றாயே! புதல்வ, அன்றி நீ மூத்த குமாரனாகையால் பிதாவை மெய்யனாக்க இஷ்டப்படுகிறாய் என்பதில் ஆச்சரியமென்ன?" என்று சொன்னார்.

இவ்வாறு வெகு துக்கத்தோடு சொல்லும் தகப்பனார் பேச்சைக் கேட்டு இராமர் வெகு வணக்கமாக லக்ஷ்மணருடன் கூடப் பின்வருமாறு சொல்லலானார் : "இன்றைத் தினமே நான் இவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போவதனாலுண்டாகும் நன்மையைவிட உயர்ந்த நன்மையை எனக்குக் கொடுக்க யாரால் முடியும்? ஆகையால் எனது முழு விருப்பத்தாலும் இப்பொழுதே ஆரணியத்துக்குப் போக எண்ணுகிறேன். தாங்கள் தேசங்களுடனும் ஜனங்களுடனும் தன தானியங்களுடனும் பொருந்தியுள்ளதும் என்னால் விடப்பட்டதுமான இப்பூமியைப் பரதன் அரசாளக் கொடுக்க வேண்டும். வனவாசம் செய்ய உறுதி கொண்ட என் புத்தியை இனி மாற்ற முடியாது.

கேட்போர்களின் மனத்தை நிறைவிக்கும் வேந்தே, தாங்கள் கைகேயிருக்குக் கொடுத்த வரத்தை வெகு

சந்தோஷமாக முடித்துச் சத்திய சந்தர் எனப் பெயர் பெறுங்கள். நான் தங்களுடைய கட்டளைச் சொல்லைக் காப்பாற்றிக் கொண்டு வனத்தில் வசிப்பவர்களுடன் பதினான்கு வருஷம் வனத்தில் வாசம் பண்ணுகிறேன். தங்களுக்கு விசாரமே வேண்டாம். பரதனுக்குப் பூதலத்தைக் கொடுங்கள்.

இரகு குலம் விளங்கும்படி தோன்றியவரே, நான் தங்களது ஆணை என்ற காரணத்தினால்தான் பட்டங் கட்டிக்கொள்ள உடன் பட்டேன்; எனது மனத்தில் விருப்பமுற்றேனும் இன்பத்தை எண்ணியேனும் இராச்சியத்தை நான் அங்கீகரிக்கவில்லை. எல்லாச் சனங்களுக்கும் தைரியம் சொல்ல வேண்டிய தாங்கள் என்ன இப்படித் துக்கப்படுகிறீர்கள்? சோகத்தை விட்டிடுங்கள்; கண்ணீர் வடிக்க வேண்டாம்.

பிறரால் வெல்ல முடியாத பராக்கிரமமுடையவரே, மகாநதிகளுக்கெல்லாம் பதியாக விளங்கும் சமுத்திரம் கலக்கமடையுமோ? புருஷ சிரேஷ்டரே, எனக்கு நாடு வேண்டாம்; சுகம் வேண்டாம்; சீதையும் வேண்டாம்; ஒரு விதமான சம்பத்தும் வேண்டாம்; நான் தங்களைச் சத்தியமுடையவராக இருக்க வேண்டுகிறேன்; பொய்யராக இருக்க வேண்டேன். நான் பிரத்யக்ஷ தெய்வமாகிய தங்கள் முன்பு, சத்தியத்தின் மீதும் புண்ணியத்தின் மீதும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். பிரபுவே இனி ஒரு கணப் பொழுதுகூட இங்கிருக்க என்னால் முடியாது. தாங்கள் துக்கத்தை விட்டிட வேண்டும். நான் கொண்ட உறுதி நடவாதிராது. எனது தாயாகிய கைகேயி, எப்பொழுது ''இராகவா நீ காட்டிற்குச் செல்லுவாய்'' என்று கூறினாரோ, அப்பொழுதே நான் ''அம்மா, அப்படியே போகின்றேன்,'' என்றேன்; அச் சத்தியத்தை நான்



நிறைவேற்றுகிறேன். தேவ, தாங்கள் வருத்தத்தால் அடிக்கடி எங்களை நினைக்க வேண்டாம். சாதுக்களான மான்கள் நிரம்பியும் நானாவித பக்ஷிகள் ஒலித்துக் கொண்டுமிருக்கும் ஆரணியத்தில் நாங்கள் மனங்களித்து விளையாடப் போகின்றோம்.

தந்தையே, தந்தை தெய்வங்களுக்கெல்லாம் மேலான தெய்வம் என்றன்றோ சாஸ்திரங்கள் கூறுகின்றன. புருஷ சிரேஷ்டரே, ஆகையால் நான் தங்கள் சொல்லைத் தெய்வத்தின் கட்டளை என நினைத்தே நிறைவேற்றுகின்றேன். பதினான்கு வருஷம் முடிந்தவுடன், நான் இங்கு வரத் தாங்கள் என்னைப் பார்ப்பீர்கள்; இத்துக்கத்தை விட்டிடுங்கள். அழுது கொண்டிருக்கும் பூமி முழுவதையும் விட்டிட்டேன். இவைகளைத் தாங்கள் பரதனுக்குக் கொடுங்கள்.

நான், தங்கள் சொல்லைக் காப்பாற்றக் காட்டுக்குப் போகிறேன். தங்களை மீண்டும் சேவிக்க வெகு காலஞ்செல்லும். மலைகளின் கூட்டங்களையுடையதும், அநேக பட்டணங்களுடன் கூடியதும், நாநாவித வனங்கள் வாய்ந்ததும், அழகிய எல்லைகள் பொருந்தியதும், என்னால் விடப்பட்டதுமான பூமியைப் பரதன் ஆளட்டும். அரசரே, தாங்கள் எவ்வாறு மொழிந்தீர்களோ அது அவ்வாறே நடக்கட்டும். குற்றமற்ற அரசரே, பெரியோர்களால் மதிக்கப்படும் உங்களது ஆணையை முடித்தலில் எனக்கு எவ்வளவு விருப்பம் உள்ளதோ, அவ்வளவு விருப்பம் உலகத்தில் மனோகரமாக விளங்கும் பொருள்களிலும் இஷ்டமான பொருள்களிலும் இல்லை. என் பொருட்டுச் சோகப்பட வேண்டாம்.

தங்களைப் பொய்யராகச் செய்வதற்காக, என்றும் அழியாத இராச்சியத்தையும், விருப்பந்தரும் பொருள்களையும், சுகத்தையும், சீதையையும், பிராணனையும் விரும்பேன்.

தங்களுடைய விரதம் உண்மையை உடையதாகட்டும். நான் நாநாவித மரங்களையுடைய ஆரணியத்திற் புகுந்து, பழங்களையும் மூலங்களையும் புசித்தும், மலைகளையும் நதிகளையும் ஓடைகளையும் தரிசித்தும், வெகு சௌக்கியமாகச் சஞ்சரிப்பேன்; தாங்கள் சுகமாக இருங்கள்,'' என்றார்.

இவ்வண்ணம் தமது குமாரர் சொல்ல அரசர், விசனத்தால் கவரப்பட்டுச் சோகத்தால் வாட்டமடைந்தவராய், இராமரை அணைத்து, அறிவற்றவராய் மோகமடைந்து சிறிதும் அசைவின்றியிருந்தார். கைகேயி ஒருத்தி தவிர, மற்ற எல்லாத் தேவிமார்களும் கதறினார்கள். சுமந்திரரும் அழுதுகொண்டே மூர்ச்சையடைந்தார். அவ்விடமெங்கும் ஹா, ஹா என்ற ஒரு சத்தமே கேட்டுக் கொண்டிருந்தது. (அயோத்திய காண்டம் 34ஆம் சருக்கம். பண்டித நடேச சாஸ்திரியார் அவர்களுடைய மொழி பெயர்ப்பு)

இதில், தசரதர் இராமனிடத்தில், தாம் கைகேயிக்குக் கொடுத்த வரங்களை மறுத்துவிட்டுப் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும்படி சொல்லுவதும், அதற்கு இராமன் இணங்காமல், அரசர் சத்தியம் தவறக்கூடாது என்று அவருக்குப் புத்தி புகட்டுவதுபோலப் பேசுவதும் தசரதருடைய பெருமையைக் குறைத்துவிடுகின்றன. இராமன் காட்டுக்குப் போகவேண்டும் என்பதைப் பற்றிப் பொறுக்க முடியாத துக்கத்தினால் அவனைக் காட்டுக்குப் போக வேண்டாம் என்று மட்டும் சொல்லியிருந்தாலாவது அவர் கொடுத்த இரண்டு வரங்களில் ஒன்றையாவது உண்மையாக்கினார் என்பதாகும். ஆனால், அவர் ''என்னை நீ மறுத்துவிட்டு அயோத்திமா நகருக்கு மன்னனாவாய்,'' என்று சொல்லுவதில் பரதனுக்குப் பட்டாபிஷேகம் என்ற வரத்தையும் மறுக்கச் சொல்லுகிறார். அதனால் தாம் கொடுத்த இரண்டு வரங்களையும் மறுத்து விடும்படி சொல்லுவதாகிறது.



மொத்தத்தில் இராமருக்கும் தசரதருக்கும் நடந்த இந்தப் பேச்சுகள், தசரதர், தாம் கைகேசிக்குக் கொடுத்துவிட்ட இரண்டு வரங்களையும் பின்னால் மறுத்துவிடத் தயாராக இருந்தாரென்றும், ஆனால் அப்படிச் செய்யக் கூடாதென்று இராமர் அறிவுறுத்திய பிறகுதான் அந்த வரங்களைத் தசரதர் ஊர்ஜிதப் படுத்தினார் என்றும் தோன்றச் செய்கின்றன.

இப்படிப்பட்ட சங்கடங்களுக்கெல்லாம் இடமில்லாதபடி கம்பர் கதையை முற்றிலும் மாற்றியமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வால்மீகி முனிவர் சொல்லுகிறபடி இராமனைக் காட்டுக்குப் போகும்படி கைகேசி ஏவியதும் அவன் காட்டுக்குப் போவதும் பின்வருமாறு :

கைகேசி, தான் எண்ணியிருக்கிற ஒரு விஷயத்தை முடித்துத்தர வேண்டுமென்று தசரதரைக் கேட்டாள். தருவதாகத் தசரதர் சொன்னார். எதைக் கேட்டாலும் தருவதாகச் சத்தியம் செய்யச் சொன்னாள். தசரதரும் சத்தியம் செய்தார். அதன் பிறகுதான் இரண்டு வரங்கள் தருவதாக முன் ஒரு காலத்தில் வாக்குக் கொடுத்திருந்ததை நினைப்பூட்டி, ஒரு வரத்தால் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றும், மற்றொரு வரத்தால் இராமனைப் பதினான்கு வருடம் வன வாசம் போகச் சொல்ல வேண்டுமென்றும் சொன்னாள்.

அதைக் கேட்ட தசரதர் ஆறாத் துயரமடைந்து கைகேசியைப் பலவாறு நிந்தித்துவிட்டு, இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லாமல் அவனுக்கு பட்டாபிஷேகம் நடக்கக் கருணை புரிய வேண்டுமென்று கைகேசியின் காலில் விழுந்து கெஞ்சினார். கைகேசியின் பிடிவாதம் தளரவில்லை. தசரதர் ஓய்ந்துபோய், துக்கத்தோடு மூர்ச்சை

யடைந்துவிட்டார்.... இரவு கழிந்தது. இராமனைக் கூப்பிட்டு அவனைக் காட்டுக்குப் போகச் சொல்லும்படி கைகேசி, தசரதரை தூண்டிக் கொண்டே யிருக்கிறாள்.

அந்தச் சமயத்தில், பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்ட வசிஷ்டர், தசரதரை அழைத்து வரும்படி சுமந்திரரை அனுப்புகிறார். சுமந்திரர் கைகேசியின் மாளிகைக்கு வந்து தசரதர் துக்கத்தோடு புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவரை பட்டாபிஷேக காரியத்துக்கு அழைக்கிறார்; தசரதர் மிகவும் வருத்தத்தோடு சுமந்திரரைப் பார்த்து, நீர் என்னைத் துதித்துப் பட்டாபிஷேக காரியத்துக்கு அழைப்பது, பிளந்து கிடக்கும் என் மனதை மேலும் பிளப்பது போல் இருக்கிறது, என்று அழுத குரலில் சொல்லுகிறார். உடனே கைகேசி குறுக்கிட்டு, அரசர் இரவெல்லாம் இராமனுடைய பட்டாபிஷேகத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்து தூங்காமல் இருக்கிறார். நீர் உடனே போய் இராமரை இங்கே அழைத்து வாரும் என்று சுமந்திரருக்குக் கட்டளையிடுகிறாள்.

உடனே இராமரை அழைத்துவர வெளியே போன சுமந்திரர், நகரத்து மகாஜனங்களெல்லாம் இராமருக்குப் பட்டாபிஷேகம் நடக்க வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கும் ஆர்வத்தைச் சொல்ல மீண்டும் கைகேசியின் மாளிகைக்குள் நுழைகிறார். கைகேசியுடன் சுமந்திரர் பேசும் ஓசையைக் கேட்ட தசரதர் சுமந்திரரைக் கூவி, ''இராமனை அழைத்து வரும்படி கைகேசி உமக்குக் கட்டளையிட்டிருக்க நீர் அதைச் செய்யாமல் மறுபடியும் ஏன் இங்கே வந்தீர்?'' என்கிறார்.

உடனே சுமந்திரர் இராமரிடம் சென்று தெரிவிக்கிறார்... இராமர் வந்தார்; தசரதர் ஒன்றும் பேசாமல் விசனத்தோடு இருப்பதைப் பார்த்து, வந்துள்ள விசனம்



என்னவென்று தந்தையைக் கேட்கிறார். தசரதர் பதிலே பேசாமல் அழுதுகொண்டிருக்கிறார்... இராமர், கைகேசியைப் பார்த்துக் காரணம் என்னவென்று கேட்கிறார். கைகேசி வெகு நிதானமாக நடந்ததைச் சுருங்கச் சொல்லி, இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லுகிறாள். இராமர் போவதாக ஒத்துக் கொள்கிறார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த தசரதர் உரக்கச் சத்தமிட்டு அழுகிறார். இராமர் போய்விடுகிறார். அதன் பிறகு இராமர் தம் தாயாருக்குத் தெரியப்படுத்தி விட்டுத் தம்பியின் கோபத்தைத் தணித்து அவனும் காட்டுக்கு வருவதை ஏற்றுக்கொண்டு, பிறகு சீதையைக் கண்டு அவளும் உடன்வரப் பிடிவாதம் செய்ததை ஒப்புக்கொண்டு, அதன் பிறகு இராமர், லட்சுமணர், சீதை ஆகிய மூவருமாக வனத்துக்குப் போகத் தசரதரிடம் விடை பெற்றுக்கொள்ளப் போனார்கள். அப்போது நடந்த பேச்சுகள்தாம் மேலே சொல்லப்பட்டவை.

கம்பர் இந்தக் கதைப் பகுதியை முற்றிலும் மாற்றி அமைத்திருக்கிறார். கம்பர் சொல்லுவதில், கைகேசி இராமனைக் காட்டுக்குப் போகும்படி அவளாகவே ஏவுவதில்லை. அரசன் சொன்னதாக மட்டும் சொல்லுகின்றாள். அப்படிச் சொல்லும்போதும் தசரதர் (வால்மீகத்தில் உள்ளது போல்) பக்கத்திலிருந்து கேட்டுக் கொண்டும், துக்கப்பட்டுக் கொண்டும் இருந்ததாக இல்லை.

தசரதர் வருத்தத்தோடு மாளிகைக்குள் நினைவிழந்து படுத்திருக்க, அவர் படுத்துக் கிடக்குமிடத்துக்கு இராமன் போவதற்கு முன்னாலேயே கைகேசி இராமனைச் சந்தித்து, மன்னவன் சொன்னதாகச் சொல்லுகிறாள். அதைக் கேட்ட இராமன் அப்போதே அதை ஏற்றுக் கொண்டு, அங்கிருந்தபடியே கைகேசியிடம் வனத்துக்குப் போக விடை பெற்றுக் கொண்டு கோசலை மாளிகைக்குப் போய்விடுகிறான்.

இராமன் தசரதரைப் பார்க்கவுமில்லை. அதனால் பிரிவாற்றாமையாகத் தசரதர் இராமனிடம் எதையும் சொல்லவும் இடமில்லை. கம்பர் சொல்லுவதைப் பார்ப்போம்:—

கைகேசி அலங்கோலமாகத் தரையில் கிடப்பதைக் கண்ட தசரதர், அவளைத் தூக்கியெடுத்து விசாரித்தார். அவள் தனக்கு முன்னே வாக்களித்திருந்த இரண்டு வரங்களையும் தரவேண்டும் என்று கேட்டாள். தசரதர் தருவதாக ஒப்புக் கொண்டார். ஒரு வரத்தால் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டுமென்றும், மற்றொன்றால் இராமன் பதினான்கு வருடம் வனவாசம் போகவேண்டுமென்றும் கேட்டாள். பரதனுக்குப் பட்டங்கட்டுவதைப் பற்றித் தசரதர் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இராமனைக் காட்டுக்கு ஓட்ட வேண்டாம் என்று மட்டும் பலவாறு கேட்டுக் கொண்டு,

''நின்மகன் ஆள்வான். நீ இனிது ஆள்வாய்,. நிலமெல்லாம்
உன்வயமாமே ஆளுதி; தந்தேன் உரைகுன்றேன்;
என்மகன், என்கண். என்உயிர் எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்தநாடிறவாமை நய'' என்றான்.

''உன் மகன் பரதனே ஆளட்டும், நீயே மகிழ்ச்சியோடு அரசாள்வாய்; இந்த நாடு முழுவதும் உன் வசமாகவே இருக்கும்படி நீயே சர்வாதிகாரியாக இருப்பாயாக. இராச்சியத்தை இப்போதே உன்னிடம் தந்து விட்டேன்; இந்தச் சொல் தவறமாட்டேன். ஆனால் என் மகன், என் கண், என் உயிர், எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்யக் கூடியவனான இராமன் இந்த நாட்டை விட்டுப் போகாதிருக்கும்படியான வரத்தை நீ எனக்குத் தந்தருள்'' — என்று தசரதர் பலவிதமாகக் கெஞ்சிக் காலில் விழுந்து கேட்டுக் கொண்டும் கைகேசி மாறவில்லை.



இராமன் காட்டுக்குப் போயே ஆகவேண்டுமென்றும் அதற்குத் தசரதர் சம்மதித்து. அந்த வரத்தையும் தந்து விட்டதாகச் சொல்ல வேண்டும் என்றும் பிடிவாதம் செய்தாள். கடைசியாகத் தசரதர்,

''வீய்ந்தாளே இவ்வெய்யவள் என்னா மிடல் வேந்தன்,
ஈய்ந்தேன் ஈய்ந்தேன் இவ்வரம் என்சேய் வனம்ஆள,
மாய்ந்தே நான்போய் வானுலகாள்வென்; வசைவெள்ளம்
நீய்ந்தாய், நீய்ந்தாய் நின்மகனோடும் நெடிது'' என்றான்.

'கெட்டாள் இக்கொடியவள்' என்று வெறுப்படைந்த வெற்றி வேந்தனாகிய தசரதர், ''தந்தேன், தந்தேன் இந்த வரம்; என் மகன் காட்டுக்குப் போனபின் நான் இறந்து தேவலோகத்துக்குப் போய்விடுவேன்; (இப்படி இராமனைக் காட்டுக்கு ஓட்டி என்னைக் கொல்லுவதனால் உண்டாகப்போகிற) பழியாகிற சமுத்திரத்திலிருந்து நீயும் உன் மகனும் கரையேற முடியாமல் நெடுங்காலம் தத்தளிப்பீர்கள்'' என்றார்.

இப்படிச் சொல்லி முடிக்கு முன்னரே,

கூறாமுன்னம் கூறுபடுக்கும் கொலை வாளின்
ஏறாம் என்னும் வன்துயர் ஆகத்திடை மூழ்கத்
தேறான் ஆகிச் செய்கை மறந்தான்; செயல்முற்றி
ஊறா நின்ற சிந்தையி னாளும் துயில்வுற்றாள்.

சொல்லி முடிப்பதற்கு முன்னால், கொலை வாளைக் கொண்டு பிளக்கப்பட்டது போன்ற கடுமையான துன்ப உணர்ச்சி உடம்பு முழுவதையும் முழுகச் செ"துவிடச் சுயநினைவு இல்லாதவராகி, செயல,றவராக மூர்ச்சையடைந்துவிட்டார், தசரதர். காரியம் கைகூடிவிட்ட மகிழ்ச்சி ஊற்றெடுக்கும் மனமடைந்த கைகேசியும் தூங்கிவிட்டாள்.

பொழுது விடிந்தபின் சுமந்திரர், தசரதரை அழைத்துப் போகக் கைகேசியின் மாளிகைக்கு வந்தார். சுமந்திரர் வந்திருப்பதாகப் பணிப்பெண்கள் வந்து சொல்லக் கேட்ட கைகேசி, சுமந்திரரை மாளிகையின் முன்கட்டிலேயே வந்து சந்தித்து வேறொன்றும் சொல்லாமல், இராமனை அழைத்து வரும்படி கட்டளையிட்டாள். சுமந்திரர் தசரதரைப் பார்க்காமலேயே இராமனை அழைத்துவரப் போய்விட்டார். அதனால் கைகேசி இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கத்தான் அழைப்பதாக எண்ணிக்கொண்டு அப்படியே இராமனிடமும் சொல்லி அழைத்தார்.

''கொற்றவர், முனிவர், மற்றும் குவலயத் துள்ளார் உன்னைப்
பெற்றஅன்று அன்னைபோலப் பெரும் பரிவு இயற்றிநின்றார்
சிற்றவைதானும் ஆங்கே கொணர்கெனச் செப்பினாள்; அப்
பொற்றட மகுடம்சூடப் போகுதி விரைவின்'' என்றான்.

''அரசர்களும் முனிவர்களும் மற்றும் இந்தப் பூமியிலுள்ள எல்லா மக்களும், (இராமா, உனக்குப் பட்டாபிஷேகம் நடக்கப் போவதைப் பற்றி) உன்னைப் பெற்றெடுத்த அன்னையைப் போல் பெருமகிழ்ச்சி யடைகிறார்கள். உன் சிற்றன்னையாகிய கைகேசியும் அப்படியே மகிழ்ச்சியுள்ளவளாய், பட்டாபிஷேகத்துக்கு உன்னை அழைத்துவரச் சொன்னார்; அந்த அழகான பெரிய (இராச்சியத்தின்) மகுடத்தை அணிந்துகொள்ள விரைவாகப் புறப்படு'', என்றார் சுமந்திரர்.

இராமன் உடனே புறப்பட்டு நேராகத் தசரதருடைய மாளிகைக்குப் போனான். அங்கே அவரைக் காணாமல் கைகேசியின் மாளிகைக்குப் போனான். அங்கே கூடியிருந்த ஜனங்களும் முனிவர்களும் இராமனை வாழ்த்தினார்கள். அவர்களைக் கடந்து இராமன் மாளிகைக்குள் புகுந்து தசரதர் இருக்குமிடத்தை நாடி அவர் மயக்கமுற்றுப் படுத்துக்கிடந்த அந்தப்புர அறைக்குப் போகுமுன்னால், கைகேசி குறுக்கிட்டு நிறுத்தி, அங்கேயே விஷயத்தை அறிவிக்கலானாள்.



ஆயன நிகழும் வேலை அண்ணலும் அயர்ந்து தேறாத்
தூயவன் இருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி,
''நாயகன் உரையான் வாயால் நான்இது பகர்வேன்'' என்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

(கைகேசியின் மாளிகையில் கூடியிருந்தவர்கள் இராமனை வாழ்த்திக் கொண்டும் பட்டாபிஷேகத்தைப் பற்றிப் பேசிக்கொண்டுமிருந்த) அவைகள் நடந்து கொண்டிருக்கும்போது, இராமன், தன் தந்தையை அங்கும் காணாதவனாகிச் சற்றே சந்தேகித்துச் சொன்ன சொல் தவறாத தூயவராகிய தசரதர் இருந்த இடத்தை நோக்கி வருவதைக் கண்ட கைகேசி, 'அரசர் நான் கேட்டுப் பெற்றுள்ள வரங்களைப் பற்றிச் சொல்லி, அவர் வாயால் இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்ல மாட்டார். நானே அதைச் சொல்லிவிடுகிறேன் என்று, தாயென்று எண்ணுகின்ற இராமனுக்கு முன்னால் எமன் போலத் தானே வந்தாள்.

வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாய்த்த
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்,
அந்திவந் தடைந்த தாயைக் கண்ட ஆன்கன்றின் அன்னான்.

எதிரே வந்த கைகேசியைக் கண்டதும், இராமன் அவளுடைய தலை தரையிற்படும்படி அவள் பாதத்தில் விழுந்து வணங்கி எழுந்து, சிந்தூரம்போலும் பவளம் போலும் சிவந்த தன்னுடைய வாயை ஒரு கையால் பொத்திக் கொண்டு, மற்றொரு கையால் தன்னுடைய ஆடையை ஒடுக்கிப் பிடித்துக் கொண்டு மிக்க வணக்கத்துடன்,

பகலெல்லாம் மேய்ச்சலுக்குப் போய்விட்டு, அந்திப் பொழுதில் திரும்பிவரும் தாயைக் கண்ட பசுங்கன்றைப்போல் மகிழ்ச்சியோடு நின்றான்.

நின்றவன்தன்னை நோக்கி, இரும்பினால் இயைந்த நெஞ்சின்
கொன்றுழல் கூற்றம் என்னும் பெயரினின் கொடுமை பூண்டாள்,
''இன்று எனக்கு உணர்த்தலாவது ஏயதே என்னின் ஆகும்
ஒன்று உனக்கு உந்தை, மைந்த உரைப்பதோர் உரை உண்டு''
என்றாள்.

அப்படி நின்றவனை நோக்கி, இரும்பினால் ஆக்கப்பட்டது போன்ற அழுத்தமான நெஞ்சத்தோடு, கொலை செய்வதே தொழிலாக அலையும் எமனுக்குச் சமானமான கைகேசி, ''இன்றைக்கு நான் சொல்ல வேண்டுமென்று எனக்குக் கட்டளையிடப்பட்டது என்னவென்றால், ஒரு சமாச்சாரம் உனக்கு, மகனே, உன் தந்தை சொல்லச் சொன்ன செய்தி இருக்கிறது'' என்றாள்.

அதைக் கேட்ட இராமன்,

''எந்தையே ஏவ நீரே உரைசெய இயைவது உண்டேல்
உய்ந்தனன் அடியேன்; என்னிற் பிறந்தவர் உளரோ, வாழி;
வந்ததுஎன் தவத்தினாய வருபயன் மற்றொன்று உண்டோ?
தந்தையும் தாயும்நீரே தலைநின்றேன், பணிமின்'' என்றான்.

''என் தகப்பனாரே கட்டளையிடத் தாங்களே அதை எனக்குச் சொல்ல நேர்ந்தது என்றால், அடியேன் கடைத்தேறிவிட்டேன். என்னைவிடப் பாக்கியசாலியாகப் பிறந்தவரும் உண்டோ! இருந்தால் அவர்களை வாழ்த்துகிறேன். நான் செய்துள்ள புண்ணியங்களால் வரக்கூடிய நல்ல பலன் இதைவிடவும் வேறென்ன இருக்கமுடியும்?



(தந்தை என்னிடம் சொல்லச் சொன்னது என்ன?) தந்தையும் நீங்கள்தான்; தாயும் நீங்கள் – சொன்னதைச் செய்யக் காத்திருக்கிறேன்; சொல்லுங்கள் என்றான்.

உடனே கைகேசி,

''ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே ஆள, நீபோய்
தாழிரும் சடைகள் தாங்கி, தாங்கரும் தவம் மேற்கொண்டு
பூழிவெம் கானம்நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டு ஆண்டின் வாஎன்று இயம்பினன் அரசன்'' என்றாள்.

''கடல் சூழ்ந்த உலகத்தை பரதனே அரசாளும்படி விட்டுவிட்டு, நீ நீண்டு அடர்ந்த சடைமுடி தரித்துக் கொண்டு, அருமை பெருமையுள்ள தவம் புரியும் வாழ்க்கையை மேற்கொண்டு, மரமடர்ந்த கானகத்தில் வாசம் செய்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, பதினான்கு ஆண்டுகள் கழித்துவிட்டு அதன்பிறகே திரும்பி வரவேண்டும் என்று அரசர் சொன்னார்'' – என்றாள்.

அதற்கு இராமன்,

''மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பெனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ
என்இனி உறுதிஅப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்;
மின்ஒளிர் கானம்இன்றே போகின்றேன்; விடையும் கொண்டேன்.''

''(தாயே! அரசர் சொன்னார் என்று சொல்லுகிறீர்களே) அரசர் இட்ட கட்டளையில்லாவிட்டாலும் நீங்கள் கட்டளையிட்டால் நான் மறுத்துவிடுவேனா? என் தம்பிக்கு வரும் சிறப்புகள் அடியேனுக்கு வந்ததல்லவா? இதைவிட வேறு பெருமை எனக்கு என்ன இருக்கிறது? (பரதனே அரசாளட்டும்) அழகு பொருந்திய கானகத்துக்கு நான் இன்றைக்கே போகின்றேன்; இப்போதே தங்களிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.''

என்றுகொண்டு இனையகூறி, அடியிணை இறைஞ்சி மீட்டும்,
தன்துணைத் தாதை பாதம் அத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்திணிப் போதினாளும் பூமியும் புலம்பி நைய,
குன்றினும் உயர்ந்த தோளான் கோசலை கோயில் புக்கான்.

என்று இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி மீண்டும் கைகேசியின் பாதங்களில் விழுந்து, வணங்கிவிட்டு (அவ்விடத்திலேயே விரதம் பூண்டுவிட்டதனால் தசரதர் இருந்த பள்ளியறைக்குள் போகாமல்) தன் தகப்பனார் இருந்த திக்கு நோக்கி அவர் பாதங்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டுத் தாமரை மலரவளாகிய திருமகளும் பூமாதேவியும் (இராமன் காட்டுக்குப் போக நேர்ந்ததைப் பற்றி) அழுது புலம்பி வருத்தம் அடைய, மலையினும் திரண்ட தோள்களையுடைய இராமன் கோசலையின் மாளிகைக்குப் போய்ப் புகுந்தான்.

இதற்குப் பிறகுதான் இராமன், தான் வனவாசம் செய்யப் போவதைத் தன் தாயாருக்குச் சொல்லிவிட்டு, இலக்குமணனையும் சீதையையும் சந்திக்கிறான். பிறகு அவர்களுடன் காட்டுக்குப் போய்விடுகிறான். கம்பர் இப்படிக் கதையை மாற்றியிருப்பதால், தசரதர் இராமனைக் கண்டு பேசித் துன்பம் பொறுக்காமல் ஏதேதோ சொல்லி விடக்கூடிய சங்கடங்களுக்கு இடமே இல்லாமலிருக்கிறது.

எனவே, கம்பர் இயற்றியுள்ள இராம கதை வால்மீகி முனிவர் இயற்றிய இராம கதையினின்றும் மிக மிகவும் வேறுபட்டது. பாத்திரங்களின் பெயர்களைத் தவிர அவரவர்களுடைய குணத்திலும் சொல்லிலும் செயலிலும், கம்பர் சொல்லுவது வால்மீகர் சொன்னதற்கு முற்றிலும் மாறுபட்டது.



# 12. சரித்திரம் அல்ல

இராமாயணக் கதை சரித்திர நிகழ்ச்சியல்ல. அதைச் சரித்திர சம்பந்தமுடையதாக எண்ணிக் கொண்டு ஆராய்ச்சி செய்யப்புகுவது முற்றிலும் வீண் முயற்சியாகும். இராமனை வடநாட்டு ஆரியன் என்றும், இராவணனைத் தென்னாட்டுத் திராவிடன் என்றும் எண்ணிக்கொண்டு, ஆரியனாகிய இராமன் திராவிடனாகிய இராவணனைக் கொன்றுவிட்டானே என்ற ஆராய்ச்சி உண்மைக்கு ஒத்ததாக இருக்க முடியாது.

பத்துத் தலைகளையுடைய திராவிடன் இருந்திருக்க முடியுமா? மூன்று கோடி வருடங்கள் ஆயுளுடைய ஒரு சரித்திர புருஷன் இருந்திருக்க முடியுமா? கைலாய மலையை ஆணி வேரோடு அசைத்துவிட்ட மனிதன் இருந்திருக்க முடியுமா? இருபது கைகள் மட்டுமன்றி இருபது கோடி கைகளிருந்தாலும் இமயமலையை அசைத்துவிட முடியுமா? இப்படியெல்லாம் இராவணனுக்குச் சொல்லப்பட்டுள்ள இயற்கைக்கு விரோதமான சிறப்புகள் ஒருபுறமிருக்க, கும்பகருணனைப் பார்ப்போம்.

கும்பகருணன் மலைமலையாகக் கொட்டப்பட்டிருக்கும் சோற்றையும், வண்டி வண்டியாக வந்துள்ள இறைச்சிகளையும், குடங்குடமாக மதுவையும் உண்டுவிட்டு உறங்கிக் கிடப்பானாம். அவனாக ஆறு மாதங்களுக்கு ஒரு முறை விழித்தால்தான் விழிப்பு. இல்லாவிட்டால் ஒரே தூக்கம்தான். அவனை எழுப்ப வேண்டுமானால் அவன் காதுகளுக்கருகில் பேரிகைகளை முழக்கி, கொம்பு, தாரை,

தப்பட்டைகளைக் கொண்டு மிகப்பெரிய ஓசைகளை உண்டாக்கி, அதுவும் போதாமல் யானைகளை அவன்மேல் ஏற்றித்தான் எழுப்ப வேண்டுமாம். இப்படிப்பட்ட ஒரு திராவிடன் இருந்திருக்க முடியுமா? இவனைத் தம்முடைய இனம் என்றும் தம்முடைய முன்னோர்களில் ஒருவன் என்றும் சொல்லிக் கொள்வதில் தென்னிந்தியாவிலுள்ள யாராவது பெருமை கொள்ள முடியுமா? அது போகட்டும்.

சூர்ப்பணகை என்ற பெண் ஒரு திராவிடப் பெண்ணென்று சொல்லிக் கொள்வது தென்னிந்தியருக்குப் பெருமை தருமா? ஆரியனாகிய இலட்சுமணன் திராவிடப் பெண்ணாகிய சூர்ப்பணகையை மானபங்கம் செய்து விட்டானென்றால் அது எப்படிப் பொருந்தும்? இலட்சுமணன் செய்தது ஆண்மைக்குத் தகாத செயல் என்றாலும் இந்த சூர்ப்பணகை, இராமனும் இலட்சுமணனும் இருக்கிற இடத்துக்கு ஏன் வந்தாள்? இராவணனுடைய தங்கையான அவள் இலங்கையிலல்லவா இருக்க வேண்டும்? ஒரு திராவிடப் பெண் தன்னுடைய இருப்பிடத்துக்கு ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள வனத்தில் தனியே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் என்பது தென்னாட்டுப் பெண்மைக்குப் பெருமை தரக்கூடியதா?

இராமனிடத்துக்கு இவள் ஏன் போனாள்? இராமனைக் கண்டு இவள் மோகித்தாள் என்பதும், சீதையை அவள் பயமுறுத்தினாள் என்பதும், அதற்காக இலட்சுமணன் அவளை மானபங்கம் செய்தான் என்பதுமட்டும் பொய்யென்றால் மற்ற நிகழ்ச்சிகளும் பொய்யாகத்தானே இருக்கவேண்டும்? சூர்ப்பணகை இராமனைக் கண்டு மோகித்தாளென்பதும், சீதையைப் பயமுறுத்தினாள் என்பதும் பொய்யானால் இலட்சுமணன் அவளை மானபங்கம் செய்தான் என்பதுமட்டும் மெய் என்பது எந்த நியாயத்துக்குப் பொருந்தும்?



நிற்க, இராமன் என்ற ஆரியன்தான் இராவணன் என்ற திராவிடனுக்குத் தீமை செய்துவிட்டான் என்றால், அந்த இராவணனைச் சிறையில் அடைத்து வைத்திருந்த கார்த்தவீரியனும் ஆரியனா? இராவணனை வாலினால் சுருட்டிப் பிடித்துக்கொண்டு, அவனை ஒரு பத்துத்தலைப் பூச்சிகளாக ஆட்டிக் கொண்டிருந்த வாலியும் ஆரியன்தானா? பாதாள லோகத்தில் இராவணனால் துன்புறுத்தப்பட்டு, அவனுக்குச் சாபங்கொடுத்தவர்களாகச் சொல்லப்படுகிற பலரும் ஆரியர்கள்தாமா?

வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவின் மீது படையெடுத்தான் என்பதைமட்டும் வைத்துக்கொண்டு, வடக்கேயிருந்து வந்தவனெல்லாம் ஆரியன் என்றும், தெற்கே இருந்தவனெல்லாம் திராவிடன் என்றும் தீர்மானித்துக்கொள்வது சரித்திர ஆராய்ச்சியாகிவிடுமா? மேலும் நவீன சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள், "இந்த ஆரியர்கள் என்னும் அறிவிற் சிறந்த இனத்தார் வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்தார்கள் என்பது முற்றிலும் தவறு; இவர்கள் தென்னிந்தியாவிலிருந்துதான் வட இந்தியாவிலும் பரவினார்கள்" என்று சொல்லுகிறார்கள். அதற்கு ஆதாரமாகப் பல சான்றுகளைக் கூறுகிறார்கள். இந்த இருவித கோட்பாடுகளில் எது மெய், எது பொய்? எந்த ஆராய்ச்சிக்காரராலும் கண்டுபிடிக்க முடியாத இந்த ஆரிய – திராவிட அனுமானங்களை வைத்துக் கொண்டு இராமாயணக் கதையைச் சரித்திரத்தோடு சம்பந்தப்படுத்த முயல்வது உண்மைக்கு உகந்ததல்ல. நம்பத்தகுந்த சான்றுகள் காட்டி எழுதப்படுகிற சரித்திர ஆராய்ச்சிகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு உண்மையைக் கண்டறிய முடியாதனவாக இருக்கின்றன. சரித்திர ஆராய்ச்சி விஞ்ஞான ஆராய்ச்சியைப்போல் நிச்சயமான முடிவுகள் உள்ளதாக இருக்க முடியாது.

உதாரணமாகத் தண்ணீரை ஆராய்ந்தால் அது, இரண்டு பங்கு பிராண வாயுவும் (ஆக்ஸிஜனும்) ஒரு பங்கு ஜலவாயுவும் (ஹைட்ரொஜனும்) சேர்ந்து உண்டான பொருள் என்ற உண்மையைக் கண்ணுக்கு முன்னால் மெய்ப்பித்துக் காட்டலாம். இந்த ஆராய்ச்சியை யார் செய்தாலும் ஒரே முடிவுக்குத்தான் வரமுடியும். இதைப்போலவே விஞ்ஞானத்தைப் பற்றிய எல்லா ஆராய்ச்சிகளிலும், இந்த காரணத்தால் இந்தக் காரியம் என்று நிச்சயமாகக் கூற முடியும். ஆனால் சரித்திர ஆராய்ச்சி அப்படியல்ல. அதற்கு மறுக்கமுடியாத உண்மைகள் ஆதாரங்களாக அமைய முடியாது. ஆதாரங்கள் பெரும்பாலும் வெறும் அனுமானங்கள்தாம். சரித்திரம் என்று எழுதப்பட்டுள்ள நூல்களிலும் சந்தேகங்களுக்கு இடமிருக்கிறபோது, வெறும் கட்டுக்கதைகளையும் சரித்திரமென்று ஆராயப்புகுந்தால் எப்படியிருக்கும்?

உண்மையாகவே உலகத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து மறைந்துபோன மிகப் பெரிய மனிதர்களுடைய சரித்திரங்களையே நிச்சயிக்க முடியவில்லை. அந்தப் பெரியவர்கள், மக்கள் என்றென்றும் மறக்க முடியாத காரியங்களைச் சாதித்தவர்களாக மிகச் சிறந்த பொக்கிஷங்களை நமக்கு விட்டுப் போயிருந்தும் அவர்களுடைய சரித்திர உண்மைகளை நாம் இப்போது நிச்சயிக்க முடியவில்லை. இதற்கு எண்ணிறந்த உதாரணங்கள் உலகம் முழுவதிலும் எல்லா நாடுகளிலும் உண்டு. அவற்றுள் ஒரே ஒரு உதாரணத்தைமட்டும் கவனிப்போம்.

உலக மகா இலக்கியங்களுள் தலைசிறந்தது திருக்குறள். திருக்குறளை அருளிச் செய்தவர் திருவள்ளுவர் என்பது மட்டுந்தான் நமக்குத் தெரியும். அந்தப் பெயர் அவருடைய இயற் பெயர்தானா என்று கூட உறுதிப்படுத்தப் போதிய ஆதாரங்கள் இல்லை. கர்ணபரம்பரையாக அவரைப் பற்றியும், அவருடைய மனைவி வாசுகி என்ற அம்மையாரைப் பற்றியும், அவரை ஆதரித்த ஏலேலசிங்கர் என்ற வள்ளலைப் பற்றியும் சொல்லப்பட்டு வந்த துண்டு துண்டான கதைகளைத் தவிர, சரித்திரம் என்று சொல்லத் தகுந்த எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.



திருவள்ளுவருடைய சரித்திரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் பலர். அவர்கள் திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தைக்கூட நிச்சயிக்க முடியவில்லை. வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கண்டறிய எவ்விதமான ஆதாரமும் இல்லையென்றாலும், அவர் வாழ்ந்த காலத்தைச் சுட்டிக்காட்டச் சில சான்றுகள் கிடைக்கின்றன. இந்தச் சான்றுகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்த ஒவ்வொருவரும் வெவ்வேறு முடிவுகளைச் சொல்லுகிறார்கள்.

ஒருவர் திருவள்ளுவர் வாழ்ந்த காலம் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் என்கிறார். இன்னொருவர் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவர் என்று தீர்மானிக்கிறார். மற்றொருவர் ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் என்கிறார். இப்படியாக ஆயிரம் ஆண்டுகளிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகள் வரைக்கும் இந்த வள்ளுவர் காலத்தை நிச்சயிக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவருடைய தீர்மானத்துக்கு வேண்டியபடி ஆதாரங்களையும் காட்டுகின்றார்கள். ஆனால், இப்படிப் புதுப்புது ஆராய்ச்சிகளில் இறங்காத பொது மக்கள், வள்ளுவன் வாழ்ந்த காலம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் என்றுதான் நம்புகிறார்கள்.

இதைப்போலவே, தமிழ் மொழிக்கும் தமிழருடைய வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்தவராகிய

தொல்காப்பியருடைய காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் என்பதிலிருந்து ஒன்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் என்கிற வரையில் வெவ்வேறு ஆராய்ச்சியாளர் வெவ்வேறு விதமாக முடிவுகட்டுகின்றார்கள். எல்லாரும் தாம் சொல்லுவதுதான் சரியானது என்பதற்கான தகுந்த ஆதாரங்களைக் காட்டித்தான் சொல்லுகிறார்கள்.

இப்படி, ஆதாரங்களை எடுத்துக்காட்ட இடமிருக்கிற சரித்திர ஆராய்ச்சியே உண்மையைக் கண்டுபிடிக்க முடியாமலிருக்கும்போது, மிகவும் வியக்கத்தக்கனவாகவும், சிறிதும் நம்பத்தகாதனவாகவும் உள்ள நிகழ்ச்சிகள் நிரம்பிய கட்டுக் கதைகளைக் கொண்டு சரித்திர உண்மைகளைக் கண்டுவிடுவது எப்படி முடியும்? இராமாயணம் மிகவும் அசாதாரணமான பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் அடங்கிய ஒரு கற்பனைக் கதையென்பதில் ஐயமில்லை. அதைக் கொண்டு சரித்திரத்தைக் காணமுயல்வது கண்ணில்லாக் குருடன் கண்டதாகச் சொல்லுவதைத்தான் ஒக்கும்.

இராம கதையைத் தந்தவர் வால்மீகி முனிவர்தான். அது வெறும் கற்பனைக் கதைதான். வால்மீகி சொன்ன கதையை வைத்துக் கொண்டு அவருக்குப் பின்னால் பௌத்தர்கள் எழுதிய இராமாயணம் என்றும், சமணர்கள் எழுதிய இராமாயணம் என்றும், கதைப் போக்கில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத இரண்டு இராமாயணங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று சீதை இராவணனுக்கு மகள் என்று சொல்லுகிறது. மற்றொன்று இராமனும் சீதையும் உடன் பிறந்தவர்கள் என்று சொல்லுகிறது.

இவற்றைத் தவிர ஆனந்த ராமாயணம் என்றும், அற்புத ராமாயணம் என்றும், அத்யாத்ம ராமாயணம் என்றும் இன்னும் சில ராமாயணங்களும் உண்டு. இவற்றுள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நோக்கங்களுடன் கதையைத்



திரித்துக் கூறுவது. இவைகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒன்றிரண்டு வாக்கியங்களை மட்டும் எடுத்துக்கொண்டு, எல்லாவற்றையும் கூட்டிக் குழப்பிச் சரித்திர ஆராய்ச்சி செய்கிறவர்களும் உண்டு. இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் உண்மைக்கும் அறிவுக்கும் ஒரு சிறிதும் பொருந்தாதிருப்பது மட்டுமன்றி பல தீமைகளையும் பயக்கும்.

ஆதலால் இராமாயணத்தைச் சரித்திரத் தொடர்புள்ளதாக ஆராயப் புகுவது நல்லதல்ல.

கவித்திறம் மிகுந்த வால்மீகி முனிவர் மிக நல்ல நோக்கங்களுடன் இராம கதையை உண்டு பண்ணினார். தெய்வ நம்பிக்கை, தாய் தந்தையரிடத்தில் பணிவு, சொன்ன சொல் தவறாமை, உடன் பிறந்தவர்களின் நல்லுறவு, கற்பின் பெருமை, காமத்தால் வரும் கேடுகள், அரசநீதி, நட்பின் சிறப்பு, காதல், வீரம் அறம் முதலியவைகளைப் பற்றிய நல்லறிவுகளை மக்களுக்கு நினைப்பூட்டிக் கொண்டிருக்க இராம கதை உதவும் என்பதே அந்த உயர்ந்த நோக்கம். தருமத்தை இராமனாக வைத்து, அதருமத்தை இராவணனாக வைத்து தருமத்துக்கும் அதருமத்துக்கும் நடந்த போராகவே இராமாயணத்தைச் செய்திருக்கிறார். அதருமத்துக்கு எவ்வளவு வல்லமைகள் இருந்தாலும் முடிவில் தருமமே வெல்லும் என்பதே கதையின் கருத்து.

பிரமனுக்குப் பேரனாக, உயர்ந்த குலம் என்று மதிக்கப்பட்ட பிராமண குலத்தில் பிறந்தவன், இராவணன். கல்வி நிறைந்தவன்; கலைகளிற் சிறந்தவன்; ஒப்பரிய தோளாற்றல் உள்ளவன்; எண்ணரிய வரங்களைப் பெற்றவன்; மூன்றரைக் கோடி ஆயுளைப் பெற்றவன். பலவிதமான எந்திர தந்திரச் சாதனங்களை உடையவன் : போர்த் திறமையில் இணையற்ற வீரன்; பஞ்ச பூதங்களும்

பணிந்து ஏவல் செய்யக்கூடிய விஞ்ஞான வித்தைகள் மிகுந்தவன்;. எல்லாவித செல்வங்களும் நிரம்பியவன். அப்படிப்பட்ட அவனும் பிறன் மனைவியின் மீது கொண்ட முறைகெட்ட காமத்தால் அழிந்தான் என்பதையும், அதருமத்தை மேற்கொண்டவன் எவ்வளவு வல்லமையுள்ளவனாக இருந்தாலும் அவனைத் தண்டிக்க அவனுக்குமேல் வல்லமையுள்ள ஒரு அதிகாரி இருப்பதையும் மக்களுக்கு நினைப்பூட்ட நிற்பதே இராமாயணக் கதையின் சாரம். இந்தக் குறிக்கோளை எண்ணித்தான் வால்மீகி முனிவர் இராமாயணத்தைக் கற்பனை செய்திருக்கிறார் என்பதை இனவெறிக்கும் மொழி வெறிக்கும் இடங்கொடுக்காமல் எண்ணிப் பார்த்தால் எளிதிற் புலனாகும்.

எண்ணிறந்த வல்லமைகளோடு அதருமத்தில் இறங்கிய இராவணனைத் தண்டிக்க எல்லா வல்லமைகளும் உள்ள ஒருவனால்தான் முடியும். அந்த ஒருவனைத்தான் தெய்வம் என்ற பெயரால் குறிப்பிடுவது. தெய்வம்தான் எல்லாம்வல்ல சக்தி. அந்தத் தெய்வம்தான் மகாவிஷ்ணு என்றும், அது மானிட வடிவத்தில் இராமனாக வந்து இராவணனைத் தண்டித்தது என்பதும் வால்மீகி முனிவருடைய கற்பனை. ஆனால் தமிழ் மொழியிலும் வடமொழியிலும் உள்ள தெய்வத்தைப் பற்றிய இலக்கியங்களின்படி மகாவிஷ்ணு என்ற தெய்வம், எல்லாம் வல்ல இறைவன் என்று போற்றப்படுகிற கடவுளுடைய மூன்று தொழில்களாகிய ஆக்கல், காத்தல், அழித்தல் (சிருஷ்டி, திதி, சங்காரம்) என்றவற்றுள் காத்தல் என்ற ஒரு பகுதிக்கு மட்டுந்தான் அதிகாரி. ஆக்கலுக்கு பிரமனும், அழித்தலுக்கு சங்கரனும் அதிகாரிகள்.

ஒரே இறைவன்தான் இந்த மூன்று மூர்த்தங்களில் தங்கி முத்தொழில்களையும் செய்கிறான் என்பது



உண்மையானாலும், இந்த மூன்று நிலைகளுக்கும் காரியாலயங்களும் அதிகார வரம்புகளும் வெவ்வேறு என்பது கோட்பாடு. அந்த முறையில் மகாவிஷ்ணு என்ற தெய்வம் எல்லாம்வல்ல பரம்பொருளில் மூன்றில் ஒரு பங்குதான் ஆகிறது. இந்த மகாவிஷ்ணுவின் பாதிதான் இராமன் என்பது வால்மீகி முனிவரின் வாக்கு. ஆனால், கம்பநாட்டாழ்வாருக்கு இராமபிரானை பரம்பொருளின் ஒரு சிறு பகுதியாகச் சொல்ல மனம் இடங் கொடுக்கவில்லை. அவர் இராமபிரானை பிரமன், விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளுக்கும் மூலசக்தியாகிய பரம்பொருளாகவே பாடியிருக்கிறார்.

தெய்வ அவதாரம் என்பதை மதிப்பவர்களுக்கு இராமபிரானை ஒரு பூரண அவதாரமாக்கி, மனிதப் பண்புகளை மதிப்பவர்களுக்குத் தலைசிறந்த ஒரு மானிடனாக்கிப் படம் பிடித்துக் காட்டுகிறார் கம்பர். பெற்றோருக்கு மகனாகவும், உடன்பிறப்புகளுக்குச் சகோதரனாகவும், மனைவிக்குக் கணவனாகவும், நண்பர்களுக்கு துன்பம் நீக்கும் துணைவனாகவும், அடைக்கலம் புகுந்தவரை அணைப்பவனாகவும், பகைவனுக்கும் பண்பு குறையாத வீரனாகவும், மற்றும் எல்லாத் துறைகளிலும் ஒழுக்கம் தவறாத உத்தமனாக இராமனை விளங்கச் செய்கிறார், கம்பர். வால்மீகி முனிவரும், இராமன் மனிதப் பிறவிக்கு அமையவேண்டிய எல்லா உத்தம குணங்களுக்கும் உறைவிடமானவன் என்றுதான் ஆரம்பத்தில் சொல்லுகிறார். ஆனால் கதைப் போக்கில் இடையிடையே முரண்கள் காணப்படுகின்றன.

கம்பர் இராமனை, அவதாரத்திலும் பூரண அவதாரமாக்கியிருக்கிறார். மானிட தர்மங்களிலும் மாசற்றவனாக்கியிருக்கிறார். அவதாரம் பூரணமானது

என்பதைக் கம்பர் பலவிடங்களில் காட்டுகின்றார். அவற்றில் சில இடங்களை மட்டும் பார்ப்போம்.

அயோத்தியா காண்டத்தின் காப்புச் செய்யுளாக,

''வான்நின்று இழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளனென்ப
கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக் கோல்துறந்து
கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் காத்த கழல் வேந்தை''

என்கிறார்.

இதன் பொருள் :- கூனியும் சிறிய தாயாரான இராணியும் சேர்ந்து சதி செய்துவிட்டதால், அரசனாக மகுடாபிஷேகம் செய்துகொள்வதை விட்டுவிட்டுக் கானகத்தையும் கடலையும் கடந்து சென்று (இராவணாதியரைக் கொன்று) தேவர்களுடைய துன்பங்களை நீக்கி வைத்து வீரகண்டையணிந்த மன்னனாகிய இராமனை, (அவன் யாரென்றால்) ஆகாயத்திலிருந்து இறங்கி மாபெரும் பஞ்சபூதங்களும் பரவியிருக்கும் இடங்களிலெல்லாம் (அந்த ஐந்து பூதங்களின் சேர்க்கையால் இயங்குகின்ற) உடல்களிலெல்லாம் ஊனாகவும், உயிராகவும், உணர்ச்சியாகவும் உள்ளேயும் வெளியேயும் எப்போதும் இருப்பவனாகிய பரம்பொருள் என்று அறிக – என்பது.

சுந்தர காண்டத்தின் காப்புச் செய்யுளாக,

''அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவு எனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப்பாட்டின் வேறு பாடுற்ற வீக்கம்
கலங்குவது எவரைக் கண்டால் அவர் என்பர் கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே, மறைகளுக்கு இறுதியாவார்.''

இதன் பொருள் :- இருட்டும் வேளையில் பாம்பு போலத் தோன்றி, பயப்படச் செய்கிற பழுதைப்போல ஐந்து



பூதங்களின் சேர்க்கையால் உண்டாகிற பலவகை உடல்களை வெவ்வேறு விதமாக உருமாறச் செய்து, மற்றவர்களையெல்லாம் மயங்கச் செய்கிற மாயை, எந்த ஒருவரைக் கண்டால் நடுங்குமோ அந்தப் பரம்பொருள் தான் கையில் ஒரு வில்லை எடுத்துக் கொண்டு (மானிட வடிவில் வந்து) இலங்கையில் போர்புரிந்து இராவணாதியரைக் கொன்றவர்; அவர்தான் வேதங்களின் குறிக்கோளான முடிவான பொருள் – என்பது. அதாவது பஞ்சபூதங்களின் சேர்க்கையால் தோன்றி, மாறி, மறைகின்ற வெவ்வேறு உருவங்களைத் தோற்றுவிக்கிற மாயைக்கு அப்பாற்பட்டவன் பரமாத்மா ஒருவன்தான். அவன்தான் இராமனாக அவதரித்து இலங்கையில் போர் புரிந்து இராவணாதியரைத் தண்டித்தவன் – என்பது.

உலகத்தில் அதருமம் மேலிட்டுத் தருமம் குறைகின்றபோதெல்லாம் பகவான் மனித ரூபத்தில் வந்து அதருமத்தை ஒடுக்கித் தருமத்தை நிலைநாட்டுகிறான் என்பது பகவத்கீதை சொல்லுவது. தெய்வ நம்பிக்கையுள்ளவர்களுக்குத் தலைசிறந்த மெய்ஞ்ஞான நூல் பகவத்கீதை. அந்த உண்மைக்கிணங்கத் தருமத்தை நிலைநாட்டி அதருமத்தை அடக்கவென்றே அவதரித்த பரமாத்மாவே தான் இராமன் என்பதைக் கம்பர் மிகவும் தெளிவாகச் சொல்லுவதைப் பின்வரும் பாடல்கள் காட்டும். இது வால்மீகருக்கும் கம்பருக்கும் உள்ள வேற்றுமைகளில் மிகவும் முக்கியமானது. இந்த வேற்றுமை, இந்த இரண்டு கவிஞர்களும் வாழ்ந்திருந்த கால வேற்றுமையினால் கருதப்பட்டதல்ல; கற்பனை வேற்றுமைதான்.

இராமன் விஷ்ணு, சிவன், பிரமன் என்ற மும்மூர்த்திகளுக்கும் மூலமான பரம்பொருள் என்பதையும், அந்தப் பரம்பொருள் எதற்காக மனிதனாகப் பிறந்தது

என்பதையும் ஜிதேந்திரியனாகிய அனுமான் வாக்கால் கம்பர் சொல்லுகின்றார்:—

சீதாபிராட்டியைத் தேடி இலங்கைக்குள் புகுந்த அனுமான், சீதையைக் கண்டு கணையாழியைக் கொடுத்துப் பேச வேண்டியதைப் பேசி விடைபெற்றுக் கொண்ட பின், அசோகவனத்தை அழிக்கலுற்றான். அதனால் ஒரு சிறு போர் மூண்டது. அதில் அனுமான் இராவணனுடைய கிங்கரப் படையையும், சம்புமாலியையும், பஞ்சசேனாதிபதிகளையும், அட்சகுமாரனையும் கொன்றுவிடுகிறான். அதன்பிறகு இந்திரஜித்தன் வந்து நெடுநேரம் போர் புரிந்தும் அனுமானை வெல்லமாட்டாமல் கடைசியாகப் பிரமாஸ்திரத்தை விடுகின்றான். சத்தியத்துக்காக அனுமான் அதற்குக் கட்டுப்படுகிறான்.

அனுமான் இராவணனுடைய சபைக்குக் கொண்டு போகப்படுகிறான். ஆற்றலை மெச்சும் இயல்புடைய வீராதி வீரனாகிய இராவணன் அனுமானைக் கண்டு, இந்தக் குரங்கா அவ்வளவு அழிவுகளைச் செய்து விட்டது என்று ஆச்சரியப்பட்டு அனுமானைப் பார்த்து, "குரங்கே, எதற்காக இங்கே வந்தாய்? நீ யார்?" என்ற முறையில் :

"நேமியோ? குலிசியோ? நெடும் கணிச்சியோ?
தாமரைக் கிழவனோ? தருகண் பஃறலைப்
பூமிதாங்கு ஒருவனோ? பொருது முற்றுற
நாமமும் உருவமும் கரந்து நண்ணினாய்?"

சக்கராயுதத்தை உடைய விஷ்ணுவா? வச்சிராயுதத்தை உடைய இந்திரனா? நீண்ட மழுவாயுதத்தையுடைய சிவனா? தாமரையில் வீற்றிருக்கும் பிரமனா? அச்சமுண்டாக்கும் கண்களுடன் ஆயிரம் தலைகளுள்ளதாக பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேடனா? போர் தொடுத்து



மாண்டுபோவதற்காகவா பெயரையும் வடிவத்தையும் மறைத்துக்கொண்டு வந்திருக்கிறாய்?

"நின்று இசைத்து உயிர் கவர் நீலக் காலனோ?
குன்று இசைத்து அயில் உற எறிந்த கொற்றனோ?
தென் திசைக் கிழவனோ? திசைநின்று ஆட்சியர்
என்று இசைக்கின்றவர் யாருள் யாவன் நீ?"

நின்றபடியே பாசக்கயிற்றை வீசி உயிரைக் கவர்ந்து கொள்ளும் நீலநிறமுள்ள எமனா? குன்றுதொறும் வீற்றிருந்து வேலாயுதத்தை வீசி வெற்றிகொள்ளும் குமரனா? தென்திசைக்கு உரியவனாகிய குபேரனா? திக்குகளை ஆள்கின்ற திக்குபாலர்கள் என்று சொல்லப்படுகிறவர்களுள் எவரைச் சேர்ந்தவன்? யார் நீ?

"அந்தணர் வேள்வியின் ஆக்கி ஆணையின்
வந்துற விடுத்ததோர் வயவெம் பூதமோ?
முந்து ஒரு மலருளோன் இலங்கை முற்றுறச்
சிந்து எனத் திருத்திய திகிரித் தெய்வமோ?"

அந்தணர்கள் யாகம்செய்து உண்டாக்கி, அவர்களுடைய ஏவலினால் அனுப்பப்பட்ட பலமுள்ள கொடிய பூதமா? முதல்வனாகிய தாமரை மலரிலுள்ள பிரமன், இலங்கையை முற்றிலும் அழித்துவிடு என்று சொல்லிப் புதிதாகப் படைத்துவிட்ட சக்கரத் தெய்வமா?

"ஆரை நீ? என்னை இங்கு எய்து காரணம்?
ஆர் உனை விடுத்தவர்? அறிய ஆணையால்
சோர் விலை சொல்லுதி" என்னச் சொல்லினான்,
வேரொடும் அமரர்தம் புகழ் விழுங்கினான்.

யார் நீ? இங்கு வந்த காரணம் என்ன? உன்னை ஏவிவிட்டவர்கள் யார்? அதை நான் அறியும்படி, பயப்படாமல் சொல்லு, என்றான், தேவர்களுடைய

கீர்த்திகளை அடியோடு விழுங்கிவிட்ட இராவணன். அதற்கு அனுமான் விடை கூறுகின்றான்.

''சொல்லிய அனைவரும் அல்லென் சொன்ன அப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்
அல்லிஅம் கமலமே அனைய செங்கணார்
வில்லிதன் தூதன் யான் : இலங்கை மேயினேன்.''

நீ சொன்ன எவரும் அல்லேன். நீ சொன்ன அந்த அற்ப பலமுள்ளவர்களுடைய ஏவலால் வந்தவனல்லேன். அல்லி மலரும் அழகிய தாமரை மலரும்போன்ற கண்களையுடைய வில்லாளியின் தூதன் நான். நானாகவே இலங்கைக்குள் வந்தேன்.

''அனையவர் யாரென அறிதி ஆதியேல்
முனைவரும் அமரரும் மூவர் தேவரும்
எனையவர் எனையவர் யாவர் யாவையும்
நினைவரும் இருவினை முடிக்க நின்றுளோன்.''

அவர் யார் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமானால், முனிவர்களும், தேவர்களும், மும்மூர்த்திகளான (பிரமன், விஷ்ணு, சிவன் என்ற) தெய்வங்களும், மற்றும் எப்படிப்பட்டவரும், எவரும், எதுவும் நினைத்துப் பார்க்கவும் முடியாதவனாக நல்வினை தீவினை என்ற இருவினைகளுக்கும் முடிவாகி அப்பால் நிற்கின்றவன்.

ஆதலால் அவன் நீ சொன்ன,

''தேவரும் பிறரும் அல்லன்; திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன் கைலங்கிரியும் அல்லன்;
மூவரும் அல்லன்; மற்றை முனிவரும் அல்லன் எல்லைப்
பூ வலயத்தை ஆண்ட புரவலன் புதல்வன் போலாம்.''



தேவர்களும் அல்லன்; பிறரும் அல்லன்; திக்கு யானைகளில் ஒருவனல்லன்; திசைக் காவலரில் ஒருவனும் அல்லன்; கைலாய மலையிலுள்ள பரமசிவனும் அல்லன்; மும்மூர்த்திகளில் ஒருவனும் அல்லன்; மற்றும் முனிவர்களைச் சேர்ந்தவனும் அல்லன்; பூவுலகம் முழுவதை அரசாண்ட தசரதச் சக்ரவர்த்தியின் புதல்வனாகும். அவன் யாரென்றால்,

''மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன்; கைவில் ஏந்திச்
சூலமும், திகிரிசங்கும், கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்.''

ஆதியும், மத்தியும், அந்தமும் இல்லாதவனாகி (ஆதி மத்யாந்தரகிதனாய்), (இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற) மூன்று காலங்களுக்கும் அப்பாற்பட்டவனாய், இவற்றிற்கெல்லாம் காரணமாக நிற்பவனான பரம்பொருளாக்கும், அவன். கையில் ஒருவில்லை ஏந்திக்கொண்டு, சிவனாக வேலை செய்கிறபோது ஏந்துகின்ற சூலாயுதத்தையும், விஷ்ணுவாக வேலை செய்கிறபோது ஏந்துகின்ற சக்கரத்தையும் சங்கையும், பிரமனாக வேலை செய்கிறபோது ஏந்துகின்ற கரகத்தையும் விட்டுவிட்டு, விஷ்ணுவாகப் படுத்திருந்த ஆலிலையையும், பிரமனாக வீற்றிருந்த தாமரை மலரையும், சிவனாக வீற்றிருந்த கைலாய மலையையும் விட்டுவிட்டு அயோத்திக்கு வந்திருக்கிறான். எதற்காக அப்படி வந்திருக்கிறானென்றால்,

''அறம் தலைநிறுத்தி, வேதம் அருள்சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத்து ஏக ஈண்டு
பிறந்தனன், தன் பொற்பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பான்.''

தருமத்தை நிலைநிறுத்தி (தர்மஸ்தாபனார்த்தமாக), வேதங்கள் அருள் சுரந்து சொல்லுகின்ற நீதிகளின் உண்மையை உணர்ந்து உலகமக்கள் அதன்படி நடக்கும்படி அவர்களை நல்வழிப்படுத்தி, தீயவர்களைக் கொன்று நீக்கி (துஷ்ட நிக்ரகம் செய்து), நல்லவர்களுடைய துன்பங்களைப் போக்கி விட்டுப் போக (சிஷ்ட பரிபாலனம் செய்துவிட்டுப் போக) இப்போது அவதரித்திருக்கிறான். அவனுடைய பொற்பாதங்களில் சரணடைகின்றவர்களுடைய பிறவித் துன்பங்களை நீக்கிப் பிறவாமையாகிய முக்தி தரக்கூடியவன்.

இது பகவத் கீதையின் சாரம். இப்படியாக, மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியான விஷ்ணுவின் பாதிதான் என்று வால்மீகி முனிவர் சொன்ன இராமபிரானைப் பரமாத்மாவின் பரிபூரண அவதாரமாக்கித் தமிழர்களின் இராமபக்தியை அதிகப்படுத்தியிருக்கிறார் கம்பர்.

வால்மீகிக்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடுகளில் சிலவே இதுவரையிலும் சொல்லப்பட்டவை. காண்டம் காண்டமாக ஆராய்ந்தால்தான் எல்லா வேற்றுமைகளையும் எடுத்துக்காட்ட முடியும். யுத்தகாண்டம் ஒன்று மட்டும் தனி ஆராய்ச்சிக்குரியது. கம்பருடைய ஒப்பரிய கற்பனைகள் யுத்தகாண்டத்தில்தான் உச்சமடைகின்றன. வால்மீகி முனிவர் சொல்லாத பல புதுமைகளைக் கம்பர் யுத்தகாண்டத்தில் புகுத்தியிருக்கிறார். பாத்திரங்களின் குணச் சிறப்புகளும் இந்தக் காண்டத்தில் அதிகமாகப் பரிமளிக்கின்றன. விருப்பு வெறுப்புகளை விட்டுவிட்டுப் பார்த்தால், இலக்கண முறையில் வழிநூல் என்று சொல்லப்படுகிற கம்பராமாயணம் இலக்கியச் சிறப்பில் ஒரு முதனூலாகவே விளங்குகிறது. கவி இலக்கணத்திலும், கற்பனை அழகிலும், சொல் நயத்திலும், பொருட் செறிவிலும், மெய்ஞ்ஞான நிறைவிலும், அறன்



வலியுறுத்தும் ஆற்றலிலும் இதற்கு இணையான காவியம் இல்லையென்பது கற்றுணர்ந்த பெரியோர்களின் தீர்ப்பு.

இன்னொரு கம்பனும் வருவானோ
இப்படியும் கவி தருவானோ

என்று அறிஞர்கள் வியக்கின்ற கம்பருடைய காவியத்தை, வடமொழி அபிமானம் என்ற பெயரால் அந்தக்காலத்தில் அரங்கேற்றுவதற்கும் விடாமல் அவதூறு சொன்னார்கள். அவர்கள் 'தீர்க்க தரிசனத்தால் நடந்ததை நடந்தபடி வால்மீகி முனிவர் சொன்ன இராம கதையை இப்படியெல்லாம் உருத்தெரியாதபடி மாற்றியதை ஒத்துக் கொள்ளக்கூடாது' என்று இகழ்ந்தார்கள்.

இந்தக் காலத்தில் தமிழபிமானம் என்ற பெயரால், வடநாட்டிலிருந்து தென்னாட்டின்மீது படையெடுத்து வந்து தமிழர்களைக் கொன்று பல அழிவுகளைச் செய்த ஆரியனைத் தெய்வமாக்கி, ஆரியர்களின் அநாகரீகங்களைப் பற்றி வால்மீகி சொல்லியுள்ள உண்மைகளையும் மறைத்து, அவர்களை உயர்ந்தவர்களாக்கித் தமிழ்நாட்டில் இராமாயணத்தைப் புகுத்திவிட்டவன் கம்பன்; கம்பராமாயணத்தை ஒழித்துவிட்டால் வடநாட்டு இராமனுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லாமல் அவனை வடநாட்டுக்கே ஓட்டிவிடலாம் என்றெல்லாம் அவதூறு சொல்லப்படுகிறது.

கம்பனா இராமாயணத்தைத் தமிழ்நாட்டில் புகுத்தினது? இது உண்மைக்குப் பொருந்துமா? மிகவும் குறைத்துச் சொன்னாலும், கம்பன் பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே அந்த இராமன் தமிழ் நாட்டில் அசைக்க முடியாத இடம் பெற்றுவிட்டதுமல்லாமல் தமிழர்களுக்குத் தெய்வமே ஆகிவிட்டானே! அந்த

இராமனைத் தமிழ்நாட்டைவிட்டு ஓட்டிவிட முடியாதென்று கண்டுதானே கம்பர், அந்த இராமனுக்குத் தமிழறிவைக் கொடுத்துத் தமிழ்ப் பண்புகளைப் பூட்டி, தமிழ் வழக்க ஒழுக்கங்களைக் கற்பித்து திருக்குறளைப் போதித்து, அறங்களுக்குத் தலைவனாக்கித் தமிழர்கள் மட்டுமன்றி எல்லா மனிதர்களும் வணங்கத்தகுந்த பரம்பொருளாக்கினார்?

கம்பருக்கு முன்னால் நெடுங்காலமாகத் தமிழர்கள், வடமொழி அறிஞர்களைக்கொண்டு வால்மீகி இராமாயணத்தைப் படித்து மொழிபெயர்த்துச் சொல்லச் செய்தே இராமனை தெய்வமாகப் போற்றி வந்தார்கள். வால்மீகி இராமாயணத்தில் அரைகுறையாகச் சொல்லப்பட்ட அவதாரத்தைப் பூரணமாக்கிக் கதைப் போக்கிலிருந்தே குற்றங் குறைகளை நீக்கிவைத்ததுதான் கம்பர் செய்த காரியமெல்லாம். இராமனைத் தமிழ் நாட்டில் புகுத்தியது கம்பரல்லர். இந்த உண்மையை நாம் நன்றாக உணரவேண்டும். தமிழ்ப் படிப்புள்ளவர்களிலும் அதற்கென்று பழைய தமிழிலக்கியங்களில் கவனம் செலுத்தினவர்கள்தாம் இதைக் காண முடியும். இப்போதே அதில் சற்றுக் கவனம் செலுத்துவது மிக்கப் பயனுடையதாகும்.

தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி முதலிய நாயன்மார்களும், திருவாய் மொழி பாடிய திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார், குலசேகரப் பெருமான் முதலிய ஆழ்வார்களும் கம்பர் காலத்துக்கு முந்தியவர்கள். இவர்கள் இராமாயணத்தைத் தமது பாடல்களில் குறிப்பிடுகிறார்கள். இவர்களுள் திருஞான சம்பந்தர்,

*"எறியார் கடல்சூழ் இலங்கைக்கோன் தன்னை*
*முறியார் தடக்கை அடர்த்த மூர்த்தி."*



அலை வீசும் கடல் சூழ்ந்த இலங்கைக் கரசனாகிய இராவணனுடைய தோள்களைக் கைலாய மலையின் கீழ் அழுத்திய பரமசிவன் – என்றும்

*"அலைசூழ் கடலடைத்து அன்று அணைவழி*
*செய்தவன்"*

அலைசூழ்ந்த கடலை அடைத்து அன்று அணைபோட்ட இராமன் – என்றும்,

*"மான்அன நோக்கி வைதேகி தன்னை ஒரு மாயையால்*
*கான் அதில் வவ்விய காரரக்கன் உயிர் செற்றவன்."*

மான் போன்ற விழிகளையுடைய சீதையை ஒரு வஞ்சனை செய்து, கானகத்தில் கவர்ந்த கருநிற அரக்கனாகிய இராவணனுடைய உயிரைத் தொலைத்த இராமன் (பூசை செய்த இராமலிங்கப் பெருமானே) என்று இராமேசுவரப் பதிகத்தில் பாடுகின்றார்.

**திருநாவுக்கரசர்**

*"தலையொரு பத்தும் தடக்கையது இரட்டிதானுடைய*
*அரக்கன் ஒண்கையிலை*
*அலைவது செய்த அவன் திறல் கெடுத்த ஆதியார்."*

பத்து தலைகளும் இருபது கைகளுமுடைய அரக்கன் இராவணன், அழகிய கைலாய மலையை அசைத்தபோது அவன் ஆற்றலை ஒடுக்கிய ஆதிமூர்த்தியான பரமசிவன், என்றும்,

*"குன்றுபோல் தோளுடைய குணமிலா அரக்கர் தம்மை*
*கொன்றுபேர் ஆழி அம்மால் வேட்கையால் செய்த கோயில்."*

மலைகளைப் போன்ற தோள்களையுடைய இராவணாதி அரக்கர்களைக் கொன்ற பின் (அந்தப் பாவம்

தீர) சக்கரம் தரித்த திருமாலாகிய இராமன் பக்தி மிகுதியால் உண்டாக்கிச் சிவ பூசை செய்த கோயில் (இராமேசுவரம்) என்றும்,

''வரைகள் ஒத்தே உயர்ந்து மணிமுடி அரக்கர்கோன்
விரையமுற்ற ஒடுக்கி மீண்டமால் செய்த கோயில்.''

மலைகளை ஒத்த உயர்ந்த நவரத்னக் கிரீடங்களைத் தரித்த அரக்கர் மன்னனாகிய இராவணனைப் பூண்டோடு, அழித்துவிட்டுத் திரும்பி வந்த திருமாலாகிய இராமன் உண்டாக்கிச் (சிவபூசை) செய்த கோயில் (இராமேசுவரம்) என்றும்.

''கடலிடை மலைகள் தம்மால் அடைத்து மால்கரும் முற்றி.''

மலைகளைக் கொண்டு கடல் அடைத்துச் சென்று, தான் வந்த காரியத்தை (இராவண சம்மாரத்தை) முடித்த பின் (சிவ பூசை செய்ய உண்டாக்கின கோயில் இராமேசுவரம்) என்றும் பாடியிருக்கிறார்.

**சுந்தரர்,**

''திண்தேர் நெடுவீதி இலங்கையர் கோன்
திறன்தோள் இருபதும் தெரிந்தருளி''

வலிமையுள்ள தேர்களும் நீண்ட வீதிகளும் உள்ள இலங்கைக்கு அரசனான இராவணனுடைய இருபது கரங்களையும் வெட்டியருளிய (திருமால் இராமன் வணங்கும் பரமசிவன்) என்றும், இன்னும் பலவிதமாக இராமாயண நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள்.

இவர்கள் சைவர்களானதால் சிவனுக்கு ஏற்றம் தந்து பாடியிருக்கிறார்கள் என்றாலும் நாம் குறிப்பிட வேண்டியது இப்பாட்டுகளில் இராமாயணம் இருப்பதுதான். இந்தப் பாடல்கள் கம்பன் தோன்றுவதற்கு முன்னால் பாடப்பட்டவை.



இனி ஆழ்வார்களைப் பார்ப்போம் : ஆழ்வார்கள் வைணவர்களானதால் அவர்கள் பாடிய பிரபந்தத்தில் இராம கதை பலவிடங்களில் பாராட்டப்பட்டுள்ளது. சில இடங்களைக் குறிப்பிடுவோம்.

**நம்மாழ்வார்,**

''கற்பார் இராமனை யல்லால் மற்றும் கற்பாரோ?''

கல்வி கற்க விரும்புகின்றவர்கள் இராமனைப் பற்றிய கல்வியை அல்லாமல் வேறெதையும் கற்பார்களா? என்றும்,

''மன்னுடைய இலங்கை அரண்காய்ந்த மாயவனே''

இராவண மன்னனுடைய இலங்கையின் கோட்டைகளை அழித்த மாயவனாகிய திருமாலே — என்றும்,

''கொம்புபோல் சீதைபொருட்டு இலங்கை நகர்
அம்பெரி உய்த்தவர்''

பூங்கொம்பு போன்ற சீதையின் பொருட்டு இலங்கை நகரத்தை அம்பால் எரித்தழித்த இராமர் — என்றும்,

**குலசேகர ஆழ்வார்,**

''வாலியைக் கொன்று அரசு இளைய
வானரத்துக்கு அளித்தவனே'' என்றும்,
''மன்னு புகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்து வித்தாய்'' என்றும்
''தங்கு பெரும் புகழ்ச் சனகன் திருமருகா'' என்றும்

''பாராளும் படர்ச்செல்வம் பரதன் நம்பிக்கே அருளி
ஆரா அன்பு இளையவனோடு அருங்கானம் அடைந்தவனே''
என்றும்,

''திண்திறலாள் தாடகை தன் உரம் உருவச் சிலை வளைத்தாய்''

என்றும் இன்னும் பலபடியாக இராமாயணக் கதையையே பாடிப் பெருமாளை வணங்குகிறார்.

**திருமங்கை ஆழ்வார்,**

''பைங்கண் விறல் செம்முகத்து வாலிமானப்
படர்வனத்துக் கவந்தனொடும் படையார்திண்கை
வெங்கண் விறல் விராதன்உக விற்குனித்த
விண்ணவர்கோன் தாளணைவீர்''

பசுங்கண்களும் சிவந்த முகமும் மிக்க பலமும் உடைய வாலியும், கடந்து வந்த கானகத்தில் எதிர்த்த கவந்தனும், ஆயுதங்கள் மிகுந்து, வெம்மையான கண்களும் மிகுந்த பலமுமுடைய விராதனும் மாண்டொழியும்படி வில்வளைத்த தேவர்களுக்கு அரசனான இராமன்தான் நமது பெருமாள். அவன் பாதம் சேருங்கள் – என்றும்,

''கலையிலங்கும் அகல் மேனி அரக்கர் குலக்கொடியைக்
காதொடுமூக் குடனரியக் கதறி அவள் ஓடி
தலையில் அங்கை வைத்து மலையிலங்கை புகச் செய்த
தடந்தோளன்,''

ஆடையழகுடன் பெருத்த தேகத்தோடு வந்த அரக்கர் குலப் பெண்ணைக் காதையும், மூக்கையும் அறுத்து, அவள் கதறியழுது கொண்டும் தலையிலடித்துக் கொண்டும் மலைகளுள்ள இலங்கைக்கு ஓடும்படி செய்த வலிமையுள்ள தோள்களையுடையவனே – என்றும் இராமாயணக் கதையிலுள்ள நிகழ்ச்சிகளைப் புகுத்திப் பாடியிருக்கிறார்கள்.

இதனால், கம்பருக்கு முன்னாலிருந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் இராம கதையைப் பாடியிருப்பது தெரிகிறது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் கம்பருக்குக் கொஞ்ச



காலத்துக்குத்தான் முந்தியவர்கள். ஆனால் சங்க நூல்கள் என்று சொல்லப்படுகிற புறநானூறு, அகநானூறு, கலித்தொகை முதலான நூல்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காவியங்களிலும் இராமாயணம் மிகவும் ஆர்வத்துடன் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இந்த நூல்களெல்லாம் கம்பருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இவற்றில் இராமாயணத்தைப்பற்றிய இடங்களைப் பார்ப்போம்.

**சிலப்பதிகாரத்தில்,**

''தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வன் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ, நெடுமொழி அன்றோ''

தந்தையின் ஆணைதாங்கி மனைவியுடன் காட்டுக்குச் சென்று காதலி சீதையைப் பிரிந்து பெருந் துயரம் அடைந்த இராமன் வேதங்களைத் தந்த பிரமனைப் (நாபிக்கமலத்தில்) பெற்றவனாகிய மகாவிஷ்ணு என்பதை நீ அறியாயோ? இது நெடுங்காலமாகச் சொல்லப்படுகிற விஷயமல்லவா? என்றும் (14–ம் காதை)

''அருங்கான் அடைந்த அருந்திறல் பிரிந்த
அயோத்தி போல''

கொடிய கானகத்துக்குப் போய்விட்ட மிக்க வலிமையுள்ளவனாகிய இராமனைப் பிரிந்த அயோத்தியைப் போல் என்றும் (13–ஆம் காதை)

''மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல் இலங்கைக் கட்டழித்த

*சேவன் சீர் கேளாத செவியென்ன செவியே!*
*திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே!*

மகாபலியை மூன்றடி நிலம் கேட்டு அவன் தந்த வாக்குறுதி நிறைவேற முடியாதபடி இரண்டே அடிகளால் மூன்று உலகங்களையும் அளந்துவிட்ட (மூன்றாவது அடியை அவன் தலைமீது வைத்தழுத்திய) திருப்பாதங்கள் சிவக்கும்படி (இலக்குமணனுடன்) தம்பியுடன் காட்டுக்குச் சென்று கடலுக்கு அணை போட்டு இராவணாதியரைப் போரில் மடித்துப் புராதனமாகிய இலங்கையைச் சீரழித்த வீரனுடைய கதையான இராமாயணத்தைக் கேளாத காது என்ன காது— அந்த மகா விஷ்ணுவினுடைய பெருமையைக் கேளாத காது என்ன காது? – என்றும் (17ஆம் காதை)

**மணிமேகலையில்,**

*''மீட்சி என்பது இராமன் வென்றான் என*
*மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்''*

இராமன் (சீதையை மீட்டு) வெற்றி பெற்றான் என்பதே மாட்சிமை இல்லாத (இகழ்தற்குரிய) இராவணன் தோற்றான் என்பதைக் காட்டும் அளவு கோல் – என்றும் (சமயகணக்கர் திறம் கேட்ட காதை)

*''நெடியோன் மயங்கி நிலமிசை தோன்றி*
*அடலரும் முந்நீர் அடைத்த ஞான்று*
*குரங்கு கொணர்ந்து எறிந்த நெடுமலை எல்லாம்*
*அணங்குடை அளக்கர் வயிறுபுக்கு''*

நெடியோனாகிய திருமால் இரமனாக உருமாறிப் பூலோகத்தில் பிறந்து (இலங்கை மீது படையெடுத்து) சமுத்திரத்தில் அணைபோட்ட காலத்தில் குரங்குகள் கொண்டு வந்து வீசிய பெரிய மலைகளெல்லாம் அழகான கடலில் புகுந்து மறைந்தன என்றும் (உலக அறிவிப்புக் காதை)



**புறநானூற்றில்,**

*''கடுந்தேர் இராமன் உடன் புணர் சீதையை*
*வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை*
*நிலம் சேர் மதரணி கண்ட குரங்கின்*
*செம்முகம் பெரும்கிளை''*

இராமனுடன் காட்டுக்குப் போன சீதையை வல்லமையுள்ள அரக்கன் இராவணன் கவர்ந்து தூக்கிக் கொண்டு (ஆகாயத்தில்) போன போது நிலத்தில் விழுந்த அவளுடைய அழகான ஆபரணங்களைக் கண்ட (சுக்ரீவனைச் சேர்ந்த) குரங்குகள் அதிசயமுற்றன – என்றும் (புறம் 3, 8)

**அகநானூற்றில்,**

*''வெல் வேல் கவுரியர் தொன்முது கோடி*
*முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன்துறை*
*வெல் போர் இராமன் அருமறைக்கு அவித்த*
*பல்வீழ் ஆலம்''*

வெற்றி வேலையுடைய பாண்டியர் நாட்டின் தென் கோடியில் அலையோசை முழங்கும் பெருங்கடலின் முன்கரையில், இராவணனுடன் போர் செய்து வெல்லுவதற்கு இராமன் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தபோது, அதற்கு இடையூறாகப் பறவைகள் கூடி சத்தமிட்டுக் கொண்டிருந்த பல விழுதுகளுடைய ஆலமரம் – என்றும்

**கலித்தொகையில்:**

*''இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்*
*உமை அமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக,*
*ஐயிருதலையின் அரக்கர் கோமான்*
*தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை*
*எடுக்கல் செல்லாது உழைப்பவன் போல*

இமய மலையை வில்லாக வளைத்த கங்கை சூடிய சடையுடைய பரமசிவன், உமையவளோடு அந்த உயரமான மலையில் வீற்றிருக்கும்போது, பத்துத் தலைகளையுடைய அரக்கர் மன்னவனாகிய இராவணன், கடகங்கள் அணிந்த தனது இருபது கைகளையும் மலையின் கீழ் நுழைத்து அந்த மலையை எடுக்க முடியாமல் துன்பப்பட்டது போல — என்றும் இராமாயணத்தைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. கம்பருக்கு முன் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட நூல்களில் இராமாயணம் இவ்வளவு சிறப்பான இடம் பெற்றிருக்கிறதென்றால், அதற்கும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே இராமாயணம் தமிழ் மக்களிடை பரவி, பாராட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

ஆதலால் இராமாயணத்தைத் தமிழ்நாட்டிற் புகுத்தியது கம்பர் அல்லவென்பது உறுதியாகத் தெரிய வருகின்றது. ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமாகத் தமிழர்கள் போற்றி வந்த இராம கதையைப் புனிதப்படுத்தி, மானிட வர்க்கம் அறிய வேண்டிய ஆன்ம தத்துவங்கள் அனைத்தையும் சொல்லி, எல்லா மதங்களுக்கும் பொதுவானதும், தமிழர்களுக்குச் சிறப்பானதுமான தெய்வ நம்பிக்கையைத் திடப்படுத்தி, அறவாழ்க்கைக்கு அரண் செய்து, மானிலத்து அறிஞர்களெல்லாம் வணங்குகின்ற மங்காத பெருவாழ்வு தமிழுக்குத் தந்துள்ள கம்பரை நாம் என்றென்றும் மனமார வணங்க வேண்டும்.



# கம்பனும் வால்மீகியும்

கரையறியாக் காட்டாற்று வெள்ளம் போலக்
கவிபொழிந்து வான்மீகி உலகுக் கீந்த
திரையறியா ஓட்டத்தைத் தேக்கிக் கட்டி
திறமிகுந்த கால்வாய்கள் செய்து பாய்ச்சித்
தரையறியா இலக்கியக்கா வனத்தைத் தந்தான்
தனிப்புலமைக் கம்பனென்னும் கவிதைத் தச்சன்;
உரையறியாப் பயனளிக்க உதவும் பாட்டை
உலகமெலாம் அனுபவிக்க உழைப்போம் வாரீர்.

வனத்திலுள்ள மலர்வகைகள் எல்லாம் கொய்து,
வாசனைவேர் பச்சிலைகள் பலவும் சேர்த்து,
கனத்த ஒரு பூப்பொதியாம் ராமன் காதை
வான்மீகி யெனும்தவசி கட்டோ டீந்தான்;
இனத்தையெல்லாம் ஆய்ந்தறிந்து இணைத்துக் கோத்து
இடைகிடந்த மாசுமரு யாவும் நீக்கி
தனித்தமணம் அறந்திகழும் மாலை யாக்கித்
தரணிக்கே சூட்டிவைத்தான் கம்பன் தானே.

மால்கடிந்த தவமுனிவான் மீகிஎன்பான்
வனத்திடையே தான்கண்டு கொண்டு வந்த
பால்படிந்து, முள்ளடர்ந்து, பருத்து. நீண்டு
பரிமளிக்கும் பலவின்கனி பாருக் கீந்தான்;
மேல்படிந்த பிசினகற்றி, மெள்ளக் கீறி,
மெதுவாகச் சுளை எடுத்துத் தேனும் வார்த்து,
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பனென்ற தமிழ்த்தாயார் நோற்ற மைந்தன்

– நாமக்கல் கவிஞர்

